# தேர்ந்த கட்டுரைகள்




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வெளியீடு - 17

★ ★ ★ ★ ★ ★ ★ ★

91296
28/3

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

வெளியீட்டு வாரியம்,

தமிழீழம்.

**01-02-1993**

320.5 Th

# தேர்ந்த கட்டுரைகள்

பொதுசன நூ...
மாநகராட்சி ம...
-2-3-19..
91296
யாழ்ப்பாண...

PUBLIC LIBRARY,
JAFFNA,

வெளியீடு 17

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

வெளியீட்டு வாரியம்,

தமிழீழம்.

**01 - 02 - 1993**

## உள்ளே ...


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. திரு. பிரபாகரன் அவர்களால் நடாத்தப்படும் போரை முறியடிப்பது | 1 — 16 |
| 2. ஆட்களும் விடயங்களும் அரசியல் புவியியல் | 17 — 18 |
| 3. வெளிநாட்டு உதவிகளும், கடன்களும் —நீண்ட காலமாக நிலைநாட்டப்பட்டு வந்த தவறான கருத்துக்கள் | 19 — 24 |
| 4. முப்படையினரின் நலன்புரித் தேவைகளுக்கு சிறப்பு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் | 25 — 35 |
| 5. யார் இந்த சிறிநிவாசன்? | 36 — 44 |
| 6. ஈழப் போரின் 11 ஆவது ஆண்டு | 45 — 56 |
| 7. "குவாய் ஆற்றுக்குத் திரும்பிச் செல்வோம்" | 57 — 63 |
| 8. குறைவானதைப் பெறவா இவ்வளவு கூடுதலான காலம் நாம் காத்திருந்தோம் | 64 — 72 |
| 9. தமிழ் மக்கள் தனியான நாகரிக இனம் என்பதை உலகிற்கு காட்டிய மாமனிதன் ராஜராஜசோழன்! | 73 — 85 |
| 10. மரங்களைப் பாடுவேன் | 86 — 88 |
| 11. வடக்கிலுள்ள நாடுகள் உதவியைக் குறைக்கும் அதேவேளையில் தெற்கிலுள்ள நாடுகள் அதைக் கூட்டுகின்றன. | 89 — 93 |
| 12. அரசியல் ஆற்றல் வாய்ந்தவர் தனது பதவியையும் ஆற்றலையும் இழப்பாரா? | 94 — 101 |
| 13. சுவிஸ் சமஷ்டி முறையில் தனியான அரசியல் அமைப்பையும் சட்டங்களையும் கொண்ட மாநிலங்கள் | 102 — 112 |
| 14. சோமாலியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் இராச தந்திரமும் பலம் இழந்திருக்கும் அமெரிக்க சனாதிபதியும் | 113 — 121 |
| 15. இன்றுவரை தோட்ட விவகாரங்களில் மாத்திரம் தன்னை ஈடுபடுத்திவந்த தொண்டமான் அவர்கள் இப்பொழுது அதைவிடுத்து வேறு விவகாரங்களிலும் ஈடுபடுகின்றார். | 122 — 125 |
| 16. இலங்கை வாழ் மலையகத்தமிழர் தனியானதொரு தேசிய சிறுபான்மையினரா? | 126 — 138 |
| 17. சீனா புதுமாதிரியான பெருஞ்சுவர் ஒன்றைக்கட்டி எழுப்புகின்றது | 139 — 142 |
| 18. தமிழீழ நிலப்பரப்பில் மக்கள் தொகை (1981 மக்கள் தொகை கணிப்பீட்டின்படி) | 143 — 148 |
| 19. சோமாலியா எவ்வாறு சீர்குலைந்தது | 149 — 152 |


91296

# தோழர்களுக்கு

★ ★ ★

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 17-வது வெளியீடாகும்.

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல்வேறுபட்ட எண்ணங்களை சரியாக ஆய்வு செய்து உண்மைகளை கண்டறிய வேண்டியது வாசிப்பவர்களின் கடமையாகும். இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் பல சரியானவை அல்ல...

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும் பேணுவதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் ஊக்குவிக்கும்.

# திரு. பிரபாகரன் அவர்களால் நடாத்தப்படும் போரை முறியடிப்பது

அனுருத்த திலகசிறி

(ஒப்சேவர் - 29-11-1992)

ஒரு நாட்டின் வரலாற்றில், அது ஒன்றுபட்ட நாடாகத் தொடர்ந்தும் நிலைத்து இருக்கவேண்டுமா அல்லது தோல்வியுற்று, துண்டுதுண்டாகச் சிதறுண்டு, அழிவுற்று இருக்கவேண்டுமா என்ற இரண்டில் ஒன்றை அது தேர்ந்தெடுக்க வேண்டிய காலகட்டம் ஒன்று எழவே செய்யும்.

இந்த இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டிய காலகட்டத்தை இலங்கை இப்பொழுது அடைந்துவிட்டது. முன்பும் இப்படியான ஒரு காலகட்டத்தை நாம் சந்தித்துள்ளோம். 1988-89 ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பியின் கிளர்ச்சி உச்சக் கட்டத்தில் இருந்தபோது, சனநாயகம் அடிப்படை மனித உரிமைகள், மக்களின் வாழ்க்கைமுறை, பொருண்மியம் மற்றும் இந்த நாட்டு மக்கள் தொன்றுதொட்டு பேணிவரும் பண்பாடு ஆகிய யாவும் அழிவுறும் நிலையிலிருந்தன. இந்தப் பண்பற்ற கும்பல்கள் வெற்றியீட்டி இந்த நாட்டை ஒரு கொலைக்களமாக மாற்றக்கூடிய சாத்தியக்கூறு நிலவிய வேளையில், சனநாயக ஆற்றல்கள் அனைத்தும் தங்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர்ந்ததனாலேயே இது நடவாது தடுக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டைத் தொடர்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய இந்த ஒற்றுமை ஏற்பட்டது. இதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே இடதுசாரிக் கட்சிகளும், இலங்கை சுகந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் ஜே. வி. பி கிளர்ச்சியாளரின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள அரசாங்கத்திற்கு தங்கள் ஒத்

துழைப்பை நல்கியிருந்தனர். இதன் காரணமாகவே ஜே.வி.பி.யினரை தனிமைப்படுத்தவும், அதன் தலைவர்களை இல்லா-தொழிக்கவும் படைய ரீதியிலாவது அவர்களைத் தோற்கடிக்கவும் முடிந்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் காரணமாக இன்று இந்தநாடும், மக்களும் தொடர்ந்தும் வாழமுடியுமா என்ற சிக்கலை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ், இந்துக்கள் மற்றும் முசுலிம் அப்பாவிப் பொது மக்களைக் கொல்வதிலும், ஊனமுறச்செய்வதிலும் திருப்தியடையாத விடுதலைப்புலிகள் இந்த நிலப்பரப்புக்களுக்கு அப்பாலுள்ள இலக்குகள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்ள மீண்டும் ஆரம்பித்துள்ளனர். முதலாவதாக, பள்ளியாகொடல்ல என்ற இடத்தில் சுமார் 200 பேர்கள் கொல்லப்பட்டார்கள். கடற்படைத்தளபதியான அட்மிறல் கிளான்சி பெர்னாந்து அவர்களை விடுதலைப்புலிகள் இரு வாரங்களுக்கு முன் கொழும்பில் வைத்தே கொன்றுள்ளார்கள். இலங்கை முசுலிம் காங்கிரசின் தலைவர் திரு. அசுரப் அவர்களை அல்லது வர்த்தக அமைச்சர் திரு. மன்சூர் அவர்களைக் கொல்வதற்கான அவர்களது திட்டம் நிறைவு பெறவில்லை. தாங்கள் விரும்பும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் தங்களால் தாக்குதல்களை மேற்கொள்ள முடியுமென்பதை விடுதலைப்புலிகள் தெரியப்படுத்தியுள்ளார்கள். கொழும்பின் இதயமாக விளங்கும் பகுதியிலுள்ளவர்கள் உட்பட எவரினதும் காப்புக்கும் உத்தரவாதமில்லை.

## திரு. பிரபாகரன் அவர்களின் திட்டம்.

திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் கையொப்பமிடப்பட்ட கட்டுரை ஒன்றின் சுருக்கத்தை 'சண்டே ஐலன்ட்' நாளிதளில் 'தாரகி' என்ற எழுத்தாளர் வெளியிட்டுள்ளார். விடுதலைப்புலிகள் முன்னேறிச்சென்று கொல்கிறார்கள் என்று இச்சுருக்கத்திற்குத் தலையங்கம் இடப்பட்டுள்ளது. இத்தலையங்கத்தைக்கொண்டு எல்லாவிடயத்தையும் அறியமுடிகின்றது. தாரகி இதில் குறிப்பிடுவது போல் தனது எதிரிகளின் மன உறுதியைச் சோர்வுறச் செய்வதன் மூலம் தனது இலட்சியமான ஈழத்தைப் பெறுவதை நோக்கமாகக்கொண்டே விடுதலைப்புலிகளின் தலைவரால் வடக்கிற்கும் கிழக்கிற்கும் வெளியே கொலைகள் நடத்தப்படுகின்றன.



படையத்திலுள்ள மேலாளர்களைத் தேர்ந்தெடுத்து இல்லாதொழிப்பதன் மூலம் தெற்கிலுள்ள மேல்மட்டத்தினரின் உணர்வுகளைச் சிதறடிக்கமுடியும் என திரு. பிரபாகரன் அவர்கள் கருதுகிறார். இப்படி நேர்ந்தால் அரசாங்கம் பாரிய சிக்கல்களை எதிர்காலத்தில் எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என இவர் கூறுகிறார். அதனால் போர் நடவடிக்கை மீது மேல்மட்டத்தின் நம்பிக்கை இழப்பதன் காரணமாக அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டிய் சிக்கல்கள் எப்படிப்பட்டதாயிருக்கும் என்பதை இவர் விரிவாக விளக்கிக் கூறவில்லை. வடக்கிலுள்ள நிலப்பரப்பைத் தனது ஆளுமைக்குள் கொண்டுவரவேண்டும் என்ற அரசாங்கத்தின் விருப்பத்தைக் கைவிடச் செய்தபின் கிழக்கிலுள்ளநிலப்பரப்பை தனது ஆளுமைக்குள் கொண்டுவரவேண்டும் என்ற அதன்விருப்பத்தை கைவிட, பயமுறுத்தலுக்கு ஆளாகும் தெற்கிலுள்ள மேல்மட்டத்தினரால் நெருக்குதல் கொடுக்கமுடியுமென இவர்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது என நவம்பர் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட ''சண்டே ஐலன்ட்'' என்ற செய்தித்தாளில் கூறப்பட்டுள்ளது. திரு. பிரயாகரன் அவர்கள் நினைப்பது போல் விடயங்கள் யாவும் நடந்தேறுமாயின், கொல்லப்படவேண்டிய பொதுமக்கள் மற்றும் படைய மேலாளர்களின் நீண்டபட்டியலில் கொல்லப்பட்ட முதல் நபர் அட்மிரல் கிளான்சி பெர்னாந்து அவர்களாயிருப்பதுடன், பட்டியலிலுள்ள மற்றவர்களும் கொல்லப்படவிருக்கிறார்கள். தங்கள் கடற்புலிகள் அணிக்கு எப்படியான முக்கியத்துவத்தை விடுதலைப்புலிகள் கொடுக்கின்றார்களோ அதே போல சிறப்பு புலனாய்வுப் பிரிவுகளை உருவாக்குவதற்கு தங்கள் வளங்களில் பெரும் பகுதியை அவர்கள் செலவழிப்பதுடன் இந்தத்துறையில் சிறந்த அறிவுத்திறன் உள்ளவர்களையும் பயன்படுத்துவதாக விடுதலைப்புலிகளின் ஏடு எடுத்துக்காட்டுகின்றது. கொலை புரிவதற்கும் தங்கள் கொள்கைக்காக இறப்பதற்கும் தயாராக உள்ளவர்களைப் பற்றியே நாம் இங்கு பேசுகின்றோம். **பெரும் எண்ணிக்கையிலான விடுதலைப்போராளிகளில், ஒருவரைக் கொல்ல வேண்டும் என்ற உறுதியும், தங்கள் உயிரைக் காணிக்கையாக்கி அதை நிறைவேற்ற வேண்டும் என்ற வேட்கையும் உள்ளதால் அவர்களால் மேற்கொள்ளப்படும் கொலைகளை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.**

என்ன நடக்கப்போகின்றதென்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. கொழும்பை இனிமேல் காப்பான இடமாகக் கரு

தமுடியாது. தங்கள் நாளாந்தக் கடமைகளில் ஈடுபட்டுவரும் பொது மக்கள், முப்படைத் தளபதிகள் காவல்துறையினர், ஐக்கிய தேசியக்கட்சி அல்லது எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிங்கள அரசியல்வாதிகள், சனநாயக ரீதியில் இயங்கும் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள், முசுலிம் சமூகத்தின் தலைவர்கள், வர்த்தகர்கள். மதகுருமார்கள், கனவான்கள் ஆகிய எவருடைய காப்புக்கும் உத்தரவாதம் கிடையாது. தெற்கில் பயப்பிராந்தியை ஏற்படுத்தி அங்கே வாழும் மக்களையும், அவர்களுடைய தலைவர்களையும் செயலிழக்கச் செய்யவேண்டும் என்று கருதும் விடுதலைப்புலிகளின் தலைவருக்கு இவர்கள் பலிக்கடாக்களாகவிருப்பர்.

## முழு அளவிலானபோர்.

நாடு பொருளாதாரத்தில் வளமடைவதைத் தவிர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் உறுதிபூண்டுள்ளனர் என்பதை திரு. கிளான்சி பெர்னாந்து அவர்களை, அவர்கள் கொலைசெய்யத் தேர்ந்தெடுத்த நேரம் எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையின் பொருளாதாரத்துடன் தொடர்புள்ள ஒரு வங்கியோ, விற்பனை தொடர்மாடியோ அல்லது வேறு ஒரு வியாபார நிலையமோ அவர்களின் அடுத்த இலக்காக இருக்கலாம். தங்கள் உறுப்பினர்களாக அல்லது ஆதரவாளர்களாக இல்லாத தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும், முசுலிம் மக்களுக்கும் எதிராக விடுதலைப்புலிகள் தங்கள் வளங்கள் யாவற்றையும் பயன்படுத்தி மேற்கொள்ளும் முழு அளவிலான போராக இது இருப்பதால் இவையாவும் அவர்களுடைய இலக்காக இருக்கின்றன.

''யாருக்கு எதிராக இந்தப்போர் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்ற கேள்வியை நாம் கேட்கவேண்டியுள்ளது. சனாதிபதி பிரேமதாசா அவர்களுக்கு எதிராக இந்தப் போர் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா? ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கெதிராக இந்தப்போர் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா? இலங்கைச் சுதந்திரக் கட்சிக்கு எதிராக இந்தப் போர் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா? குறிப்பிட்ட ஒரு குழுவுக்கு அல்லது நபர்களுக்கு எதிராக இந்தப் போர் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா? இந்தக் கேள்விகளுக்கு எனது பதில் இல்லை என்பதே. இந்தப் போர் நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் எதிராகவே பிரகடனப்படுத்தப்பட்டதாகும். நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் எதிராக இந்தப்போர் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தால்



இதை எதிர்த்துப் போர் புரிய வேண்டிய கடமையும் பொறுப்பும் யாருடையது? எங்களையே நாம் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும். இந்தக் கேள்வியைக் கேளாது தேவையற்ற விடயங்களில் நாம் ஈடுபடுவோமாயின் வரவு செலவுத்திட்டம் கூட தோல்வியுறும். எதிரியின் சவாலை எங்களால் எதிர்கொள்ள முடியாததற்குக் காரணம் என்ன? எங்களுக்கு எத்தனை எதிரிகள் இருக்கிறார்கள்? ஒரேயொரு எதிரியே உள்ளான். விடுதலைப்புலிகளே அந்த எதிரிகள். தமிழ் மக்கள் இந்தநாட்டு மக்களின் பகைவர்கள் அல்லர். தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டு இந்தச் சபைக்கு வந்தது தமிழ் மக்கள் இந்த நாட்டு மக்களின் ஒரு உறுப்பு என்பதற்குச் சான்றுபகர்கின்றது. பேச்சுவார்த்தையில் ஈடுபடவும், இணங்கிவரவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது ஏன் நாம் அவர்களுடன் பேசத் தயங்குகின்றோம்? இச்சிக்கலுக்கு ஏன் எங்களால் தீர்வு காணமுடியவில்லை? ஒரு தீர்வைக்காண முயலுமுன் சிக்கல் என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இது ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக விடுதலைப் புலிகளால் நடாத்தப்படும் போரல்ல. இது இலங்கையில் வாழும் சகல மக்களுக்கும் எதிராக நடாத்தப்படும் போராகும் இந்த நாட்டு மக்கள் யாவரும் பல கூறுகளாகப் பிளவுபட்டுள்ளதால் நாம் இந்த விடயத்தில் விளையாட முடிகின்றது. மக்கள் துன்புறுவதை எம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை'' என திரு. அசுரப் அவர்கள் சென்றவாரம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பாராளுமன்ற பதிவேட்டில் (Hansard) காணப்படுகின்றது

இந்த நாட்டில் வாழும் அனைவரும், அவர்கள் எந்த வர்க்கத்தை, சாதியை, இனத்தை, நெறியை, அரசியல் கட்சியை, சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி அவர்கள் எவ்வேளையிலும், எவ்விடத்திலும் விடுதலைப் புலிகளின் இலக்காக நேரிடலாம் என்பதனால் திரு. அசுரப் அவர்கள் எழுப்பிய கேள்விகளை நாமும் எங்களைக் கேட்கவேண்டும். எனவே எங்களுக்கிடையில் என்னதான் முரண்பாடுகள் இருந்தபோதும் எங்கள் எல்லோரையும் ஏதோ ஒன்று இணைக்கின்றது. நாம் எல்லோரும் விடுதலைப்புலிகளினால் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்பதே எங்களை ஒன்றுசேர்க்கும் அம்சமாகும். ஆகையால் விடுதலைப் புலிகளுடனான முரண்பாடே இன்று எங்கள் முதன்மையான முரண்பாடு ஆகும். எனவே நாம் எங்கள் ஒவ்வொருவருக்கு

மிடையிலுள்ள முரண்பாடுகளை மறந்து பொது எதிரியை எதிர் கொள்வதற்கு ஒன்று சேரவேண்டும்.

## முரண்பாடுகள்.

பழைய வரலாற்றிலிருந்து நாம் நிறையப்படிக்கவேண்டும். பொது எதிரியான நாசி ஜேர்மனியை எதிர்கொள்வதற்காக எந்தவொருவிதத்திலும் இணக்கம் காணமுடியாத நாடுகளாக வும் தனது பகை நாடுகளாகவும் விளங்கிய ஏகாதிபத்திய மற் றும் முதலாளித்துவ நாடுகளான ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுடன் சமதர்மக்கோட்பாட்டைக் கடைப்பிடித்து வந்த சோவியத் ஒன்றியம் ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக் கியது. இதன் காரணமாக இந்த நாடுகளுக்கு இடையே வேற் றுமைகளும் முரண்பாடுகளும் இருக்கவில்லை எனக்கூறமுடியாது. அவற்றுக்கிடையே இவை நிறைய இருந்தன. இருப்பினும் ஒரு பொது எதிரியை முறியடிப்பதற்காக இவையாவும் தற்காலிக மாக மறக்கப்பட்டிருந்தன. ஏகாதிபத்திய மற்றும் முதலாளித்துவ நாடுகளான பிரித்தானியாவையும், ஐக்கிய அமெரிக்காவையும் கிட்லருக்கெதிராக ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்க இணங் கவைப்பதற்கு சோவியத் ஒன்றியம் பல ஆண்டுகளாக இராச தந்திரரீதியாகவும், கோட்பரப்பு ரீதியாகவும் முயற்சியை மேற் கொண்டிருந்தது.

இதுபோலவே யப்பானிய ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்குவதற்கு கொமின்ராங் (Kuomintang) அரசை இணங்கவைக்க சீனாவிலுள்ள கம்யூனிஸ் டுக்கள் நெருக்குதலைக் கொடுத்தார்கள். கொமின்ராங் அரசின் தலைவர் சியாங்கை செக் (Chiang Kai Shek) அவர்கள் அதற்கு இணங்க மறுத்தார். இறுதியில் திரு. சியாங், ஐக்கிய முன்னணி அமைப்பதற்குச் சார்பான படைய மேலாளர்களால் கடத்தப் பட்டு கம்யூனிஸ்டுகளுடன் உடன்படிக்கைக்கு வருவதாக அவர் வாக்குறுதியளிக்க வேண்டியிருந்தது. 1937 ஆம் ஆண்டில் நடை பெற்ற இச்சம்பவம் உலகத்தவரால் நினைவு கூரப்பட்டுவரு கின்றது. (Siam Incident of 1937) திரு சியாங் அவர்களால் பிளவுபடுத்தும் வரை சீனக் கம்யூனிஸ்டுகள் இந்த ஐக்கிய முன்ன ணியின் ஒரு உறுப்பாகவே இருந்தார்கள்.

அதற்குப் பின்னரும் கொமின்ராங் அரசுக்கும் யப்பானி யருக்கும் எதிரான எல்லா ஆற்றல்களையும் ஒன்றுதிரட்ட



மேற்கொண்ட நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. கொமின்ராங் அரசின் துரோகத்தனத்தையும் 1927 ஆம் ஆண்டு சங்காயிலும் கன்ரனிலும் (Shanghi and Canton) நடாத்தப்பட்ட படுகொலை களையும் கருத்தில் கொள்ளாது 1930 ம் ஆண்டுகளிலிருந்து சீனக் கம்யூனிஸ்டுக்கள் யப்பானியர்களுக்கு எதிரான ஐக்கிய முன்ன ணியை உருவாக்க முன்னின்று செயற்பட்டதுடன் அந்த முன்ன ணியில் உறுப்பினர்களாகவும் விளங்கினர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அரசாங்கமோ எதிர்க்கட்சிகளோ தாங்கள் வழமையாக மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகளைக் கைவிடவேண்டு மென நாம் கூறவில்லை. கட்சியை வளர்த்தெடுப்பது அதன் திட்டங்களை வகுப்பது, அதன்அரசியல் பணிகளை மேற்கொள் வது யாவும் தொடர்ந்து நடைபெறலாம். இவற்றுக்கு இடையி லும் இரத்தக் களரியையும் அழிவையும் ஏற்படுத்துவதுடன் நாட் டைக் கூறுபோடச்செய்யும் அளவிற்கு அச்சுறுத்தலாக விளங்கும் சிக்கலுக்கு தீர்வு கான்பதற்கும். பொது எதிரியை எதிர்கொள் வதற்கும் நாம் எல்லோரும் ஒன்றுசேரவேண்டும்.

## போலியான தீர்வுத் திட்டங்கள்

எங்கள் அரசியல் இலாபத்திற்காக தாங்கள் இந்தச் சிக் கலைப் பயன்படுத்தக்கூடாது. அது முடிவில் எங்கள் அனை வருக்கும் அழிவையே ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு நன் மையையே கொடுக்கும். ''குறிப்பிட்ட எவர் மீதும் விசுவாசம் கொண்டிராத என்னால் சனாதிபதி தனது பதவியைத்துறக்க வேண்டும். அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று விடுக்கப் படும் கோரிக்கைகளை ஏற்கமுடியாது. அவர் பதவி விலகுவதன் மூலம் இந்தப்போர் நாளைக்கு முடிவுறுமாகில் பதவிவிலக வேண்டும் என்ற கோரிக்கைக்கு நாம் ஆதரவுதருவோம். போருக்கு ஒரு தீர்வை இந்தப்பதவி விலக்கல் ஏற்படுத்துமாயின் இலங்கை முசுலிம் காங்கிரஸ் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளத் தயங்காது. விடயங்களை நீங்கள் தெளிவாகப் புரிய வில்லை. ஒருபுறத்தில் ஆட்சியில் நீடித்து இருக்கவிரும்பும் நீங் கள் மறுபுறத்தில் இன்னொருவரை அதிலிருந்து விரட்டி விட்டு ஆட்சிக்கு வரவிரும்புகிறீர்கள். அப்படியான போக்கு சிக்கலைத் தீர்க்குமா? அது ஒரு தீர்வாகுமா? நான் கூறியவற்றையே மீண்டும் மீண்டும் கூறுவதாக யார் கூறினாலும் அதை நான் கவனத்தில் எடுக்கப்போவதில்லை. மீண்டும் மீண்டும் கூறுவது நல்ல பலனைக்

கொடுக்கக் கூடியதாயிருக்கும். இந்தப்போர் ஐக்கிய தேசியக் கட்சிக்கெதிராகவோ அல்லது இலங்கைச் சுதந்திரக் கட்சிக்கெதிரகவோ நடாத்தப் படவில்லை. நாட்டு மக்கள் அனைவருக்கும் எதிராகவே இது நடைபெறுகிறது என திரு அசுரப் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் திகதி வெளியிடப்பட்ட பாராளுமன்ற பதிவேட்டில் (Hansard காணப்படுகின்றது.

தமிழ் மக்களுக்குப் போதியளவு செயலுரிமையை வழங்கத்தக்க வகையில் ஒரு அர்சியல் தீர்வை முன்வைக்கும் அதே வேளையில், வடக்கில் விடுதலைப்புலிகளின் ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் ஒரு பெரிய படைய தாக்குதலை மேற்கொள்ளுதல் ஆகிய அரசியல் மற்றும் படைய நடவடிக்கைகளாகிய இவ்விரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொண்டாலன்றி விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்கமுடியாதென நாம் பலமுறை கூறிவந்துள்ளோம். சர்வகட்சி மாநாடு அரசியல் தீர்வு ஒன்றைக்கொண்டுவர முயன்றது. அதில் பங்குபற்றிய பெரும்பாலான கட்சிகள் தங்களுக்கிடையே இணக்கம் காணத்தவறியதன் காரணமாக அது செயழிழந்தது. தெரிவுக்குழுவுக்கும் அதே நிலை ஏற்படுவதை நாம் அனுமதிக்கக் கூடாது. தங்கள் தங்கள் நிலைப்பாடுதான் சரியானவை எனக் கருதுவதை விடுத்தும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தும் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளாது, அரசியல் இலாபத்திற்காக மக்கள் பட்டறிந்துவரும் சொல்லொணாத் துயரங்களைத் தங்களுக்குச் சாதகமாகத் தொடர்ந்தும் ஒவ்வொருவரும் பயன்படுத்துவார்களானால், இதுவுய் சர்வகட்சி மாநாடு போல் தோல்வியுறுவதைத் தடுக்கமுடியாது போய்விடும். திரு. அசுரப் அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதுபோல் ''தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு விட்டார்கள் என்றும் அவர்கள் தனிநாடு கோருகிறார்கள் என்றும், தனிநாடு அல்லது ஈழத்திற்கு குறைந்த எந்தவொரு தீர்வையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தயாராகவில்லை என்றும், அவர்களைப்பற்றி நாம் முன்னர் கூறிவந்துள்ளோம். அந்நிலையை தற்போது கடந்துவிட்டோம். அதன்பின் தமிழ் மக்கள் நிபந்தனையற்ற வடக்கு கிழக்கு இணைப்பைக் கோரினர். எந்தக்காரணத்தைக் கொண்டும் ஆயுதங்களைக் கைவிடமாட்டோம் என்றும் கூறினர். அந்நிலையை இன்று கடந்துவிட்டோம். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். நாம் செய்தது என்ன? 13 உறுப்பினர்கள் தங்கள் பதவிகளைத் துறந்து விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களின் இடங்கள் இப்



பொழுதும் வெறுமனே இருக்கின்றன. இங்கு இப்பொழுதுள்ள ஒருசில தமிழ் உறுப்பினர்களும் தொடர்ந்தும் இங்கு இருப்பார்களா என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது. நாங்கள் என்ன செய்கின்றோம்? எனது நண்பரும், சட்டக் கல்லூரியில் நான் படித்த காலத்தில் கல்வி கற்றவருமான திரு.மகிந்த ராஜபக்ச அவர்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றை நாளேடு ஒனறில் வாசித்து நான் திகைப்படைந்தேன். பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின் தான் சார்ந்த கட்சியான சுதந்திரக்கட்சி தீர்வுக்கான திட்டத்தை முன்வைக்கும் என இவர் அதில் கூறிபிருந்தார். இது என்னை அதிர்ச்சியடையச் செய்தது. அப்படியாயின் இந்தத் தெரிவுக்குழுவை அமைத்ததன் நோக்கமென்ன? உண்மை நிலை அதுவாயின் தெரிவுக்குழு தொடர்ந்தும் செயலாற்றுவது பயன் அளிக்குமா? கண்துடைப்பு வேலை ஒன்றில் நாம் ஈடுபட்டிருக்கிறோமல்லவா? நாங்கள் எங்களையே ஏமாற்றுகிறே மல்லவ ? நாங்கள் எங்களையே தவறானவழியில் இட்டுச் செல்கின்றோமல்லவா? என திரு. அசுரப் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை நவம்பர் 17 ம் திகதி வெளியிடப்பட்ட பாராளுமன்ற பதிவேட்டில் காணப்படுகின்றது.

## தமிழ் மக்களின் பிடிவாதம்

இந்த நாட்டு மக்களின் இன்னல்களை எங்கள் அரசியல் இலாபத்திற்காக நாம் பயன்படுத்துவதால், எல்லாச் சனநாயகக் கட்சிகளும் ஏற்கக்கூடிய ஒரு. தீர்வை எட்டுவதில் முன்னேற்றத்தைக் காண்பதற்குப்பதிலாக தீர்வுக்கான முயற்சி மேலும் கடினமாகின்றது. இந்த விடயம் சம்பந்தமாக திருமதி பண்டாரநாயக்கா அவர்சள் பாராளுமன்றத்தில் அண்மையில் வெளியிட்ட கருத்தை நாம் சிறப்பாகக் குறிப்பிடவிரும்புகிறோம். வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்படுவதைத் தனது கட்சி எதிர்ப்பதாகவும், மாகாணங்களுக்குச் சுயாட்சியை வழங்கி செயலுரிமையை பரவலாக்கும் யோசனையையும் அதுகைவிட்டுள்ளதாகவும் நவம்பர் திங்கள் 24ம் திகதி வெளியான ஐலண்ட் நளேடுக்கு இவர் கூறியுள்ளார். 1985 ஆம் ஆண்டிலிருந்து 1987 ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிங்கள மக்களிடையே குறுகிய வெறிகொண்ட நாட்டுப் பற்றை உருவாக்க எப்படி முயற்சி மேற்கொள்ளப்பட்டதோ, அதைப்போன்ற ஒரு முயற்சியின் ஆரம்பமாக இது அமையக்கூடாது என நாம் விரும்புகின்றோம்.1980ம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கைச் சுதந்திரக்கட்சி கடைப்பிடித்

துவந்த குறுகிய வெறிகொண்ட நாட்டுப்பற்றே சனநாயகத்திற்கும் மக்களுக்கும் எதிரான தீவிரவாதிகளான விடுதலைப்புலிகளை வடக்கிலும், ஜே. வி. பியினரைத் தெற்கிலும் உருவாக்க உதவியதைப் படிப்பினையாகக் கொள்ளவேண்டும். என இலங்கைச் சுதந்திரக்கட்சியையும் அதனுடன் இணையவிருப்பவர்களையும் கேட்டுக்கொள்கிறோம். நாடு பிரியக்கூடாது என்பதற்காக இந்தக்கட்சி இதுவரை போராடிப்பெற்ற நன்மைகள் அனைத்திற்கும் மேலாக இதன் தவறான போக்கு வடக்கும் கிழக்கும் பிரிந்து தனி அரசு ஒன்று உருவாக உதவுவதுடன், சனநாயகத்திற்கு எதிரானதும் மக்களின் ஆதரவு அற்றதுமான ஒரு சர்வாதிகார ஆட்சி தெற்கில் தோன்றவும் வழிவகுக்கும் என்பதால் நாட்டினதும் மக்களினதும் நன்மையைக் கருத்தில் கொண்டு முன்னர் விட்ட தவறுகளை இலங்கைச் சுதந்திரக் கட்சி மீண்டும் இழைக்காது என நாம் நம்புகிறோம்.

திம்புவில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின் தாங்கள் இழைத்த தவறுகளிலிருந்து சனநாயகக் கொள்கைகளைக் கடைப்பிடித்துவரும் தமிழ்க்கட்சிகளும் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய வறட்டுக்கொள்கையாகிய 4 அம்சக்கோரிக்கை மற்றும் 19 அம்சக் கோரிக்கை போன்றவை அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதைக் கடினமாக்கி விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகவிருக்கும். விடுதலைப் புலிகளைவிட தாங்கள் கூடிய இனப்பற்றுள்ளவர்கள் அல்ல என்பதையும், எந்த விதத்திலும் அவர்களைத் தங்களால் விஞ்சமுடியாதென்பதையும் இவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். இதற்குப்பதிலாக போரினால் நலிந்து சோர்வுற்றிருக்கும் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்கள் மதிப்புடனும், சிறப்புடனும் வாழத்தக்க வகையில் சமாதானத்தைக் கொண்டுவருவதையே அவர்கள் தங்கள் நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். போதிய செயலுரிமை வழங்குவதன் மூலம் அரசியல்தீர்வு ஒன்றைக்காண உதவுவதுடன் விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கும். இவர்கள் படையத்திற்கு உதவவேண்டும். அரசியல் தீர்வை எட்டுவதற்கு தற்போதுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களை நிரத்தரமாக இணைக்கவேண்டியது அவசியமில்லை. விடுதலைப் புலிகளின் அழிவே தங்கள் உயிர் மற்றும் அரசியல் வாழ்வை உறுதி செய்யும் என்பதை இவர்கள் உணரவேண்டும். தங்களுக்கு எதிரான தமிழர்கள், அவர்கள் சிராவஸ்தியில் இருந்தாலென்ன, பாராளுமன்றத்தில் இருந்தாலென்ன, தெற்கிலுள்ள காப்பான வேறெந்த இடத்தில் இருந்தாலென்ன, அவர்களைத் தாக்கக்கூடிய ஆற்றல்



தங்களுக்கு உண்டு என்பதை அண்மையில் விடுதலைப்புலிகள் கொழும்பில் மேற்கொண்ட தாக்குதல்கள் எடுத்துக்காட்டுகின்றன விடுதலைப்புலிகள் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டாலே வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தங்கள் வீடுகளுக்கு இவர்களால் மீண்டும் செல்லமுடியும். இந்த விடயத்தில் தெற்கிலுள்ள இடதுசாரிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து சனநாயக வழிக்கு வந்த தமிழ்க் குழுக்கள் நிறையக் கற்றுக்கொள்ளவேண்டும். இடதுசாரிகள் ஜே வி. பியினரைப்பற்றி எப்படியான நிலைப்பாட்டை இப்பொழுது கொண்டிருந்தபோதிலும், 88-89 ஆம் ஆண்டுகளில் அரசைக் கைப்பற்றக் கூடிய நிலையில் ஜே. வி பியினர் இருந்த வேளையில், அவர்களின் சவாலை எதிர்கொள்ள நிபந்தனையற்ற தங்கள் முழு ஆதரவையும் இக்கட்சிகள் அரசாங்கத்துக்கு வழங்கின. ஆரம்பகாலம் தொட்டு தங்கள் எதிரியாக விளங்கும் ஐக்கிய தேசியக்கட்சியுடனாகுதல் ஒன்று சேர்ந்து காட்டுமிராண்டித்தனமான இந்தக் கும்பலை முறியடிப்பதன் மூலமே தங்கள் அரசியல் வாழ்வு நிலைத்திருக்கும் என்ற உண்மையை உணர்ந்தனாலேயே இடதுசாரிகள் இப்படி நடந்து கொண்டனர். இப்படியான நிலைமையைச் சனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ்க்கட்சிகளும் இன்று எதிர்கொள்வதால் எவ்வளவு விரைவில் இந்த உண்மையை இக்குழுக்கள் உணர்கின்றனவோ அந்த அளவிற்கு அது அவற்றுக்கு நன்மை பயப்பதாயிருக்கும்.

‘‘நாங்கள் வேறு விடயங்களில் அக்கறை செலுத்துவதால் ஒரு பொதுவான திட்டத்தை கையாள்வதில்லை’’ என திரு. அசுரப் அவர்கள் சரியாகக் கூறியிருப்பதை நவம்பர் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பாராளுமன்றப் பதிவேட்டில் காணக்கூடியதாயிருக்கின்றது. எங்கள் அரசியலில் மாத்திரமின்றி படையத்திலும் இது காணப்படுகின்றது. தங்களுக்குள் நிலவும் முரண்பாடுகளை மறந்து தாங்கள் அனைவரும் ஒன்று சேராவிடின் விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியாதென்பதை படையமேலாளர்கள் கருத்திற் கொள்ளவேண்டும். அப்படி நேரிடுமாகில் படையத்தின் மதிப்பும், அதன் அமைப்பும் ஒழுங்கும் நிரந்தரமாகவே பாழடிக்கப்பட்டுவிடும், ஆகையால் படையினர் தங்களுக்கிடையேயுள்ள சிறு பூசல்களை மறந்து போர் தந்திரோபாயம் பற்றியதாகவிருந்தாலென்ன, தளபாடக் கொள்வனவு பற்றியதாகவிருந்தாலென்ன நல்லதீர்க்கமான முடிவுக்கு வருவதுடன் தங்களுக்கிடையேயுள்ள ஊழல் பேர்வழிகளையும் படையத்திலிருந்து நீக்கி மீண்டும் பாரிய தாக்குதலை ஆரம்பிக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்த வழிமுறையை படையினர் கடைப்

பிடிக்கப் போகின்றார்களா அல்லது விடுதலைப்புலிகளின் குழந்தைப் படையால் அல்லது பெண் புலிகளால் தோற்கடிக்கப்பட்டுத் தங்கள் மனத்தை இழக்கப் போகிறார்களா என்ற இரண்டில் ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும்.

தெற்கில் மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கைகளைத் தடுப்பதற்குத் தேவையான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள விடுதலைப்புலிகள் தயங்கமாட்டார்கள் என்பதை எசஸ்போ 92 கண்காட்சி நடாத்தப்படவிருந்த போது திரு.கிளான்சி பெர்னாந்து அவர்கள், கொல்லப்பட்டமை எடுத்துக்காட்டுகின்றது. இப்படியான தாக்குதல்களை அவர்கள் எதிர்காலத்தில் தீவிரப்படுத்தலாம். போர் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது எங்களின் பொருளாதாரத்தை இது அவ்வளவாகப் பாதிக்கவில்லையென்றும், வளர்ச்சி நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளமுடியும் என்றும் நாம் நினைப்பது முட்டாள்தனமானது. கொழும்பில் குண்டுவைப்பதாலும், மறைந்திருந்து தாக்குதல்களை மேற்கொள்வதாலும் முதலீடு செய்தல், உற்பத்தி, சந்தைப்படுத்தல், மற்றும் வங்கி நடவடிக்கை போன்ற பொருளாதார நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படையும். நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக முதலீடு செய்தல், தொழில்வாய்ப்பை உருவாக்குதல், வறுமையை ஒழித்தல் மற்றும் சமூக இடர்ப்பாடுகளை நீக்குதல் போன்றவற்றிற்குச் செலவு செய்யக்கூடிய பில்லியன் கணக்கான பணத்தை அழிவை ஏற்படுத்தும் இந்த போரில் செலவு செய்யப்பட்டுள்ளதை நாம் மறக்கக்கூடாது. நிரந்தரமான பொருளாதார அழிவை ஏற்படுத்தாது இந்த நிலை எவ்வளவுகாலத்திற்கு நீடித்திருக்கப்போகின்றது? வடக்கிலும் கிழக்கிலும் இருந்து பெற்றுவந்த பொருளாதாரத்தையும் உற்பத்திப் பொருள்களையும் மீண்டும் பெறத்தக்க வகையில் அந்தப் பகுதிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை அந்த அந்தப் பகுதிகளுக்குச் செலவு செய்தால் 2000 ஆம் ஆண்டளவில் எங்கள் பொருளாதாரம் மேம்பாடடையும், விரைவாக விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதும் தமிழ் மக்களுக்கு போதிய செயலுரிமையை வழங்குவதும் எம் பொருளாதாரத்தை மேம்படுத்தும்.

## தொடர்புசாதனங்கள்

தொடர்பு சாதனங்கள் வகிக்கும் பங்கையும் பற்றிக் கூற வேண்டியுள்ளது. அரசாங்கத்தையோ அல்லது படையினரையோ அவர்கள் விமர்சிக்கக்கூடாது என நாம்கூறவில்லை. 'சண்டே



ரைம்ஸ்' நாளேடு போன்று பொறுப்புள்ளவைகளாக அவை இருக்கவேண்டுமேயல்லாது விடுதலைப்புலிகளுக்கு உதவத்தக்க வகையில் நடந்துகொள்ளக்கூடாது ''நாளை எங்களுக்கு என்ன நடக்கவிருக்கின்றது என்பதைக் கருத்தில் கொள்ளாது அரசாங்கத்தை, எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதையும், அதைப்பதவியிலிருந்து நீக்கச் செய்வதையும் நாளேடுகள் எதிர்பார்க்கின்றன '' என திரு.அசுரப் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை நவம்பர் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பாராளுமன்றப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவற்றின் விமரிசனங்களும், நிலைப்பாடும் போரை நடாத்திக்கொண்டிருக்கும் படையத்தின் செயல்திறனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை இவை கருத்தில் கொள்ள வேண்டும். 'அரசாங்கம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் எதிர்க்கட்சிகள் எதிர்க்கவேண்டும் என நாளேடுகள் கோரக்கூடாது. அவசரகால நிலைக்கு எதிராக அவை எடுத்த நிலைப்பாடு இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்காதுவிடின் அரசாங்கத்திற்குச் சார்பானவர்கள் என்ற தங்களுடைய நிலைப்பாட்டை வலியுறுத்தும் நோக்கில் ஏரிக்கரையிலிருந்து பிரசுரிக்கப்படாத அனேகமான நாளேடுகள் இந்தச் சட்டத்தை எதிர்கட்சிகள் எதிர்க்கவேண்டுமென வலியுறுத்திவந்தன. இந்தப்போரில் நாம் வெற்றிகாணவேண்டுமாயின் இப்படியான போக்கை நாங்கள் கைவிடவேண்டும்.

''வடக்கிலும் கிழக்கிலும் போரொன்று நடைபெறுகின்றது. மக்களைக் காக்க எத்தகைய நடவடிக்கைகளைப் காப்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர் என்பதில் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளோம. காப்புப் படையினருக்கும் இடர்ப்பாடுகள் உண்டு. அவர்கள் போர் புரிய வேண்டியுள்ளது. அவர்கள் விடுதலைப்புலிகளைத் தேடிச்செல்ல வேண்டியுள்ளது. அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் மக்களைக் காக்க வேண்டியுள்ளது. இந்த மூன்று விடயங்களையும அவர்களால் ஒருநேரத்தில் செய்ய இயலாது. அது முடியாத காரியம் அதில் பல சிக்கல்கள் உள்ளன'' என திரு. அசுரப் அவர்கள் கூறியுள்ளார்.

அவசரகாலச்சட்டத்தை இலங்கை முசுலிம் காங்கிரஸ் எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென ''ஐலண்ட்'' நாளேடு கருதுகின்றது. நீங்கள் நினைப்பதுபோல் அவசரகால நிலையை

நீடிக்கக்கூடிய நிலைமை நாட்டில் நிலவாதிருக்கலாம். இது வேறு விடயமாகும். அவசரகால நிலையை நாம் விரும்புகிறோமா இல்லையா என்பதே தற்போதைய கேள்வியாகும். அவசரகால நிலைக்கு எதிராக நான் வாக்களித்தேனானால் வடக்கிலும் கிழக்கிலும் அவசரகால நிலையை அமுல்படுத்தத்தேவையில்லை எனப்பொருள்படும். இதன்பொருள் வேறென்ன? அதுதான் தீர்வாகுமா என ஐலண்ட் நாளேட்டை மாத்திரமல்ல, எல்லா நாளேடுகளையும் இதையே நான்கேட்கிறேன்'' என திரு அசுரப் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை நவம்பர் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பாராளுமன்றப்பதிவேட்டில் காணப்படுகின்றது. பொதுமக்களிடையில் நிலவும் சமாதானத்தையும் படையத்திற்கிடையில் நிலவும் ஒற்றுமையையும், ஒழுங்கையும் சீர்குலைப்பது விடுதலைப்புலிகளுக்கு உதவுவதாக இருக்கும் என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். ஜே. வீ. பிக்குச் சார்பானதும், திரு. வின்னி கெற்றிகொட அவர்களை இணையாசிரியராகவும், கேலிச் சித்திரம் வரைபவராகவும் கொண்ட ''லக்தீப'' என்ற நாளேட்டில் இந்த ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அவர் எழுதிய கட்டுரையில் பொதுத்துறை மற்றும் படைத்துறை சார்ந்த கட்டளையிடும் மேலாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்யவேண்டுமென படையத்தின் சில பிரிவினருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். இப்படியான எழுத்தாளர்கள் இன்று நாட்டுக்குத் தேவையில்லை. விடுதலைப்புலிகளுக்கும் ஜே வி. பியினருக்கும் இடையே உண்மையான உறவு இருப்பதனால் இதுபோன்ற கட்டுரைகளை ''லக்தீப'' நாளேடு வெளியிடுவது ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடிய விடயமல்ல, தொழிலாளர் தினமான மே திங்கள் 1 ஆம் திகதியில் இந்த இருசாராரும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஊர்வலம் ஒன்றை பாரிஸ் நகரில் நடாத்தியுள்ளனர்.

## நடைமுறைக்கு அப்பாற்பட்ட போர் ஒழிப்பு

பல அரசு சார்பற்ற நிறுவனங்களும், தனிநபர்களும் முன்வைக்கும் சமாதான யோசனைகள் பலவற்றைப் பற்றியும் குறிப்பிடவேண்டியுள்ளது. ஒன்றை மட்டும் மிகவும் அழுத்தயாக நாம் கூறுவோம். நாம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் நடந்துவரும் சம்பவங்களை நோக்குகையில் ஜே. வி. பியினருடன் எப்படிச் சமாதானத்தை வைத்திருக்கமுடியாதோ அதே போல் விடுதலைப்புலிகளுடனும் அதை வைத்திருக்கமுடியாது. சல்வடோரிலுள்ள எப். எம், எல். என் (FMLN) கொலம்பியாவிலுள்ள எம் 19 (M 19) தென் ஆபிரிக்காவிலுள்ள ஆபி



ரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) அல்லது பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மொறெஸ் (Moros) போன்ற பகுத்தறிவுள்ள இயக்கங்கள் பற்றி நாம் இங்கு பேசவில்லை. ஜே. வி. பியைத் தோற்கடித்தது போல் விடுதலைப்புலிகளையும் தோற்கடித்ததன் பின்பே உண்மையானதும் நிரந்தரமானதுமான சமாதானத்தை அடைய முடியும். வடக்கையும் தெற்கையும் சேர்ந்த சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டுமென்ற கோரிக்கை விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலை நீடிக்கச் செய்வதற்கு உதவுவது மாத்திரமின்றி, ஜே.வி.பியினருக்கும் புத்துயிர் கொடுத்து படையத்திற்கு எதிராகச் செயல்பட இரண்டாவது அணியை தெற்கில் உருவாக்க உதவும் என்பதை சமாதானத்தைக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்பவர்கள் உணரவேண்டும். விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவைத்துச் சமாதானத்தைக் கொண்டுவருவதற்குப் பதிலாக தமிழ்மக்களின் நன்மைக்காக அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவர ஏன் இவர்கள் உதவக்கூடாது? தற்போது நிலவும் இக்கட்டான் நிலையை இல்லாது செய்வதற்கு உதவுவதுடன் விடுதலைப் புலிகள் அல்லாதவர்களும், சனநாயக வழியில் இயங்குபவர்களுக்குமான தமிழ் மக்களுடைய கட்சிகளையும், சிங்கள மக்களுடைய கட்சிகளையும், முசுலிம் மக்களுடைய கட்சிகளையும் ஒரு இணக்கமான தீர்வொன்றுக்கு இணங்க வைக்கும் நல்லெண்ணத் தூதுவர்களாக இவர்கள் செயற்படலாம். சமாதானத்தைக் கொண்டுவர இன்று இவர்கள் ஆற்றக்கூடிய பங்களிப்பு இதுவேயாகும்.

நேரம் கடந்து செல்கின்றது என்பதை மீண்டும் எச்சரிக்கவேண்டியுள்ளது. இதில் தாமதித்தால் அது விடுதலைப்புலிகளுக்கு உதவுவதாகவிருக்கும். 'விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்கள் என வெறுமனே கூறுவது இலகுவானது. ஆனால் அவர்களுக்கு எதிரானவர்கள் என்பதை நாம் செயலிலும் காட்டவேண்டும். சிங்கள மக்களுடைய வெறிகொண்ட நாட்டுப்பற்றைத் தூண்டுதல், தமிழ் மக்களுக்கு எதிராக கோட்பரப்புரைகளை ஆற்றுதல், தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கும் பொழுது அது தமிழ்மக்களுக்கு நாட்டை விற்க வகுக்கப்பட்ட திட்டம் எனக்கூறி அதை எதிர்த்தல் ஆகியன விடுதலைப்புலிகள் தங்கள் குறிக்கோளை எய்த உதவுவதால், இவை போன்ற வழிமுறைகளைக் கைவிட்டு, விடுதலைப் புலிகளைத்தோற்கடிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டியவற்றைச் செய்வதன் மூலமே இதைச் செய்ய முடியும்.

## திரு. அசுரப் அவர்களின் பதில்

அரசியல் அமைப்பிற்கு முரண்பட்ட வழிமுறைகளைக் கையாண்டு அரசாங்கத்தை வீழ்த்த மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையும், சனாதிபதிக்கு எதிராக மீண்டும் ஒரு குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவர மேற்கொள்ளும் நடவடிக்கையும், எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும். வெறுமனே ஆட்கள் மாற்றுவதால் பயன் ஏதும் ஏற்படாது.

''நாங்கள் இப்பொழுது ஒன்றுக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். அதுதான் போர். இதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றோமா? நாங்கள் இந்த விடயத்தில் ஐக்கியப்படக்கூடாதா? விடுதலைப்புலிகளுக்கு நாம் அனைவரும் எதிரானவர்கள் என்ற முறையில் நாம் ஐக்கியப்படக்கூடாதா? அப்பாவித் தமிழ் மக்களை நாம் காப்பற்ற வேண்டும். தேசிய ஒருமைப்பாட்டை மீண்டும் நாம் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு நாம் அனைவரும் ஐக்கியப்படவேண்டும். இந்த விடயத்தினுள் இந்த அம்சத்தை ஏன் நாங்கள் கணக்கில் எடுக்கவில்லை. இதை நாங்கள் சரிப்படுத்தக் கூடாதா? இதை ஏன் நாங்கள் செய்ய முடியாது? நாங்கள் இதைச் செய்கின்றோமில்லை. அரசாங்கத்தைப்பற்றி நான் கூறவில்லை. அரசாங்கம் மாத்திரம் இதைச் செய்ய இயலாது. ஐக்கிய தேசியக்கட்சி தானாகவே இதைச் செய்ய இயலாது. இலங்கைச் சுதந்திரக்கட்சி நாளைக்குப் பதவியை ஏற்றாலும் அவர்களால் இதில் எக்காலத்திலும் வெற்றி காணமுடியாது. அவர்களும் தோல்வியையே தழுவுவர். இதனால் இச்சிக்கலுக்கு அவசர தீர்வு காணப்படவேண்டும். இரண்டாவது உலகப்போரின் போது என்ன நடந்தது என்பது பற்றி உலக வரலாறுகள் மூலம் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு அவசரகால அரசை உருவாக்கி முழு நாட்டு மக்களையும் போர் நடவடிக்கையில் ஈடுபடுத்த வேண்டும்'' என திரு. அசுரப் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை நவம்பர் 17ம் திகதி வெளியிடப்பட்ட பாராளுமன்றப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

○

# ஆட்களும் விடயங்களும்
# அரசியல் புவியியல்

கைடில்யா
(ஐலண்ட் 92-11-20)

கேம்பிறிச் நகரிலிருந்து (Cambridge) வெளியிடப்படுவதும், புகழ்பூத்த முன்னாள் சட்டத்தரணி திரு. ந. சத்தியேந்திரா அவர்களை இடைக்காலப் பத்திரிகை ஆசிரியராகக் கொண்டதுமான 'தமிழ்நேசன்' என்ற செய்தித்தாளில், அமெரிக்க இராசாங்க அமைச்சின் ஆதரவுடன் அண்மையில் நடைபெற்ற உலகின் தலைசிறந்த அரசியற் புவியியலாளர்களுடைய மாநாட்டைப்பற்றி எழுதுவதற்கு முழுப்பக்கம் ஒன்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஆட்களும் விடயங்களும் (Men and Matters) என்ற தலைப்பில் செப்ரம்பர் 13ஆம் திகதி நான் எழுதியிருந்த விடயங்களைவிட அதிகமான விடயங்கள் இதில் காணப்படுகின்றன. நாடுகளை மீண்டும் உருவாக்குவது பற்றிய விடயங்களையே நாம் இப்பொழுது ஆராய்ந்து வருகிறோம்'' என அமெரிக்க இராசாங்க அமைச்சிலுள்ள தலைமைப் புவியியலாளரான திரு. பி. வூட் அவர்கள் இந்த மாநாட்டின்போது கூறியுள்ளார்.

''தற்போதுள்ள நாடுகளின் எல்லைகள் அல்லது இந்நாடுகள் தங்கள் தேசிய எல்லைகள் எனக் கூறிக்கொள்பவை நன்கு அங்கீகரிக்கப்பட்ட மொழி மற்றும் நிலப்பரப்பை இனங்காணத்தக்க வகையில் அமையாதிருப்பின் இவை இவற்றின் முக்கியத்துவத்தை இழக்க நேரிடும் என இத்தாலியைச் சேர்ந்த மேன்மை மிக்க புவியியலாளரான திரு. வாபிறிசியோ ஏவா அவர்கள் கூறுகிறார்.

தன்னாட்சி உரிமை கோரும் புதிய இக்காலத்தில் இக் கோரிக்கைகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், உலக அரசியலில் நாட்டு மட்டத்திலும் மாநிலமட்டத்திலும் பாரிய மாற்றங்கள் ஏற்படும்'' என அனைத்துலக புவியியலாளர் சங்கத்தின் உலக அரசியல் படவரைவு சிறப்புக்குழுவின் தலைவரான திரு. டேவிட் நைற் அவர்கள் கூறுகிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிகழ்ச்சி நிரலில் தன்னாட்சி உரிமை என்ற விடயத்திற்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்? என பொதுச்சபையின் 47 ஆவது கூட்டத் தொடரில் அதன் செயலாளர் நாயகம் திரு. போற்றஸ் காலி அவர்கள் ஆற்றிய உரையை மேற்கோளாக எடுத்துக்காட்டி தமிழ் நேசனில் நீண்ட கட்டுரை வெளிவந்துள்ளது. தனது இலட்சியமான தமிழ் ஈழத்தை வென்றெடுப்பதற்குத் திரு. பிரபாகரன் அவர்கள் மிகவும் தீவிரமாகவும் முனைப்பாகவும் இலங்கையில் செயற்படுவது போல், நாட்டிலிருந்து சென்று வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களும் இந்த இலட்சியத்தை அடைவதற்காகத் தீவிரமாக உழைக்கின்றார்கள். இலங்கையை விட்டுச்சென்று வெளிநாடுகளில் வாழும் சிங்களவர்கள் தங்கள் இனத்துக்காகச் செய்வது என்ன?

*ஒரு கலைப்படைப்பு தன்னுள்ளேயே தன் நிர்ணயத் தன்மையைக் கொண்டிருக்கிறது. செயற்கையாக உருவாக்கப்பட்ட அல்லது மிகைப்படுத்தப்பட்ட எண்ணங்கள் உருவங்கள் ஆவதைத் தாங்க முடிவதில்லை. அவை அனைத்தும் உடைந்து சிதறி விடுகின்றன. நலிவுற்று வெளிறிக்காணப்படுகின்றன. யாரையும் நம்பவைப்பதில்லை. ஆனால் உண்மையை அள்ளிக்கொண்டு வந்து நம்முன் உயிரோட்டம் நிரம்பிய சக்தியாகத்தரும் படைப்புகள் நம்மை ஆட்கொள்கின்றன; வற்புறுத்துகின்றன. யாரும், எப்போதும் இனிமேல் வரப்போகும் காலங்களிலும் சரி, அவற்றைத் தகர்க்கமாட்டார்கள்*

*— சால்சனிட்சினின் நோபல் உரை*

# வெளிநாட்டு உதவிகளும், கடன்களும்- நீண்டகாலமாக நிலை நாட்டப்பட்டு வந்த தவறான கருத்துக்கள்

*-சவர் பங்காஷ்*

(நூல்கள்:-1) முன்னேற்றம் என்ற பெயரில்-வெளிநாட்டு உதவியின் சீர்கேடுகள் (2) புளுவான கடன்கள் Odious Debts)- சுலபமாகக் கடன் வழங்கலும், ஊழலும் மூன்றாம் உலக நாடுகளின் சூழற்பண்புகள்)

(உதவிகளில் அதிகமானவை வறிய நாடுகளிலுள்ள செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்க உதவுகின்றது. இந்த உதவி படையத்தாலோ அல்லது கொடுங்கோலர்களாலோ பாவிக்கப்பட்டாலும் பெரும்பான்மையான மக்கள் நன்மையடைவதில்லை)

(உலக மக்கள் தொகையில் 10 சதவீதமான செல்வந்தர்களிடம், அதுவும் வடக்கிலுள்ள கைத்தொழில் வளமுள்ள பகுதிகளிலுள்ள செல்வந்தர்களிடம் உலக உற்பத்தியில் 40 சதவீதம் சென்றடைகின்றபோது, கீழ் நிலையிலுள்ள 40 சதவீத மக்கள் 10 சதவீத வளங்களையே உபயோகிக்கின்றனர்.)

கைத்தொழில் வளமுடைய ஐரோப்பிய நாடுகளும், வட அமெரிக்காவும் உலகிலுள்ள ஏனைய வறிய நாடுகளுக்கு ஒரு வகையான அறக்கொடை என வழங்கிவரும் ''வெளிநாட்டு உதவி'' பற்றி ஒரு பொதுவான தவறான கருத்து நிலவுகின்றது. ''உதவி'' என்ற சொற் பிரயோகமே தவறான எண்ணத்தைக் கொடுக்கின்றது. எந்த ஒரு நாடும் அறக்கொடை வழங்குவதில்லை. வெளிநாட்டு உதவி என வழங்கப்படுவனவெல்லாம் உண்மையில் வட்டியுடன் சேர்த்து மீளச் செலுத்தப்படவேண்

டிய கடன்களாகும். பெரும்பாலும் இப்படிப்பட்ட கடன்களுக்கு விதிக்கப்படும் கடுமையான நிபந்தனைகள், இந்தக் கடன்களைப் பெறும் நாடுகளை மேலும் ஏழ்மை நிலைக்குத் தள்ளுகின்றன. ஆகக் குறைந்தளவு மதிப்பீட்டின்படி நோக்கினாலும், இந்த வெளிநாட்டு உதவியினால், உதவியைப்பெறும் நாடுகளிலும் பார்க்க உதவியை வழங்கும் நாடுகளே கூடுதலான நன்மை அடைகின்றன.

இந்த இரு நூல்களின் வாயிலாக, இந்நூல்களின் ஆசிரியர்கள் இந்த உதவி பற்றிய சிக்கல்களை அலசி ஆராய்ந்து, இந்த உதவி வழங்குவது பற்றிய சொற்றொடர்களுக்கு முற்றிலும் புதிய கருத்துக்களை வழங்குவதுடன், இந்த உதவி எந்த அடிப்படையின் கீழ் வழங்கப்படுகின்றது என்பதையும் எல்லாரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தெளிவாக விளக்கியுள்ளனர். பற்றீசியா அடம்ஸ்சும் லோறன்ஸ் சொலமனும் சேர்ந்து ஆக்கிய, ''முன்னேற்றம்'' என்ற நூலின் வாயிலாக மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கு வெளிநாட்டு உதவி பயன் தரும் என்பதையும், மூன்றாம் உலகநாடுகளின் வறுமைக்கு கூடுதலாக பிள்ளை பிறப்பதே காரணம் எனக் கூறப்படுவதையும் வெகுவாகச்சாடியுள்ளார்.

**உலக மக்கள் தொகையில் 10 சதவீதமான செல்வந்தர்கள் அதுவும் அதிகமாகக் கைத்தொழில் மேம்பாடுடைய வடக்கில் உள்ளவர்கள், உலக உற்பத்தியில் 40 சதவீதத்தைப் பெறும் வேளையில் கீழ்மட்டத்திலுள்ள 40 சதவீதமக்கள் 10 சதவீத உற்பத்தியைபெறுகின்றனர் என்பதை இந்த நூலாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.** இதனால் உலகிலுள்ள வறிய மக்களுக்குக் குறைந்தளவு பிள்ளைகள் இருந்தாலும்கூட, அவர்களுக்கு இந்தப் பத்து வீதச் செல்வந்தர்கள் பெறும் உற்பத்தி வளங்களைப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடையாது. அதே போன்று வடக்கிலுள்ளவர்களின் வாழ்க்கை முறையை உலகிலுள்ள ஏனைய மக்கள் பின்பற்றவும் முடியாது. ஏனெனில் எமக்குத் தெரிந்த வரையில் உலகிலுள்ள வளங்கள் அதற்கு இடம் கொடுக்க மாட்டா. இந்த வாழ்க்கை முறை அநாவசியமானதும், ஆடம்பரமானதும், தேவையற்றதும் எனத் தெளிவாகத் தெரிந்தும் மூன்றாம் உலக நாடுகளில் குடும்பக்கட்டுப்பாட்டை வழி நடத்துபவர்கள் ஒழுங்கற்ற முறையில் வளங்கள் பங்கிடப்படுவதையும், அதைக்கட்டுப்படுத்துவதையும் பற்றி சிறிதேனும் தங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்வதில்லை.



இந்த நூலாசிரியர்களான செல்வி அடம்ஸ்சும், திரு. சொலமனும் இந்த ஏமாற்றுவித்தையை வெளிக்கொணர உதவியுள்ளனர். மேற்குலக நாடுகளின் தொழில் நுட்பத்தை மூன்றாம் உலக நாடுகளுக்குப் பரப்புவதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளிலுள்ள வறுமை நிலை போன்ற சிக்கல்களைப் போக்கலாம் என மேற்குலக நாடுகள் கொண்டிருக்கும் எண்ணத்துக்குச் சவால் விடுகின்றனர். இப்படிப்பட்ட பெரும்பாலான திட்டங்கள், நல்லெண்ணத்துடன், அந்த நாடுகளுக்கு உதவும் என்ற நோக்கில் செயற்படுத்தப்பட்டபோதும் மூன்றாம் உலக நாடுகளில் அவை பயன்படுத்தமுடியாதவை என்பதால் வெற்றியளிக்கவில்லை.

உதவிகளில் அதிகமானவை வறிய நாடுகளிலுள்ள செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்குவதற்கு உதவுகின்றது என்பதை இந்த நூலாசிரியர்கள் மிகச்சிறப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த உதவிகள் படையத்தாலோ அல்லது கொடுங்கோலர்களினாலோ உபயோகிக்கப்பட்டால் பெரும்பான்மையான மக்கள் அதனால் நன்மையடைவதில்லை. இந்த விடயத்தை விரிவாக ஆராய்வதானால் செல்வி பற்றிசியாவின் அடுத்த நூலான ''பளுவான கடன்கள்'' என்ற நூலைப் பார்க்கவேண்டும். கடன்களினால் யார் பயனடைகிறார்கள் என்பதை இந்த நூலில் நூலாசிரியர் விரிவாக ஆராய்ந்துள்ளார். பளுவான கடன்கள் என்ற கோட்பாட்டுக்கு ஒரு அத்தியாயத்தை ஒதுக்கியுள்ள அவர், இந்த நிலை தோன்றியதற்கான பின்னணியை நன்கு விபரித்துக் கூறுகிறார்.

தேய்ந்துகொண்டிருந்த ஸ்பானியப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் கியூபா இருந்தபோது 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த எண்ணம் அங்கு தோன்றியது. இக்காலத்தில் கியூபா நாட்டு மக்கள் ஸ்பானியாவுக்கெதிராகக் கரந்தடிப் போரை நடத்திவந்தார்கள். இவர்களுக்கு ஆதரவாக அமெரிக்கா இருந்து வந்தது. (தற்போது அமெரிக்கா கியூபாவுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது) 1878 ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 15 ஆம் நாளன்று ஏற்பட்ட ஒரு வெடிவிபத்தினால் அமெரிக்கப் போர்க்கப்பலான மெயின் (Maine) கவானாத் (Havana) துறைமுகத்தில் மூழ்கியது. இந்தக் கப்பல் மூழ்கியதற்கு ஸ்பானியரே பொறுப்பு என அமெரிக்கர்கள் குற்றஞ்சாட்டினர். ஈற்றில் கியூபாவில் நடந்த போரில் ஸ்பானியர் தோல்வியைத் தழுவவேண்டி நேரிட்டது.

PUBLIC LIBRARY

இந்தப் போரின் பின்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, அமெரிக்கா கியூபாவின் இறைமையை ஏற்றிருப்பதனால் அதன் கடன்களுக்கும் அமெரிக்கா பொறுப்பேற்க வேண்டுமென ஸ்பானியா விவாதித்தது. ஒரு நாட்டின் பொறுப்புக்கள் அந்த நாட்டையும், நாட்டு மக்களையும் சார்ந்ததெனவும் அந்த நாட்டை ஆட்சிசெய்த அல்லது ஆட்சிசெய்யும் அரசைப் பொறுத்ததல்ல எனவும் அனைத்துலகச் சட்டத்தை ஸ்பானியா சுட்டிக்காட்டியது. ஆயுதபலத்தாலும், கியூபா மக்களின் சம்மதமின்றியும் கடன்பளு அவர்கள் மேல் திணிக்கப்பட்டதெனக்கூறி அமெரிக்கர்கள் இந்தக் கொள்கையை எதிர்த்து வாதாடினர். கியூபாவுக்கான சுதந்திரப்போராட்டத்தை எடுத்தபோது இந்தப் பிரதான பிழையான கொள்கையை இல்லாமற் செய்யவேண்டிநேரிட்டது.

இந்த இரு நாடுகளும் தங்கள் நிலைகளிலிருந்து விட்டுக்கொடுக்கவில்லையானாலும், அமெரிக்கா கியூபாவின் கடன்களுக்கான எதுவித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்துலகச் சட்டத்தில் மிகச் சிக்கலாக மாறிய இதற்கு, ருசியாவை ஆண்ட சார் (Czar) மன்னனின் மந்திரி சபையில் மந்திரியாக இருந்த திரு. அலெக்சாண்டர் சாக் (Alexander Nahum Sack) அவர்கள், ஸ்பானிய அமெரிக்கப் போர் முடிந்த 25 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு சட்டவடிவம் கொடுத்தார். போல்சிவிக் புரட்சியின் பின் திரு. சாக் அவர்கள் பாரிசிலுள்ள பல்கலைக்கழகத்தில் சட்டப்பேராசிரியராகக் கடமையாற்றினார். தனது கோட்பாடுகளை விளக்கித் திரு. சாக் அவர்கள் வெளியிட்ட இரு நூல்கள் பொதுக்கடன்களுக்கும், பளுவான கடன்களுக்குமுள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டுகின்றன எனத் திரு. அடம்ஸ் அவர்கள் விளக்குகின்றார். முதலாவது கடன் ஒரு அரசாங்க அமைபபுக்கல்லாது நாட்டின் தேவைக்காகப் பெறப்பட்ட கடனாதலால் அது அந்த நாட்டின் பொறுப்பிலே இருக்கவேண்டுமென்றும் அவர் வாதாடுகின்றார். இரண்டாவது கடனான பளுவான கடன்கள் நாட்டின் நலன்களுக்காகப் பெறப்பட்டது அல்லாதாகையால் அது பொதுவான சட்டங்களுக்குள் அடங்காது அதாவது ஒரு கொடுங்கோல் அரசு நாட்டின் தேவைக்கல்லாது தனது ஆட்சியைக் காக்கவும், தன்னை எதிர்த்துப் போராடும் மக்களை நசுக்கவும் பெறும் இக்கடன்கள் நாட்டுக்குத் தேவையற்றவையென்றும், இவை பளுவான கடன்களென்றும் இக்கடன்களை அந்நாட்டு மக்கள் ஏற்கவேண்டியதில்லை என்றும் கூறுகின்றார்.



பெரிய பிரித்தானியாவுக்கும், கோஸ்ராறிக்காவுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறொன்றில் இந்தவாதம்சரியானதென அமெரிக்க உயர் நீதிமன்றத்தலைமைநீதிபதி திரு. ராவற் அவர்கள் 1923 ஆம் ஆண்டு தீர்ப்பளித்தார். பிரித்தானிய நிலநெய் நிறுவனம் ஒன்றிற்கும், கொஸ்ரா றிக்காவின் சர்வாதிகாரியான சனாதிபதி ரினோக்கோ (Tinoco) வுக்குமிடையிலான ஒரு ஒப்பந்தத்தினால் இக்கடன் ஏற்பட்டது. திரு. ரினோக்கோ இந்த ஒப்பந்தம் மூலம் சில சலுகைகளை பிரித்தானிய நிலநெய் நிறுவனத்துக்கு வழங்கியிருந்தார். இந்த உடன்படிக்கை கொஸ்ராறிக்காவின் பாராளுமன்றத்தினால் மட்டுமே ஏற்கப்பட்டிருந்தது. ஆனால் அந்நாட்டின்அரசியல் யாப்பின்படி இவ்வுடன்படிக்கையை இரு சபைகளும் அங்கீகரிக்கவேண்டும். திரு. ரினோக்கோவின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததும், பதவிக்கு வந்த புதிய அரசு இவ்வொப்பந்தம் பிழையானது எனக்கூறி இக்கடனைச் செலுத்த மறுத்தது. அமெரிக்க உயர்நீதிமன்றம் இதைச் சரியானது எனத் தீர்ப்பளித்தது. புதிய குடியேற்றவாத எழுச்சியினாலும் கடன்வழங்கும் நாடுகள் நீதிமன்றங்களின் மீது செல்வாக்கைப் பிரயோகிப்பதாலும் இச்சட்டம் வழக்கில் இல்லாமற் போய்விட்டது.

இந்த பளுவான கடன்கள் என்ற கோட்பாடு நடைமுறையில் இருந்து வருகின்றதென்றும், ஆனால் உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் உள்ள மக்கள் சர்வாதிகாரிகள் இப்படியான கடன்களைப் பெற்றுத் தங்கள் நாட்டை வளம்பெற வழிசெய்யாத திட்டங்களில் செலவிட்டனர் அல்லது மக்களை நசுக்க உபயோகித்தனர் என அக்கடன்களை மீளச் செலுத்துவதற்கு மறுக்கலாம் எனத் திரு. அடம்ஸ் வாதிடுகின்றார். ஒரு உதாரணமாக உதவி பெறும் நாடுகளின் படித்த மக்களாலும், மேற்குறித்த உலக வங்கி மூலம் கொடுக்கும் ஊக்குவிப்பால் கட்டப்படும் பெரிய அணைக்கட்டுக்கள் ஆகும். முதலாவது விடயத்தில், கடன் வழங்கும் நாடுகள் தங்கள் மக்களுக்குத் தொழில்வாய்ப்பை உருவாக்குவதோடு, வர்த்தக வாய்ப்புக்களையும் பெறுகின்றன. அணைக்கட்டு விடயத்தில் கடன்பெறும் நாடுகளிலிருக்கும் செல்வந்தர்களும் பெரும் தொகையான பணத்தைக்கையாடல் செய்கின்றனர். அணைக்கட்டு கட்டும்போது இயற்கையழிவதுடன், இங்கு மரபு வழியாக வாழ்ந்து வந்த மக்கள் தாங்கள் வசித்துவந்த இடங்களிலிருந்தும் வெளியேறவேண்டிய நிலை ஏற்படுவதோடு அணைக்கட்டுக்கட்டி முடித்தபின் அப்படியான நீர்வழங்கலால் பரவும் தொற்றுநோய்களுக்கும் ஆளாக வேண்டியிருக்கின்றது.

திரு. அடம்ஸ் அவர்கள் இருநாடுகளில், இந்தோனேசியா, பிறேசில் ஆகிய நாடுகளில் இப்படியான நடைமுறைகள் நடைபெற்றுள்ளன எனச் சுட்டிக்காட்டியிருந்தாலும், மக்களை இன்னலுக்குட்படுத்தும் இத்திட்டங்கள் அநேக நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஈரான் நாட்டு சா மன்னர் பல மில்லியன் கணக்கான டாலர்களைக் கடனாகப்பெற்றிருந்தார். அதே போன்று அல்ஜீரியாவிலும் ரியூனிசியாவிலும் இருக்கும் அரசுகள் பாரிய கடன்களைப் பெற்றிருந்தன. இக்கடன்கள் அந்நாட்டு மக்களை உயர் நிலைக்குக்கொண்டுவர உதவவில்லை. ஆனால் ஆளும் உயர்வர்க்கத்தினரைச் செல்வந்தர்களாக்க உதவியது. இந்த வரிசையில் எகிப்தையும் இந்நாடுகளோடு சேர்க்க வேண்டியுள்ளது. ஏனையவர்களில் குறிப்பாகப் பிலிப்பைன்ஸ் நாட்டு சர்வாதிகாரியான காலஞ்சென்ற திரு. பேர்டினன்ட் மார்க்கோஸ் அவர்களும் அவருடைய விதவை மனைவியான இமெல்டாவும் பல மில்லியன் டாலர்களைக் கையாடல் செய்திருந்தனர். இவர்களுக்குப் பின்னால் வந்த அரசாங்கங்களும், மக்களும் உண்மையாகவே சுதந்திரமுடையவர்களாக விருந்தால் இப்படிப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் முறித்துக்கொண்டிருக்கலாம். குறிப்பாக அமெரிக்கா இதற்கு பொறுப்பாக வேண்டும். ஏனெனில் அமெரிக்கர்களே பளுவான கடன்கள் என்ற கொள்கையை முன்வைத்தவர்கள்.

கடன்கள் எப்படிப் பெறப்படுகின்றன என்பதையும் எந்த வழிவகைகளில் செலவழிக்கப்படுகின்றன என்பதையும் இந்த இரு நூல்கள் விபரமாகத்தருகின்றன. இவர்கள் கூறுவது எல்லாவற்றிற்கும் இணங்க வேண்டியதில்லை என்றாலும் கடன் வழங்கும் மேற்குலக அரசாங்கங்களினதும், கடனைப்பெறும் மூன்றாம் உலக நாடுகளினதும் கபடத்தனத்தை வெளிக் கொணர்வதில் இவர்கள் தங்கள் திறமையைக் காட்டியுள்ளனர்.

குறிப்பு:- In the name of Progress: The under side of Foreign Aid by Patricia Adams and Lawrence Soloman Earthsca n publication Ltd., London and Toronto

Odious Debts: Loose lending Corruption and the third World's Enviornmental Legacy by Partricia Adams Earthscan Publication Ltd., London and Toronto

□

# முப்படையினரின் நலன்புரித்தேவைகளுக்கு சிறப்பு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்

(டெயிலி நியூஸ் - 21.12.1992)

நாடாளுமன்றில் 16 12.92 அன்று அவசரகாலச் சட்ட விவாதம் நடைபெற்ற போது, கைத்தொழில், விஞ்ஞான, தொழில்நுட்ப **அமைச்சர் திரு. றனில் விக்கிரமசிங்க அவர்கள் ஆற்றிய உரையின் சில பகுதிகள்**

இந்த நாட்டில் காப்பு விடயமாக எழுப்பப்பட்ட விடயத்தைப்பற்றி நான் கருத்துக்கூறவேண்டும். படைவீரர்களின் நலன்களைப்பற்றிய அறிக்கையை முதலாவதாக வாசிக்க விரும்புகின்றேன்.

இந்த நிதியாண்டில், அதாவது 1992ம் ஆண்டு நிதியாண்டில் முப்படைவீரர்களுக்கும் காவற்துறையினருக்கும் 14,057, 868,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தோடு காயப்பட்ட படைவீரர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நலன்புரிச் சேவைக்கெனவும் மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கெனவும் தேசிய காப்பு நிதியத்திலிருந்து 52, 830, 108 ரூபாவை ஒதுக்கியுள்ளோம். இதைவிட மேலதிகமாக 50 உழவு இயந்திரங்கள், அவைக்குரிய பெட்டிகள், நீர் சுத்திகரிக்கும் உபகரணங்கள், கண்ணிவெடிகளைக் கண்டுபிடிக்கும் நாய்கள், நான்கு பேருந்துகள், தொலைத்தொடர்பு சாதனங்கள் ஆகியன வாங்குவதற்கென 5, 152, 412 ரூபாவை ஒதுக்கியுள்ளோம்.

வடக்குக் கிழக்கிலுள்ள போர்முனைகளுக்கு ஒக்டோபர் திங்கள் 27, 28, 31 ஆம் நாட்களிலும் நவம்பர் திங்கள் முதலாம் நாளன்றும் பிரதம மந்திரியும் காப்புச் செயலரும் சென்று முன்னணிநடவடிக்கைகளில் ஈடுபடும் படைவீரர்கள் படும் இன்னல்

களை நேரில் விசாரித்து அறிந்துகொண்டனர். இப்படைவீரர்கள் தாங்கள் படும் இன்னல்களைத் தீர்த்து வைப்பதற்குமுன்னுரிமை வழங்கவேண்டுமென்று கோரியவை இதன் கீழ்கொடுக்கப்பட்டுள்ளன.

அ) ஓய்விற் செல்லும்போது எதிர்கொள்ளும் இன்னல்கள், இடைநிலைத்தங்குமிட வசதிகள், காங்கேசன்துறையிலும் அநுராதபுரத்திலும் தேவைப்படுகின்றன.

ஆ) தீர்வையற்ற சிகரெட் வழங்குவதை மீண்டும் செயற்படுத்தல்.

இ) சீருடைப் பொருட்கள் தாமதித்து வாங்கியதனால் இந்த ஆண்டு தேவைக்குக் குறைந்தளவு சீருடை வழங்கப்பட்டமை.

ஈ) பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும்போது இலவச பயணச்சீட்டுகள் வழங்கப்பட வேண்டும்.

உ) போர் நடைபெறும் முன்னணிப் பகுதிகளிலுள்ள வதிவிடங்களின் அவலநிலைமைகளும். பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலம் தொடங்குமுன் அவ்வதிவிடங்களின் கூரைகள் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

ஊ) உடன் உணவுப் பொருட்கள் முன்னணிப் போர் நிலைகளுக்கு எடுத்துச் செல்வதில் ஏற்படும் இன்னல்கள்.

எ) ஊர்காவற்படையினருக்கு வழங்கப்படும் ஊதியம் தாமதப்படல்.

ஏ) காவல் பற்றாலியனுக்கு தேவைப்படும் சீருடைகளின் பற்றாக்குறை

ஐ) காவற்துறைத் துணைப்படையினருக்கும் காவல் பற்றாலியன்களுக்கும் (Guard Battalion) வழங்கப்படும் தரக்குறைவான ஆயுதங்கள்.

ஒ) முன்னணி நடவடிக்கைகளில் ஈடுபடும் படைவீரர்களுக்குத் தங்கள் கடமைகளுக்குச் செல்வதற்குத் தேவையான நான்கு சில்லு உழவு இயந்திரங்களும், இரண்டு சில்லு உழவு இயந்திரங்களும் ஈருருளிகளும் வழங்கப்படாமை ஆகியனவாகும்.



இக்குறைபாடுகளைப் பிரதம மந்திரி மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவந்து இக்குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

ஓய்வில் செல்லும் படைவீரர்களின் நன்மைகளைக் கருத்திற்கொண்டு கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. காங்கேசன்துறையில் ஓய்விற் செல்லும் படையினரின் வசதிகளைக் கருத்திற்கொண்டு அவர்கள் வானூர்திகளில் அல்லது கப்பல்களில் இடம்கிடைக்கும் வரை தங்குவதற்கு வசதியாகப் பாரிய தங்ககம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரத்திலும் போக்குவரத்துச் செய்யும் படையினரின் இருப்பிடவசதிக்காக ஒரு தங்ககம் அமைக்கப்பட்டுள்ளது.

திருக்கோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே பிரயாணம் செய்வதற்காக ஒரு கப்பல் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

அனுராதபுரத்திற்கும் காங்கேசன்துறைக்குமிடையே போக்குவரத்துச் செய்வதற்காக மேலதிக வானூர்திகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஆனையிறவு, பூநகரி, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களிலுள்ள படைவீரர்களின் பயண வசதிகளைக் கருத்திற்கொண்டு மூன்று மேலதிக உலங்குவானூர்திகளை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

ஓய்விற்செல்லும் போது புகைவண்டிப் பயணச்சீட்டுகள் வழங்கவும் பேருந்துகளிற் செல்லும் போது ஏற்படும் செலவுகளை ஈடுசெய்யும் வகையிற் பயணச்சீட்டுகளின் பெறுமதிகளை மீளளிக்கவும் வகை செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

## தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்ட சிகரெட்டுக்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள்

முப்படை வீரர்களுக்கும் காவற்துறையினருக்கும் வழங்கப்படும் சிகரெட்டுகளுக்கு உள்ள தீர்வைக்கு அரசுபொது வருவாய்த்துறை அரங்கம் விலக்களித்ததனால் ஒவ்வொரு சேவையும் தங்களுக்குத் தேவையான சிகரெட்டுக்களை தனித்துவாங்கி

வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தீர்வையற்ற சிகரெட்டுக்கள் வடக்குக் கிழக்கிற் கடமையாற்றும் முப்படையினருக்கும் காவல்துறையினருக்கும் வழங்கப்படுகின்றது.

## சீருடைகள்

700,000 மீற்றர் சீருடைத்துணிகள் வாங்கப்பட்டு போர் நடைபெறும் பகுதிகளிற்கு இதற்கு முன்னரே வழங்கப்பட்டுள்ளன. படைவீரர்களுக்குச் சீருடைகள் வழங்குவது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## ஊர்காவற்படையினரின் ஊதியம்

எதிர்காலத்தில் அவர்களின் ஊதியம் உடனடியாக வழங்கப்படவேண்டுமென்றும், நிலுவைகள் எல்லாம் உடனடியாக வழங்கப்படவேண்டுமென்றும், அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளது. இது தற்போது செயற்படுத்தப்படுகின்றது.

## கிடுகுகள்

பருவப்பெயர்ச்சிக்காற்றுக்காலம் தொடங்கியதனால் கிடுகுகள் அலுமினியத் தகடுகள் பொலித்தீன் ஆகியவை வடக்குக் கிழக்கிலுள்ள படையினரின் தற்காலிக வதிவிடங்களுக்கும் காப்பு அரண்களுக்கும் உடனடியாகத் தேவைப்படுகின்றன. முப்படைச் சேவைகளும் இவற்றை வாங்கி வடக்குக்கும் கிழக்குக்கும் அனுப்பிக்கொண்டு இருக்கின்றன.

## குடிநீர்

வடக்கிலும், கிழக்கிலும் சேவையாற்றும் படைவீரர்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீர்வளச் சபையின் ஆலோசனையுடன் ஆழ்கிணறுகள் தோண்டப்படுகின்றன.

## கல்வி

சண்டையில் ஈடுபடும் படைவீரர்களின் பிள்ளைகள் பாடசாலைகளில் அனுமதி பெற ஏற்படும் இன்னல்களையும் படைவீரர்களின் ஆசிரிய மனைவிமார்கள் மாற்றங்களைப் பெறுவதில் ஏற்படும் இன்னல்களையும் கருத்திற்கொண்டு காப்புச் செயலரும்,



கல்வி, உயர்கல்வி அமைச்சு மேலாளர்களும், செயலரும், மாநாடு ஒன்றை நடாத்தி இந்த விடயம் பற்றிக் கலந்துரையாடினர். விண்ணப்பப்படிவங்கள் படைவீரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. படைவீரர்களின் பிள்ளைகட்குப் பாடசாலைகளில் அனுமதி வழங்கும் போது முன்னுரிமை வழங்கப்படும்.

## மருத்துவ வசதிகள்

முதலுதவி மருத்துவ வசதிகள் அதிகமான முன்நிலை நடவடிக்கைப் பகுதிகளில் இல்லையென்று படைவீரர்கள் தெரிவித்தனர். 2000 முதலுதவிப் பெட்டிகள் படையினரால் தயாரிக்கப்பட்டு அண்மையில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரச மருத்துவமனைகளிலும் ஆதாரமருத்துவமனைகளிலும் தங்கள் குடும்பங்களுக்கு மருத்துவ வசதிகள் பெறுவதில் இன்னல்கள் ஏற்படுவதாகப் படைவீரர்கள் தெரிவித்தனர். இந்த விடயம் சுகாதார அமைச்சிற்குத் தெரியப்படுத்தப்பட்டு படைவீரர்களின் குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவ வசதிகள் பெற வழிவகுக்கப்பட்டுள்ளது.

## படிப்பதற்கான வசதிகள்

வாசிப்பதற்குச் சஞ்சிகைகள், செய்தித்தாள்களின் பற்றாக்குறையைப் பற்றியும், பொழுது போக்கிற்கு வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றின் பற்றாக்குறை பற்றியும் படைவீரர்கள் தெரிவித்தனர். வாசிப்பதற்குத் தேவையான பொருட்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன பொதுமக்களிடம் அன்பளிப்பாகப் பெற்ற வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் அனேகமாகக் கிடைத்திருக்கின்றன. இவைகள் படைவீரர்களுக்கு வழங்கப்படும்.

## மலசலகூட வசதிகள்

முன்னணிப் போர் முனைகளிலும் தங்ககங்களிலும் அதிகளவு மலசல கூட வசதிகள் செய்து கொடுக்கும்படி முப்படைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. காலம் கடந்த 303 சுரிகுழல் துப்பாக்கிகளுக்கும் ஜீ 3 சுரிகுழல் துப்பாக்கிகளுக்கும் பதிலாக ரி 56 ரக சுரிகுழற் துப்பாக்கிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

பிரதம மந்திரியின் சுற்றுலாவின் பின் மாகாண சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்கா அவர்களையும் காப்பு இராஜாங்க அமைச்சரின் செயலாளரான எயர் சீஃப் மார்ஷல் வோல்ரர் பர்னாந்து அவர்களையும் அனேகமான பகுதிகளுக்குச் சென்று முப்படைகளுக்கு அளிக்கப்படும் நலன்புரி வசதிகளைக் கண்டறிந்துவரும்படி பணிக்கப்பட்டுள்ளனர். இவர் (திரு.ஜோன் அமரதுங்கா) நான்கு வெவ்வேறு நாட்களில் இவ்விடங்களுக்குப் பயணங்களை மேற்கொண்டதோடு கீழ்க் குறிப்பிடப்பட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவ்விடங்களைப் பார்வையிடுவதற்கு வசதிசெய்து கொடுத்துள்ளனர்.

துணைச் சபாநாயகர் கௌரவ காமினி பொன்சேகா, கௌரவ ஏ.எச்.எம். அஸ்வர், கௌரவ டி.எம்.தயாரத்தினா, கௌரவ மனோ விசயரத்தினா, கௌரவ பி.டி.அபயரத்தினா, கௌரவ கெழுனு அபயசுந்தர, கௌரவ உபாலி அமரசிறி, கௌரவ சி. ஏ. சூரியாராய்ச்சி கௌரவ ஆர்.ஏ.டி.சிறிசேனா, கௌரவ எஸ்.ஏ.அப்துல் மஜீத், கௌரவ சந்திரராமன் த சில்வா, கௌரவ டொனால்ட் திசாநாயகா, கௌரவ சந்திரதாச கலப்பதி ஆகியோரை நடவடிக்கைகளில் ஈடுபடும் பகுதிகளுக்கு அழைத்துச் சென்று அங்கிருக்கும் படைவீரர்களைச் சந்திக்க வசதி செய்து கொடுக்கப்பட்டது.

இக்கட்டான நிலைகளிற் கடமையாற்றும் படைவீரர்களின் நலன்களைக்கருத்திற்கொண்டு வடக்குக் கிழககிலுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடும் பகுதிகளுக்கு, முப்படைகளினதும் காவற்துறையினரதும் நலன்புரிச்சேவைகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் இயக்குநர்களை அப்பகுதிகளுக்கு அடிக்கடி சென்று அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுக்கும்படி கௌரவ பிரதம மந்திரி அறிவுரை வழங்கியுள்ளார்.

முப்படையினருக்கும் காவற்துறையினருக்கும் நலன்புரிச் சேவைகள் வழங்குவதற்கு சிறப்பு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென்று மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் அறிவித்துள்ளதை இங்கு சுட்டிக்காட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வடக்குக் கிழக்கிலுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடும் பகுதிகளுக்குப் பயணம் செய்த கௌரவ உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய சகல விதமான நடவடிக்கைகளையும் அரசு ஊக்குவிக்கும்.



முப்படைகளுக்கும் காவற்துறையினருக்கும் தேவைப்படும் நலன்புரிச் சேவைகளின் முழு அளவிலான அறிக்கை இவ்வளவு தான் என்பதை அறியத்தருகின்றேன்.

முன்னணிக் காப்பு நிலையங்களைப் பொறுத்தவரையில் அங்கு தற்காலிக வசதிகளே செய்து கொடுக்கப்படுகின்றன. படைவீரர்கள் முன்னேறும் போது அவைகளை அகற்றி முன் கொண்டு சென்று புதிய இடங்களில் அமைக்கவேண்டியுள்ளது. இதனால் இவ்வசதிகளை நிரந்தரமாக்கி இவைகளுக்கு காப்பளிக்கும் வகையில் முட்கம்பி வேலி அமைத்தும் கண்ணி வெடிகள் வைத்தும் செயற்படமுடியாது. இப்படிச் செய்தால் இவைகள் எல்லாம் முன்னணிக் காப்பு நிலையங்களாக இருக்க முடியாது. இவைகள் ''பேர்லின் சுவர்'' போல் நிரந்தரத் தங்ககங்களாக மாறிவிடும். இதைத்தான் கௌரவ எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோருகின்றனர்.

இப்படியான காப்பு வலயங்கள் முன்னணிக்காப்புநிலையங்களில் அமைப்பதாயின் இவ்வலயங்களுக்கு வெளியே எமது சிறீலங்கா நாடு பிரிக்கப்பட்டு விட்டது என்று கூறமுடியும். இந்த முன்னணி நிலையங்கள் தற்காலிகமானவை. எதிரியைத்தாக்க நினைக்கும் பொழுது இவைகளை அகற்றி முன்னேறும் இடத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும். தளபாடங்களினதும் படைபலத்தையும் பொறுத்த வரையில் இவைகள் சபையில் கேட்கப்பட்டபடியால் விபரங்களைத் தருகின்றேன்.

தரைப்படை, வான்படை, கடற்படை, காவற்துறை. ஊர் காவற்படை ஆகியோரின் மொத்த எண்ணிக்கை 186,000 ஆகும். இதில் தரைப்படையையும் ஊர்காவற்படையையும் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 129,000 ஆகும். காவற்துறையில் 57,000 பேர் உள்ளனர். தரைப்படை, கடற்படை, வான்படை, ஊர் காவற்படை, அதிரடிப்படை, தரைப்படை காவற்துறை, காவற்துறையின் துணைப்படை ஆகியவற்றிலுள்ள பெரும்பான்மையோர் வடக்குக் கிழக்கிலேயே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தளபாடங்களைப் பொறுத்தவரையில் இருபத்து நான்கு வானூர்திகளுக்கு மேலாகக் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் வாங்கப்பட்டுள்ளன. இதில் போக்குவரத்து வானூர்திகள் உலங்கு வானூர்திகள், ஜெற் வானூர்திகள் ஆகியன அடங்கும். இத்துடன் 130 மி.மீ நீண்ட தூரம் செல்லும் எறிகணை செலுத்திகள். [இவற்றில் கணிசமான அளவு வாங்கப்பட்டுள்ளன] சமரில்

முக்கியமாக ஈடுபடும் தாங்கிகள், சிறியரகத்தாங்கிகள், பீரங்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள், பொருட்கள் ஏற்றி இறக்கும் வாகனங்கள், துப்பாக்கி பொருத்தப்பட்ட படகுகள், அதிவேகச் சமரில் ஈடுபடும் படகுகள் ஆகியனவும் வாங்கப்பட்டுள்ளன. வெற்றிலைக்கேணி, ஆனையிறவு ஆகிய பகுதிகளில் நடைபெற்ற சமரில் பாவித்தது போல் படைக்கலன்களை பாவித்தாலும் எங்கள் கைவசம் இருக்கும் படைக்கலன்கள் இன்னும் இரு ஆண்டுகளுக்குப் போதுமானவை. சுரிகுழல் துப்பாக்கிகளைப் பொறுத்தவரையில் தேவைக்கதிகமான சுரிகுழற் துப்பாக்கிகள் இந்த நாட்டில் இருக்கின்றன. இவை படையத்திற்கும் காவற்துறைக்கும் புதிதாக அமைக்கப்படும் பிரிவுகளுக்கும் அத்தோடு எதிர்காலத்தில் அமைக்கப்படப்போகும் புதிய பிரிவுகளுக்கும் போதுமானவை. தேவையான படையத் தளபாடங்கள் கையிருப்பில் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் மனதில் வைத்திருக்கும் கனரக வாகனங்களும் உரிய இடத்தில் இருக்கின்றன.

தொலைத்தொடர்பு சாதனங்களைப் பொறுத்தவரையில் இந்த அவையில் வாசிக்கப்பட்ட அறிக்கையின்படி மேலதிக தொலைத்தொடர்பு சாதனங்களுக்கு கட்டளை கொடுக்கப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தேவையான படைவீரர்கள் இருக்கின்றார்கள், தளபாடங்கள் இருக்கின்றன. தேவையான ஆட்களும் இருக்கின்றார்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

தளபாடங்களைப் பொறுத்தவரையில் முப்படைத்தளபதிகளும் கூட்டுப்படைத் தலைமையகத்தளபதியும் நாங்கள் வாங்க வேண்டிய தளபாடங்களைப்பற்றி ஆலோசனை வழங்குகின்றனர். எப்படிப்பட்ட தளபாடங்கள் தேவையென்றும் எத்தளபாடங்களுக்கு முன் உரிமை அளிக்கப்படவேண்டுமென்றும் முப்படைத்தளபதிகளும் கூட்டுப்படைத் தலைமையகத் தளபதியும் தீர்மானம் எடுக்கின்றனர் நிதி வசதிக்கேற்ப நாம் அவர்கள் எடுத்த தீர்மானங்களுக்கேற்ப தளபாடங்களைக் கொள்வனவு செய்கின்றோம். படையத்தைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு படையத்தளபதியும் வெவ்வேறு விதமான கருத்துக்களைக் கூறுகின்றனர். சிலர் சுரிகுழற்துப்பாக்கி வேண்டுமென்று கூறுகின்றனர். சிலர் பீரங்கிகள் வேண்டுமென்று கூறுகின்றனர். வேறுசிலர் தாங்கிகள் வேண்டுமென்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட நிலை ஏற்படும் போது எப்படைக் கலன்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென்று நாம் தீர்மானம் எடுப்பதில்லை. படையத்தின் மேலிடம்



இதையிட்ட தீர்மானங்களை எடுக்கின்றது. அவர்கள் சிபார்சு செய்த படைக்கலன்களை நாம் வாங்குகின்றோம்.

இதில் தவறுகள் இருப்பதென்று நான் கூறமாட்டேன். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏன் தெரிவிக்கின்றனர்? கடந்த இரண்டு ஆண்டுகளாக முப்படைகளும் சேர்ந்து எடுத்த நடவடிக்கைகளின் பலனாக கிழக்கு மாகாணத்தின் நிர்வாகம் முழுவதும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதைத் தயவு செய்து மனதில் வைத்திருக்கவும்.

விடுதலைப்புலிகளின் சில குழுக்கள் கிழக்கிலுள்ள காட்டுப் பகுதிகளிலிருந்து நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். விடுதலைப் புலிகள் காட்டுப்பகுதிகளை அண்டிய சிற்றூர்களை தாக்கமுடிகின்றது. சில வேளைகளிற் தொலைத்தொடர்பைத் துண்டிக்கிறார்கள். ஆனாலும் நிர்வாகம் நடைபெறுகின்றது விடுதலைப் புலிகளால் படையத்தையோ, காவற்துறையினரையோ கிழக்கிலிருந்து அகற்றமுடியாமலுள்ளது. அரசுதான் கிழக்கில் நிர்வாகத்தை நடாத்துகின்றது.

படைவீரர்களையும் சிற்றூர் மக்களையும் தாக்கும் விடுதலைப்புலிப் போராளிகள் காட்டுக்குள் மறைந்திருக்கின்றனர். இப்போராளிகளை வெளியே வராது காட்டுக்குள்ளேயே இருப்பதற்கு படையம் நடவடிக்கை எடுத்துள்ளதோடு அவர்களின் அச்சுறுத்தல் சிலவற்றிற்கு முகம் கொடுக்கும் எல்லைப்புற சிற்றூர்களின் காப்பை பலப்படுத்திய பின் வடக்கில் தங்கள் முழுமையான பலத்தையும் பிரயோகிக்க முனைந்துள்ளனர். சென்ற ஆண்டு இந்தத் தந்திரோபாயத்தைப் பாவித்துக் கிழக்கில் தங்கள் நிலையைப்பலப்படுத்தி விடுதலைப் புலிகள், [கிழக்கிலுள்ள காட்டுப்பகுதிகளில் ஆறு பகுதிகளிலுள்ளனர்] இருக்கும் பகுதிகளைத் தேடி அழிக்க நடவடிக்கை எடுத்தபோது விடுதலைப்புலிகள் ஆனையிறவைத்தாக்கினர். படையம் தனது தந்திரோபாயத்தை மாற்றி வெற்றிலைக்கேணியில் இறங்கி யாழ் குடாநாட்டிற்குள் நுளைந்ததின் பின்னர் அடுத்த ஆண்டில் யாழ்குடாநாட்டைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

குடாநாட்டின் சில பகுதிகளும் படையத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. வன்னியிலுள்ள பெரும்பாலான பகுதிகள் [குடிசன மற்றபகுதிகள்] வன்னியிலுள்ள காடுகள் ஆகியன படையத்தின்

கட்டுப்பாட்டில் இல்லை. விடுதலைப்புலிகள் இப்பகுதியிலிருந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். ஆனாலும் அவர்களின் கட்டுப் பாட்டில் இப்பகுதிகள் இல்லை. இது மக்கள் ஐதாக வாழும் ஒரு பகுதியாகும்.

இந்தப்பகுதிகளில் 1983 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட் டின் பொழுது ஒரு சதுரமைலுக்கு ஐந்து குடியிருப்புக்கள் இருந்தன. தற்போது இங்கே இருப்பவர்களில் அனேகமானவர் கள் எதிலிகள்.

இதனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி யாழ் குடாநாட்டிலுள்ள ஒரு பகுதியேயாகும். எங்கள் கட்டுப்பாட்டிலில்லாதவை யாழ்குடாநாட்டிலுள்ள சில பகுதிகளும் காட்டுப்பகுதிகளுமாகும். இந்தக் காட்டுப்பகுதிகளில் இந்திய அமைதிப்படையினர் தங்கள் இறுதிச்சமரில் ஈடுபட்டதோடு தங்கள் இறுதி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

விடுதலைப்புலிகளால் படையக்கட்டுப்பாட்டில் உள்ள பகுதி களிலிருந்து படையத்தை அகற்ற முடியவில்லை. ஆம் இத்தாக் குதலில் பல உயிர்களைப் பலிகொடுக்கவேண்டி நேர்ந்தது. நாம் சில படைக்கலன்களை இழந்துள்ளோம். ஆனால் படையத்தை அப்பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. படையம் தங்கள் நிலைகளிலிருந்து பின்வாங்கவில்லை. இதிலிருந்து தெரியவருவது என்னவென்றால் விடுதலைப்புலிகளின் பலமும் மட்டுப்படுத்தப்பட்ட தென்பதேயாகும். அவர்களால் படையத்தை வெளியேற்ற முடியாது. இதுதான் இப்போதைய நிலையாகும்.

தற்பொழுது அவர்கள் புதிய தந்திரோபாயத்தை அதாவது கொழும்புத் தலைப்பட்டினத்தைத் தாக்கும் நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளனர். தலைப்பட்டினத்தின் காப்பைப்பலப்படுத்துவதற்கு படையமும் பொதுமக்களும், அதாவது எல்லோரும் கொடுத்த ஒத்துழைப்பினாலும் இரகசியத்தகவல்களினாலும் காப்பு உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. செயற்குழு மட்டத்தில் நடந்த விவாதத்தின் போது காப்பு அமைச்சைப்பற்றி அனேகமாக விமர்சிக்கப்பட் டது. இதனால் கூட்டுப்படைத் தலைமைத் தளபதியான ஜெனறல் வனசிங்காவில் எந்தக்குறையும் இல்லை என்பதை எடுத்துக் காட்ட அவரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் சில பகுதி களை இங்கு வாசித்துக்காட்டுகிறேன்.



1993 ஆம் ஆண்டு யூலைத்திங்கள் வரையுள்ள காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றிய சுற்று நிருபங்கள் எல்லாம் எதிரியின் படை பலத்தையும் தளபாட பலத்தையும் அழிப்பதென்பதேயாகும் என்பதை உங்களுக்குக் கூறவிரும்பு கிறேன். இந்த ஆவணங்களிலிருந்து வாசிப்பதை உண்மையாக நான் விரும்பவில்லை. ஆனால் இந்த படைய நடவடிக்கைகளைத் திட்டமிடும் மேலாளர்களின் நன்மைகள் கருதி இறுதி இரண்டு பந்திகளையும் வாசிக்கின்றேன்.

''நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் செயற்படுத்துபவர் களும் எல்லா மட்டத்திலும் ஒன்றை மனதில் வைத்திருக்க வேண்டும். அதாவது விடுதலைப்புலிகளை அழிப்பதில் முன் னேற்றம் காணுவதோடு இந்த இனச்சிக்கலை ஒரு சுமுகமான தீர்வுக்குக் கொண்டுவருவதற்கு உதவுவதாக அவர்களின் நட வடிக்கை இருக்கவேண்டும். ஒருவருடைய முயற்சியினாலோ அல்லது ஒரு குழுவின் முயற்சியினாலோ இதற்கு முடிவு காண முடியாது. எல்லோரும் ஒத்துழைப்பு நல்கி ஒரேமனதாக நட வடிக்கையில் ஈடுபட்டால் விடுதலைப்புலிகளை அழிப்பதோடு எங்கள் எல்லாரினதும் ஒரேயொரு குறிக்கோளான, எங்கள் நாட்டின் சமாதானமும் சகவாழ்வும் மலர வழிவகுக்கலாம்.''

லெப். ஜெனறல் எச். வனசிங்கா,
கூட்டுப்படைத்தலைமைத் தளபதி.

எப்படி என்று தெரியாமலிருக்கும் போது ஓவியம் என்பது கடி னமான கலை அல்ல ...... எப்படி என்று தெரிந்துவிட்டால் அதைப் போல் கடினமான விடயம் வேறெதுவுமில்லை

— எட்கார் டிகாக

# யார் இந்த சிறிநிவாசன்?

- றோகன் குணரத்ன

(ஐலண்ட் 27-12-92)

*இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியப் புலனாய்வுத் துறையினர் வகித்த பங்கை, இலங்கையில் இந்தியாவின் தலையீடு என்ற நூல் மூலம் வெளியிட்ட திரு. றோகன் குணரத்ன அவர்கள், தீவிரவாதத்தைக் கைவிட்டு சனநாயக அரசியலுக்கு வந்துள்ள திரு. க. சிறிநிவாசன் அவர்களுடைய உள் வரலாற்றை வெளிப்படுத்துகின்றார். வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்குப் பதிலாக சமஷ்டி அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என திரு. சிறிநிவாசன் அவர்கள் முன்வைத்த தீர்வுத் திட்டம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவால் ஏற்கப்பட்டுள்ளது.*

மொழி, பண்பாடு, நிலப்பரப்பு, நாடு என்பவற்றின் பெயரால் இரத்த ஆறு ஓடிய நாற்பது ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்தைப பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினரும், மக்களுக்கு இவர் யார் எனத் தெரியாதவருமான திரு. கணபதிப்பிள்ளை சிறிநிவாசன் அவர்கள் முன்வைதந தீர்வுத் திட்டம் இலங்கையில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இவர் யார்? இவருடைய பிறப்பிடம் எது? இவர் யாருடன் தொடர்புகளை வைத்திருந்தார்? இவருடைய நண்பர்கள் யார்? என்ற விபரங்களைப் பற்றி பெரும்பாலான மக்களுக்குத் தெரியாதிருக்கும். இவர் ஒரு புதிராகவிளங்குகிறார். இலங்கையிலிருந்து வெளிவரும் நாளேடுகளில் ''சிறிநிவாசன் திட்டம்'' என்ற அவரின் திட்டம் மிகவும் பிரபல்யமாக்கப்பட்ட போதிலும் இதனை உருவாக்கிய இவரைப் பற்றிச் சிறிதளவே கூறப்பட்டிருந்தது.



தனிநாடு கோரும் தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் 20 ஆண்டுகளாக முன்னணியில் நின்ற திரு. சிறிநிவாசன் அவர்கள் சனநாயக அரசியலுக்கு வருமுன் ஆரம்பத்தில் தமிழர் விடுதலை இயக்கத்தை (Tamil Liberation Organisaticn) உருவாக்கியவர்களுள் ஒருவராகவும் அதன்பின் விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினராக லண்டனிலிருந்து செயல்பட்டு ஈழப் போருக்காகக் கோடிக்கணக்கான நிதியைச் சேகரிப்பவராகவும் ஆயுதக் கொள்வனவு மேற்கொள்பவராகவுமிருந்தார். தீவிரவாதத்திலிருந்து அரசியலுக்கு வந்த இவருடைய மாற்றம் குறிப்பிடத் தக்க ஒன்றாக இருப்பதுடன் இதை ஆராய்வது பயனுள்ளதாகவும் இருக்கின்றது.

திரு. சிறிநிவாசன் அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியில் 1945ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22ஆம் திகதி பிறந்தார். தனது கல்வியை முடித்துக்கொண்டபின், கண்டியிலுள்ள அரசினர் மருத்துவ மனையில் 1969ஆம் ஆண்டிலிருந்து 1974 வரை கதிரியக்கப் படப்பிடிப்பாளராக அவர் கடமையாற்றினார். அதன்பின் லண்டனுக்குச் சென்ற இவர், சறே (Surrey) நகரத்திலுள்ன புனித பீற்றேர்ஸ் மருத்துவமனையில் கடமையாற்றினார். தமிழ் மக்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாட்டைக் கண்டிப்பதற்காக லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவரின் செயலகத்திற்கு முன்னால் 1974ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24ஆம் திகதி, அதாவது கிறிஸ்மஸ் தினத்தில், இலங்கையிலிருந்து வெளியேறிய இலங்கைத் தமிழர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள ஒன்றுகூடியபொழுது தன்னையும் இந்த உண்ணாவிரதத்தில் இணைத்துக்கொண்டதன் மூலம் இவர் முதன்முதலாக தனது அரசியல் ஈடுபாட்டை வெளிப்படுத்தினார், அதைத்தொடர்ந்து இலங்கையில் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்துவந்த கொள்கைகளுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களில் ஆட்சேப ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவதற்கான நடவடிக்கைகளில் திரு. சிறிநிவாசன் அவர்கள் முக்கிய பங்கை வகித்தார். இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களின்பின், திரு. சிறிநிவாசன் அவர்கள், இங்கிலாந்தில் வசிக்கும் 250 தமிழ் மக்களுடன் இணைந்து தமிழர் விடுதலை இயக்கத்தை 1977ஆம் ஆண்டில் உருவாக்கினார்.

தமிழ்நாட்டுச் சட்டசபை உறுப்பினரான திரு, செங்கி இராமச்சந்திரன் அவர்கள் தனக்குச் சொந்தமான தோட்டத்தைப் பயிற்சித்தளமாக உபயோகிப்பதற்குத் தமிழர் விடுதலை இயக்கத்

திற்கு கொடுத்துதவியதைத் தொடர்ந்து, தென்னிந்தியாவில் இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு ஒரு பயிற்சிப் பாசறையை அமைப்பதற்கான நடவடிக்கை முதன்முதலாக 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் இலங்கைக்கு வந்த திரு. சிறிநிவாசன் அவர்கள் தொழிற்சங்கவாதியான திரு. கே. சி. நித்தியானந்தா அவர்களுடனும் தமிழ் ஏதிலிகளின் மறுவாழ்வுக்காக கழகம் ஒன்றை Tamil Refugee Rehabilitatlon Organisation) உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தவரும், கொழும்பிலுள்ள வாட்பிளேசில் வசிப்பவரும் சட்டத்தரணியுமான திரு. கே. கந்தசாமி அவர்களுடனும் கலந்து ஆராய்ந்தார். பிரித்தானியாவில் தமிழ் ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத்தின் கிளையாக விளங்கும் மத்திய பிரித்தானிய நிதியத்தை (Central Brush Fund) 1958ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரங்களுக்குப் பின்னர் இலங்கையிலிருந்து வெளியேறிய திரு. பி. மகரசிங்கம் மற்றும், திரு. ரி. தாமோதரம்பிள்ளை ஆகிய இருவருடனும் இணைந்து திரு. சிறிநிவாசன் அவர்கள் உருவாக்க முனைப்புடன் செயற்பட்டார் புளொட்டின் (PLOTE) தற்போதைய தலைவரான திரு. த. சித்தார்த்தன் அவர்களுடனும் பிரித்தானியாவில் புளொட்டின் தற்போதைய பிரதிநிதியாக விளங்கும் திரு. எஸ், கிருஷ்ணன் அவர்களுடனும் விடுதலைப் புலிகளின் தற்போதைய அரசியல் ஆலோசகரான திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களுடனும் இணைந்து விடுதலைப் புலிகளின் மத்திய குழுவை பிரித்தானியாவில் திரு. சிறிநிவாசன் அமைத்தார். நன்கு வகுக்கப்பட்ட செயல்முறைத் திட்டங்களின் மூலம் நிதிசேகரிப்பதிலும், ஈழம் என்ற கோட்பாட்டை அனைத்துலக நாடுகளிலும் பரப்புவதிலும் இவர்கள் ஈடுபட்டனர். திரு. பிரபாகரன் அவர்களுக்கும், உமா மகேஸ்வரன் அவர்களுக்குமிடையே 1981ஆம் ஆண்டு ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து லண்டனில் விடுதலைப் புலிகளுடைய கிளை பிளவுபட்டதன் காரணமாகத், திருவாளர்கள் சிறிநிவாசன், சித்தார்த்தன், மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் திரு. உமாமகேஸ்வரனுடன் இணைந்து புளொட்டை அமைத்தபொழுது விடுதலைப் புலிகளின் தலைமையைப் பெற்றுக்கொண்ட திரு. பிரபாகரன் அவர்களுடன் திரு. பாலசிங்கம் அவர்கள் இணைந்துகொண்டார்.

## பயிற்சி

1983ஆம் ஆண்டு யூலைத் திங்கள் இடம்பெற்ற இனக்கலவரங்களுக்குப்பின், கலாநிதி ஜோர்ஜ் கபாசு (Dr. George Habash) அவர்களின் தலைமையிலுள்ள பாலஸ்தீனிய விடுதலை மக்கள் முன்னணி (Popular Front for the Liberation of Palestine) யின்



கீழ் இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு லெபனானில் பயிற்சி அளிப்பதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காக திரு. சிறிநிவாசன் அவர்கள் பெருமுயற்சியை மேற்கொண்டிருந்தார். மட்டக்களப்புச் சிறைச்சாலையை உடைத்தபொழுது தப்பியோடிய இளைஞர்களில் பலர், ஒன்றில் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயிற்சியைப் பெறுவதற்கான பயணத்தை மேற்கொள்ளவேண்டும் அல்லது இந்திய அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவினரான 'றோ' வினால் வழங்கப்பட்ட பயிற்சியை மேற்கொள்ளவேண்டும் எனத் தூண்டப்பட்டனர். 1983ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஆரம்பித்த பயிற்சியில் பங்குபற்றுவதற்காக தீரு, சிறிநிவாசன் அவர்களின் கடவுச்சீட்டின் உதவியுடன், பயிற்சிபெறவிருந்த முதலாவது தொகுதி இளைஞர்களுடன் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஊடாக திரு. உமாமகேஸ்வரன் அவர்கள் பேருட்டுக்குச் சென்றார். (Beirut) புளொட்டின் படையத் தளபதியாக அண்மைக்காலம்வரை திரு. மாணிக்கதாசன் அவர்களும் இந்தப் பயிற்சியாளர்களில் ஒருவராவர். 1985ஆம் ஆண்டுவரை நீடித்த இந்தப் பயிற்சியின்போது 100க்கு மேற்பட்டஇளைஞர்கள் பெக்கா பள்ளத்தாக்கில் பயிற்சியைப் பெற்றதுடன் இசுரேலியர்களுக்கு எதிரான கடுமையான போரில் சிலர் பங்குபற்றியிருந்தனர்.

புளொட்டின் தலைவரான திரு. உமா மகேஸ்வரன் அவர்களும் புளொட்டுக்காக அனைத்துலக நாடுகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தும் அதன் செயலாளரான திரு, த, சித்தார்த்தன் அவர்களும், காந்தீய இயக்கத்தின் தலைவரான திரு. எஸ், ஏ, டேவிட் அவர்களும் லண்டனிலிருந்து வெளிவரும் 'முரசொலி' நாளேட்டின் ஆசிரியரான திரு. எஸ். சதானந்தன் அவர்களும் மொறிசியஸ் நாட்டுக்குச் செல்வதற்கான ஒழுங்குகளை 1984ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் திரு. சிறிநிவாசன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அங்கு சென்ற இவர்களுக்கு பிரதமர் அன்றூட் ஜனநாத் (Anerood Jugnauth) அவர்களும் கல்வி மந்திரி பரசுராமன் அவர்களும் செங்கம்பள வரவேற்பு அளித்தார்கள். ஈழத்தைப் பிரகடனப் படுத்திய பின் தாங்கள் ஈழத்தை ஒரு தனி நாடாக அங்கீகரிப்பதாகவும், ஈழத்தைக் கட்டி எழுப்ப அரசியல், பொருண்மிய மற்றும் படைய உதவிகளை அளிக்க விருப்பதாகவும் பிரதம மந்திரியும் அரசாங்கமும் அவர்களுக்கு உறுதியளித்தனர்.

இதேநேரத்தில், ஐரோப்பிய நாடுகளுக்கும், அவுஸ்திரேலியா மற்றும் வடஅமெரிக்கா ஆகியவற்றிற்கும் ஈழப் போருக்கு நிதி சேகரிப்பதற்காக திரு. சிறிநிவாசன் அவர்கள் சுற்றுப் பய

ணத்தை மேற்கொண்டிருந்தார். இலங்கையிலும். இந்தியாவிலுமுள்ள தங்கள் போராளிகளைப் பராமரிப்பதற்கும், ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் கொள்வனவு செய்வதற்குமே இந்தப் பணம் தேவைப்பட்டது. சிங்கப்பூர் வாசியான ஒரு தமிழர்மூலம் செக் நாட்டில் பிறந்தவரும் அவுஸ்திரேலியருமான திரு. அலெக்சாண்டர் ஏர்பன் (Alexander Urban) அவர்களுடன் தொடர்பு கொண்ட திரு, சிறிநிவாசன். கொங்கொங் நாட்டிலுள்ள கோட்டல் கில்டன் இன்ரர்நாசனலில் (Hotel Hilton International) அவரைச் சந்தித்தார். அரை மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானதும், சீனத் தயாரிப்பு ஆயுதங்களையே அதிகளவாகக் கொண்டதுமான ஆயுதங்களை கப்பல்மூலம் அனுப்பிவைக்க ஒழுங்கு செய்த இவர் அந்த ஆயுத விற்பனையாளருக்கு இதற்குரிய பணத்தை மூன்று தவணையில் செலுத்தியிருந்தார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இந்த ஆயுத விற்பனையாளர், ஆசியாவிலுள்ள தனது முகவராக திரு.சிறிநிவாசன் அவர்கள் பணியாற்றுவதற்கு அவருக்குச் சம்பளமும் அவுஸ்திரேலியாவில் ஒருவீடும், ஒரு காரும் வழங்கியதாக பிரித்தானியாவிலுள்ள நம்பகரமான வட்டாரத்திலிருந்து அறியமுடிகின்றது. விடுதலைப் புலிகளுக்கு ஆயுத வழங்கலை மேற்கொள்வதில் திரு.ஏர்பன் அவர்கள் பிரதானமானவராகவிருந்தாரெனவும், விடுதலைப்புலிகளின் அனைத்துலக சம்மேளனத்தின் பிரதிநிதியும், திரு.பிரபாகரன் அவர்களின் நெருங்கிய சகாவாக விளங்கியவருமான திரு. கே.பி.குமாரன் அவர்கள் மூலமே தொடர்புகள் யாவும் ஏற்படுத்தப்பட்டன எனவும் பிரித்தானியாவிலுள்ள வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆயுதங்களைக் கொண்ட கப்பல் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் கொங் கொங்கிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டது. சந்தேகம் எழுவதைத் தடுக்கும் நோக்கமாக சிங்கப்பூரில் வைத்து கொள்கலனில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை எனப் பதியப்பட்டிருந்த இந்தப் பொருட்களின் பெயர்ப்பட்டியல் கழிவுக் கடதாசி என மாற்றப்பட்டது.

பம்பாய்க்குச் சென்று சில பொருட்களை இறக்கிய பின் சென்னைக்கு வரவேண்டிய இக்கப்பலிலுள்ள ஆயுதங்களைப் பொறுப்பேற்கும் பொறுப்பு திரு.உமா மகேஸ்வரன் அவர்களுடைய சகோதரனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தக் காலப் பகுதியில் புளொட் இந்தியப் புலனாய்வுத்துறையான றோவுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்ததால் திரு.மகேஸ்வரன் அவர்களுடைய சகோதரன் சில அரச மேலாளர்களுக்கு கையூட்டு



கொடுக்கவேண்டியிருந்தது. இதனால் ஏற்பட்ட சிக்கலைத் தொடர்ந்து கப்பலுக்குள் இருந்த ஆயுதங்களான எஸ்.எம்.ஜீ ரக துப்பாக்கிகள் 250, எஸ்.எல்.ஆர் ரக துப்பாக்கிகள் 250, பிஸ்டல்கள் 100, எல்.எம்.ஜீ ரக துப்பாக்கிகள் மற்றும் நீரின் அடியில் உபயோகிக்க உதவும் உபகரணங்கள் ஆகியன இந்திய சுங்க அலுவலர்களால் கைப்பற்றப்பட்டன.

இந்திய அரசின் கொள்கை வகுப்புக் குழுவின் தலைவரான திரு.கோ.பார்த்தசாரதி அவர்களிடம் இந்த ஆயுதங்களை தங்களிடம் தருமாறு புளொட் தலைமைப்பீடம் வேண்டுகோள் விடுத்தது. 'றோ'வின் தலைவருடன் பேசி ஆயுதங்களை விடுவிப்பதாக வாக்குறுதி அளித்த திரு.பார்த்தசாரதி அவர்கள் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

ஈழப் போரிற்காக எந்தவொரு குழுவாலும் கொள்வனவு செய்யப்பட்டு முதன் முதல் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட மிகவும் பெரிய ஆயுதக் கொள்வனவு இதுவேயாகும்.

இதைக் கண்டு மனம் சோராத திரு.சிறிநிவாசன் அவர்கள் பல்லவன் என்ற கப்பலை வாங்குவதற்குத் திட்டமிட்டார். சைப்பிரசில் பதிவு செய்யப்பட்டிருந்த இந்தக் கப்பலைக் கொள்வனவு செய்யுமுன் றொன்டோனிய கப்பல் சேவை என்ற பெயர் கொண்ட ஒரு நிறுவனத்தைப் புளொட் பதிவு செய்தது. அந்த நிறுவனத்தின் தலைவராக திரு. உமாமகேஸ்வரனும், அதன் செயலாளராக திரு.சிறிநிவாசனும் அதன் பொருளாளராக திரு சித்தார்த்தனும் இருந்தனர். சுமார் 450,000 அமெரிக்க டொலர்களுக்கு இக்கப்பல் கொள்வனவு செய்யப்பட்டது. இலங்கையிலிருந்து வெளியேறிச் சென்று வெளிநாடுகளில் வசிக்கும் மக்களிடமிருந்து 200, 000 அமெரிக்க டொலர்களை திரு.சிறிநிவாசன் சேகரித்திருந்தார். இந்தக்காலகட்டத்தில் திரு.பிரபாகரன் அவர்ளின் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு 'றோ'வும் தமிழ்நாட்டு மாநில அரசும் ஆதரவு வழங்கியதைத் தொடர்ந்து, திரு.உமாமகேஸ்வரனின் தலைமையிலான புளொட் முற்றிலும் ஒதுக்கப்பட்டது. இதன்பின் இக்கப்பல் இந்திய மேலாளர்களால் கைப்பற்றப்பட்டது.

இதைக்கண்டும் திரு.சிறிநிவாசன் தனது செயற்பாட்டை நிறுத்திவிடவில்லை. பிரித்தானியாவிலுள்ள தமிழ் ஈழ அனைத்துலக ஆராய்ச்சிக்கழகத்தின் செயலாளராக விளங்கிய இவர்,

தமிழ் மக்கள்பட்டறியும் இன்னல்களை மேற்குலக நாடுகளுக்குத் தெரியப்படுத்தி அந்நாடுகளின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதில் வெற்றிகண்டார் 1983-ம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டு காலத்திற்கு மேலாக ஆயுதங்களைப் பெறுவதிலும், கடத்துவதிலும், பல இன்னல்களை அனுபவித்து தமிழ் மக்களுடைய இலட்சியமான தமிழ் ஈழத்தைப் பெறுவதற்காக இரவென்றும் பகலென்றும் பாராது இவர் அயராது உழைத்துள்ளார்.

1987-ம் ஆண்டு யூலைத்திங்கள் கொண்டுவரப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின், ஈழத்தைப் பெறவேண்டிய கால கட்டம் முடிவுக்கு வத்துவிட்டதெனத் தான் கருதுவதாக இவர் இக்கட்டுரை ஆசிரியருக்குக் கூறியுள்ளார். சாவும், அழிப்பும், போரும் தீர்வைக் கொண்டுவரமாட்டாதென மேலும் இவர் கூறினார். திரு.சிறிநிவாசன் சனநாயக அரசியலில் கலந்து கொள்ளும் நோக்கில் 1988ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்தார். இந்திய புலனாய்வுத்துறையான 'றோ'வின் தலையீடுகாரணமாக உருவாக்கப்பட்ட அரசியல் கட்சியான ஈ.என்.டி.எல்.எவ். **(ENDLF)** உடன் இவர் இணைந்துகொண்டார். விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கவும், இந்திய அமைதி காக்கும் படைக்கு புலனாய்வு சம்பந்தமான மற்றும் காப்பு நடவடிக்கைகளில் உதவுவதற்காகவுமே ஈ.என்.டி.எல்.எவ் உருவாக்கப்பட்டது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்பும் இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் இந்தியாவில் பயிற்சியையும் ஆயுதங்களையும் பெற்றுவந்தார்கள்.

## குற்றவியல் பிரேரணை உருவாக்கிய நெருக்கடி.

வடக்கு கிழக்கு மாகாணசபையில் முல்லைத்தீவின் பிரதிநிதியாக திரு சிறிநிவாசன் நியமிக்கப்பட்டார். இந்தச் சபையின் கால எல்லை முடிவுறும்வரை இவர் அதன் உறுப்பினராகவிருந்தார். ஒருதலைப்பட்சமாகச் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது உட்பட வேறு பல விடயங்களிலும் இவர் வரதராஜப் பெருமாளுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். 1989 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தல்களில் இவர் போட்டியிட்டார. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த ஒரே வேட்பாளர் இவரே. யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த பாராளுமன்ற உறுப்பினரான திரு. யோகசங்கரி அவர்களை விடுதலைப்புலிகள் கொன்றதால் ஏற்பட்ட வெற்றிடம் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி திங்களில் திரு. சிறிநிவாசன் அவர்களின் நியமனம் மூலம் நிரப்பப்பட்டது. சனா



திபதி பிரேமதாசா அவர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றவியல் பிரேரணையை ஆதரித்ததற்காக 1992 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் இவர் ஈ. என். டி எல். எவ் இல் இருந்து நீக்கப்பட்டார். இலங்கையில் நிலவும் இனச்சிக்கலைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை இவர் இதன்பின் மேற்கொண்டிருந்தார்.

ஒருவர் தீவிரவாதத்திலிருந்து அரசியலுக்கு வருவது மிகவும் கடினமானது. திரு. சிறிநிவாசன் இதில் வெற்றிகண்டுள்ளார். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவது முட்டாள்தனமானது என உணர்ந்த இவர், ஆயுதப்போராட்டம் வெற்றியளிக்காது என ஆயுதம் ஏந்தியவர்களைப் பார்த்துக் கூறுகின்றார். தனது நாட்டில்வாழும் ஒரு பகுதி மக்களுடைய நியாயபூர்வமான வேட்கைகளை உணராது அரசியல் சதுரங்கம் ஆடியதன் மடைமையை அரசாங்கம் உணர்ந்துள்ளது. அரசியல் சதுரங்கம் ஆடியதன் காரணமாக 26,000 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதேயன்றி வேறு ஒருபலனும் கிட்டவில்லை. நாற்பது ஆண்டு காலமாக நீடித்திருக்கும் இந்தப் பூசலை நாலு திங்கள் காலத்துக்குள் தீர்க்க முயலும் மடைமையை அரசாங்கம் இன்னும் உணரவில்லை. ஏற்கனவே புரையோடி இருப்பதும், இந்தியாவின் தலையீட்டினாலும், எங்கள் மடைமைத்தனத்தாலும் மேலும் மோசமடைந்துள்ளதுமான இச்சிக்கலைக் குறுகியகாலத்தில் எவராலும் தீர்த்துவைக்க முடியாது. வார்த்தை ஜாலங்களைக்கொண்ட அரசியல் கருத்துக்களை வெளியிடுவதையும், வெளிப்பூச்சுக்கு நன்றாகத் தோன்றும் தீர்வுத்திட்டங்களை முன்வைப்பதையும் விடுத்து தற்போதைய சூழலுக்கு ஏற்ப நீண்ட காலத்துக்கு உதவக்கூடிய தீர்வுத்திட்டமே தீர்வாக அமைய முடியும்.

பல ஆண்டுகாலமாக விவாதிக்கப்பட்டுவருவதும் பேசப்பட்டுவருவதுமான வடக்கு கிழக்கு இணைப்புக்குப் பதிலாக திரு. சிறிநிவாசன் முன்வைத்த சமஷ்டி முறை யோசனையே சிறப்பு அம்சமாக விளங்குகின்றது. இந்த யோசனையில் தெரிவிக்கப்பட்ட இணைப்பில்லாத தீர்வை தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்ளாவிடினும், அதில் அடங்கியுள்ள சமஷ்டி முறையை அவர்கள் ஏற்றுக்கொண்டதும், சிங்களக்கட்சிகளில் பெரும்பாலானவை இதை ஏற்றுக்கொண்டதும் மகிழ்ச்சியைத் தருவதாகவிருக்கின்றது. சமாதானத்தை எய்துவதற்கு முயற்சியை மேற்கொண்ட போதிலும், அதை அடைவதற்கு இலங்கை அரசாங்கம் மேலும் பெரும் முயற்சியை மேற்கொள்ளவேண்டும். பல ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரின் பின்னரும், தங்களுடைய நாட்டைப் பாதித்துள்ள பூசலைப்பற்றி பெரும்பான்மை

மக்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அறியாதிருப்பது கவலையைத்தருவதாகவிருக்கின்றது.

ஆகையால் இந்தப் பூசலைத் தீர்ப்பதற்காக இவர்கள் முன்வைக்கவிருக்கும் தீர்வுத்திட்டம், இறுக்கமானதாக இருக்கக்கூடாது இரண்டு வேறுபட்ட, ஆனால் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நெருக்கடிகளை இனப்பூசல் உருவாக்கியது என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்களின் வேட்கைகளை தீர்த்துவைக்கும் வகையில் ஆட்சி உரிமையை பகிர்ந்தளிக்கத்தக்க நடவடிக்கையை மேற்கொள்வது முதலாவதாகும். இப்படியான அரசியல் தீர்வுத்திட்டம் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் எல்லாச் சமுகங்களுடைய நன்மையை கருத்தில் கொண்டதாக இருப்பதுடன் அதை ஒழுங்காக அமுல்படுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு மக்கள் வழங்கும் ஆதரவையும் இல்லாதொழிக்க கூடியதாக இருத்தல் வேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்றுவரும் போரில் அரசாங்கமோ அல்லது விடுதலைப்புலிகளோ வெற்றியை ஈட்ட முடியாதென்பதையும். நாட்டிலுள்ள எல்லாச் சமுகங்களுக்கும் இது அழிவையே ஏற்படுத்தும் என்பதையும் கருத்தில் கொண்டு விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது இ,ண்டாவதாகும்.

திரு. சிறிநிவாசன் அவர்கள் முன்வைத்த யோசனையை மாற்றி அமைத்து விரிவுபடுத்தினால் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட விடயத்துக்குத் தீர்வொன்றைக்காண முடியுமானாலும் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட விடயத்திற்குத் தீர்வைக் காணமுடியாது அரசியல் தலைமைப்பீடமும், கொள்கை வகுப்போரும், தீர்மானங்களை மேற்கொள்வோரும், இந்த யோசனையிலுள்ள குறைபாடுகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அதே நேரத்தில், இந்தயோசனையில் அடங்கியுள்ள வீடயங்களுக்காக மாத்திரமேன்றி, வேறு எதற்காகவும் சீர்தூக்கிப் பார்க்கக் கூடாது. சிறிலங்காவின் இன்றைய அவல நிலைக்கு தாங்களும் காரணமாக இருந்தார்கள் என்பதை ஆட்சிபீடத்தில் உள்ளோரும், தமிழ்க்குழுக்கள் உட்பட எதிர்க் கட்சிகள் அனைத்தும் கவனத்தில் கொள்ளவேண்டும். புதிய யோசனைகளும், தீர்வுத்திட்டங்களும். முன்வைக்கப்படும்போது, அவற்றை விமர்சித்துக் குறைகாணும் சுபாவத்தையுடைய இவர்கள், தாங்களும் இந்தச் சிக்கல் தோன்றக்காரணமாக விருப்பதனால் இதைத் தீர்த்து வைப்பதற்கான தீர்வுத்திட்டமொன்றைக் காணத் தங்களுடைய முழு ஆற்றலையும் பயன்படுத்தவேண்டும். ○

# ஈழப்போரின் 11 ஆவது ஆண்டு.

- சாமிந்திரா பெர்ணாந்து
(ஐலண்ட் - 27.12.1992)

**1992** ஆம் ஆண்டில் போர் இரண்டு சிறப்பு அம்சங்களைக் கொண்டிருந்தது. வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் கொழும்பிலும் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேறகொண்ட மிகவும் வெற்றிகரமானதும், துணிவுகரமானதும் மற்றவர்களுடைய கவனத்தை ஈர்க்கக் கூடியதுமான தாக்குதல்கள் இதில் முதலாவதாகும்.

சில மூத்த காப்புப் படையினருக்கும், காப்பு மேலாளர்களுக்குமிடையே நிலவிய அதிகளவிலான பகையுணர்ச்சி இரண்டாவதாகும். காப்புப்படையினரிடையே நிலவிய உட்பூசல்கள், போர்த்தந்திரோபாயங்கள் பாதித்த இரண்டாவது ஆண்டு 1992 என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

11ஆவது ஆண்டை எட்டியுள்ள இந்தப் போரில் விடுதலைப் புலிகள் மெதுவாகவும் உறுதியாகவும் வெற்றியீட்டி மேல் நிலையை எய்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்ற அச்சத்தையும் கவலையையும் இந்த ஆண்டில் நிலவிய இந்த முரண்பாடுகள் உருவாக்கியுள்ளன.

எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை நோக்குகையில் இந்த நாட்டில் அச்சம்தரும் நடவடிக்கைகள் அதிகரிக்கும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். அரசாங்கத்தினதும், விடுதலைப்புலிகளினதும் தந்திரோபாயங்களையும் செயற்திறன்களையும் உற்று நோக்குகையில் என்னதான் நேரிடினும் இந்தப்போர் தொடர்ந்து நீடித்துச் செல்லும் என்பதைக் காணமுடிகின்றது.

விடுதலைப் புலிகள் ஈழத்தைப் பெறுவதற்கு ஒரு கால எல்லையை தீர்மானிக்கவில்லை என ஒரு வட்டாரம் கூறியுள்ளது. படைய ரீதியானதும், உளரீதியானதும், பொருளாதார ரீதியானதும், அரசியல் ரீதியானதும், கோட்பரப்பு ரீதியானதுமான தந்திரோபாயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் அடுத்த ஆண்டில் தாங்கள் அடைய விரும்பும் இலக்குகளை விடுதலைப் புலிகள் அடையக்கூடியதாக இருக்கின்றது. இந்த ஆண்டில் தாங்கள் எதை அடைய விரும்பினார்களோ அதை அவர்கள் அடைந்துள்ளதால் அவர்கள் அடுத்த ஆண்டில் அடையவிருக்கும் குறிக்கோள்களை அடையாது தடுப்பதற்கு எவராலும் முடியாது எனப் பார்வையாளர்கள் கூறியுள்ளார்கள்.

களம் பல கண்ட விடுதலைப்புலிகளிடமிருந்து தாங்கள் இழந்தவற்றை மீண்டும் பெறத்தக்க வகையில் பயன்தரக்கூடிய யுக்திகளைக் கையாள்வதற்கு காப்புப் படையினருக்கு இன்னும் காலம் கடந்துகொண்டுதான் போகின்றது.

காப்பு ஏற்பாடுகள் யாவற்றையும் முறியடித்துக்கொண்டு கொழும்பு நகரத்திற்குள் வெற்றிகரமாக உட்புகுந்தது உட்பட விடுதலைப் புலிகளின் 36 க்கும் மேற்பட்ட பெரிய தாக்குதல்களையும், தாக்குதல் நடவடிக்கைகளையும் இலங்கை 1992 ஆம் ஆண்டில் சந்தித்துள்ளது. அரசாங்கத்திற்கு நெருக்குதலைக் கொடுக்க வேண்டுமென்று உறுதி பூண்டதன் காரணமாகவே இந்த ஆண்டில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்ததென விடயமறிந்த படைய வட்டாரம் சென்ற வாரம் கூறியுள்ளது.

கொழும்பில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்ததே மிகவும் கவலையைத்தருவதாக உள்ளதென அவர் மேலும் கூறினார். இதே நேரத்தில் மேலாளர்களின் தவறான படைய மற்றும் அரசியல் கணிப்புக்களும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் காப்பு நிலையை பலவீனப்படுத்துவதற்குக் காரணமாக இருந்தன.

விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கும் வகையிலான தீர்க்கமான படைய நடவடிக்கை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் தென்படாததன் காரணமாக காப்பு நிலைமை இந்த ஆண்டு முடிவுறும் தறுவாயில் மிகவும் உறுதியற்றதாக இருக்கின்றது.



இந்த ஆண்டின் ஆரம்பமே காப்புப் படையினருக்கு மிகவும் துன்பகரமானதாக இருந்தது. சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் திகதி கூட்டுப்படைத்தலைமையகம் மறுசீரமைக்கப்பட்டு முப்படைத் தளபதிகளுக்கும், காவல்துறை மா அதிபருக்கும் வழங்கப்பட்டிருந்த செயலுரிமைகள் யாவும் முப்படைத் தலைமையகத்தின் தளபதியாக நியமிக்கப்பட்ட திரு. கமில்ரன் வனசிங்க அவர்களிடம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பல தேவையற்ற சிக்கல்கள் உருவாகின.

நவம்பர் திங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த மாற்றங்கள் மூத்த படைய மேலாளர்களுக்கும் காப்பு மேலாளர்களுக்கிடையே பகையுணர்வை உருவாக்கின. விடுதலைப்புலிகளுக்கு எதிரான படைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பை கூட்டுப்படைத் தலைமையகத்திடம் வழங்கும் அரசாங்கத்தின் விருப்பை மூத்த மேலாளர்கள் எதிர்த்தார்கள். இவர்களுடைய இந்த எதிர்ப்புக் காரணமாக அரசாங்கம் காப்புப்படைகளைக் கட்டளையிடும் மற்றும் கட்டுப்படுத்தும் அமைப்பு முறையை மார்ச் திங்கள் 26 ஆம் திகதி மாற்றியதுடன், தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயலுரிமையை முப்படைத் தளபதிகளினதும், காவல்துறை மா அதிபரினதும் நேரடித் தலைமையின் கீழ் கொண்டுவந்தது.

ஏழு திங்களுக்கு மாத்திரமே முப்படைத்தளபதிகளாலும் காவல்துறை மா அதிபராலும் போரை நடாத்தமுடிந்தது. காப்பு நடவடிக்கைகள் அனைத்திற்கும் பொறுப்பான தளபதி ஜெனரல் கமில்ரன் வனசிங்க அவர்களை ஒக்டோபர் திங்கள் முதலாம் திகதி முற்றிலும் எதிர்பாராத வகையில் மீண்டும் நியமித்த சனாதிபதி ஆர். பிரேமதாசா, முப்படைத்தளபதிகளையும் அவரின் கட்டளைகளுக்கு அமையக் கடமையாற்றப் பணித்தார்.

காவல்துறை மா அதிபரை தன் நேரடிக் கட்டளைக்குக் கீழ் வைத்துக்கொண்டார்.

காப்புப் படைகளைக் கட்டளையிடும், மற்றும் கட்டுப்படுத்தும் அமைப்பு முறையை அடிக்கடி மாற்றியமை போரை இந்த ஆண்டில் முன்னெடுத்துச் செல்லப் பொறுப்பாகவுள்ள மேலாளர்களுக்கிடையே பகைமையையும், எதிர்ப்பையும், உருவாக்க அரசாங்கத்திற்கு உதவியதேயன்றி வேறு எதையும் அது அடைய உதவவில்லை. படைய மேலாளர்களுக்கு இடையே

தெட்டத் தெளிவாகக் காணக்கூடியதாகவிருந்த கருத்து முரண்களே இந்த ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைப் பாதித்ததென ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

புது ஆண்டு ஆரம்பிப்பதற்கு நாலு நாட்கள் மாத்திரமே இருக்கும் இவ்வேளையில் காப்புச் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு பகுதியினருக்குமிடையே ஒற்றுமை நிலவுவதாகத் தெரியவில்லை என அவர்கள் கூறியுள்ளனர்.

காப்புப் படையினருக்கு இந்த ஆண்டு பாரிய அழிவை ஏற்படுத்திக்கொண்டு ஆரம்பித்தது. போர் நடவடிக்கைகளைத் தங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு மூத்த மேலாளர்களும் காப்பு மேலாளர்களும் கொழும்பில் வாதாடிக் கொண்டிருந்த அவ்வேளையில் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சீனன் குடாவில் குண்டு வெடிப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது. ஈழப்போரில் மிகவும் பெரியதாகவும், மிகவும் அழிவை ஏற்படுத்தியதாகவும் கருதப்பட்டதும், சனவரி 21 ஆம் திகதி நடைபெற்றதுமான இந்தக் குண்டுவெடிப்பின் காரணமாக 25 வான்படைவீரர்கள் கொல்லப்பட்டதுடன் 77 பேர் காயமுற்றனர்.

குறைந்தது 12 வானூர்திகளும், உலங்குவானூர்திகளும் ஒன்றில் சேதமாக்கப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன. இந்தக் குண்டுவெடிப்பின் காரணமாகப் பெருந்தொகையான வெடி மருந்துகள் அழிக்கப்பட்டன. காலங்கடந்த வெடிமருந்துகளைப் பாவித்ததன் காரணமாக இறப்பும் அழிவும் ஏற்பட்டதும், வடக்கில் விடுதலைப்புலிகளைத் தாக்குவதற்கான பல விதமான வெடி உபகரணங்களின் உற்பத்தியைத் தற்காலிகமாக நிறுத்தியதும் இதுவே முதன் முறையாகும்.

இது நடைபெற்ற சுமார் இரண்டு திங்களுக்குப் பின்னர் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்ளும் பொறுப்பை முப்படைத்தளபதிகளிடமும், காவல்துறை மா அதிபரிடமும் அரசாங்கம் ஒப்படைத்ததைத் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்டதும், வெற்றிகரமானதுமான படைய நடவடிக்கைகளை விடுதலைப்புலிகளுக்கெதிராக விரைவாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அவர்களால் மேற்கொள்ள முடிந்தது.

விடுதலைப்புலிகளும், பொதுமக்களும் பிரதான நிலப்பரப்பிலிருந்து குடாநாட்டிற்கும், குடாநாட்டிலிருந்து பிரதான



நிலப்பரப்புக்கும் மேற்கொள்ளும் போக்குவரத்தை தடைசெய்ததே அவர்கள் சாதித்த முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

குடாநாட்டின் நுழைவாயில்களான ஊரியான் மற்றும் கொம்படி ஆகிய இரண்டு பாதைகளையும், சங்குப்பிட்டித் துறையையும், குடாநாட்டிற்கு மேற்கேயுள்ள சிறிய தீவுகளையும், பிரதான நிலப்பரப்பைக் குடாநாட்டுடன் இணைக்கும் கடப்பு வழியாக விளங்குவதும் யாழ்ப்பாண ஏரியை ஓரளவு இணைப்பதுமான ஆனையிறவையும், அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வான்படை, கடற்படை, தரைப்படை ஆகியன இணைந்து உதவின.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் ஏரிக்கூடாக நடாத்தப்படும் படகுச் சேவையை தடைசெய்யும் நோக்கமாக நாகதேவன்துறையில் ஒரு ரடார் நிலையம் அமைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் காப்புப் படையினர் வெற்றி ஈட்டிக்கொண்டிருந்த வேளையில் அவர்கள் எதிர்பார்த்த நிகழ்ச்சிகள் நடந்தன.

படையத்தினர் குறிப்பாக வடக்கில் வெற்றியை ஈட்டிக் கொண்டிருந்த வேளையில் யாழ்ப்பாணத்தின் மீது குண்டு வீச்சை மேற்கொள்ளச்சென்ற சீனத் தயாரிப்பான போக்குவரத்து வானூர்தி அழிக்கப்பட்டது. 100 இருக்கைகளைக் கொண்டதும், போர் முனைக்குப் படையினரைக் கொண்டு செல்ல உதவியதும், விடுதலைப்புலிகளுடைய நிலைகள் மீது குண்டுவீச உபயோகிக்கப்பட்டதுமான இந்த வானூர்தியில் இருந்து ஆறு மேலாளர்கள் உட்பட 19 பேர் கொல்லப்பட்டனர்.

காலங்கடந்த வெடிப்பொருட்களை, வெடி உபகரணங்களைத் தயாரிப்பதற்கு உபயோகித்தமையே இந்தக் குண்டு வெடிப்புக்குக் காரணமாக இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சீனன்குடா குண்டுவெடிப்பு ஈழப்போரில் எப்படி முதலாவது சம்பவமோ அதேபோல் வானில் வானூர்தியின் அழிப்பும் முதலாவது சம்பவமாகும்.

விபத்து வெடி காரணமாக இலங்கை எக்காலத்திலும் ஒரு வானூர்தியை இழந்ததில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதி

ராக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உபகரணங்களை உபயோகிப்பதை நிறுத்த யூலை 6 ஆம் திகதி ஏற்பட்ட வானூர்தியின் அழிப்பு அரச மேலாளர்களைச் சிந்திக்கத் தூண்டியது.

சீனன் குடாவிலும் யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்ட துன்பகரமான விபத்துக்கள் பல இடங்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த காலம் கடந்த பெரும் தொகையான வெடிமருந்துகளை அழிப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு அரச மேலாளர்களைத் தூண்டியது.

இதன் பின் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெடி உபகரணங்களைச் செயலிழக்கச் செய்ய முயன்ற ஒரு காப்புப் படை மேலாளர் இந்த திங்கள் ஆரம்பப்பகுதியில் இறந்ததுடன் மூன்று பேர் காயமுற்றனர்.

வானில் ஏற்பட்ட துக்ககரமான நிகழ்வுக்குப் பின் கட்டுப்பொத்தை பாசறை யூலைத்திங்கள் 11 ஆம் திகதி தாக்கி அழிக்கப்பட்டது. இந்தப் பாசறையை அழிக்கவும், அங்கிருந்த 52 படையினரைக் கொல்லவும், ஆயுதங்கள் அனைத்தையும், வெடிமருந்துகள் மற்றும் தொடர்பு சாதனங்களையும் அகற்றவும் தங்கள் அதிரடிப்பிரிவின் உதவியுடன் சென்ற விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முயற்சியை முறிபடிக்க பாசறைக்கு அண்மையில் உள்ள பாசறையின் உதவிக்கு படையினர் வருமுன்னர் விடுதலைப்புலிகள் தங்கள் முயற்சியில் வெற்றியீட்டினர். பாசறை எரிக்கப்பட்டு முற்று முழுதாக அழிக்கப்பட்டது.

77,000 படையினரைக் கொண்ட தரைப்படையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை லெப்ரினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் ஏற்றபின், தரைப்படை சந்தித்த மிகவும் பாரிய அழிவை ஏற்படுத்திய தாக்குதல் இதுவாகும்.

திரு வைத்தியரத்னா அவர்களைப் பதவியிலிருந்து இறக்கக் காத்திருந்தவர்களுக்கு கட்டுப்பொத்தையில் ஏற்பட்ட இழப்புக்கள் வாய்ப்பாக அமைந்தன.

கட்டுப்பொத்தையில் தாங்கள் ஈட்டிய வெற்றியினால் உற்சாகமடைந்த விடுதலைப் புலிகள் படையினரை குறிப்பாக படைய முன்னணிகாப்பு எல்லைகளை இலக்காக வைத்து பல தாக்குதல்களை மேற்கொண்டதன் மூலம் படையினரிடையே பாரிய உயிர் இழப்புக்களை ஏற்படுத்தினர்.



இருந்த போதிலும் விடுதலைப் புலிகளுக்கு படையம் நெருக்குதல்களைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது.

ஆனால் அடுத்த திங்களில் நடைபெற்ற நிகழ்ச்சி இராணுவத்தினரின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கியது. யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது விடுதலைப்புலிகளுக்குள்ள மேலாண்மையை இல்லதொழிப்பதற்கு ஒபரேசன் பைனல் கவுன் டவுன் (Operation Final Count Down) என்ற படைய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னான ஆகஸ்ட் 8 ஆம் திகதியில் அராலித்துறையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு வடபிராந்திய படைய தலைமையை அழித்தது. யாவரினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தவரும், 52 வயதானவருமான டென்சில் கொப்பேகடுவா அவர்களையும் திறமைசாலியான தரைப்படைத் தளபதி விஜய விமலரத்ன அவர்களையும் சிறிலங்கா இழந்தது.

இவர்களுடன் வடபிராந்திய கடல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாயிருந்த கொமாடோர் மோகன் ஜெயமகா அவர்களும் மற்றும் மூன்று கேணல்கள் உட்பட எட்டுப்பேர் கொல்லப்பட்டனர்.

காப்புப் படையினருக்கு இந்த ஆண்டு பாரிய பின்னடைவை ஏற்படுத்திய இவர்களுடைய இறப்புக்கள் சர்ச்சைக்குரியவையாகவிருக்கின்றது. இவர்களுடைய இறப்பை அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் தங்கள் அரசியல் நோக்கங்களுக்காக உபயோகிக்க முயன்றன. கொல்லப்பட்ட தளபதியின் மனைவியான திருமதி லலி கொப்பேகடுவா அவர்களைத் தவறான வழியில் இட்டுச் சென்று அரசியல் இலாபம் தேட முயல்வதாக இவை ஒவ்வொன்றும் ஒன்றின் மீது மற்றது குற்றம் சுமத்தியது. அராலித்துறையில் நடந்த நிகழ்ச்சி இந்த ஆண்டு போராட்ட சூழலை முற்றாக மாற்றி அமைத்தது. இந்நிகழ்ச்சியினால் போர்ச் சூழ்நிலை விடுதலைப் புலிகளுக்கு சார்பாகமாறியது.

கடற்படையினரால் கடற்புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மண்டைதீவில் அமைக்கப்பட்ட தளத்திற்கு அப்பால் 30 அடி நீளமானதும், கரையோரக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வந்ததுமான கண்காணிப்புப் படகை ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் திகதி கடற்புலிகள் கைப்பற்றினர்.

கடற்புலிகளின் முக்கிய தளமாக விளங்கிய மாதகலை கைப்பற்றிவிட்டதாக அரசாங்கம் பெரிதாக அறிவித்த சில நாட்களுக்குப் பின் இந்தக் கண்காணிப்புப் படகு கைப்பற்றப்பட்டது. (ஒரு கண்காணிப்புப் படகை விடுதலைப்புலிகள் கைப்பற்றியது இதுவே முதல் தடவையாகும்)

அராலித்துறையில் ஏற்பட்ட நிகழ்ச்சிக்குப் பின் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட படைய நடவடிக்கை அரசாங்கத்தால் பெரிதாகப் பேசப்பட்ட மாதகலைக் கைப்பற்றியது மாத்திரமேயாகும். இந்தத் திங்கள் வரை குறிப்பிட்ட இந்தப் பகுதியில் பாரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இருப்பினும் காப்புப் படையினரைத் தாக்குவதில் விடுதலைப் புலிகள் மிகவும் முனைப்பாக இருந்தார்கள். அடுத்த திங்கள் செப்டம்பரில் கொழும்பைச் சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

காவல்துறை மேலாளரான ஏ. தியோபிலஸ் அவர்கள் செப்டெம்பர் திங்கள் 23 ஆம் திகதி கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார். மட்டக்களப்பில் தனது மகனை ஆறு ஆண்டுகளுக்கு முன் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காரணமாக இழந்த இந்தக் காவல்துறை மேலாளர் அவருடைய மகள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இரக்கமற்ற முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதன் பின்னரே விடுதலைப்புலிகள் தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளை வடக்கிலும் கொழும்பிலும் தீவிரமாக்க ஆரம்பித்தனர்.

இந்த ஆண்டின் மிகவும் வெற்றிகரமான தாக்குதல் என்று கூறக்கூடிய ஒரு தாக்குதலை ஒக்டோபர் திங்கள் 1 ஆம் திகதி கடற்புலிகளும் அவர்களுடைய அணிகளும் மேற்கொண்டனர். கட்டைக்காடு பாசறையைத் தாக்கிய விடுதலைப் புலிகள் அங்கிருந்த 13 படைவீரர்களைக் கொன்றதுடன் சுமார் 24 படையினரைக் காயப்படுத்தியும் 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும், படைய உபகரணங்களையும் படைய மேலாளர்களின் வாகனத்தையும் அங்கிருந்து கொண்டு சென்றனர். தனியான ஒரு தாக்குதலில் இவ்வளவு மில்லியன் பெறுமதியான பொருட்களை படையம் எக்காலத்திலும் இழந்ததில்லை.



கட்டைக்காட்டில் நடந்த பேரழிவின் ஒரு வாரத்திற்குப் பின் விடுதலைப் புலிகளுக்கெதிரான படைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் படையினருக்குப் பொறுப்பாக ஜெனரல் கமில்ரன் வனசிங்க அவர்களை சனாதிபதி பிரேமதாசா நியமித்ததால், முப்படைத்தளபதிகளும் காவல்துறை மா அதிபரும் மீண்டும் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

இருப்பினும் அரசாங்க உயர் பீடத்திலுள்ளவர்களின் அரசியல் உள்விவகாரங்களில் விடுதலைப்புலிகள் அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தார்கள். வட மத்திய மாகாணத்திலுள்ள மெதிரிகிரிய காவல்துறைப் பகுதியில் சுமார் 200 முசுலிம்களும் 12 சிங்களவர்களும் ஒக்டோபர் திங்கள் 15 ஆம் திகதி கொல்லப்பட்டார்கள்.

பொது மக்களைக் காப்பாற்ற முயன்ற 17 காவல்துறையினரும் படையினரும் கொல்லப்பட்டார்கள்.

முசுலிம்களை அழித்ததன் மூலம் அரசாங்கத்தின் காப்புகளை தாங்கள் நினைத்தபடி தங்களால் முறியடிக்கக்கூடிய ஆற்றலும் திறமையும் தங்களுக்கு உண்டு என்பதை விடுதலைப் புலிகள் நிரூபித்திருந்த போதிலும் பிரித்தானிய அரசாங்கமும் மற்ற நாடுகளும் இந்தப்படுகொலையை விரும்பவில்லை.

இலங்கைக்கு ஆயுத விற்பனையைத் தடைசெய்த பிரித்தானியா அதைநீக்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளத்தூண்டியது விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த முசுலிம்களின் படுகொலைகளே எனச் சிலர் கருதுகிறார்கள். இக்கொலைகளை அவுஸ்திரேலிய அரசாங்கமும் வெளிப்படையாகக் கண்டித்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களிலிருந்து பொது மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அவர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகும் பகுதிகளில் சேவைக்கு அமர்த்தப்பட்ட 177 ஊர்காவல் படையினர் தங்கள் பதவிகளைத்துறந்துவிட்டு இதே திங்களில் தப்பியோடியுள்ளனர். அவர்கள் அனைவரும் மாகதளை காவல்துறை பிரிவினைச் சேர்ந்தவர்கள். ஆகஸ்ட் திங்கள் ஆரம்பத்திலிருந்து இப்படியாகப் பலர் தப்பியோடியுள்ளனர்.

அராலித்துறையில் ஏற்பட்ட குண்டுவெடிப்புக்குப் பின் ஆயிரத்துக்கும் மேலான படையினர் படையத்தை விட்டுத் தப்பி

யோடியுள்ளனர். சிறீலங்காவிலுள்ள ஒருவருக்கு எதிரான முதலாவது தற்கொலைத்தாக்குதல் விடுதலைப்புலிகளால் இதன்பின் நவம்பர் திங்கள் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. கடற்படைத்தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாந்து அவர்களும் மற்றும் மூன்று மேலாளர்களும் விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதல் மூலம் படையத் தலைமையகத்துக்கு முன்னால் குண்டுவைத்துக் கொல்லப்பட்டார்கள்.

விடுதலைப் புலிகள் தாக்குதல்களைக் கொழும்புப் பட்டினத்தில் மேலும் மேற்கொள்வதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையில், எக்ஸ்போ 92 கண்காட்சியில் பிரதம விருந்தினராக வர்த்தக மந்திரி ஏ. ஆர். மன்சூர் அவர்கள் கலந்து கொள்ளவிருந்த நாளில் அவரைக் கொல்வதற்கு விடுதலைப்புலிகள் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்கள். இது நடந்த சில நாட்களுக்குப் பின் நடந்த வேறு ஒரு நிகழ்ச்சியில் குற்றத்தடுப்புத்துறையைச் சேர்ந்த காவல்துறையினரால் இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு இளம் புலிவீரன் மந்தரி நந்தா அவர்களின் வசிப்பிடத்தில் ஒரு கைக்குண்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்டான்.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளக்கூடிய தாக்குதல்களிலிருந்து கொழும்புப்பட்டணத்தைக் காக்கப் படையினர் ஈடுபட்டிருந்த அதே வேளையில், குடாநாட்டிலுள்ள இடைக்காட்டில் தாக்குதலை மேற்கொண்ட விடுதலைப்புலிகள் அந்தப் பகுதியின் காப்புக்குப் பொறுப்பாகவிருந்த தளபதியும் அவருடைய உதவியாளரும் உட்பட 47 படைவீரர்களை நவம்பர் திங்கள் 24 ஆம் திகதி கொன்றனர்.

இந்த ஆண்டிலும் போர் முனையில் ஒரு மாற்றத்தையும் காணமுடியவில்லை. தொடர்பு சாதனங்கள் நல்ல உணவு, போதிய சீருடை, போக்குவரத்து வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாமையினால் படையினரும் காவல்துறையினரும் பல சிக்கல்களை மேலும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

காப்புப் படையினர் திரும்பத் திரும்ப விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த நிலைமையை மாற்றியமைக்க சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.



நாட்டின் மக்களையும் 186,000 படை வீரரைக் கொண்ட படையத்தையும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும்படி கூறிவ நம் அரசியல்வாதிகள் ஆடம்பரமான செலவுகளைச் செய்வதாக பலர் கருதுகிறார்கள்.

இரண்டு பகுதியினரும் பாரிய உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளனர். இந்த ஆண்டில் காப்பு நடவடிக்கைகளை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்வதற்கு பல்வேறு சில சிக்கல்களுக்கு இடையிலும், தாங்கிகள், காலாட்படைப் போர் வாகனங்கள், 130 எம். எம் ரக நடுத்தர ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்கள் ஆகியவற்றை அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது.

ருசியாவின் தயாரிப்பான எம் ஐ 8 ரக உலங்குவானூர்திகள் மூன்றையும் ஆர்ஜென்ரினாவில் தயாரிக்கப்பட்ட குண்டு வீச்சு வானூர்திகள் நான்கையும், வேகமாகத் தாக்குதல் மேற்கொள்ளக்கூடிய படகுகள் நான்கையும் வேறு பல போர்த் தளபாடங்களையும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அடுத்த ஆண்டு உபயோகிப்பதற்காக, இந்த ஆண்டு கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினருக்கு இந்த ஆண்டில் தேவையான வேகமாகத் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடிய படகுகளைக் கட்டுவதற்குப் பிரான்ஸ் நாட்டின் தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை ஒரு முன்னேற்றகரமான விடயமாகக் கருதப்படுகின்றது ஏற்கனவே பிரான்சிலுள்ள கப்பல் கட்டும் நிறுவனமான சிமோன் மரைபின் என்ற நிறுவனம் இரண்டு வேகமாக தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடிய படகுகளை பிரான்சில் கட்டிவருகின்றது. இந்த இரண்டு கலன்களும் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் கொழும்பு வந்துசேரவிருக்கின்றன.

இந்தக்கலன்கள் வந்து சேர்ந்ததும் இவற்றைப் போன்ற 19 மீற்றர் நீளமுள்ள இரண்டு படகுகளை கொழும்பில் கட்டுவதற்கு கொழும்பு டொக்யாட் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

இருப்பினும் தெளிவான தந்திரோபாயத்தையுடைய உறுதியான அரசியல் தலைமைப்பீடம் ஒன்று இருந்தாலன்றி புதுவிதமான ஆயுதங்களின் கொள்வனவு விடுதலைப்புலிகளை படைய ரீதியாகத் தோற்கடிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவாது என ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். தவறான மதிப்பீடுகளை இனிமேலும் செய்வதால விடுதலைப்புலிகளின் கை ஓங்

கும் என்பதை அரசாங்கம் உணருமாயின் போரைப்பற்றிய தனது நிலைப்பாட்டை அது மாற்றும் என சிலர் கருதுகிறார்கள்.

## தரைப் படையினருக்கு இந்த ஆண்டு ஏற்பட்ட இழப்புக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | — | 86 | ஆகஸ்ட் | — | 57 |
| பெப்ரவரி | — | 71 | செப்டெம்பர் | — | 97 |
| மார்ச் | — | 135 | ஒக்டோபர் | — | 62 |
| ஏப்பிரல் | — | 40 | நவம்பர் | — | 80 |
| மே | — | 97 | டிசம்பர் (23ம் திகதிவரை) | — | 34 |
| யூன் | — | 78 | | | |
| யூலை | — | 167 | மொத்தம் | — | 1003 |

(யூன் 11 ஆம் திகதியிலிருந்து ஆகஸ்ட் மூன்றாம் வாரம் காயப் பட்டவர்கள் 303 மேலாளர்கள் உட்பட 7221 பேர்)

தரைப்படையின் இழப்பை மற்றைய படையினரதும் காவல்துறையினரதும் இழப்புடன் ஒப்பிடுகையில் தரைப்படையைப் போன்ற இழப்பை இவை சந்திக்கவில்லை.

---

மனிதன் ரொட்டித் துண்டுகளால் மட்டும் வாழ்வதில்லை- கவர்ச்சிகரமான முழக்கங்களினாலும், வாழ்ந்து கொண்டிருக்கிறான்

-ராபர்ட் லூயி இசுடீவன்சன்

# "குவாய் ஆற்றுக்குத் திரும்பிச் செல்வோம்"

— சிசில் வீ. விக்கிரமநாயக்க.

(சண்டே ரைம்ஸ் -29. 11. 92)

சிங்கப்பூர் வீழ்ச்சியுற்ற ஐம்பது ஆண்டுகளின் பின், அந்த நிகழ்வை நினைவு கூரும் முகமாக பல்லாயிரக்கணக்கான முன்னாள் போர்க்கைதிகள் தூரகிழக்கு நாடுகளுக்கு யாத்திரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களிற் பலருக்கு வெறுப்பூட்டும் அச்சம் நிறைந்த பர்மிய புகையிரதப்பாதை நிகழ்வு, மனத்திலே நிழலாடிக்கொண்டிருக்கும். இலங்கையின் கித்துள் கலயில டேவிட் லீன் என்பவர் உருவாக்கிய (Bridge On The River Kwai) ''பிறிட்ச் ஒன் தறிவர் குவாய்'' என்ற திரைப்படம் மூலம் இந்த நிகழ்வு மனத்திரையிலிருந்து அழித்துவிடமுடியாத விதத்தில் திரைப்படமாக்கப்பட்டுள்ளது.

நிகழ்வுகளைப் பின்நோக்கிப் பார்ப்பதற்கு ஐம்பது ஆண்டுகள் என்பது மிக நீண்டகாலமாகும். ஆனால் இரண்டாவது உலகப் போரின் போது தூர கிழக்கில் இடம்பெற்ற அச்சம் தரும் போரில் பங்கு கொண்டு உயிர்பிழைத்த சிலரையும் உள்ளடக்கிய 133 பிரித்தானியருக்கு, தாய்லாந்திற்கும் சிங்கப்பூருக்கும் அவர்கள் மேற்கொண்ட யாத்திரையின் மூலம், இந்த நிகழ்வை நினைவு கூருவது இலகுவாக இருந்திருக்கும். கைப்பற்ற முடியாத கோட்டை எனக்கருதப்பட்ட சிங்கப்பூரின் வீழ்ச்சியின் நினைவு விழாவில் கலந்து கொள்வதற்காக அவர்கள் அந்த யாத்திரையை மேற்கொண்டிருந்ததினால் கடந்துபோன கொடூர சம்பவங்களை மீளவும் நினைவுக்குக் கொண்டுவருவது சிரமமில்லாமல் இருந்திருக்கும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன், அதாவது 1942-ம் ஆண்டு பெப்ரவரி 15-ம் நாள் மாலைத் தேனீர் வேளைக்குப் பின் ''பியூக்கிற் திமா'' வீதியில் (Bukit Tima Road) அமைந்துள்ள போட் தொழிற்சாலையில் (Ford Factory) லெப்ரினன்ட் ஜெனரல் ஆத்தர் பேசிவல், யப்பானிய படையத்திடம் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தார். இதனைத் தொடர்ந்து மூன்றரை ஆண்டுகாலமாக இடம்பெற்றதும் சமீப காலங்களில் நடந்தவற்றுள் கடுமையானதும், கொடூரமானதுமான கட்டாயப்பணி வாங்கிய ஆட்சியும், மறக்க முடியாததாகும்.

## திரைப்படம்

இந்தப் பட்டறிவையும் இதில் நாங்கள் ஆற்றிய சிறிய பங்கினையும் என்னைப்போன்ற வயது முதிர்ந்த ஒரு சிலர் நினைவுக்குக் கொண்டுவரக்கூடியவர்களாக உள்ளோம். டேவிட் லீன் இந்த நாட்டில் உள்ள கித்துள்கலயையும் பறங்கிய மலாய் இனத்தைச் சேர்ந்த இளைஞர்களையும் கொண்டு அந்த நிகழ்வை திரைப்படமாக்க முயன்றார். ''த பிறிட்ச் ஒன் த றிவர் குவாய்'' என்ற திரைப்படம் இதுவரை தயாரிக்கப்பட்ட போர் சம்பந்தமான படங்களுள் எல்லாம் மிக உயர்ந்ததாக கருதப்படுகிறது. தாய்லாந்தில் உள்ள இந்த ஆற்றின் உண்மையான பெயர் ''குவாயே நொய்'' என்பதாகும். இப்போது அது ''குவாய் யாய்'' என அழைக்கப்படுகிறது.

புகழ்மிக்க வெள்ளித்திரைநடிகர்களான அலெக் ஹைனெஸ் (Alac Guinness) வில்லியம் கோல்டன் (William Holden) ஜக் கோர்க்கின்ஸ் (Jack Horkins) செசு கயக்காவா (Sessue Hayakawa) ஆகியோரும் இன்னும் பலரும் பல திங்களாக படமெடுக்கப்படும் இடமான இலங்கையின் கித்துள்கலயில் தங்கி இருந்தார்கள். அமெரிக்காவிற்கும், அமெரிக்கர்களுக்கும் இந்த நாட்டில் தொடர்பாளராக இருந்த சார்தா ரட்ணவீரவும் அங்கே இருந்தார். சார்தாவை திருமணம் செய்துகொண்டவரும் கட்டுரையாளரின் நெருங்கிய நண்பருமான காலஞ்சென்ற ஜீன் பின்றோவின் தொடர்பு காரணமாய் இந்தப்படத்தில் ஒரு சிறிய பாத்திரத்தை கட்டுரையாளரும் ஏற்கவேண்டியிருந்தது இயற்கையேயாகும்.

இந்த ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் நாள் வெளியான மக்கள் விரும்பிப்படிக்கும் ''சண்டே ரைம்ஸ்'' சஞ்சிகையில் ஜீன் குளோட் கூட்டாஸ் என்பவரின் புகைப்படங்களோடு பீற்றர் மாட்டீன் எழுதிய கட்டுரையே ஞாபகப்பாதையில் 40 ஆண்டுகள் பின்நோக்கி என்னை பிரயாணம் செய்ய வைத்தது. இந்தப் பாதையில் சென்றால் தூரகிழக்கிற்கான பயணமொன்றை மேற்கொண்டு, வரலாற்றில் மிக கொடூரமானதும் துன்பியல் நிறைந்ததுமான நிகழ்வுகள் ஒன்றின் அடையாளமான, வெறுப்புக்குரிய பர்மிய புகையிரதப்பாதையில் திரும்பவும் சென்று, மீள ஒன்றிணைந்து துக்கம் கொண்டாட முடிகிறது.



''குவாய் ஆற்றுக்குத் திரும்பிச் செல்வோம்'' என்ற கட்டுரையை வாசித்த போது மறக்க முடியாத அந்த நாட்களில் வாழ்வதற்கான உணர்வு என்னை ஆட்கொண்டது. அலெக் பில் ஜக் செசு என்பவர்களோடு இலங்கையரான ''சீழ்க்கையடிக்கும்'' சீகேட்ஸ்சையும் இவர்களோடு இருந்த இளம் பத்திரிகையாளரையும் நினைவு கூர முடிகிறது. சீகேட்ஸ் தனது சீழ்க்கை ஒலியில் ''கேணல் வோகி மாச்'' என்ற பாடலை மீட்டியபோது அதனால் கவரப்பட்ட டேவிட் லீன் இந்த சீழ்க்கை ஒலிப்பாடலை தனது போர்ப்படத்தில் அடிப்பண் இசையாக்கியதன் மூலம் (மீண்டும் மீண்டும் வரும்) ஏனைய போர்ப்படங்களையெல்லாம் பின் தள்ளிய நிகழ்வை நினைத்துப்பார்க்கிறேன்.

இந்தப் போரைப் பற்றிய வேறுபடங்களும் வெளிவந்தன என்பது உண்மை. எனினும் ''பிறிட்ச் ஒன் த றிவர் குவாய் என்ற திரைப்படத்தின் மிக உயர்ந்த தரத்தை அவற்றினால் எட்டிப்பிடிக்க முடியவில்லை. ''நெவர் சோ பியூ'' என்ற திரைப்படமும் சில காலங்களின் பின்னர் எம். ஜி. எம். நிறுவனத்தால் இலங்கையிலேயே பிடிக்கப்பட்டதாயினும் திரைக்கதையை விமர்சித்து ''ரைம்ஸ் ஒவ் சிலோன்'' பத்திரிகை இதைப்போன்ற வெறுப்புக்குரிய படம் வேறு இல்லை என்ற பொருளில் 'நெவர் சோ பியூ'' (Never So Phew) என்று எழுதியது.

தம்மைச் சிறைப்பிடித்த ஜப்பானியருக்காக 260 மைல் நீளமான தாய்லாந்து-பர்மா ''சாக்காட்டுப் புகையிரதப் பாதை' யைக் கட்டிய போர்வீரர்களின் ஒன்றுகூடலே கீழே காண்போம். ''குவாய் ஆற்றின் மேல் நாங்கள் இரண்டு பாலங்களைக் கட்டினோம்'' என்று 72 வயதான பிறட்மோர்கன் என்பவர் தெரிவித்தார். அந்த இடத்திற்கு திரும்பவும் சென்றிருந்தவர்களுள் இவரும் ஒருவர் ''திரைப்படத்திற்காக, கித்துள் கலயில் கட்டப்பட்டது போன்ற ஒரு மரப்பாலத்தை, புகையிரதத்தை ஓடச்செய்வதற்காக, கட்ட வேண்டியிருந்தது. சீமெந்துக் கலவையையும் உருக்கையும் சேர்த்துக்கட்டிய பாலத்தை

அமைப்பதற்கு சிறிது காலம் அதிகமாக விரயமான போதும் அது முடிவடைந்ததும் இரும்புப் பாதையை எம்மால் சுலபமாக போட முடிந்தது'' என்றும் அவர் தெரிவித்தார்.

தமர்க்கானில் (Tamarkan) அமைக்கப்பட்டிருந்த போர்க் கைதிகளின் முகாம் இருந்த இடத்தில் இப்போது குவாய் ஆற்றுச்சிற்றுண்டிச்சாலையும் நினைவுப் பொருள் விற்பனை நிலையமும் அமைந்துள்ளன.

## உயிர் தப்பிய ஒருவர்

''இந்த நிகழ்வை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது'' என்று கூறுகிறார் 74 வயது நிரம்பிய லே மாட்டின் என்ற முன்னை நாள் போர்வீரன். இவர் மேசிசைட் தூரகிழக்கு முன்னைநாள் போர்க்கைதிகள் மன்றத்தின் செயலாளரும் எவ் போஸ் ('F' Force) படையிலிருந்து உயிர்தப்பியவருமாவார். இந்தப் படையினரே குவாய் ஆற்றின் மேலான பாலத்தையும் புகையிரதப் பாதையையும் காட்டியவர்களாவர். தொடக்ககால பிரித்தானிய அவுஸ்திரேலிய போர்க் கைதிகளின் எண்ணிக்கை 7,000 ஆக இருந்தது. இவர்களுள் 3,000 பேர் இறந்துவிட்டனர். மாட்டினின்பேர் அணியிலிருந்த 1,600 பேருள் போர் முடிவில் 427 பேரே எஞ்சியிருந்தனர்.

டிக் ''கொக்னி ஜக்'' லீ என்பவரும் மிகப்பருமனான பயங்கரத்தோற்றத்தைக் கொண்டவரும் ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்தவருமான டங்கன் பேகூசன் என்ற இருவரும் இந்த இடத்திற்கு மீண்டும் வந்த பழைய போர்வீரர்களாவர். தாம் சிறைப்பிடிக்கப்பட்ட இடத்தை மீண்டும் வந்து பார்த்த இவர்களுக்கு 72 வயதாகின்றது. இப்போதும் காயத்தழும்புகளோடு காணப்படும் டங்கன் 'ஜப்பானியரின் மனப்போக்கை இன்னமுமே என்னால் ஆழும் காண முடியவில்லை. எல்லாம் முடிந்து நேசநாடுகள் திரும்பி வந்தபோது செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்ட உணவு வகைகளும் மருந்துகளும் எதற்கும் பயன்படுததப்படாமல் களஞ்சிய அறைகளிலே தேக்கிவைக்கப்பட்டிருந்தன நாங்கள் போர்க் கைதிகளாக நடத்தப்படவில்லை. அடிமைகளாகவே நடத்தப்பட்டோம்'' என்று மனத்தாங்கலுடன் குறிப்பிட்டார்.

தம்மை கைதிகளாகக் கைப்பற்றிய ஜப்பானியர்களிடம் சிறந்த குண இயல்புகளும் இருந்ததாக டங்கன் மனப்பூர்வமாகக் குறிப்பிடுகின்றார். ''உண்மையைச் சொல்வதனால் ஒரு மிக



நல்ல ஜப்பானியனும் அவர்களின் இடையில் இருந்தான். ஒரு தொழிலை மேற்கொள்ளும் போது அவ்விடத்தில் எனக்குப் பொறுப்பாக இருந்த ஜப்பானிய சார்ஜன்ட் தன்னுடைய மதிய உணவை நாளாந்தம் என்னோடு பகிர்ந்து கொள்வான். அவனுடைய சிகரட் பெட்டியில் இருந்த சிகரெட்டுக்கள் ஒவ்வொன்றிலும் அரைப்பங்கை எனக்காக வைத்திருப்பான். தனது பங்கு புகைக்கப்பட்டிருந்தாலும் கூட என்னுடைய பங்கிலே அவன் கை வைப்பதில்லை என்ற பத்திரிகையாளரான பீற்றர் மாட்டீன் என்பவரிடம் டங்கன் தெரிவித்திருந்தார்.

தன்னுடன் சக போர்வீரனாகவும் நண்பனாகவும் இருந்த பொன்னாவென் தூரா மன்சி என்றவரின் கல்லறையைத் தரிசிப்பதற்காகவே டி கலீ இந்தப் பயணத்தை மேற்கொண்டார். இவர்கள் இருவரும் படையத்தில் ஒன்றாகச் சேர்ந்தவர்கள். ஒரேயிடத்திற்கு அனுப்பப்பட்டவர்கள். தகவல்கள் கொண்டு செல்லும் பணியில் தாங்களாகவே முன்வந்து இணைந்துகொண்டவர்கள். போர்க் கைதிகளாக மலைநாட்டு புகையிரதப்பாதைக்கு ஒரே அணியில் அடைக்கப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டவர்கள். இதைத் தொடர்ந்து அவர்கள் பிரிய நேர்ந்தது. ஒரு ஆண்டின் பின்னர் செத்துக்கொண்டிருந்த மன்சியை லீ கண்டார். நண்பனுக்கு உணவூட்டினார்; குளிப்பாட்டினார். எலும்புக்கூடாக இருந்தவரை அன்பு வார்த்தைகளால் உற்சாகப்படுத்தினார். இறுதியில் செத்த மன்சியை, லீ அங்கேயே புதைக்க நேர்ந்தது. மகாகனி ஜொக் எனப்படும் இவர் கிளாஸ்கோ சந்தை வியாபாரிகள் இடையில் இன்று பிரபலமானவர். தன்னிலும் பார்க்கப் பின்தங்கிய துரதிர்ஷ்டவசமான தூரகிழக்கு போர்க்கைதிகளுக்கு இப்போதும் இவர் உதவிவருகிறார்.

கித்துள்கலயில் எடுக்கப்பட்ட படத்தின் ஒரு காட்சியில் அலெக் ஹெனெஸ்சின் தலைமையில் அணிவகுத்து நின்ற போர்க்கைதிகளை பார்வையிட்டுக்கொண்டு நிற்பதான ஒரு தோற்றத்தில் செசு தயாக்காவா ஒரு பெட்டியில் நின்றுகொண்டிருக்கின்றார். ''பாலம்'' மேல் தாங்கள் கட்டாய பணி செய்துகொண்டிருந்த போது தமக்கு கிடைத்த தண்டனைகளை நினைவு கூர்ந்து 74 வயது நிரம்பிய நியூட்டன் ஜோன்ஸ் இந்தக் காட்சி தத்ரூபமாக அமைந்திருப்பதாகத் தெரிவித்தார்.

''ஒரு சிறிய தவறு இழைத்துவிட்டால் கூட யப்பானியர்கள் எங்களை அழைத்து 'கியோஸ்கி' என்று கட்டளையிடுவார்கள். இதன் பொருள் 'நிமிர்ந்து நில்' என்பதாகும். அந்த

நிலையில் வலது இடது என இயன்றமட்டும் வலுவாக கன்னத்தில் அறைவார்கள். ஒவ்வொரு அறையும் யப்பானியனின் முழு வலுவையும் எங்கள் கன்னத்திலே பதிக்கும். நாங்கள் அறிவிழந்து தரையில் விழும் வரையிலோ அல்லது விழுந்த பின் எழுந்து நாங்கள் செய்த தவறை உணர்ந்து அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்வதற்காக சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தும் வரைக்குமோ தமது பாதணிக்கால்களால் எங்கள் முழங்கால்களில் உதைத்துக்கொண்டே இருப்பார்கள்'' என்று நியூட்டன் யோன்ஸ் அன்றைய நிலையை வர்ணித்தார். ''இவையனைத்தையும் தங்கள் கௌரவத்திற்காகவே அவர்கள் செய்தனர் பாசறைகளில் தளபதிகளிடம் ஏறி நிற்பதற்கு சிறிய பெட்டிகளே இருந்தன.''

ஆகவே டேவிட் லீனுடைய திரைப்படத்தில் குறிப்பிட்ட அளவு உண்மையின் பிரதிபலிப்பு இருந்தது என்பதை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

காந்சன்பூரி என்ற இடத்தில் உள்ள இடுகாட்டின் தொலைவில்உள்ள மூலையில் ஒரு நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த இடுகாட்டில் ஏறத்தாழ 7,000 போர்க் கைதிகள் புதைக்கப்பட்டுள்ளார்கள். 50 ஆண்டுகளின் பின் 74 வயதுடைய டெனிஸ் செல்பியும் 82 வயதுடைய ஜக்றேஸ்சும் இதனை அடையாளங் கண்டனர்.

இவர்கள் இருவரும் ஒருவரின் தோளை இன்னொருவரின் கை அணைத்திருக்க வைக்கோலால் செய்யப்பட்ட தொப்பிகளை அணிந்து கொண்டு அவ்வழியால் நடந்து சென்றனர்.

## தண்டனை

இது ஒரு சாதாரணக் காட்சியாகும். முன்னொரு நேரத்தில் கப்டன் ஜக் றேஸ், சார்ஜன்ட் ஒருவருக்கு தேனீர் தயாரித்தளிக்க மறுத்தமைக்காக சாதாரண படைய வீரராக இருந்த செல்பிக்கு ஏழு நாட்களுக்கு விடுதிக்குள் முடங்கியிருக்கும் தண்டனையை வழங்கியிருந்தார். இந்தத் தண்டனையால் எந்த விதத்திலும் பாதிக்கப்படாத செல்பி புல்வெட்டும் இயந்திர விற்பனையில் ஈடுபட்டு இன்று கோடீஸ்வரராக இருக்கின்றார். அப்படியிருந்தும் தனக்குத் தண்டனை அளித்த ஜக்றேசை எப்படியும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தை கடந்த 50 வருடங்களாக தான் கொண்டிருந்ததாக செல்பி சிரித்துக் கொண்டே ஒப்புக்கொண்டார்.



''இது எவ்வளவு மூடத்தனமான எண்ணம் என்று இப்போது உணருகிறேன்'' என்று மனம் திறந்து தெரிவித்தார்.

போர்க் கைதிகளின் முகாம்களிலும் மகிழ்ச்சி நிலவுகிற சந்தர்ப்பங்கள் இருந்ததாக வயது முதிர்ந்த படைவீரர்கள் கூறுவார்கள். பாசறைகளில் ஏற்படும் வியாதிகளைப்பற்றி குறிப்பிட்ட லே மாட்டீன் தனது வேலைத்தளத்திலிருந்த 30 பேரில் மூன்று பேர் மட்டுமே இன்று உயிரோடு வாழ்வதாகவும் குறிப்பிட்டார்.

''ஜோ றொசி என்ற ஒரு இளைஞனை நான் எப்போதுமே நினைவு கூருவது வழக்கம்'' என்று பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்ட மாட்டீன் ''அவன் மன்செஸ்ரரைச் சேர்ந்தவன். அவனிடம் ஒரு வாய் வீணையிருந்தது. எங்களைச் சுற்றியிருந்தவர்கள் இறந்துகொண்டேயிருந்தார்கள். அடுத்து இறப்பது யாரென்று தெரியாமல் இருக்கும். அந்த வேளையிலும் எதைப்பற்றியும் கலங்காதவனாக ''என்னிடம் ஒரு அழகான தேங்காய்க் குலை இருக்கின்றது என்ற பாடலை தனது வாய் வீணையிலேயே பாடிக்கொண்டிருப்பான். அவன் வாசிப்பதைக் கேட்ட ஆறு திங்களின் பின் நான் வாய்விட்டுச் சிரித்தேன்'' என்றும் தெரிவித்தார். □

மக்கள் தங்களுக்கு இயற்கையாக அளிக்கப்பட்டுள்ள சிந்திக்கும் சுதந்திரத்தை பயன்படுத்துவதே இல்லை. அதற்குப் பதிலாக பேச்சு சுதந்திரத்தை கேட்கின்றனர்.

- சோரன் சீர்கேகாட்

# குறைவானதைப் பெறவா இவ்வளவு கூடுதலான காலம் நாம் காத்திருந்தோம்

**- தமிழ் மக்களின் கணிப்பு -**

**- எலாற -**

**(சண்டே ரைம்ஸ்-20.12.92)**

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பூசலின் தீர்வுக்கு முன்வைத்த ஒருமித்த கருத்தை, மற்றைய கட்சிகள் நிராகரித்ததன் காரணமாகத் . தீர்வை எட்ட உருவாக்கப்பட்ட தெரிவுக்குழு பெரிதாக எதையும் சாதிக்காது செயலற்றுப் போகும் நிலையிலுள்ளது.

வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்படவேண்டும் என்ற தங்கள் நிலைப்பாட்டைத் தமிழ்க் கட்சிகளும், இணைப்புக்கு எதிரான தங்கள் நிலைப்பாட்டை சிங்களக் கட்சிகளும் நிலைநிறுத்தியது மாத்திரமே இந்தத் தெரிவுக்குழுவை நியமித்ததன் மூலம் பெறப்பட்ட ஒரேயொரு பலனாகும்.

இதை உற்று நோக்குகையில் தெரிவுக்குழுவின் முடிவு அரசியல் கட்சிகளை எந்த விதத்திலும் பரபரப்படையச் செய்யவில்லை என்பது புலனாகின்றது.

ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் நிலவும் போர்க்காலச் சூழல் காரணமாக அல்லலுறும் தமிழ் மக்களின் நிலையும், இந்தக் கட்சிகளின் இந்த முடிவினால் அவர்களிடையே ஏற்படும் எதிர்விளைவு என்ன?

கூட்டாட்சி வழங்குவதன் மூலம் தீர்வொன்றை எட்டமுடியும் என்ற நம்பிக்கையைச் சிதறடிக்கும் வகையில் இறுதி நேரத்தில் இதுவும் கைவிடப்பட்டது துர்ப்பாக்கியமானதாகும். பிரிவி



னையைக் கைவிட்டு சனநாயக வழிக்கு வந்த தமிழ்க் கட்சிகளிடையே, அவை முக்கியமானவைகளாயிருந்தாலென்ன, முக்கியமற்றவைகளாயிருந்தாலென்ன, இது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதில் சந்தேகமில்லை.

தெரிவுக்குழு தனது முடிவை வெளியிட்ட நாளான 1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11 ஆம் திகதியன்று அரச சார்பான நாளேடுகளில் வெளிவந்த இரண்டு முக்கியமான கட்டுரைகளை ஊன்றி வாசித்தவர்கள், கூட்டாட்சி முறைக்கு ஆதரவு தெரிவித்திருந்தார்கள். சில நாட்களுக்குள் ஒன்றில் அதற்கு முட்டுக்கட்டையாகவிருப்பர் அல்லது அதை முற்றாகக் கைவிடுவர் என்பதை அறிவர். இந்தியாவிலுள்ளது போன்ற ஆட்சியை ஏற்படுத்துவதால் இந்த நாடு பெறக்கூடிய நன்மைகளை விளக்கி இலங்கைச் சமசமாஜக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அத்தாவுட செனவிரத்தினா அவர்கள் ஒரு கட்டுரையையும், ஒற்றை ஆட்சியின் கீழ் கூட்டாட்சி அமைக்கப்படுவது நன்மை பயக்குமென்றும், கூட்டாட்சி அமைப்பதால் ஒற்றை ஆட்சி வலுப்பெறுமென்றும் விளக்கி திரு. அத்தாவுட செனவிரத்தினா அவர்களின் குருவான கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா அவர்கள் மற்றக் கட்டுரையையும் எழுதியிருந்தனர்.

சமஷ்டி ஆட்சி முறையைக் கைவிடவேண்டுமென நீதியமைச்சர் திரு ஏ.சி.எஸ்.கமீத் அவர்கள் கொண்டுவந்த பிரேரணையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. சோமசாரா தசநாயக்கா அவர்கள் ஆமோதித்ததைத் தொடர்ந்து பாராளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அதை ஒருமுகமாக ஆதரித்தது மாத்திரமின்றி சமஷ்டி முறையைக் கைவிடவேண்டும் என்பதுடன் கூடுதலாக எதையும் வழங்குவதாயின் இந்தியாவிலுள்ளது போன்ற அரசியல் முறை தீர்வாக அமைவதற்குப் போதுமானதென்ற கருத்தையும் முன்வைத்ததே தெரிவுக்குழுவின் அமர்வின்போது அன்று நடைபெற்ற நிகழ்ச்சியாகும்.

இந்தச் சிறிய குழுவுக்கு இரு தலைவர்கள் தேவைதானா என எம். ஈ. பி(MEP) யைச் சேர்ந்த தினேஸ் குணவர்த்தன அவர்கள் வெளிப்படையாகவே குறை கூறியதைத் தொடர்ந்து திரு. கமீத் அவர்களாலேயே தெரிவுக்குழு வழிநடாத்தப்படுகின்றது என்ற குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டது.

பங்களா தேசத்துக்குப் பயணம் ஒன்றை மேற்கொள்ள விருந்த சனாதிபதி பிரேமதாசா அவர்களை வழியனுப்புவதற்காக வருகை தந்து வானூர்திக்கு செல்லும் பாதைக்கு முன்பாக நின்ற கனவான்கள் வரிசையில் கடைசியாக நின்ற கமீத் அவர்களுடன் சனாதிபதி பிரேமதாசா அவர்கள் சிறிது நேரம் உரையாடியது தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளில் திரு.கமீத் அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய அணுகுமுறையை அறிவுறுத்தவே எனக் கருதப்படுகின்றது.

இன்றுள்ள இந்தச் சர்ச்சையில் விடுதலைப்புலிகளின் நிலை என்ன? திரு.கொப்பேகடுவா அவர்களின் கொலையினால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பிலிருந்து அதைக் காப்பாற்றும் பொருட்டு தாங்களே அதற்குப் பொறுப்பாகவிருந்ததாக உரிமை கோரியிருந்த விடுதலைப்புலிகள் திரு.சிறிநிவாசன் அவர்களர்ல் முன்வைக்கப்பட்ட யோசனையைப்பற்றி எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்காது வாளாதிருக்கின்றனர். சிறிநிவாசன் முன்பு விடுதலைப்புலிகளின் அமைப்பில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.சிறிநிவாசன் அவர்கள் முன்னர் விடுதலைப்புலிகளுடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டவர் என்பதால் மற்றவர்களைவிட இவரால் முன்வைக்கப்பபட்ட யோசனைக்கு பின்னால் வேறுயாரோ இருப்பதாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இரகசியமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகக் கூறுபவர்கள் கருதுகிறார்கள். பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் திரு. கமீத் அவர்கள் வகித்த முக்கிய பங்கையும், போர் ஆரம்பிப்பதற்கு முன் 14 திங்களாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு இவருக்கு செயலுரிமை வழங்கப்பட்டிருந்ததையும் உதாரணமாகக்காட்டி இவர்கள் தங்கள் கருத்தை வலியுறுத்துகிறார்கள். இந்த யோசனையை ஆதரித்தவர்களில் ஈரோஸ் உறுப்பினரும் ஒருவர் எனக்கூறி இவர்கள் தங்கள் கருத்தை மேலும் வலியுறுத்துகிறார்கள்

வடக்கையும் கிழக்கையும் இணைப்பது தனிநாடு அமைக்க வழிகோலும் என்றும், சமஷ்டி முறை இறுதியில் தனி நாட்டை அமைக்க உதவும் என்றும் சிங்கள ஆராக்சக சங்விதானய (Sinhala Arakshaka Sanvidhanaya) என்ற அமைப்பு மறுபுறத்தில் வாதாடி வருகின்றது.

இப்படியாக குழப்பங்களுக்கிடையே திரு.தொண்டமான் அவர்களின் நிலைப்பாடு என்ன? ஞாயிற்றுக்கிழமையில் வெளி



வரும் நாளேடு ஒன்றுக்கு திரு.தொண்டமான் அவர்கள் வழங்கிய செவ்வியொன்றின்போது சமஷ்டி முறையை இரண்டு திங்களுக்கு முன் கண்டித்திருந்தார். அதன் பின் திரு.சிறிநிவாசன் அவர்களால் முன்வைக்கப்பட்ட யோசனை மீது தெரிவுக்குழுவுக்கு தனது கருத்தை தெரிவிக்கும் முகமாக எழுதுகையில் தமிழ்மக்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கு சமஷ்டி முறையே சிறந்த தீர்வாக அமையும் என வலியுறுத்தியிருந்தார். இருப்பினும் ஞாயிற்றுக் கிழமையில் வெளியிடப்படும் வேறு ஒரு நாளிதளுக்கு இவர் சென்றவாரம் வழங்கிய செவ்வியில் இணைப்பில்லாத சமஷ்டிமுறை, தீர்வை ஏற்படுத்ாதெனக்கூறி தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றியுள்ளார்.

## சமஷ்டி முறை எதிர்க்கப்பட்டது

சமஷ்டி முறையை உருவாக்கவேண்டும் என்ற யோசனை இந்த நேரத்தில் சடுதியாக முன்வைக்கப்பட்டது ஏன்? இது இவ்வளவு விரைவில் முடிவுற்றதன் காரணம் என்ன? இவை கணிக்க முடியாதவைகளாகும். 40 ஆண்டு காலமாக சமஷ்டி முறை நிராகரிக்கப்பட்டுவந்துள்ளது. பின்பு செல்வாக்கில்லாத அரசியல்வாதியொருவரால் திடீரென முன்வைக்கப்பட்ட இந்த யோசனை, செல்வாக்குள்ள அரசியல்வாதிகளுக்கிடையே சில நாட்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. இவையாவும் ஏன்?

1992 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் திகதியில் 10 அம்சங்களைக்கொண்டிருந்த திரு.சிறிநிவாசன் அவர்களின் யோசனை 1992ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் திகதி 9 அம்சங்களைக் கொண்டதாகக் குறைக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் சனாதிபதி பிரேமதாசா அவர்களுக்கு விசுவாசம் தெரிவித்து கூட்டாக அறிக்கையை வெளியிட்ட நாலு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த பசீர் சேகு தாவூட் அவர்களும், ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பின் முன்னைய உறுப்பினரான திரு.சிறிநிவாசன் அவர்களும் இருந்தனர் என்பதும் தெரிந்திருந்தும் இணைவுக்கு எதிராக இவர்கள் மற்றையோரோடு சேர்ந்து வாக்களித்ததை தமிழ்க்கட்சிகளுக்கு இடையே பிளவு ஏற்பட்டுள்ளது போன்று காட்ட முற்பட்ட சிறுபிள்ளைத்தனமான நிகழ்ச்சி டிசம்பர் திங்கள் நடந்த அமர்வின் போது நடந்தது.

இந்த நெருக்கடியில் இலங்கை முசுலிம் காங்கிரசினதும் அதன் தலைவரான திரு.எம்.எச்.எம். அசுரப் அவர்களினதும்

நிலைப்பாடு என்ன? தமிழ் மக்களுக்கும் முசுலிம் மக்களுக்குமிடையே இணைப்பு சம்பந்தமான ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு, தமிழ்க்கட்சிகளும், இலங்கை முசுலிம் காங்கிரசும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தன. ஒவ்வொரு சந்திப்பின் போதும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் யாவும் எழுத்தில் இருந்த போதிலும், முக்கிய சந்திப்பின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்களை அடுத்த சந்திப்பின் போது மாற்றுவதே இலங்கை முசுலிம் காங்கிரசின் வழக்கமாகவிருந்தது என தமிழ்க்குழுக்கள் குறைகூறுகின்றன. இதனால் கவலையுற்ற தமிழ்க் குழுக்கள், இலங்கை முசுலிம் காங்கிரசின் யோசனைகளை எழுத்தில் முன்வைக்கும்படி கோரினர். ஆனால் என்ன காரணத்தாலோ இலங்கை முசுலிம் காங்கிரஸ் தனது யோசனையை எழுத்தில் முன்வைக்கவில்லை.

ஒரே ஒரு முறை முசுலிம் காங்கிரசு சட்டம் ஒழுங்கு பற்றிய ஒரு திட்டத்தை முன்வைத்தது. அத்திட்டமானது 13 வது அரசியல் திருத்த சட்டத்தை ஒத்திருந்தது. இலங்கை முசுலிம் காங்கிரசுடன், தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில் பயனில்லை என்பதைக்கண்ட தமிழ்க் குழுக்களில் சில குழுக்கள், யோசனையை முன்வைக்க அதற்கு ஒரு கால எல்லையை விதித்திருந்தன. ரெலோ போன்ற குழுக்கள் இலங்கை முசுலிம் காங்கிரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில்லை எனத்தீர்மானித்தன.

திரு.அசுரப் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒரு உறுப்பினராக இருந்து அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது ஆதரித்ததன் காரணமாக, இலங்கை முசுலிம் காங்கிரசுடன் இணக்கத்தை ஏற்படுத்தும் இறுதி முயற்சியாக அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பொறுப்பைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் ஒப்படைக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களே இலங்கை முசுலிம் காங்கிரசுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கு மிகவும் பொருத்தமானவர் எனக் கருதப்பட்டது. இவராலும் எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணமுடியாததைத்



தொடர்ந்து கவலையுற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தங்களால் ஒருமித்த கருத்தை உருவாக்க முடியவில்லை என்பதை ஏனைய கட்சிகளுக்கு தெரிவிக்க வேண்டியிருந்தது.

இலங்கை முசுலிம் காங்கிரசிற்குப் பல எசமானர்கள் இருப்பதாகவும் அவர்கள் ஒவ்வொருவரையும் இது திருப்திப்படுத்த வேண்டியிருப்பதாலேயே இந்தக் கட்சிக்கு உண்மையாகத் தேவைப்படுவது என்ன என்பதை முன்வைக்க முடியாதிருப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் குறைகூறின. இலங்கை முசுலிம் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றி வந்ததால் இக்கட்சியால் தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதாகத் தமிழ்க் கட்சிகள் உணர்ந்தன. இணைப்பு விடயத்தில் கருத்தொற்றுமையை எட்டுவதற்காகத் தமிழ்க்குழுக்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வதாகக் காட்டிவந்த இலங்கை முசுலிம் காங்கிரஸ், திரு. சிறிநிவாசன் அவர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைக்குப் பின் அதன் போக்கை மாற்றிக்கொண்டது. தீர்வுத்திட்டங்களை தமிழ்க் கட்சிகளுக்குக் கொடுப்பதற்குத் தயக்கம் காட்டிவந்த திரு அசுரப் அவர்கள், இணைப்பு மற்றும் கருத்து வாக்கெடுப்பு இல்லாத திரு.சிறிநிவாசன் அவர்களுடைய யோசனையை ஆதரிக்கும் வகையில் தனது யோசனையை சென்றவாரம் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்திருந்தார்.

திரு.அசுரப் அவர்களிடமிருந்து பாடம் ஒன்றைக்கற்றுக் கொண்ட தமிழ்க்கட்சிகள், தங்களுக்கிடையேயுள்ள உறுதியில்லாதவர்களையும் சமாளிக்க பெரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தமிழ்க்கட்சிகளின் ஒரு உறுப்பாக விளங்குவதும் தான் கொண்ட கொள்கையே சரியானதெனப் பெரிதாக வாதிடுவதும், தமிழ்க்குழுக்கள் சந்திக்கும் வேளைகளில் தான் நினைத்த நேரத்தில் தனது கருத்தை முன்வைப்பதுமான ரெலோ இயக்கம் வடக்கும் கிழக்கும் தனித்தனியான அலகுகளாக விளங்கவேண்டுமெனவும் இவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு சபைகள் இருக்கவேண்டுமெனவும், தேர்ந்தெடுக்கப்பட்டவரும், செயலுரிமையுள்ளவருமான ஒரு ஆளுநர் மூலம் இந்த இரு சபைகளும் இணைக்கப்பட வேண்டுமெனவுமான தனது யோசனையை திரு. சிறிநிவாசன் அவர்கள் தனது யோசனை வெளிவருவதற்கு முன்னதாகத் தமிழ்க்கட்சிகளின் ஆலோசனைக்கு முன்வைத்தது.

ரெலோவினால் முன்வைக்கப்பட்ட யோசனையிலுள்ள செயலுரிமையுள்ள ஆளுநரிடம் ஆடை ஆலைகளைத் திறந்து வைப்பதற்கு மாத்திரம் செயலுரிமை இருக்குமா எனக் குறும்புக் கார தமிழ் அரசியல்வாதி ஒருவர் வருத்தத்துடன் கேள்வி எழுப் பினார். வடக்கையும், கிழக்கையும் பிரிப்பதாலும் இரண்டு சட்ட சபைகளை உருவாக்க வழிவகுப்பதாலும், ரெலோ முன்வைத்த யோசனையை மற்றைய தமிழ்க் கட்சிகள் வரவேற்கவில்லை.

## நாலு அம்சத் தீர்வுத் திட்டம்

மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் தனது யோசனையைக் கலந்து ஆராய்வதற்கு முன்னரே அவற்றை ரெலோ வெளியிட் டது. தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட 4 அம்சத்தீர்வுத் திட்டத் தில் மாத்திரமன்றி, 92ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3ஆம் திகதி வரையான ஆவணங்கள் யாவற்றிலும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து ரெலோ கையொப்பமிட்டிருந்தபோதும், அது தனியாக ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்ததன் காரண மாக ஆத்திரமடைந்த மற்றைய தமிழ்க் கட்சிகள், எதிர்காலத்தில் நடாத்தவிருக்கும் ஆலோசனைகளில் அது ஒன்றில் கலந்து கொள்ளக்கூடாது அல்லது தங்கள் கூட்டிலிருந்து அது வெளி யேறவேண்டுமென விரும்பின. 1992ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ஆம் திகதிக்குப் பின் இடம்பெற்ற தங்கள் சந்திப்பின்போது ரெலோவைக் கலந்துகொள்ளும்படி தமிழ்க் குழுக்கள் கேட்காத தனாலேயே 1992ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ஆம் திகதி அவை வெளியிட்ட அறிக்கையில் ரெலோவைத் தவிர்ந்த மற் றைய ஆறு தமிழ்க் கட்சிகள் கையொப்பமிட்டிருந்தன.

திரு. சிறிநிவாசன் அவர்களால் திடீரென யோசனை முன் வைக்கப்பட்டதும் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளக்காட்டிய அவசரமும் தமிழ்க் கட்சிகளை ஆச்சரியமடையச் செய்தன. தமிழ் மக்களுடைய சிக்கலைத் தீர்ப்பதற்குத் தங்கள் யோசனையை முன்வைக்கும்படி இந்த நாட்டு மக்களால் மாத்திரமன்றி அனைத் துலக மக்களாலும் கோரப்பட்டபோது அதை முன்வைக்காதிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்,



திரு.சிறிநிவாசன் அவர்களுடைய யோசனையை ஆதரித்ததைக் கொண்டு அந்தக் கட்சிகளின் போக்கை இவர்களால் அறிய முடிந்தது.

இனி என்ன நடக்கவிருக்கின்றது? 1993ஆம் ஆண்டு சன வரித் திங்கள் வெளியிடப்படுமென நம்பப்படும் தெரிவுக்குழுவின் அறிக்கை தமிழ் மக்களின் சிக்கலுக்கு தீர்வொன்றைக் கொண் டிருக்குமா? திரு. முனசிங்க அவர்கள் தெரியப்படுத்தவிருக் கும் விடயங்களை விடுதலைப் புலிகள் மாத்திரமல்லாது தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளா. தெரிவுக் குழுவும் மற்றைய கட்சி களும் வழங்க முன்வருவது இதுதானெனில், மாகாணசபை மூல மும் இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலமும் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தம் மூலமும் வழங்க முன்வந்ததைவிட இது மிக வும் குறைவானது எனத் தமிழ்க் கட்சிகள் கருதுகின்றன. தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடியது இவ்வளவுதானெனில் இந்த ஐந்து தமிழ்க் கட்சிகளும் இவ்வளவு காலமாக ஏன் காத்திருந்தன என்ற மற்றொரு கேள்வியும் கேட்கப்படுகின்றது.

தெரிவுக் குழுவின் திட்டம் செயலிழந்த நிலையில் மேனன் கவியைச் (Mennon Kavi) சிறப்பிக்கும் முகமாக கொழும்பி லுள்ள கிராண்ட் ஒறியன்ற் கோட்டலில் (Grand Oricnt Hotel) சென்ற வாரம் நடைபெற்ற நிகழ்ச்சியில் இணைப்பை அடிப்படை யாகக் கொண்டிராத தீர்வுத் திட்டம் எதுவும் தமிழ் மக்கள் ஏற் கக்கூடிய தீர்வுத் திட்டமாக அமையாது எனவும், இணைப்பை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத் திட்டம் ஒன்று விரைவில் முன்வைக்கப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளா ளர் திரு. கே. கணேசலிங்கம் அவர்கள் கூறியுள்ளார். அப் போது மந்திரி திரு. ஏ. ஆர். மன்சூர் அவர்களும் மேடையில் இருந்தார்.

இணைப்பைக் கடுமையாக எதிர்த்துவரும் திரு. மன்சூர் இதற்கு ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் ஐக் கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு இதுதான் எனக்கொள்ள

முடியுமா? இன்று நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் இந்த விடயம் சம்பந்தமாகச் சிறப்புத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும் டிசம்பர் திங்கள் 31ஆம் திகதிக்கு முன் தமிழ் மக்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கு தீர்வுத் திட்டம் ஒன்று முன் வைக்கப்படும் எனத் தமிழ்க் கட்சிகளுக்கு உறுதியளிக்கப்பட்டிருப் பினும் அந்தக் காலஎல்லை நெருங்கி வந்துகொண்டிருக்கும் இவ் வேளையிலும் முறையான தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப் படவில்லை. தற்போது முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தைத் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக்கொள்கின்றார்களா என்பதைவிட தமிழ் மக்கள் இதை ஏற்றுக்கொள்ளச் சம்மதிப்பார்களா என்பதே கேள்வியாகும்.

---

வறுமை, இல்லாமை போன்றவை என் முன் சிக்கல்களாக இருக்கும் வரை எனக்கு இன்னொருவன் எதிரியாக வில்லனாக இருப்பது தொடரும்

-சார்த்தர்

# தமிழ் மக்கள் தனியான நாகரிக இனம் என்பதை உலகிற்கு காட்டிய மாமனிதன் ராஜராஜசோழன்!

-தேவமணி ரஃபேல்
(வீரகேசரி 14-01-93)

**சோ**ழர்கள் சங்க காலத்திலேயே (கி. மு. இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை) வாழ்ந்திருந்தாலும், அந்தக்கால கட்டத்தின் முடிவில், தென்னாட்டிலிருந்து காணாமல் போய்விட்டிருக்கிறார்கள். கி.பி.9-ம் நூற்றாண்டில் விஜயாலய சோழன் தோன்றும்வரை அந்த குலம் பற்றிய செய்திகளே இல்லை. சிலவேளை சங்கம் வளர்த்த அந்த இனத்தவர் குறுநில மன்னர்களாக, கும்பகோணத்துக்கு அருகே உள்ள உறையூர், பழையாறு போன்ற பழைய தலை நகரங்களிலேயே தொடர்ந்து வாழ்ந்திருக்கக்கூடும்.

பல்லவரின் ஆட்சி முடிவுற்றபோது, முத்தரையர் என்ற சிற்றரசர்கள் நியமம் என்ற ஊரை தலைநகராகக் கொண்டு காவேரிப்படுகை ஊர்களை ஆண்டிருக்கிறார்கள். நியமம் கல்வெட்டுகளில் இருந்து கோஇளங்கோ என்ற முத்தரையர் மிகவும் பிரசித்தமானவர் எனத் தெரிகிறது. இவரைத்தான் உறையூரில் இருந்து வந்த விஜயாலய சோழர் வெற்றிகொண்டு கி.பி. 850 ஆம் ஆண்டு, சோழர் சாம்ராச்சியத்தை நிறுவினார். இவரே தஞ்சாவூரை கைப்பற்றி சோழரின் தலைநகராக்கியவர். ஆயினும் அவருடைய வழித்தோன்றல்கள் ஒருவரோடு ஒருவர் சச்சரவு செய்து கொள்வதிலேயே காலத்தை ஓட்டி சாம்ராச்சியத்தை பெருமளவு குறைக்க உதவி செய்தார்கள்.

விஜயாலயனின் வழியில் வந்த மூன்றாம் தலைமுறையைச் சார்ந்த பராந்தகன் எனும் சுந்தர சோழனுக்கு மூன்று

மக்கள் மூத்த ஆண் மகன் உறவினரால் வரவழைத்து கொலை செய்யப்பட்டான். அடுத்தவர் குந்தவை என்ற பெண் மகவு. இளையவர் அருண்மொழி. இவர்தான் பின்னாட்களில் ராஜ ராஜன் என்ற பெயரில் வீறுகொண்டு எழுந்து நின்றார். இவரே ராஜாராஜேஸ்வரம் என்ற உலகப் புகழ்பெற்ற தஞ்சையின் பெரிய கோவிலை கட்டியவர் (வீரகேசரி 08-11-1992 பார்க்கவும்). தமிழர் என்ற இனத்தார் தனி நாகரிகர்களாக தென்னாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உலகுக்கு அடையாளம் காட்டியவரும், இந்த ஒப்பற்ற மன்னர் கடல்கடந்தும் தன் அதிகாரத்தை நிலைநாட்டி பல அன்னிய நாடுகளோடு உடன்படிக்கைகளும், ஒப்புதல்களும், கூட்டு நடவடிக்கைகளும் செய்து கொண்டவர். வெல்ல முடியாத படைபலம் கொண்டவர்.

பராந்தகன் 373 ஆம் ஆண்டு அகால மரணம் அடைந்த போது அவருடைய மனைவியும் உடன்கட்டை ஏறி இறந்து போனார். அப்போது இளைஞனாக இருந்த இளவரசர் அருண்மொழி செய்வதறியாத ஒரு கையறு நிலையில் இருந்தார்.

ஆயினும் அவர் விவேகம் நிறைந்த ராஜதந்திரியாக இருந்ததால் தனக்கு உரிய சிம்மாசனத்தை பெறுவதற்கு 12 ஆண்டுகள் பொறுமையாகக் காத்திருந்தார் அதற்கு முன்னரே தன்னுடைய உரிமைகளை நிலைநாட்ட முயன்றிருந்தால் ஏற்கனவே பிளவுபட்டநாடு சின்னாபின்னமாகி இருக்கும். அதோடு அவருடைய உயிர்க்கும் கூட குந்தகம் விளைதிருக்கலாம் ஆனால் அவர் அரியணை ஏறியதும் செய்த முதல்வேலை தன் அண்ணனின் கொலைக்கு காரணமானவர்களை முறைபபடி தண்டித்ததே. ராஜராஜன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது சோழ சாம்ராச்சியம் வெறும் சோழமண்டலமாக சுருங்கிப் போய் இருந்தது.

## ராஜராஜனின் போர்கள்

எனவே தன் சாம்ராச்சியத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளை கொஞ்சம் கொஞ்சமாக மேற்கொண்டு முதல் கட்டமாக தென்னாட்டை ஒன்றிணைக்க எண்ணினார். அதன்படி பாண்டியன் அமரபுஜங்கன் என்பானோடு பொருது அவனை வீழ்த்தினார். பின் ரவிவர்மன் திருவேதி என்ற சேரமன்னனை வெற்றி கொண்டு இலங்கைக்கு படையெடுத்துச் சென்றார். அங்கு "பயங்கரமாக போராடும்" சிங்களவர்களை அடக்கி ("முரட்



டொழில் சிங்களர் ஈழ மண்டலமும்") ஐந்தாம் மகிந்தன் என்ற மன்னனை மலைநாட்டுக்கு துரத்திவிட்டு இலங்கையின் அந்தப் பகுதியைக் கைப்பற்றினார். தென்னாட்டிலிருந்து தனக்கு இனி எந்தவித சவாலும் வராது என்பது உறுதியானதும் வடக்குப் பக்கம் தன் கவனத்தைச் செலுத்தினார்.

அதற்குமுன், தான் கைப்பற்றிய பிரதேசங்களில் எல்லாம் அரசு இயந்திரங்கள் சரிவர இயங்க ஆளுநர்களையும் ஏனைய அலுவலர்களையும் நியமித்தார். அதே வேளை ஒவ்வொரு நாட்டிலும் அமைதி காக்கும்படை ஒன்றையும் விட்டுச் சென்றார். இப்படி இலங்கையில் இருந்த அந்த படைக்கு (90.000 எண்ணிக்கையில) வேளைக்காரர் படை என்று சோழர் கல்வெட்டுகளும், இலங்கையின் மகாவம்சமும் கூறுகின்றன. ஈழத்தில் அப்போது ஆளுநராக இருந்தவர் ராஜராஜனின மகன் ராஜேந்திரன். தனது 25-ம் வயது முதலே தன் தநதையின் ஒரு படைத்தளபதியாக பணியாற்றிய இவரே பொலனறுவையில் இரண்டு சிவன் கோவில்களைக்கட்டினார். தனது அன்னையின் பெயரில் மகாதேவி ஈஸ்வரம் என்று அப்போது அவரால் பெயரிடப்பட்ட ஒரு கோவில் இன்று சிவன் கோவில் என்று வழங்கப்பெறுகிறது.

அதன் பிறகு ராஜராஜன் கர்நாடகம் சென்று. கர்நாடகம், கூர்ஜரம் ஆகிய நாடுகளை வென்று, பாக்கிநாடு (சென்னைக்கு வடக்கே உள்ள நெல்லூர் பகுதி) என்பதனையும் கைப்பற்றினார். சாளுக்கியர்களுடன் இவர் நேருக்கு நேர் மோதியது 992ல் நடந்தேறியது ஆயினும் பல ஆண்டுகள் தீவிரமாக போர் செய்த பின்னரே அவர்களை முற்றிலும் வெல்ல முடிந்தது. சாளுக்கிய மன்னன் அகவமுல்லன் என்பானை இரட்டைபாடி எனற இடத்தில் 'அந்தபெரிய' ஆற்றின் கரையில் தோற்கடித்தார். இதன் பின் கிருஷ்ணா, கோதாவரி ஆறுகளுக்த இடைப்பட்ட வேங்கி நாட்டையும் தெலுங்கு மன்னரான பீமன் என்பவரையும் 999 -இல் வென்றிருக்கிறார்.

திருவேலங்காடு செப்புத்தகடு ஒன்று 84 கங்கை, கலிங்கம், வேங்கி, மகதம், அரட்டம், ஒட்டம், சௌராஷ்டிரம், சாளுக்கியம் ஆகியவற்றை வென்ற பின் அவர்களின் மரியாதையை ஏற்று எழும் ஞாயிறு போல் உலகை ஆண்டான் என்று கூறுகிறது.

இந்தப் போர்களில் எல்லாம் அவர் பயன்படுத்திய சேனைகளின் எண்ணிக்கை 900,000 த்திற்கும் மேல் என்று தெரிகிறது.

ராஜராஜன் ஒரு மாபெரும் சேனையை உருவாக்கி இருந்தார். 900,000 போர் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. அதே சமயம் இலங்கையில் இருந்த அவருடைய படைகளின் எண்ணிக்கை 90.000. எனவே அவரின் படைகளின் மொத்த எண்ணிக்கை பத்து பதினொரு லட்சத்திற்கு அதிகமாகவே இருந்திருக்க வேண்டும் என வரலாற்று ஆசிரியர்களும், தொல்பொருள் வல்லுநர்களும் மதிப்பிடுகிறார்கள். குறிப்பிட்ட முக்கிய நகரங்களில் பாசறைகள் இருந்தன. மேலும் அவர் போரிட்டு வென்ற நாடுகளில் எல்லாம் அமைதி காக்கும் படைகளையும் ஏற்படுத்தினார். போரில் தோல்வியுற்றவர்கள் மீண்டும் தலை தூக்கி கலகம் விளைவிக்காதவாறு பார்த்துக் கொள்வதே இவர்களின் பணி. எனவேதான் ராஜராஜன் பதினொரு லட்சத்திற்கு அதிகமான படையினரை வைத்திருந்தார் என்பது மிகையான மதிப்பீடு அல்ல என்று தெரிகிறது. இத்தகைய அளவிலான சேனையை பராமரிப்பதற்த அசாத்திய திறமையும் நிருவாக திட்டமிடல் அறிவும் இருந்திருக்க வேண்டும்.

## சேனையின் பிரிவுகள்

சேனையை பல பிரிவுகளாக ராஜராஜன் வைத்திருந்தார் என்பதை கோவிலின் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ''பண்டிதசோழ தெரிந்த வில்லாளிகள்'' என்பது ஒரு படைப் பிரிவு. இது வில் வீரர்களைக் கொண்ட ''நியமம் பெருந்த நாட்டு வலங்கை வேளைக்காரப் படை''யின் உட்பிரிவு. இந்த வேளைக்காரப் படைகள் போர் இல்லாத காலங்களில் கோவில்களையும் அரச குடும்பத்தவரையும் காக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். எல்லாவித போர்ப் பயிற்சிகளும் பெற்றிருந்த இந்த படையினர் தங்கள் பணியை நிறைவேற்ற உயிர் விடவும் தயங்காத சிந்தையினர்.

சேனையின் அக்கால தேவைகளை ஒட்டி நேருக்கு நேர் போரிடும் காலாட் படையினரே அதிகமாக இருந்தார்கள். இடையிடையே குறிப்பிட்ட வியூகங்களில் வில்லாளிகள் இருந்தனர். குதிரைப்படையும் இருந்தது. அரசன் அல்லது தளபதி குதிரையிலேயே பயணித்தார் கரந்தை தமிழ்ச் சங்கத்தகடுகள் ''தன்னிகர் இல்லா புரவியில் ஏறி'' ராஜராஜன் போரிட்டதாகக் கூறுகின்றன. யானைப்படையும் பெரிய அளவில் இருந்தது. யானைகள் போரில் ஈடுபட்டதோடு உணவுப் பொருள்



களையும், போர்த்தளபாடங்களையும் மற்றும் போர் வீரர்களையும் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டன.

''வேளைக்காரப் படை''யினர் இற்றை நாள் கமாண்டோக்களுக்கு நிகரானவர்.

ராஜராஜன் ஒரு தீவிர பக்திமானாக மாறு முன் அவர் மாலைத்தீவு லட்சத்தீவுகளைச் சார்ந்த 12,000 தீவுகளை கைப்பற்றியதுவே அவருடைய கடைசி வெற்றி ஆகும். ''முன்னீர் பழந்தீவுப் பன்னீராயிரமும்'' என்கின்றன கல்வெட்டுக்கள்.

ராஜராஜனின் காலத்துக்கு முன்னரே கப்பல்களில் திரைகடல் ஓடும் கலை சிறப்பாக இருந்தது தமிழ்நாட்டில். ஆனால் அந்த நாவாய்கள் எல்லாம் வணிகக் கப்பல்களாக அரேபியா, சீனா, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு சென்று வந்திருக்கின்றன. ராஜராஜன் இந்தக் கலம் செலுத்தும் கலையை விருத்தி செய்து பிரமாண்டமான கப்பல்களைக் கட்டி அவற்றிற்கு வலிமை மிக்க போர்த்திறனை அளித்து பல கடல் கடந்த நாடுகளான பர்மா, மலேயா, சுமத்ரா போன்றவைகளை வென்றார்.

இவருடைய மகன் ராஜேந்திரன் காலத்தில் தான் கப்பல் படையின் ஆற்றல் உச்ச நிலையை அடைந்தது. பல நாட்கள் பல மாதங்கள், பல ஆண்டுகள் பயணம் செய்யும் திறமையை அவை அடைந்து வெற்றிகளைக் குவித்தன. இதனால் ''கடாரம் கொண்டான்'' என்ற பெயரும் ராஜேந்திரனுக்கு கிடைத்தது.

## ராஜராஜனின் பிறமத சகிப்புத்தன்மை

அவருடைய ஆட்சியின் போது பல கோவில்களை கட்டுவித்தார். சிவன், விஷ்ணு, புத்தர், சமணர் என்று வெவ்வேறு வழிபாடுகளுக்காக இவரும் இவரது குடும்பத்தவரும் ஒப்பில்லா ராஜேஸ்வரம் உட்பட 52 கோவில்களை எழுப்பி உள்ளனர். இது உலக அளவில் ஒரு சாதனை ஆகும். இவருடைய தமக்கை குந்தவை நாச்சியார் ஒரே மாதிரியான மூன்று கோவில்களை (சிவன், விஷ்ணு, ஜெயின்) கட்டினார். அரசனின் மனைவி லோகமகாதேவி, அரிகுலசேகரா ஈஸ்வரம் என்று தொண்டை மண்டலத்தில் எழுப்பினார். அரிகுலசேகரன் என்

பது ராஜராஜனின் ஒரு பெயர். இது தவிர தேவர் பெரு மான் என்ற கோவிலையும், சுந்தர சோழ பெரும்பள்ளி என்ற புத்தர் கோவிலையும் கட்டுவித்தார். ராஜராஜனின் மகன் ராஜேந்திரன் இலங்கையில் கட்டிய கோவில்களோடு, கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு சிவன் கோவிலையும் தஞ்சைக் கோவிலின் மாதிரியில், ஆனால் சிறிய வடிவத்தில் எழுப்பி உள்ளார்.

ராஜராஜனின் தனிப்பட்ட பக்தி முறை எப்படி இருந் தாலும், மற்ற மதத்தவரை மதித்ததும், குடிமக்களுக்கு மத சுதந்திரம் கொடுத்திருந்ததும் இவரும் இவருடைய குடும்பத் தாரும் கட்டிய பல கோவில்களே சான்று கூறும்.

அதோடு தாழ்ந்த சாதியினரை கோவிலுக்குள் அனும திக்கும் புரட்சியை முதன் முதல் செய்தவர் இவரே!

## ராஜராஜன் ஒரு தீவிர சிவபக்தர்

ராஜராஜேஸ்வரம் என்ற மாபெரும் கோவிலே இவரு டைய மாறாத சிவபக்திக்கு ஒரு எடுத்துக் காட்டு. தேவாரப் பாடல்களை அழிவில் இருந்து காப்பாற்றிய பெருமை ராஜ ராஜனையே சாரும், சிதம்பரம் நடராஜர் கோவிலின் மேற் குப் பிரகாரத்தில் கறையான் அரிக்கும் நிலையில் இருந்த இந்த சுவடிகளை தெய்வாதீனமாக மீட்டு தமிழ் நாட்டுக்கு அளித்தவர் இவரே. இந்த நல்ல செயலுக்காகவும் சிவன்பால் இவர் கொண்ட பற்றிற்காகவும் சிவபாத சேகரன் என்ற பெய ரும் இவருக்கு அளிக்கப்பட்டது.

ராஜராஜனின் காலத்தில் தஞ்சாவூர் பெரிய கோவிலில் நாள்தோறும் பக்க வாத்தியங்களோடு தேவாரம் பாடுவதற் கும் ஏற்பாடு செய்திருந்தார் அவர். அப்படி இசைக்கப்படும் போது தன் குடும்பத்தோடு சென்று கேட்டு மெய்மறந்து நின் றதாகத் தெரிகிறது. தேவாரம் பாடியவர்களுக்கும், வாத்தி யம் இசைத்தவர்களுக்கும் அளித்த ஊதியம் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது.

## ராஜ ராஜனின் உருவ அமைப்பு

ராஜராஜனின் திரு உருவம் எப்படி இருந்தது என்ப தற்கு சான்றுகள் இல்லை. ஆயினும் தஞ்சை கோவிலின் கரு



வறையின் உட்சுவரில் ஒரு ஓவியத்தில் இவரையும் இவரது வழிகாட்டி கருவூர் தேவரையும் வரைந்திருக்கிறார்கள். வய தானவர் கருவூர் தேவர். மற்றது ராஜராஜனின் உருவம். நெடிதுயர்ந்த ராஜ கம்பீர தோற்றம் அரசனுக்குரிய அணி கலன்கள் பூண்டு நிற்கிறார். முகபாவம் ஆழ்ந்த அருள் உள் ளத்தையும், மன உறுதியையும் காட்டுகிறது.

தன்னுடைய உறவினர் மீது அன்பும் பாசமும் மிக்கவர் ராஜராஜன். இவருடைய தமக்கை குந்தவை. இவருடைய மாறாத அன்பையும், மரியாதையையும் பெற்றவர். தன்னுடைய பாட்டனார் அரிஞ்சயனின் நினைவில் கோவில்கள் எழுப்பி உள்ளார். தந்தையின் அகால மரணமும், தாயார் எரிதழலில் வீழ்ந்து பட்டதும் இவரைப் பெரிதும் வருத்தியதாகத் தெரிகிறது. தந்தையின் பெயரில் இவர் தஞ்சாவூரில் கட்டிய விஷ்ணு கோவி லான சுந்தரசோழர் விண்ணகரம் குறிப்பிடத்தக்கது. அதனோடு ஒரு மருத்துவ மனையும் சுந்தர சோழ விண்ணகர் ஆத்தூர் சாலை இணைக்கப்பட்டிருந்தது. இந்த மருத்துவ மனையின் பிரதம மருத்துவராக இருந்த மருகள் ஊரைச் சேர்ந்த அரையன் மதுராந்தகன் என்றவருக்கும் அவருடைய பரம்பரை யினருக்கும் குந்தவை நாச்சியார் ஒரு வீட்டு மனையையும் வேறு விளை நிலங்களையும் ''வைத்திய போகமாக'' அன்பளிப்பு செய்திருந்தார். இது தவிர ராஜராஜேஸ்வரம் கோவிலின் ஒரு மருத்துவமனை இயங்கவும் பண உதவி செய்திருந்தார் குந்தவை.

## ராஜராஜனின் அரசு நிர்வாகம்

அவருடைய மகன்கள், மற்றும் முக்கிய உறவினர்கள் பங்கு கொள்ளும் ஒரு நிர்வாக முறையை ஏற்படுத்தி இருந்தார் ராஜராஜன். அதன் மூலமாக அவருடைய உறவினர், பேராட்சி, ஊராட்சிகளை நிருவகிக்கும்போது அந்த மாபெரும் சாம்ராஜ் யத்தின் நிருவாகத்தில் தாங்களும் பங்கு வகிக்கிறோம் என்ற பெருமையை அவர்களுக்கு அளித்தார். இளவரசர்கள் மாகா ணங்களிலும், தூர நாடுகளிலும் ஆளுநர்களாகப் பணியாற்ற அனுப்பப்பட்டார்கள். சீனாவோடும் வேறு தூர நாடுகளோடும் தூதுவர் பரிமாற்றமும் இருந்தது.

ராஜராஜனின் 16 ஆவது ஆட்சி ஆண்டில், உலகின் வேறு எந்தப் பகுதியிலும், எந்த அரசனும் செய்யாத அளவில் அவ ருடைய சாம்ராஜ்யம் முழுவதையுமே அளந்துள்ளார். பயிர்

செய்யக் கூடியதும், பயிரிட முடியாததுமான எல்லா நிலங்களையும் அளந்து கணக்கிட்டுத் தீர்வையும் நிர்ணயித்தது ஒரு மாபெரும் சாதனை. இக்கால சர்வே தளபாடங்கள் இல்லாத நிலையில் வெறுமனே கயிறுகளைக் கொண்டு அளந்து பனை ஓலைகளில் குறித்துக் கொண்டு கணக்கிடுவது என்பது ஒரு அசுர சாதனை. அது உலகையே அளப்பதற்கு ஒப்பாகும்.

அதுவும் மிகவும் துல்லியமாக அளவை செய்திருக்கிறார்கள். உதாரணமாக ஒரு கோவிலின் மான்யம் ஒரு வேலி (ஆறு ஏக்கர்) யின் 32 ஆவது பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி அளவை செய்த இவரே உலகின் முதல் (Surveyor General) இதனால் இவரை 'குரவன் உலகளந்தான்' என்றும் அழைத்தார்கள்.

ஆணையை அரசன் வாயால் செப்ப, ஓலை எழுதுவோனால் (வாம் ஓலை எழுதும்) எழுதப்பட்ட அந்த ஓலை, ஓலை நாயக்கர்களின் ஒப்புதல் பெற்று (''ஒப்பினாலும்'') அரசின் நிலவரி அளவை புத்தகங்களில் அரச செயலாளரால் (கருமம் அறையும்) பதிவு செய்யப்படுகிறது.

இதன்படி சத்திய சிகாமணி வளநாட்டின், பட்டினக் கூற்றத்தைச் சேர்ந்த ஆனைமங்கலம் என்ற ஊர் அளக்கப்பட்டு அதன் 97 வேலி 2 மா $1\frac{1}{2}$ காணி நிலம் ''புறவரி'' கள் (உதவி நிலவரி அலுவலர்கள்) ''வரிப்பொத்தகம்'' (வரி பதிவேட்டின் பொறுப்பாளர்) முன்னிலையில் பதிவு ஏட்டில் பதிவு செய்யப் பட்டதாக ஒரு சாசனம் கூறுகிறது. நிலத்தை அளந்து பதிவேட்டில் எழுதியதும், ஒரு பெண்யானை அளநத நிலத்தைச் சுற்றி வர, எல்லையைக் குறிக்க கற்களும், கல்லிச் செடிகளும் நடுவது அப்போதைய வழக்கமாக இருந்திருக்கிறது.

''பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லும் கல்லியும் நட்டு அறவோலை செய்து குடுத்தோம் சத்திரியசிகாமணி வளநாட்டு பட்டினக் கூற்றதது ஆனை மங்கலம் நாட்டோம்'' என்பது கல் சாசனம்.

இந்த நிலவளவைக்குப் பின் ராஜராஜனின் வருமானம் மிகவும் அதிகரித்தது. பலவிதமான வரிகளை இறைக்கு மக்கள் செலுத்தினார்கள். ஊராட்சி, நாடாட்சி, வட்டி நாழி பிடா நாழி, வண்ணாரப்பாறை, குனக்கானம், தறிபுடைவை, தட்டார் [illegible]பாட்டம், நல்லெருது, நாடுகாவல், உழுகு என்று இன்ன பிற



வரிகள். இதனால் யாரும் வைத்திராத அளவில் ஒரு மாபெரும் போர்ப்படையை வைத்துக் கொள்ளவும், முன் எப்போதும் இல்லாத எண்ணிக்கையில் கோவில்கள் கட்டவும் முடிந்தது. இவரால். அவருடைய பல போர்களில் கிடைத்த திரவியங்களையெல்லாம் தன்னுடைய இறைவன் - ராஜராஜேஸ்வரம் உடையார் காலடியில் கொட்டி, அந்த இறைவனின் சேவைக்கு அவற்றை பயன் படுத்தினாலும், பிரமாண்டமான முறையில் அந்த கோவிலைக் கட்டுவதற்கு தன்னுடைய சாம்ராஜ்யத்திலிருந்து வந்த வரிப்பணத்தைக் கொண்டே கட்டி இருக்கிறார். அரசனின் வரித்திட்டத்தில் நிலவரியே பெரும் பங்கை வகித்தது.

நாட்டை அளந்தது மட்டுமின்றி, சிற்றூர்களையெல்லாம் வரிசைப்படுத்தி இணைத்து தனியூர், நாடு, கூற்றம் (District) வளநாடு (Province) என ஒரு நிருவாக அமைப்பை சிறப்பாக அமைத்திருக்கிறார் ராஜராஜன். பாண்டிய குளபதி வளநாடு, குலோத்துங்க வளநாடு, உய்யக்கொண்டான் வளநாடு என்பன சில மாகாணங்கள். கிராமங்கள் ஒவ்வொன்றும் தன்னிறைவு பெற்றிருந்தன. இறையாண்மையை நிலைநிறுத்த அதிகாரிகள் பொலிஸ் வேலையை செய்ய பாளயக்காரர். தலையாரி கணக்குகள் எழுத கணக்குப் பிள்ளை மற்றும் அளவுக்காரர், நீர்ப்பாசனம் நிறைவேற்ற கம்பு கட்டி ஆகியோர் இருந்தார்கள். கிராமத்துக்கென ஒரு கோயில் இருக்கும். அல்லது அருகாமையிலாவது இருக்கும். கோவிலைக் சுற்றியே அவர்களின் வாழ்க்கை இருந்தது. அதில் பண்டாரங்கள், இசைக்கலைஞர், நாட்டிய மகளிர், ஆசிரியர்கள் மற்றும் கிராம மருத்துவர் ஆகியோர் இருப்பர். இவர்கள் தவிர கொல்லர், பொற்கொல்லர், வண்ணான் [illegible] நாவி[illegible]தர், தச்சன் ஆகியோரும் கிராமத்தில் இருந்தனர். இவ களு[illegible]கெல்லாம் ஊரில் விளையும் பொருள்களின் குறிப்பிட்ட [illegible] விகிதம் சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. இந்த வரவு செலவுத் திட்டங்களை ஒரு நிருவாக சபை (நாட்டார்) கட்டுப்படுத்தியது.

அரசு நிருவாகம் மிக உயர்ந்து நாடு முழுவதும் வியாபித்திருந்தது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு கல்வெட்டு 66. இதன்படி சில நிலங்களின் உற்பத்தி யாவும் தஞ்சை கோவிலின் பல பணியாளருக்கும் 400 மங்கையருக்கும் அளிக்கப்பட உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த 400 பெண்களும் கோவிலில் நாட்டியமாடவும், கோவில் தோட்டத்தில் மலர்கள் கொய்யவும், மாலையாக்கவும் கோவிலில் நாள்தோறும் வந்து குவியும் நெல்லை அரி

போக்கவும், இன்ன பிற பணிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த 400 நங்கையரும் சோழ நாட்டின் பல்வேறு கோவில்களிலிருந்து ராஜராஜேஸ்வரம் கோவிலுக்கு மாற்றாகி வந்தவர்கள். ஒவ்வொரு பெண்ணின்பெயரும் அவள் எங்கிருந்து வந்தாள் இப்போது எந்த வீட்டில் (கோவிலுக்கு அருகே உள்ள தெருக்களில்) குடி இருக்கிறாள், அவளுடைய ஊதியம் என்ன என்ற பட்டியல் கல்லில் செதுக்கப்பட்டு இருக்கிறது. (கல்வெட்டு எண் 66 வரிசை 3 முதல் 402 வரையும்)

உதாரணம்:- வரிசைஎண் 10:-நாகப்பட்டினத்தை சேர்ந்த திருக்கோரோணத்திலிருந்து வந்த பொன்மாலை என்ற எட்டாவது வீட்டில் இருக்கும் பெண்ணுக்கு மூன்று குருணி நெல் தினமும்.

கல்வெட்டின் வரிசை எண் 470 கோவிலில் பணிபுரியும் பெண்களை கண்காணிக்கும் பெண்மணியைக் குறிக்கின்றது. எண் 472 முதல் 479வரை நான்கு கோவில்கள் கணக்காளர்களும் எட்டுஉதவிக்கணக்காளர்களும், மற்றும் குடை பிடிப்பவர், விளக்கு ஏற்றுபவர், தண்ணீர் தெளிப்போர் (6 பேர்) மடைப்பள்ளிக்கென ஒரு குயவர், பிரதம தச்சன், பிரதம பொற்கொல்லன் தையல்காரர், காவல்காரர், என பணியாளர்கள் அங்கே இருந்ததைக் காட்டுகிறது.

## இறை கணக்குகளும்
## அவற்றின் தணிக்கையும் (Audit)

தேர்ந்தெடுக்கப்பட்ட சில கிராமங்கள் கோவிலுக்குத் தேவையான பணியாட்களை அனுப்ப வேண்டும் என கல்வெட்டு எண் 69 ஆணையிடுகின்றது. அந்த ஆணையில் அந்த கிராமம் சோழ நாட்டை சேர்ந்ததா அல்லது பாண்டிய தொண்டை நாடுகளைச் சேர்ந்ததா என்ற விபரம் உள்ளது. எடுத்துக் காட்டாக, உய்யக்கொண்டான் வளநாட்டை சேர்ந்த பாம்பூர் நாட்டின் திருக்குடமுகில் ஊரின் நிர்வாக சபை இரண்டு உதவி கணக்காளர்களை (பிரமச்சாரிகள்) அனுப்ப வேண்டும் என்கிறது ஆணை.

கணக்குகள் எழுத பேரேடுகள் போன்ற இற்றைநாள் புத்தகங்கள் இல்லாத நிலையிலும், வெறும்பனை ஓலைகளைக் கொண்ட புத்தகங்களில் கணக்கு வழக்குகள் எழுதி ஒழுங்காக இருந்திருக்கின்றன.



ராஜராஜனின் தமக்கை குந்தவையார் ராஜராஜேஸ்வரம் கோவிலுக்கு ஒரு தொகைப் பணத்தை அளித்திருக்கிறார். அது கோவிலில் வைப்புத்தொகையாக வைக்கப்பட்டு தேவையானவர்களுக்கு வட்டிக்கு கடனாக கொடுக்கப்பட்டிருக்கிறது. கணக்குகள் எல்லாமே இறைவனின் பெயரில்தான். வட்டி பணமாகவோ அல்லது நெல்லாகவோ செலுத்தப்பட்டிருக்கிறது. நெல் என்றால் ஒரு காசுக்கு ஆண்டு ஒன்றுக்கு மூன்று குருணி நெல். பணமாக செலுத்தினால் வட்டி 12 1/2 சதவிகிதம். வட்டியை எப்படி கொடுத்தாலும் பெறுமதி ஒன்றுதான். ஏனெனில் 2 கலம் அல்லது 24 குருணி நெல் ஒரு காசு விலையில் அப்போது இருந்திருக்கிறது.

கோவிலின் அன்றாட செலவுகள் எல்லாமே நெல்லின் விலையை அடிப்படையாக கொண்டே எழுதப்பட்டிருக்கிறது. நாள்தோறும் கோவிலில் நெல் கலம் கலமாக வந்து குவிந்திருக்கின்றது.

கல்வெட்டு எண் 63 இடையர்களின் பட்டியலைத் தருகிறது ஒவ்வொரு விளக்குக்கும் 96 ஆடுகள், 48 பசுக்கள் அல்லது 16 எருமைகள் வீதம் கொடுக்கப்பட்டிருந்தன. ஒரு விளக்குக்கு ஒரு நாள் தேவை ஒரு உழக்கு நெய் என்பது கணக்கு. ஒரு இடையன் ராஜராஜனிடம் 69 ஆடுகளை இலவசமாகப் பெற்றுக் கொண்டு மேலும் 27 ஆடுகளை 9 காசுகளுக்கு விலைக்கு வாங்கி இருக்கிறான், இதிலிருந்து அந்த நாட்களில் ஒரு காசுக்கு மூன்று ஆடுகள் விலையாகி இருப்பது தெரிய வருகின்றது.

ராஜராஜன் தேவாரம் பாடுவதற்கு 48 பாடகர்களை நியமித்திருந்தார். அவர்களுக்கு மத்தளம் வாசித்தவர் இருவர். இந்த 50 பேருக்கும் நாள் ஒன்றுக்கு 3 குருணி நெல் வீதம் அளிக்கப்பட்டது. (பாலன் திருவஞ்சிபாட்டாடிகள் என்ற ராஜராஜ பிச்சன், திருவே நாவல் செம்போர் என்ற நானாசிவன் இப்படி பெயர்ப்பட்டியல்)

ராஜராஜனின் ஒன்றுவிட்ட சகோதரராகிய மதுராந்தகன் சங்கராதித்தன் சோழநாட்டின் கோவில்களின் வரவு செலவுகளுக்கு பொறுப்பாக இருந்திருக்கிறார். இவர் அடிக்கடி எல்லா கோவில்களுக்கும் விஜயம் செய்து கணக்குகளை தணிக்கை (AUDIT) செய்து கோவிலின் வருமானம் சரியான வழியில்செலவளிக்கப்படுகிறதா என்பதை கண்காணித்திருக்கிறார். காஞ்சிக்கு

அருகே உள்ள மணிக்கண்டேஸ்வரர் கோவிலில் அப்படி ஒரு கணக்காய்வின் (INSPECTION) போது கோவிலின் பொருட் கிடங்கில் (STORES) பணிபுரிந்தவர் மீது அபராதம் விதித்ததாக ஒரு சாசனம் கூறுகிறது. பொருட்கிடங்கில் வேலை செய்பவர்களுக்கு இக்காலத்தில் போலவே அக்காலத்திலும் சற்று கை அரித்திருக்கும் போலும்!

ராஜராஜனின் போர்களின் வெற்றிக்கும் திறமையுடன் அரசு இயந்திரம் இயங்கியதற்கும் முக்கிய காரணம் அவருடைய நாட்டு அறிஞர் பெருமக்களும், அரசு அதிகாரிகளும், தளபதிகளும் மற்றும் அலுவலர்களும், அவர்பால் மாறாத பக்தியும் விசுவாசமும் கொண்டு அவருக்கு பக்கபலமாக இருந்ததுவே. அவரும் அவர்கள் தனக்கும் நாட்டுக்கும் செய்த சேவைகளுக்கு நன்றியுடனே இருந்தார்.

பல நிலைகளில் அவருடைய அதிகாரிகள் கொலு மண்டபத்தில் வீற்றிருந்தார்கள். பெருந்தனம், சிறுதனம், மாரையர், அரையர், மூவேந்தவேலர் என்ற பட்டங்கள் அவர்களின் நிலைகளை குறிக்கும். பெருந்தனம் நிலையில் இருந்தவர்கள் அரசனின் ஆலோசகர்கள். மூவேந்த வேலர் என்பார் அரசரோடும் அரச குடும்பத்தவரோடும் மிக நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். ராஜராஜேஸ்வரம் கல் வெட்டுகளின்படி இந்த அறிஞரும் வேறு சில அதிகாரிகளும் கோவிலுக்கு விளக்குகளையும் உலோக சிலைகளையும் பரிசளித்திருக்கிறார்கள். அதில் பதினான்கு படை அதிகாரிகள் விளக்குகளை அளித்து ஒரு போரின் போது தங்களுக்கு மானக்கேடும் தங்கள் மன்னனுக்கு தலை குனியும் ஏற்படாதவாறு அருள் புரியும் படி இறைவனை வேண்டி நின்றிருக்கிறார்கள். இந்த 14 பேரில் 8 பேர் பெருந்தனம் நிலையில் இருந்தவர்கள்.

கோவிலின் சுற்றுச் சுவர் மன்னனின் ஆணைப்படி அவருடைய சேனாதிபதி கிருஷ்ணன் ராமன் என்பவர் எழுப்பி இருக்கிறார். இவரே அரசனின் முதல் மந்திரியாகவும் பிரதம செயலாளராகவும் கடமையாற்றி இருக்கிறார். அரசனின் ஒரு பெயரான மும்முடிச் சோழன் என்ற பட்டத்தையும் வைத்துக் கொண்டிருந்திருக்கிறார்.

''ராஜராஜராஜகேசரி வர்மன் மொழிந்தருள இத்திருச் சுற்று மாளிகை எடுப்பித்தான். செநாவதி சோழமண்டலத்து உய்யக்கொண்டான் வளநாட்டு ஸ்ரீகிருஷ்ணன் இராமனான மும்முடி சோழ பிரம்மராஜன்'' எனகிறது கல்வெட்டு எண் 31.



## ராஜராஜனின் மறைவு

அரசனின் ஆணை ஒன்று மாளிகைகளும் பெரிய வீடுகளும் சுட்ட செங்கற்களால் மாத்திரமே கட்டப்படல் வேண்டும் எனக் கூறுகிறது. இதனால் கோவில்கள் மாத்திரமே கற்களால் கட்டப்பட வேண்டும் என்பது அவரது எண்ணமாக இருந்தது என்று தெரிகிறது. இதுவே அற்றை நாள் மன்னரின் பேரெண்ணமாக இருந்திருக்க வேண்டும். இதன் காரணமாகவே அவர்கள் வாழ்ந்து மகிழ்ந்த மாளிகைகள் மண்ணோடு மண்ணாகி விட கோவில்கள் மாத்திரம் நின்று நிலைத்து அவர்தம் புகழ் பாடுகின்றன.

ராஜராஜனின் 29ஆம் ஆட்சி ஆண்டு வரையிலான (கி. பி 1014) செயல்களுக்கு ஆதாரங்கள் உள்ளன. அதன்பின் அவரைப்பற்றி எதுவித செய்திகளும் இல்லை. எனவே தனது 29ஆம் ஆட்சி ஆண்டிலே அந்த மாமனிதர் மறைந்தார் என்பது புலனாகிறது.

## சோழரின் மகோன்னத காலம்

உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு அரச குலத்தின் சரித்திரத்திலும், ஆரம்ப காலத்தில் கஷ்டங்களும் வளர்ச்சியின் துன்பங்களும் சுமைகளும் அவர்களை வருத்தி இருக்கும். அதன் பின் நல்ல காலங்களும் நம்பிக்கைகளும் ஏற்படும். திடீரென ஒரு மாபெரும் ஆற்றலும் மனத் திண்மையும் பீறிட்டுக் கிளம்பும்.

அந்த அலையில் அந்த அரச குலம் கொஞ்சக்காலம் அல்லது சற்று நீண்ட காலம் பயணம் செய்யும். அதன்பின் தடுக்கவே முடியாத தோல்விகளும் மீளவே முடியாத ஆளுமையின் வீழ்ச்சிகளும் ஏற்பட்டு சிறிது சிறிதாக புகழ் மங்கி யாருமே நன்றி நினைக்காத ஒரு நிலையில் அந்த இனம் மங்கி மறைந்து போய்விடும்.

சோழரின் மகோன்னத காலம், ராஜராஜன் என்ற அந்த மாபெரும் ஆற்றல் அரியணை (985இல்) ஏறியபோது தொடங்கியது. அந்த ஆற்றல் ஏற்படுத்திய அலையில் சிறிது காலம் பயணம் செய்து விஜயாலய சோழனின் நேர்வழி வாரிசுகள் (1070 இல்) அழிந்து போனதோடு முற்றுப்பெற்றது.

ஆயினும் ராஜராஜன் என்ற ஒப்பில்லா மறத்தமிழரின் புகழ், ராஜராஜேஸ்வரம் என்ற, அவர் கல்லில் எழுதிய காவியம் இருக்கும்வரை நிலைத்திருக்கும்; உலகமும் அவரை கை கூப்பித் தொழும்.

# மரங்களைப் பாடுவேன்.

வாரும் வள்ளுவரே
மக்கட் பண்பில்லாதவரை
என்ன சொன்னீர்?
மரம் என்றீர்
மரம் என்றால் அவ்வளவு
மட்டமா?

★

வணக்கம் ஔவையே
நீட்டோலை வாசியான்
யாரென்றீர்?
மரம் என்றீர்
மரம் என்றால் அத்தனை
இழிவா

★

பக்கத்தில் யாரது
பாரதிதானே
பாஞ்சாலி மீட்காத
பாமரரை என்னவென்றீர்?
நெட்டை மரங்கள் என்றீர்
மரங்களென்றால் அவ்வளவு
கேவலமா?

★

மரம்
சிருஷ்டியில் ஒரு சித்திரம்
பூமியின் ஆச்சரியக்குறி
நினைக்க நினைக்க
நெஞ்சூறும் அனுபவம்
விண்மீனுக்குத் தூண்டில்
போடும்
கிளைகள்
சிரிப்பை ஊற்றிவைத்த
இலைகள்
உயிர் ஒழுகும்
மலர்கள்
மனிதன் தரா ஞானம்
மரம் தரும் எனக்கு

★

மனிதன் தோன்றுமுன்
மரம் தோன்றிற்று
மரம் நமக்கண்ணன்
அண்ணனைப் பழிக்காதீர்

★

மனித ஆயுள்
குமிழிக்குள் கட்டிய கூடாரம்
மரம் அப்படிய ?
வளரும் உயிர்களில்
ஆயுள் அதிகம் கொண்டது
அதுவேதான்

★

மனித வளர்ச்சிக்கு
முப்பது வந்தால்
முற்றுப்புள்ளி
மரம்
இருக்கும்வரை பூப்பூக்கும்
இருக்கும்வரை காய்காய்க்கும்
வெட்டி நட்டால்
கிளை மரமாகுமே



வெட்டி நட்டால்
கரம் உடம்பாகுமா?

★

மரத்தை அறுத்தால்
ஆண்டு வளையம்
வயது சொல்லும்
மனிதனை அறுத்தால்
உயிரின் செலவைத்தான்
உறுப்பு சொல்லும்

★

மரத்திற்கு வழுக்கைவிழும்
மறுபடி முளைக்கும்
தமக்கோ
உயிர் பிரிந்தாலும்
மயிர் உதிர்ந்தாலும்
ஒன்றென்றறிக

★

மரங்கள் இல்லையேல்
காற்றை எங்கேபோய்ச்
சலவை செய்வது?

★

மரங்கள் இல்லையேல்
மழைக்காக எங்கேபோய்
மனுச் செய்வது?

★

மரங்கள் இல்லையேல்
மண்ணின் மடிக்குள்ளே
ஏதப்பா ஏரி?
பறவைக்கும் விலங்குக்கும்
மரந்தரும் உத்தரவாதம்
மனிதர்நாம் தருவோமா?
மனிதனின் முதல் நண்பன்
மரம்
மரத்தின் முதல் எதிரி
மனிதன்
ஆயுதங்களை மனிதன்
அதிகம் பிரயோகித்தது
மரங்களின் மீதுதான்

★

உண்ணக்கனி - ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து - உணர்வு
க்கு விருந்து
அடையக்குடில் - அடைக்கக்
கதவு
அழகு வேலி - ஆடத்தூளி
தடவத் தைலம் - தாளிக்க
எண்ணெய்
எழுதக் காகிதம் - எரிக்க
விறகு
மரந்தான்
மரந்தான்
எல்லாம் மரந்தான்
மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்

★

பிறந்தோம்
தொட்டில்
மரத்தின் உபயம்
நடந்தோம்
நடைவண்டி
மரத்தின் உபயம்
எழுதினோம்
பென்சில் பலகை
மரத்தின் உபயம்
மணந்தோம்
மாலை சந்தனம்
மரத்தின் உபயம்
புணர்ந்தோம்
கட்டில் என்பது

மரத்தின் உபயம்
துயின்றோம்
தலையணைப் பஞ்சு
மரத்தின் உபயம்
நடந்தோம்
பாதகை ரப்பர்
மரத்தின் உபயம்
இறந்தோம்
சவப்பெட்டி பாடை
மரத்தின் உபயம்
எரிந்தோம்
சுடலை விறகு
மரத்தின் உபயம்

மரந்தான்
மரந்தான்
எல்லாம் மரந்தான்
மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்

★

மனிதா
மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா
ஒவ்வொரு மரமும்
போதிமரம்

★

-வைரமுத்து
('இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல')

---

தத்துவம் என்பது படித்து அறிந்துகொள்கிற வடிவம் அல்ல, ஏற்றுக் கொண்டு அதனால் வாழமுடிந்தால் அதைத் தத்துவம் என்று சொல்ல வேண்டும்.

-இருடால்ஃப் ஆய்க்கன்.

# வடக்கிலுள்ள நாடுகள் உதவியைக் குறைக்கும் அதேவேளையில் தெற்கிலுள்ள நாடுகள் அதைக் கூட்டுகின்றன.

தாலிப் டீன்
(டெயிலி நியூசு -13.12.92

உலகிலுள்ள சில வறுமையான நாடுகள் செல்வந்த நாடுகளைத் தலைகுனிய வைத்துள்ளன என நியுயோக்கிலிருந்து வெளிவரும் ஐ பி.எஸ். என்ற செய்தித்தாள் கூறுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மிகப்பெரிய உதவி வழங்கும் முகவராகச் செயற்படும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்திற்கு (U N. Development Program - UNDP) செல்வந்த நாடுகளான பிரித்தானியா, பின்லாந்து, ஐரோப்பிய சமூகநாடுகள் (E.C) மற்றும் அமெரிக்கா ஆகியன தாங்கள் வழங்கும் இருதரப்பு மற்றும் பலதரப்பு உதவிகளை குறைத்துக்கொண்டு வரும் அதேவேளையில் மூன்றாம் உலக நாடுகள் தாமாகவே முன்வந்து வழங்கும் உதவியை கூட்டியுள்ளன.

நியுயோக் நகரில் தலைமையகத்தைக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) நிருவாகியான திரு. வில்லியம் இறேப்பர் அவர்கள் (William Draper) இந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ஒரு மில்லியன் டொலருக்கு அதிகமாக வழங்கிய எட்டு வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளான சீனா, இந்தியா, இந்தோனேசியா, மெக்சிக்கோ, சவூதி அரேபியா, தென்கொரியா, இலங்கை, தாய்லந்து ஆகிய நாடுகளுக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

எடுத்துக்காட்டு.

தங்கள் நாடுகளில் நிதிநெருக்கடி இருந்தபோதிலும் தாங்கள் கொடுத்த வாக்குறுதிக்கு மேலாக சென்ற ஆண்டு உதவி வழங்கியதன் மூலம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் எப்படித் தங்களால் மதிக்கப்படுகின்றது என எடுத்துக்காட்டிய வளர்முக நாடுகளை மற்ற நாடுகளிலிருந்து பிரித்துக் குறிப்பிட விரும்புகிறேன் என உதவி வழங்க வாக்குறுதி பெற நவம்பர் திங்கள் ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட மாநாட்டில் திரு. இறேப்பர் அவர்கள் கூறினார்.

113 க்கும் அதிகமான நாடுகளில் செயலகங்களை கொண்டிருப்பதும். 1.3 பில்லியன் டொலர்களுக்கு அதிகளவு தொகையை ஒருஆண்டின் வரவு செலவு மதிப்பீட்டில் கொண்டதுமான ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டம் இன்று உலகத்திலுள்ள வளர்ச்சிக்கு உதவும் அமைப்புகள் யாவற்றிலும் செயல்திறனுடைய அமைப்பாக விளங்குகின்றது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் வளர்ச்சியின் இலக்கை எட்டுவதற்கு உதவி வழங்கும் நாடுகளிலிருந்து ஆண்டு தோறும் எட்டு விகித நன்கொடைப்பணத்தை அது பெறவேண்டும். 25 விகிதம் கொடுத்துதவிய லக்சம்பேர்க் 10 .விகிதம் கொடுத்துதவிய ஆஸ்திரியா ஆகிய நாடுகள் உட்பட பல கைத்தொழில் நாடுகள் இந்த இலக்குக்கு ஏற்றவாறோ அல்லது அதற்கு கூடுதலாகவோ கொடுத்துதவிய வேளையில், வளர்ச்சியடைந்து வரும் 10 நாடுகள், செல்வந்த நாடுகள் எப்படி உதவினவோ அதேபோல் உதவியுள்ளன.

மிகவும் குறைந்த அளவு வளர்ச்சி அடைந்த நாடுகளாகக் கருதப்படுகின்ற பூட்டான், சில்லி, பிஜி, லெசோதோ, மாலைதீவு, மொங்கோலியா, நைஜீரியா, பனாமா, றோமானியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் இந்த நாடுகளில் அடங்கும், மூன்றாம் உலகநாடுகளான பங்களாதேஷ், கொண்டுராசு மற்றும் மொறிசியசு ஆகியன தாங்கள் வழங்கும் உதவியை கூட்டியுள்ளன.

## பலதரப்பட்ட உதவிகளை இல்லாது செய்தல்

ஒரு மில்லியன் டொலருக்கு மேலாக உதவியை வழங்கும் வளர்ச்சிபடைந்துவரும் எட்டு நாடுகளில் ஒன்றான இலங்கையின் தூதுவரான திரு. ஸ்ரான்லி கல்பகே தனது நாடு ஐக்கிய



நாடுகள் வளர்ச்சித்திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு மாத்திரமின்றிப் பலதரப்பட்ட உதவிகள் அதற்குக்கிடைப்பதை இல்லாது செய்பவர்களை தடுக்கவிரும்புவதாகவும் கூறியுள்ளார். ஆனால் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் குறைப்படும் கைத்தொழில் நாடுகள் பலதரப்பட்ட உதவி முறையை விட இருதரப்பட்ட உதவி முறையிலேயே ஆர்வம் காட்டுகின்றன.

''எங்களுக்கு நாம் உதவும் அதே வேளையில் மற்றவர்களுக்கும் உதவ விரும்புகிறோம்'' எனக்கூறும் திரு. கல்பகே வளர்ச்சியின் ''பங்குதாரர்கள்'' என்ற கொள்கையில் இலங்கை நம்பிக்கை வைத்துள்ளதாகவும் கூறினார்.

சிறிலங்காவில் வாழும் ஒருவரின் சராசரி வருமானம் சுமார் 510 டொலர்களாய் இருப்பினும், இப்பொழுதும் இந்த நாடு வளர்ச்சியுற வேண்டியதாயிருப்பினும் ஒரு கணிசமான தொகையை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்திற்கு வழங்க சிறிலங்கா இணங்கியுள்ளது என அவர் கூறினார். நாட்டில் நடைபெறும் உள்நாட்டுப்போர் காரணமாகத் தேசிய வரவு செலவுத்திட்டத்தில் பத்து விகிதத்திற்கு மேலான நிதி படையச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலையிலும் இந்த உதவி சிறிலங்காவால் வழங்கப்பட்டது என இவர் மேலும் கூறியுள்ளார்.

## மக்களின் சராசரி வருமானம்

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்ட அமைப்பினால் புகழப்பட்ட வேறுசில வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலுள்ளமக்களின் சராசரி வருமானம் இலங்கை மக்களின் சராசரி வருமானத்துக்கு குறைவாகவே உள்ளது. மொங்கோலிய மக்களின் சராசரி வருமானம் 100 டொலர்களாகவும், நேபாளத்தினது 160 டொலர்களாகவும், வியட்நாமினது 200 டொலர்களாகவும், பங்களாதேசினது 208 டொலர்களாகவும், இந்தியாவினது 310 டொலர்களாகவும் சீனாவினது 325 டொலர்களாகவும் உள்ளது.

இதற்கு முற்றிலும் எதிர்மாறாக ஐக்கிய அமெரிக்காவிலுள்ள மக்களின் சராசரி வருமானம் 22,550 டொலர்களாகவும். பிரித்தானிய மக்களினது 17,738 டொலர்களாகவும், பின்லாந்து மக்களினது 16,000 டொலர்களுக்கு மேலாகவும் உள்ளது.

உதவி வழங்கும் நாடுகளிலிருந்து எட்டுவிகித உதவியைப் பெற்றாலே தனது வளர்ச்சியின் இலக்கை அடைய முடியும் என்று மதிப்பீடு செய்திருந்த ஐக்கிய வளர்ச்சித் திட்டத்திற்கு உதவி வழங்க முன்வந்த நாடுகளின் மாநாடு சென்ற திங்கள் நடைபெற்றபோது கைத்தொழில் நாடுகள் தாங்கள் முன்னர் வழங்கிய உதவியைவிட குறைந்தளவு உதவியை வழங்க முன் வந்துள்ளது பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. 1 05 பில்லியன் டொலர்கள் மாத்திரமே 1993 ஆம் ஆண்டில் உதவியாகப் பெறமுடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை முன்னைய ஆண்டில் பெற்ற உதவியை விட 4% விகிதத்தால் மட்டுமே கூடுதலாகவுள்ளது.

வளர்ச்சிக்கு உதவியாகத் தனது தேசிய வருமானத்தில் .76% விகிதத்தை தனது நாட்டு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கியிருந்த பின்லாந்து இதை 0 40% விகிதமாகச் சென்ற திங்கள் குறைத்ததுடன் 1993 ஆம் ஆண்டு இதை மேலும் குறைக்கும் என்று நம்ப இடமுண்டு.

## ஆழ்ந்த கவலை.

இந்த நடவடிக்கையின் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பாக விளங்கும் ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டம் UNDP) ஐக்கிய நாடுகள் சனத்தொகையைக் கட்டுப்படுத்த உதவும் நிதியம் (U N - Population Fund - UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் காப்பு நிதியம் UN Children's Fund UNICEF ஆகிய மூன்று அமைப்புகளும் பின்லாந்திடமிருந்து அவர்கள் பெறும் நிதி 80·/. விகிதத்தால் குறைக்கப்படவிருப்பதையிட்டு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளன. இதன் மூலம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வேலைத்திட்டங்களும், செய்து முடிக்கவென்று திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களும் பெரிதும் பாதிக்கப்படும் எனவும் அவை கூறியுள்ளன.

பொருளாதாரத்தில் இரண்டு ஆண்டுகளாகத் தனக்கு ஏற்பட்ட பின்னடைவே இந்த உதவியைக் குறைப்பதற்கான காரணமென பின்லாந்து அரசாங்கம் கூறிய போதிலும், 64மாக் டொன்னல் டக்ளஸ் எப்/ஏ-18 (Me Donnell Douglas F/A-18) ரக போர் வானூர்திகளை அமெரிக்காவிடமிருந்து மூன்று பில்லியன் டொலர்களுக்கு கொள்வனவு செய்ய இது இந்த ஆண்டு முற்பகுதியில் ஒழுங்கு செய்துள்ளது.



இதே நேரத்தில் அமெரிக்கா மற்ற நாடுகளுக்கு 1993 ஆம் ஆண்டில் உதவியாக வழங்கவிருக்கும் 13 9 பில்லியன் டொலர்களை அமெரிக்க காங்கிரஸ் சென்ற திங்கள் அனுமதித்தது. இத்தொகை 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையும் அமெரிக்கா வழங்கிவந்த தொகையை விடக் குறைவானது எனக்கூறப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு உதவுவதைவிட உள் நாட்டிலுள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கு பணம் செலவிடுவது முக்கியமானதென அமெரிக்க சட்ட மன்ற உறுப்பினர்கள் கூறுவதை சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. பில் கிளின்டன் அவர்களின் அரசும் பின்பற்றக்கூடும்.

1993 ஆம் ஆண்டில் வளர்ச்சிக்கென தங்கள் நாடுகள் வழங்கும் நிதியை 11·/. விகிதத்தால் குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென 12 ஐரோப்பிய சமூக நாடுகள் ஒக்டோபர் திங்களில் கூறியுள்ளன. இதன் காரணமாகக் குறைக்கப்படும் தொகை சுமார் 300 மில்லியன் டொலர்களாகும். அதே நேரத்தில் வெளிநாட்டு உதவித்தொகையை பிரித்தானியாவும் 20·/. விகிதத்தால் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. □

நல்ல பெயருடன் இருப்பது நல்லது. ஆனால் நல்ல பெயருக்காக உண்மையிலிருந்து விலகுவது தற்கொலைக்கு ஒப்பாகும்.

# அரசியல் ஆற்றல் வாய்ந்தவர் தனது பதவியையும் ஆற்றலையும் இழப்பாரா?

எங்கள் அரசியல் நிருபரால் எழுதப்பட்டது.

பெரும் பெரும் அரசியல் கட்சிகளைப்பற்றிக்கொண்ட வாத, பிரதிவாத பிரிவினை நோய் பலம் வாய்ந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் பற்றிக்கொண்டுவிட்டதுபோல் தோன்றுகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் அவர்களுக்கு அரசாங்கத்திலுள்ள செல்வாக்கு கடும் போக்கைக் கடைப்பிடிக்கும் சிங்களவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

1978ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கம் மேற்கொண்ட பல விடயங்களைத் திரு. தொண்டமான் அவர்கள் வெளிப்படையாகவே எதிர்த்துவந்தபோதும் அதை அரசாங்கம் கண்டும் காணாததுபோல் இருப்பது அரசியல் வட்டாரங்களுக்கு ஒன்றும் இரகசியமான விடயமல்ல. திரு. தொண்டமான் அவர்கள் நடந்துகொண்டதுபோல், செல்வாக்குக் குறைந்த ஒருவர் நடந்துகொண்டிருப்பாராகில் அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும். ஆனால் கூட்டுப்பொறுப்பு என்ற கேள்வி எழும்போதெல்லாம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் என்ற காரணத்தால், தான் நினைத்தபடி நடந்து கொள்ள திரு. தொண்டமான் அவர்களால் முடிந்தது. அரசியலின் உண்மை நிலை இதுவேயாகும்.

திரு. தொண்டமான் அவர்கள் அரசாங்கத்துக்குள் எவ்வளவு சிறப்புரிமை உள்ளவராக விளங்குகின்றார் என்பதை அண்மையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.



வடக்கும் கிழக்கும் தனித்தனியான அலகுகளைக் கொண்டிருக்கவேண்டும் எனத் திரு. சிறிநிவாசன் அவர்கள் முன்வைத்த யோசனையை, தெரிவுக்குழுவில் உறுப்பினராக இருக்கும் அரசாங்க உறுப்பினர்கள் ஆதரித்த வேளையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு இன்று பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கும் திரு. தொண்டமான் அவர்கள் அதற்கு முரணான கருத்தைக் கொண்டிருந்ததுடன் வெளிப்படையாகவே ஆளும் கட்சியுடனும் முரண்பட்டுக்கொண்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் இவருக்குள்ள செல்வாக்கே இப்படியாக இவர் நடந்துகொள்வதற்கு இவருக்கு ஆற்றலைக் கொடுத்தது.

## திரு. தொண்டமான் அவர்களின் பிரசித்திபெற்ற வார்த்தைகள்.

சனாதிபதித் தேர்தலுக்கான முதலாவது கோட்பரப்புக் கூட்டம் 1988 ஆம் ஆண்டில் கண்டியில் ஆரம்பித்து வைக்கப்பட்டபொழுது, அதில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. தொண்டமான் அவர்கள், தோட்டத் தொழிலாளர்கள் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு ஒரு மில்லியன் வாக்குச் சீட்டுகள் கிடைக்கும் எனக் கூறியிருந்தார்.

இவருடைய அன்றைய இந்தக் கணிப்பு மிகைப்படுத்தப்பட்டது என்ற போதிலும், இதன் மூலம் இவர் விடுத்த செய்தி மிகவும் தெளிவானது. இலங்கையில் இவர் அரசை அமைக்கும் ஆற்றல்பெற்றவர் என்பதும், இவர் கொடுக்க முன்வந்ததை எந்தவொரு புத்திசாலியான அரசியல் வாதியும் ஏற்க மறுக்கமாட்டாரென்பதும் இந்த நிலையில் இவரை எவரும் பகைக்கமாட்டார்கள் என்பதுமே இவருடைய இந்த உரையிலிருந்த மறைமுகமான செய்தியாகும்.

ஆனால் 80 வயதை அடைந்துவரும் திரு. தொண்டமான் அவர்கள், ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுக் கொடுக்கப் போராட வேண்டியிருப்பதுடன் தன் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் ஆற்றல் உள்ள அமைப்பாகவும் காட்டவேண்டியுள்ளது.

தனக்குப்பின் ஏற்படவிருக்கும் வெற்றிடத்தை நிரப்பக் கூடிய ஒருவர் இல்லாத சிக்கலைத் திரு. தொண்டமான் அவர்கள் எதிர்நோக்கவேண்டியுள்ளது. தான் வகிக்கும் தலைமைப் பதவியைத் தனது பேரனுக்கு வழங்கும் நோக்கத்துடன் திரு தொண்டமான் அவர்கள் தனது பேரனைத் தயார்படுத்தி வருவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் செல்வாக்குள்ள ஒரு பகுதியினரிடையே கருத்து நிலவுவது இந்தச் சிக்கலை மேலும் மோசமாக்கிப் பலவிதமான கருத்து வேற்றுமைகளை உருவாக்கியுள்ளது.

சென்றவாரம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினர்கள் பலர் அதிலிருந்து பிரிந்து சென்று திரு. காமினி திசநாயக்கா அவர்களின் கட்சியான சனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு (D mocrat c United National Front) ஆதரவு வழங்குவதாக வெளிப்படையாகத் தெரிவித்தது இந்தக்கட்டத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

கைத்தொழில் உறவுப் பணிப்பாளர் திரு எஸ். வி. இராமையா, கண்டிக்கான மகளிர் காங்கிரசின் இணைப்பாளர் திருமதி தமிழ்மணி இராஜகோபால், மகளிர் காங்கிரசு இணைப்பாளர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ், கைத்தொழில் உறவுப் பணிப்பாளர் திரு. கே. செல்லத்துரை, கண்டி மாவட்ட அமைப்பாளர் திரு. கே. இரத்தினம், கைத்தொழில் உறவுப் பணிப்பாளர் திரு. எஸ். மைக்கேல், இளைஞர் சம்மேளனத் தலைவர் திரு. கே. விஸ்வநாதராஜா ஆகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முக்கிய உறுப்பினர்கள் உட்பட வேறுபலரும் சென்றவாரம் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொண்டனர்.

காங்கிரசிலிருந்து வெளியேறிய இவ்வுறுப்பினர்கள், ஊழலும், குடும்ப ஆதிக்கமும் அதில் நிலவுவதாகக் குற்றஞ்சுமத்தியது மாத்திரமின்றி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்து தாம்வெளியேறியமை தற்போதையயும் தலைமையை அதனுடைய செயல் திறனில்லாத கொள்கைகளையும் தாங்கள் நிராகரிப்பதை எடுத்துக் காட்டுவதாகவும், தோட்டத் தொழிலாளர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கமுடியும் என்ற நம்பிக்கையை இது ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

130,079 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்படும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலுள்ள 15, 000க்கும் மேற்பட்டோரின் ஆதரவு தங்களுக்கு உள்ளதாகக் கூறும் இவர்



களுடைய விலகல் செய்தி வெளிவருவதற்கு முன்னர், தோட்டத் தொழிலாளச் சமூகத்தினருள் சிறந்த பேச்சாளராகக் கருதப்படும் திரு. இராமையா அவர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் திரு. தொண்டமான் அவர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

''இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் இன்றைய உன்னத நிலைக்கு எங்கள் கடும் முயற்சியும், உழைப்பும், உண்மைத் தற்கொடையுமே காரணமாகும். இந்த அமைப்பு என்னைக் கொடுமைப்படுத்தியதும், உபத்திரவப்படுத்தியதும் காரணமாக இதிலிருந்து நான் ஒன்றில் விலகுகின்றேன் அல்லது ஓய்வு பெறுகின்றேன் என்பதை ஆழ்ந்த கவலையுடனும் துக்கத்துடனும் சமர்ப்பிக்கின்றேன்'' என டிசம்பர் திங்கள் 15 ஆம் திகதி எழுதிய தனது கடிதத்தில் திரு. இராமையா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

''எங்கள் வாலிபப்பருவத்தின் ஆற்றல். அறிவு ஆகிய யாவும் இந்த அமைப்பின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும், இதன் தலைமை இதிலிருந்து எம்மை வெளியேற்ற முயற்சிப்பது கவலையைத் தருவதாகவுள்ளது.''

''எதேச்சாதிகாரமான போக்கைக் கடைப்பிடிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நடவடிக்கைகளையும், இது தன் கொள்கைகளை ஒரு குடும்ப விவகாரமாக மாற்றத்தக்க வகையில் வகுப்பதையும் நான் முழுமையாக எதிர்க்கிறேன்.''

''தங்கள் துயர் துடைக்கப்படும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புகளுடனும் இந்த அமைப்புக்கு ஆதரவு நல்கி வரும் தோட்டத் தொழிலாளர்களின் கனவு பயனற்ற தொன்றாக இருப்பதையிட்டு நான் அனுதாபப்படுவதுடன் இந்த அமைப்பில் நாம் தொடர்ந்தும் உறுப்பினராக இருப்பது ஒரு அர்த்தமற்ற செயல்'' எனக்கருதுவதாகவும் இவர் எழுதியுள்ள தன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அமைப்பு அழிந்துபோய்விட்டது என்று திரு. இராமையா அவர்கள் கூறுவது இப்பொழுது சந்தோசப்படக்கூடிய தொன்றாக இருப்பினும். அதற்குள் ஏற்பட்டுள்ள பிளவு பலவின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

## முக்கியமான பிளவு

திரு. தொண்டமான் அவர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குள் தோன்றியுள்ள பிளவுக்கு முக்கியத்துவம் கொடுக்காதுவிடினும், அரசாங்கத்தின் மீது அவருக்குள்ள செல்வாக்கை இது நேரடியாகப் பாதிப்பது மாத்திரமின்றி ஆட்சிபீடத்தில் உள்ள ஐக்கியதேசியக்கட்சிக்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து பெறக்கூடிய வாக்குச்சீட்டுகளை இழக்கவேண்டியிருப்பதால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குள் தோன்றியுள்ள பிளவின் முக்கியத்துவத்தை ஐக்கிய தேசியக்கட்சி உணராது இருக்க முடியாது.

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த கணிசமான எண்ணிக்கையுள்ள தோட்டத் தொழிலாளர்களைக் கொண்ட மத்திய மாகாணத்தின் முக்கியத்துவத்தை 1982 ஆம் ஆண்டிலும் 1988 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.**

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 51% விகிதத்திற்குக் கூடுதலான வாக்குகளை சனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் பெற்றபோதிலும், மத்திய மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் 5% சதவிகித வாக்குச்சீட்டுக்களை அவர் பெற்றதன் காரணமாகவே வாக்குச் சீட்டுகளை முதலாவது முறையாக எண்ணும்பொழுது 50% சதவிகிதத்திற்கு மேலாகப் பெற்றிருத்தல் வேண்டும் என்ற நியதியை அவரால் நிறைவு செய்ய முடிந்தது.

இதேபோல, 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் போது திரு. தொண்டமான் அவர்களின் வாக்குச்சீட்டு வங்கியான மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மூன்று மாவட்டங்களிலிருந்தும் ஐக்கியதேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு. இரணசிங்க பிரேமதாசா அவர்கள் 58.29% விகித வாக்குகளைப் பெற்றார் தேசிய ரீதியாகப் பெறவேண்டிய 50% விகித வாக்குகளுக்கு மேலாக 45 620 வாக்குகளைப் பெற்றதனாலேயே 50.43% வாக்குகளை இவரால் தேசிய ரீதியாகப் பெறமுடிந்தது. **22 தேர்தல் மாவட்டங்களில் நடைபெற்ற அத்தேர்தலில் திருமதி பண்டாரநாயக்கா**



**அவர்கள் பெற்ற வாக்குகளைவிட சனாதிபதி பிரேமதாசா அவர்கள் மேலதிகமாகப் பெற்ற 279,339 வாக்குகளில் 106,337 வாக்குகள் மத்திய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்டவையாகும்.**

நாட்டு மக்களின் போக்கில் ஏற்படக்கூடிய மாற்றம் காரணமாக சனாதிபதித் தேர்தலில் மற்றைய மாவட்டங்களில் ஏற்படக்கூடிய இழப்புக்களை ஈடுசெய்ய மத்திய மாகாணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்கியமானதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

பொதுவாக மத்திய மாகாணத்திலும், குறிப்பாக நுவரெலியா மாவட்டத்திலும் ஆளும் கட்சியின் வெற்றிக்காகச் செயல்பட்டவரான திரு. காமினி திசநாயக்கா அவர்கள் இப்பொழுது அதைச் சார்ந்து இல்லாததனால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் தோன்றியுள்ள பிளவு ஐக்கிய தேசியக்கட்சிக்கு கூடுதலான கவலையைக் கொடுக்கக்கூடியதாயிருக்கின்றது

## ஐக்கிய தேசியக் கட்சியின் கவலை.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது திரு. தொண்டமான் அவர்களின் ஆதரவு இல்லாதிருந்த போதிலும், நுவரெலியா மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஆகக் கூடிய வாக்குகளை ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினராகவிருந்த திரு. திசநாயக்கா அவர்கள் பெற்றதுடன், நாடு முழுவதும் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஆகக் கூடுதலான விகிதாசரமான வாக்குகளையும் அவரே பெற்றார். இந்திய வம்சாவழியைச் சேர்ந்த 55 000 வாக்காளர்கள் இந்த மாவட்டத்தில் இருந்த போதிலும், ஐக்கிய தேசியக்கட்சியின் பட்டியலில் இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்கள் எவரும் இந்த மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராகத் திரு. திசநாயக்கா அவர்கள் இருந்தபோது, இக்கட்சியின் தோட்டத் தொழிற்சங்கத்தின் உறுப்பாக விளங்கும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தின் (Lanka Jathika Estate Workers Union) தலைவராக இவர் நெடுங்காலமாக விளங்கியவர்.

இதைக் கருத்தில் கொள்ளும் பொழுது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கிடையே ஏற்பட்டுள்ள எந்தவொரு பிளவும் அரசாங்கத்துக்குக் கவலை கொடுப்பதாகவுள்ளது என்பது புலனாகின்றது. மாகாணசபைத் தேர்தல்கள் சில திங்கள்களில் நடக்கவிருப்பதால், ஐக்கிய தேசியக் கட்சி மத்திய மாகாணத்தில் இது காலமும் பெற்றுவந்த செல்வாக்கைப் பெறத்தக்கவகையில் செயலாற்றவேண்டும்.

தொழிற்சங்கத் தலைவராகவும், ஆற்றல் வாய்ந்த நிர்வாகியாகவும் விளங்கும் திரு. திசநாயக்கா அவர்கள் தோட்டத்துறைக்குப் புதியவரல்லர். இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவராக இருந்தபொழுது இவர் எங்களுடன் மிகவும் நெருக்கமாக நடந்து கொண்டார். அன்று மிகவும் ஆற்றல் வாய்ந்ததாக விளங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு, தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பாடுபடப் போவதாக சவால் விடுத்தவரும் திரு. திசநாயக்கா அவர்களே என இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்து வெளியேறிய உறுப்பினர்கள் தங்கள் கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தோட்டத் தொழிலாளர் இடையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குள்ள ஆதரவை இல்லாதொழிப்பதற்காக இப்படியான தகவல்களை இந்த உறுப்பினர்கள் இம் மக்களிடையே பரப்புவார்கள் எனக்கருதப்படுகின்றது.

சனநாயக தொழிலாளர் காங்கிரசை (Democratic Workers Congress) அமைப்பதற்காக திரு. அப்துல் ஏ. அசீஸ் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்து வெளியேறி பிளவை ஏற்படுத்தியது போன்ற விடயங்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு ஒன்றும் புதியதல்ல.

திரு. அசீஸ் அவர்கள் பிரிந்து சென்றபோது திரு. தொண்டமான் அவர்கள் இளவயதினராய் இருந்ததனால், அதை அவர் வெற்றிகரமாகச் சமாளிக்க முடிந்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலுள்ள தீவிரமான போக்குள்ளவர்களுடன் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தற்பொழுது சிறைவைக்கப்பட்டுள்ள திரு. சந்திரசேகரன் அவர்கள் அண்மையில் பிரிந்து சென்றபோது ஏற்பட்ட நெருக்கடியையும் இவர் சமாளித்துக்கொண்டார்.



திரு. திசநாயக்கா அவர்களுடன் சேரவிருக்கும் ஒரு முக்கியமான பகுதியினரை இப்பொழுது திரு. தொண்டமான் அவர்கள் சமாளிக்கவேண்டியுள்ளது. இவர்மூலம் ஐக்கிய தேசியக் கட்சி பெறக்கூடிய வாக்குச் சீட்டுக்களை அது பெறத்தக்க வகையில் இவர் தன்னுடைய அரசியல் மதிநுட்பத்தையும், பட்டறிவையும் பயன்படுத்தவேண்டியிருக்கின்றது.

எதிர்க்கட்சிகளுக்கிடையே நிலவும் பிளவு, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அநுகூலமாயிருப்பதால் அது சிறிது ஆறுதல் அடையக்கூடியதாயிருக்கின்றது.

(சண்டே ரைம்ஸ்- 20-12-92)

---

கற்றல் ஒரு முழு மனிதனை உருவாக்குகிறது. உரையாடுதல் அவனை ஆயத்த நிலையில் வைக்கிறது. எழுதுவதே அவனை நேர்மைத் திறத்தவன் ஆக்குகின்றது.

# சுவிஸ் சமஷ்டி முறையில் தனியான அரசியல் அமைப்பையும் சட்டங்களையும் கொண்ட மாநிலங்கள்

- அழகு குணசீலன்

(வீரகேசரி - 17.1.1993)

இன்று உலகிலுள்ள நாடுகள் பலவற்றில் இனம், மொழி, மதம் என்பனவற்றின் அடிப்படையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த அடிப்படையில் தான் இலங்கையின் இன்றைய இனப் பிரச்சினை வளர்ச்சியடைந்துள்ளது. இனம், மொழி, மதம் போன்ற வேறுபாடுகளினால் ஏற்படும் பிரச்சினைகளை ஒற்றையாட்சி அமைப்பின் மூலம் தீர்க்க முடியாது என்பதற்கு பல உதாரணங்களையும், நிகழ்வுகளையும் சுட்டிக்காட்ட முடியும். சமஷ்டி அமைப்பாக இருந்த நாடுகளே அந்த அமைப்பின் மூலம் இப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது தனிநாடுகளாகப் பிரிந்து செல்கின்றன.

சோவியத்யூனியன், யூகோசிலாவியா போன்ற நாடுகளில் சமஷ்டி முறைமை கூட தோல்வியில் முடிந்திருப்பதை அண்மைக் கால நிகழ்வுகள் எமக்கு நினைவூட்டுகின்றன. கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் 'கியூபெக்' மாநிலத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்குவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியில் முடிவடைந்துள்ளது. அந்த மாநில மக்கள் தனிநாடாகப் பிரிந்து செல்லும் நிலை அதிக தூரத்தில் இல்லை என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இப்படியாக எவ்வகைப்பட்ட ஆட்சி முறையாயினும் தனிப்பட்ட குழு அமைப்பைக் கொண்ட இனமோ, மதமோ, மொழியோ தமது சுய உரிமைகளையும், மரியாதையையும் பேணிக்கொள்ள முயலுகின்றன. இவற்றின் முயற்சிக்கு பங்கம்



ஏற்படும்போது அவை தமது அமைப்பைக்காத்துக்கொள்ள எதிரிகளுடன் மோதுகின்றன.

ஆனால், பல இன, மத, மொழிகள் உள்ள சுவிஸ் நாட்டில் அதன் ஆட்சி அமைப்புமுறைகள் தனித்துவம் கொண்டவையாக உள்ளதால் பல சிறுபான்மையினரின் பூரண சுய உரிமைச் சுதந்திரத்தைப் பேணிப்பாதுகாக்கின்றன.

சுவிஸின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளுக்கும், இலங்கையின் சமூக பொருளாதார, அரசியல் நிலைமைகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உண்டு. எனினும் சமஷ்டி முறையின் கீழ் சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகள் சுவிஸில் எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்பு முறை எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றி ஓரளவுக்காவது விளங்கிக்கொள்வது நன்று.

ஜெர்மன் மொழி பேசப்படும் ஜெர்மனி, ஒஸ்த்திரியா, லிக்தன்ஸ்ரைன் ஆகிய நாடுகளையும், பிரெஞ்சு மொழி பேசப்படும் பிரான்ஸ்சையும், இத்தாலி மொழி பேசப்படும் இத்தாலியையும் எல்லைகளாகக் கொண்டு ஐரோப்பாவின் மத்தியில் அமைந்துள்ள ஒரு சிறிய நாடு சுவிற்சர்லாந்து. இதன் பரப்பளவு 41,293.2 சதுரகிலோ மீற்றர், (இலங்கை: 65 610 ச.கி.மீ.) சுவிஸின் மக்கள் தொகை சுமார் 6.7 மில்லியன். (இலங்கை சுமார் 16 மில்லியன்)

சுவிற்சர்லாந்து நான்கு மொழிகள் பேசப்படும் நாடாகவுள்ளது. ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலி ரூமேனிய மொழி என்பன அவை. இந்த மொழிகள் நான்குமே சுவிஸின் மொழிகளாக உள்ளன. சுவிஸ் சனத் தொகையில் 65 வீதத்தினர் ஜெர்மன் மொழியையும், 18 வீதத்தினர் பிரெஞ்சுமொழியையும் 10 வீதத்தினர் இத்தாலி மொழியையும். 01 வீதத்தினர், ரூமேனியா மொழியையும் பேசுகின்றனர். மற்றையவர்கள் ஏனைய மொழிகள் பேசுவோர். ஒரு வீதமான மக்கள் பேசுகின்ற மொழியையும் சுவிஸின் தேசிய மொழிகளில் ஒன்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இலங்கையில் சுமார் 25-30 வீதமான தமிழ், முஸ்லிம் மக்கள் பேசும் தமிழ் மொழியை தேசிய மொழியாக்க எவ்வளவு காலம் போராட வேண்டியிருந்தது)

மதங்கள் புரட்டஸ்தாந்து (44.3%) றோமன் கத்தோலிக்கர் (47.6%), பழைய கத்தோலிக்கர் (03..%) யூதர் (0.3%), மற்றையவர்கள் (7.5%) மிகமிகக் குறைவான வீதத்தினைக் கொண்

டுள்ள மதப்பிரிவினருக்கும் பூரண மத சுதந்திரம் உண்டு. சகல மதங்களும் சமமாகநோக்கப்படுகின்றன. அரசமதம் என்று எது வும் இங்கு இல்லை.

சுவிற்சர்லாந்தின் வரலாற்றில் அது ஒரு நாடாக இருந்த தற்கான சான்றுகள் இல்லை. சுவிற்சர்லாந்து 1291 வரையும் பல்வேறு சிற்றரசுகளாகவே இருந்துள்ளது. இந்த சிற்றரசுகள் ஜெர்மன், பிரான்ஸ், ஒஸ்த்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளை ஆட்சி செய்த மன்னர்களின் கீழ் இருந்துள்ளன. இதன் காரண மாகத்தான் இன்றைய சுவிற்சர்லந்து ஆனது. மேற்குறிப்பிட்ட நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்களின் சேர்க் கையாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் காலத்தின் தேவை இச்சிற்றரசுகளை இணைய வைத்தது. அதனால் உருவாக்கப்பட்ட நாடே இன்றைய சுவிஸ். அது கூட எல்லா சிற்றரசுகளும் சமகாலத்தில் இணையவில்லை. ஆரம்பத்தில் 1291 இல் முக்கிய மூன்று சிற்றரசுகள் இணைந்து சுவற்சர்லாந்தை உருவாக்கின. பின்னர் படிப்படியாக 1979 வரை பல்வேறு சிறறரசுகள் இணைந்து இன்றைய சுவிஸ் உரு வானது. இன்றைய சுவிஸின் சமஷ்டி அமைப்பு முறையானது 1884 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இன்றைய சுவிஸின் சமஷ்டி அமைப்பின் கீழ் 26 பூரண இறைமை உடைய மாநிலங்கள் அல்லது மாநில அர சுகள் உள்ளன.

சுவிஸின் சமஷ்டி அமைப்பு முறையில் பின்வரும் விடயங் கள் முக்கியமானவை.

1. நிர்வாக இயக்கத்திலும் அரசியல் ரீதியான தீர்மானங் களை எடுப்பதிலும் மாநிலங்களுக்கு உயர்வான சுதந்திரம் உண்டு.
2. ஒவ்வொரு மாநிலங்களும் சொந்தமான அரசியல் அமைப் பையும் சட்டங்களையும் கொண்டுள்ளன.

3. சமஷ்டி அரசாங்கத்தின் கடமைகள் கடுமையாக வரைய றுக்கப்பட்டிருப்பதுடன் அவை அரசியல் அமைப்பிலும் வலியு றுத்தப்பட்டுள்ளன.

அவையாவன:-

(அ) உள்நாட்டு, வெளிநாட்டு பாதுகாப்பு.
(ஆ) மாநிலங்களின் அரசியலில் அமைப்பைப் பேணுதல்



(இ) வெளிநாட்டு இராஜதந்திர தொடர்புகளை கண்காணித் தலும், பேணுதலும்.

(ஈ) சுங்கம், தபால், தந்தி, தொலை தொடர்பு சேவைகள்
(உ) நாணயக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்.
(ஊ) ஆயுதப்படைகளுக்கு முழுப் பொறுப்பு.

## குடியியல் உரிமைகள்

சுவிற்சர்லாந்தில் அடிப்படைக் குடியியல் உரிமைகள் ஐரோப்பிய மனித உரிமைகள் ஒப்பந்தத்தின்படி அமைந்துள்ளன. தனிப்பட்ட சுவிஸ் பிரஜை ஒருவரை பாதுகாக்கும் நோக்கும் சமஷ்டி அரசியலமைப்பு, சமஷ்டிசட்டம், மாநில அரசியலமைப்பு என்பனவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சகல சுவிஸ் பிரஜைகளும் சட்டத்தின் முன் சமனானவர்கள்.

தனியார் சொத்துடைமை, வர்த்தகம் செய்யும் உரிமை, மதத்தை தழுவும் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் என்பன சமஷ்டி மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை மாநிலங்கள் மேலும் கூடுதலான உரிமைகளையும் விரிவாக வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் மாநில அரசியல் அமைப் பில் செய்ய முடியும்.

சுவிற்சர்லாந்தின் சமஷ்டி, மாநில அரசியல் அமைப்புக்க ளில் குறிப்பிடக் கூடிய விடயமாக இருப்பது சர்வஜன வாக்கெடுப் பாகும். பல்வேறுபட்ட பிரச்சினைகள், பெருந்தொகைப்பணம் செலவிடப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவற்றிற் கெல்லாம் இங்கு சர்வஜன வாக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகி றது. இரண்டுவகையான சர்வஜன வாக்கெடுப்புக்கள் இங்கு உண்டு.

1. கட்டாயமான சர்வஜன வாக்கெடுப்பு.

2. விருப்பத்திற்கு விடப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு.

கட்டாயமான சர்வஜன வாக்கெடுப்பானது சமஷ்டி அல் லது மாநில மட்டத்தில் அரசியல் அமைப்பு மாற்றங்களைச் செய்வதற்காக செய்யப்படுகிறது. விருப்பத்திற்கு விடப்பட்ட

சர்வஜன வாக்கெடுப்பான பொதுமக்கள் ஏதாவது ஒரு விடயம் குறித்து கோரிக்கை விடும் போது நடத்தப்படுகிறது. குறைந்தது 50,000 வாக்காளர்கள் அல்லது எட்டு மாநிலங்கள் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமாறு சமஷ்டி (மத்திய) அரசைக் கோரினால் 90 நாட்களுக்குள் இது நடத்தப்பட வேண்டும். மாநில மட்டத்திலும் சர்வஜன வாக்கெடுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ஆனால், சில விடயங்களில் மாநிலங்களுக்கிடையே வேறுபாடுகள் உண்டு.

## மாநில அரசுகள்

ஒவ்வொரு மாநில அரசுகளும் தனியான நிறங்களையும், சின்னத்தையும் கொடியையும் கொண்டுள்ளன. அந்தந்த மாநிலங்களின் தனித்துவம், கலாசார பாரம்பரியம் என்பனவற்றிற்கேற்ப மாநிலங்கள் இவற்றை சுதந்திரமாக தீர்மானிக்க முடியும். ஆனால் இந்த சின்னங்கள் யாவும் ஓரளவுக்கு அரை நீள் வட்ட வடிவிலான ஒரு அமைப்பில் அமைக்கப்பட்டிருப்பது பொதுத்தன்மையாகும். அரைநீள்வட்டத்தில் சிவப்பு நிற பின்னணியில் வெண்சிலுவை பொறிக்கப்பட்ட சின்னமே சுவிற்சர்லாந்தின் தேசிய கொடியில் காணப்படுகிறது. ஒவ்வொரு மாநிலங்களும் தம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டபடி தமது தனித்துவத்தைப் பேணக்கூடிய வகையில் மாநிலக் கொடிகளையும் கொண்டிருக்கும். சாதாரணமாக காரியாலயங்கள், கட்டடங்கள், விழாக்களில் தேசியக் கொடியும், மாநிலக் கொடியும் சரிநிகர் சமனாகப் பறப்பதைக் காணமுடியும்.

சுவிஸ் சமஷ்டி அமைப்பில் இன்று 26 மாநிலங்கள் உள்ளன. இவற்றில் 20 மாநிலங்கள் முழு மாநிலங்களாகவும் 6 மாநிலங்கள் அரை மாநிலங்களாகவும் உள்ளன. இந்த அரை மாநிலங்கள் 6 உம் ஏற்கனவே மூன்று முழு மாநிலங்களாக இருந்து சில வேற்றுமைகளின் அடிப்படையில் சுயவிருப்பத்தின் பேரில் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பிரிந்துள்ளன. மத வேறுபாடு, நகர கிராமிய வேறுபாடு, அபிவிருத்தி வேறுபாடு என்பனவற்றின் அடிப்படையிலேயே இவை பிரிந்து இயங்குகின்றன.

முழு, அரை மாநிலங்களுக்கு இடையே அதிகாரங்களைப் பொறுத்தமட்டில் பாரிய வேறுபாடுகள் இல்லை. 26 மாநிலங்கள் உள்ள போதும் இந்த அரை மாகாணங்கள் முழு மாநில அரசாக கருதப்படாது அரை மாநில அரசாகவே கருதப்படுகின்றன. இதனால் 26 மாநிலங்களில் 23 மாநில அரசுகளே உண்டு.



நேரடி வரிவிதிப்பு, கல்விமுறை, சமூக சேவைகள் என்பவற்றில் மாநிலங்கள் சுதந்திரமான கட்டுப்பாட்டினையும். அதிகாரத்தினையும் கொண்டு உள்ளன. எனினும் இந்த விடயங்களில் ஒவ்வொரு மாநிலங்களும் தமது தனித்துவத்திற்கேற்ப தனித்துவமான வேறுபட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத் கின்றன.

ஒவ்வொரு மாநிலங்களிலும் ஒரு தலைநகர் உண்டு. பொதுவாக அது நிர்வாக வர்த்தக மையமாக இருக்கும். அந்த மாநில மாநகர் எல்லைக்குள் நடவடிக்கைகளுக்கு அந்த மாநகர சபையே பொறுப்பாகும். இதைவிடவும் கிராமிய மட்டத்தில் பிரதேச சபைகள் உண்டு.

இவை பொதுச் சொத்துக்களை நிர்வகித்தல் - அதாவது காடு, நீர், வாயு, மின்சாரம் போன்றவற்றிற்கும், மற்றும் பாலங்கள், வீதிகள், நிர்வாகக் கட்டடங்கள், பாடசாலைகள் பொலிஸ், தீயணைப்புச்சேவை, சுகாதாரம், குடியியல் பாதுகாப்பு போன்றவற்றிக்கும் இவ்வாறான அமைப்புகளே அந்தந்தப் பகுதிகளில் பொறுப்பாக உள்ளன.

சுவிற்சர்லாந்தில் 26 மாநிலங்களிலும் 26 வேறுபட்ட கல்வி முறையே நடைமுறையில் உள்ளது. அந்தந்த மாநிலங்கள் தமது தேவைகளுக்கு ஏற்ப கல்விக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்துகின்றன.

மாநிலங்கள் சுதந்திரமாக தமது கல்லூரிகளின் தன்மை, கற்கைமுறை, கற்பித்தல் உபகரணங்கள், ஆசிரியர்களின் சம்பளங்கள், பாடசாலைக்கு சேரும் வயது போன்ற பலவற்றை தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டுள்ளன.

சுவிற்சர்லாந்தின் கல்விமுறை பெரிதும் தொழிற்கல்வியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், வேறு உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்தும் இதற்கு விதிவிலக்கல்ல. சுவிற்சர்லாந்தில் எட்டு மாநில பல்கலைக்கழகங்கள் உண்டு. இவற்றில் 4 பிரெஞ்சு மொழி பேசும் மாநிலங்களிலும், 4 ஜெர்மன் மொழி பேசும் மாநிலங்களிலும் அமைந்துள்ளன. இத்தாலி மொழி பேசுகின்ற மாநிலங்களிலும் பல்கலைக்கழகம் அமைக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது மக்கள் அதற்கு எதிராக வாக்களித்தனர்.

1979 இல் லுர்ற்சேன் மாநிலத்தில் இறையியல் பீடம் ஒன்றை அமைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்ட

போதும் மக்கள் எதிராக வாக்களித்தனர். சகல விடயங்களிலும் மக்களின் விருப்பும், தேர்வும் முக்கியமாக இங்கு கொள்ளப்படுகிறது. பல்கலைக்கழகங்களுக்கான நிதி மாநில அரசாங்கத்தினால் ஒதுக்கப்படுகிறது. அதை விடவும் ஏறக்குறைய 53 வீதமான நிதி சமஷ்டி நிதியில் இருந்தும் கிடைக்கின்றது.

## கலாசாரம்

மாநிலங்கள் தமது கலாசாரங்களைப் பேணுவதற்கு பூரண அதிகாரங்களைக் கொண்டுள்ளன. கல்வி போன்றே இங்கும் 26 கொள்கைகள் மாநிலங்களால் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சமூகத்தினரும் இந்த விடயத்தில் மிக உயர்ந்த சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர்.

மாநில அரசுகள் இதற்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகின்றன. சில மாநிலங்களில் கலாசாரத்திற்கு மட்டும் ஒதுக்கப்படும் தொகை சமஷ்டி நிதியில் இருந்து முழு நாட்டிற்கும் கலாசாரத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகையைவிடவும் உயர்வானதாக உள்ளது.

## பொதுசனத் தொடர்பு சாதனங்கள்

அதிகளவான பத்திரிகைகள் வெளிவரும் ஒரு சிறிய நாடாக உலகில் சுவிற்சர்லாந்து உள்ளது. 1990 இல் 273 வகையான பத்திரிகைகள் சுவிசில் வெளிவந்தன. (இன்று இரு தமிழ் பத்திரிகைகளும் வெளிவருகின்றன) ஒவ்வொரு மாநிலங்களிலும் பல மாநிலப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவை அந்த மாநிலங்களின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார தனித்துவங்களைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. சுவிஸ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நான்கு மொழிகளிலும் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிப்பரப்புச் செய்வதற்கு பொறுப்பாக உள்ளது. சுவிஸ் மக்களின் கலாசார, மத இனத்துவ அம்சங்களின் அடிப்படையில் இந்நிகழ்ச்சிகள் அமைகின்றன. பல வானொலி ஸ்ரூடியோக்கள் வேறுபட்ட மாநிலங்களில் அமைந்துள்ளன.

மூன்று தொலைக்காட்சி ஸ்ரூடியோக்கள் இத்தாலி, பிரஞ்சு. ஜெர்மன் மொழி பேசும் மூன்று மாநிலங்களில் அமைந்து உள்ளன. இங்கு அந்தந்த மொழி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. தொலைக்காட்சி, வானொலியில் ஒவ்வொரு தேசிய மொழிக்கும் தனியான அலை வரிசைகள் உண்டு.



## போக்குவரத்து

புகையிரத போக்குவரத்து சமஷ்டி அரசினால் நடத்தப்படுகிறது. பஸ் போக்குவரத்து மாநிலங்களில் இடம்பெறுகிறது. மநகர சபைகள், பிரதேச சபைகளும் பஸ் சேவைகளை நடத்துகின்றன. அந்தந்த மாநில பஸ்கள் பொதுவாக அந்தந்த மாநிலங்களின் நிறங்களைக் கொண்டிருக்கின்றன. அத்தோடு அந்தபஸ்களில் அநதந்த மநிலங்களின் சின்னங்களும் பொறிக்கப்பட்டிருக்கும். கிராமிய மட்டத்தில் உள்ள பிரதேச சபைகள் நடத்தும் பஸ் சேவைகளும் உண்டு.

இந்த பஸ்கள் அந்த பிரதேச சபைகளின் நிறங்களையும் சின்னங்களையும் கொண்டிருக்கும் இவற்றைவிட தனியார் கம்பனிகள், தபால் பகுதியினரும் பஸ் போக்குவரதுச் சேவையை நடத்துகின்றன .

போக்குவரத்துக் கட்டணங்களும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன. தமது கட்டணங்களை அந்தந்த மாநிலங்களே தீர்மானித்துக் கொள்கின்றன. மாநிலத்தில் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கு மநில முதல் எழுத்துக்களுடன் கூடிய இலக்கத்தகடு வழங்கப்படும். இதில் சுவிஸ், மாநில சின்னங்களும் பொறிக்கப்பட்டிருக்கும்.

## பொலிஸ் நிர்வாகம்

பொலிஸ் நிர்வாகம் மாநில அரசினால் கையாளப்படுகிறது. ஒவ்வொரு மாநிலங்களிலும் மாநகர பொலிஸ், மாநில பொலிஸ், வெளிநாடடு பொலிஸ் என பிரிக்கப்பட்டு நிர்வாகம் இடம் பெறுகிறது.

மாநகரபொலிஸ் பிரிவினர் மாநகரத்திற்கு சட்டம் ஒழுங்கை நிலை நாட்டப் பொறுப்பாக உள்ளனர். மாநிலபொலிஸ் முழு மாநிலத்திற்கும் பொறுப்பாக இருக்கும். சுவிஸில் வெளிநாட்டவர் அதிகமாக இருப்பதனால் அவர்கள் தொடர்பான விவகாரங்கள் வெளிநாட்டுப் பொலிஸ் பிரிவினால் அந்தந்த மாநிலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. அந்தந்த மாநிலங்களின் நிர்வாக மொழியிலேயே அந்த மாநிலங்களின் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மற்றும் ஒவ்வொரு மாநிலங்களின் அதிகார எல்லைக்குட்பட்ட நிலங்கள், காடுகள், இயற்கை வளங்கள் அனைத்தும்

அந்தந்த மாநிலங்களுக்குரியவையாகும். அந்த மாநில அரசு அல்லது அந்த மாநிலத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்பின் மூலம் இவை பராமரிக்கப்படுகின்றன.

குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகள் எதுவும் இங்கு இல்லை. சுவிஸ் நாட்டுப் பிரசை ஒருவர் தான் விரும்பிய இடத்தில் வாழ்வதற்கும், சொத்துக்களை வைத்திருப்பதற்கும் உரித்துடையவர்.

சுவிற்சர்லாந்தின் பாதுகாப்புக் கொள்கையானது நாட்டின் சுதந்திரத்தினையும், பிரஜைகளின் சுதந்திரத்தினையும் பேணுவதாக உள்ளது. குறிப்பாக நாட்டின் சுதந்திரத்தை வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாப்பதும், உள்நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் முக்கியமாகும் கட்டாய இராணுவச் சேவையின் அடிப்படையில் சுவிஸ் இராணுவம் இயங்குகின்றது. எல்லா ஆண் சுவிஸ் பிரஜைகளும் 20வயதுக்கும் 50 அல்லது 55 வயதுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கட்டாய இராணுவத்தில் இருட்பர். பெண்கள் தொண்டர் இராணுவத்தில் இருக்க முடியும். ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்கும் வேறுபட்ட கால அளவின் அடிப்படையில் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுவிஸ் படைவீரர்கள் தமது சொந்த உபகரணங்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள் போன்றவற்றை தமது வீட்டில் வைத்துக்கொள்ள முடியும். ஆனால் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. கடந்த காலங்களில் மிகவும் குறைவான ஒரு சில துஷ்பிரயோக சம்பவங்களே நடந்துள்ளன.

## பாராளுமன்றம்

சமஷ்டிப் பேரவையே சுவிற்சர்லாந்தின் பாராளுமன்றமாக உள்ளது. இப்பேரவை இரு சபைகளின் கூட்டாக உள்ளது

## தேசிய கவுன்சில் மாநில கவுன்சில்

தேசிய கவுன்சிலில் 200 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் சனத்தொகை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இவர்கள் தேசிய கவுன்சிலுக்கென நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாகும். இவர்கள் மக்கள் பிரதிநிதிகள்,மாநில கவுன்சில் உறுப்பினர்கள் 46 பேர். இவர்கள் மாநில பிரதிநிதிகளாக மாநில அரசில் இருந்து மாநில கவுன்சிலுக்கு உறுப்பினர்களாக வருவர். 26 மாநிலங்களில் இருந்தும் இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.20 முழு மாநிலங்களில் இருந்தும் தலா இருவர் என்ற அடிப்படையில் 40 பேரும், அரை மாநிலங்களான 6 மாநிலங்களில் இருந்தும் தலா ஒருவர் என்ற அடிப்படையில் 6பேரும் தெரிவு செய்யப்படுவர். எனவே இக்கவுன்சில் 46 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.



அரை மாநிலங்களுக்கு மாநிலக் கவுன்சிலில் ஒரு அங்கத்துவமே இருக்கும். இதனால் சமஷ்டி அரசியல் அமைப்பு மாற்றங்களுக்கு இவர்கள் வாக்களிக்கும் போது இவர்களின் வாக்குகள் ஒரு வாக்காக கருதப்படாது. அரைவாக்காகவே கருதப்படும். முழு, அரை மாநிலங்கள் சுதந்திரமாக தம்மைத்தாமே ஆளும் உண்மையான சமஷ்டி உரிமையைக் கொண்டுள்ளன. மாநிலத்தில் வாழும் பிரஜைகள் மாநில உறுப்பினர்களைத் தெரிவு செய்வதுடன் மாநில தீர்மானங்களிலும் பங்கு கொள்வர். மாநில அரசாங்கம் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். மாநில சபை மாநில பாராளுமன்றமாக இயங்கும். இதற்குரிய உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர். மாநில பாராளுமன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். இன்று சில மாநிலங்களில் ஆகக் குறைந்தது 52 உறுப்பினர்களும் சில மாநிலங்களில் ஆகக் கூடியது 200 உறுப்பினர்களும் உள்ளனர். இந்த உறுப்பினர்கள் பொதுவாக நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படுவர். எனினும் சில மாநிலங்களில் இந்த கால அளவு ஒரு ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரையும் வேறுபடுகின்றது.

இந்த இரு தேசிய கவுன்சில், மாநில கவுன்சில் ஆகிய இரு சபையினரும் வருடத்தில் குறைந்தது ஒரு தடவையாவது ஒன்றாக கூடுவர். இது ஐக்கிய சமஷ்டிப் பேரவை எனப்படும். இவாகள் சமஷ்டிக்கவுன்சில் எனப்படும் சமஷ்டி அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கே கூடுகின்றனர். ஒவ்வொரு சமஷ்டி சட்டங்களும் தேசிய கவுன்சில் (மக்கள் பிரதிநிதிகள் 200) மாநிலகவுன்சில் (மாநிலப் பிரதிநிதிகள் 46) ஆகிய இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்காக ஒரே நேரத்தில் ஆனால் வேறுபட்ட மண்டபங்களில் இந்தச் சபைகள் கூடி குறிப்பிட்ட ஒரே விடயத்தினை விவாதிக்கும் இந்த இரு சபைகளும் சமஷ்டி

நிர்வாகத்தினாலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட நீதியர சராலும், மேற்பார்வை செய்யப்படும்.

## சமஷ்டிக் கவுன்சில்

சுவிற்சர்லாந்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அமைப்பாக சமஷ்டிக் கவுன்சில் உள்ளது. இந்தக் கவுன்சிலா னது ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இதன்படி சமஷ்டி அமைச்சுகள் ஏழாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வெளிவிவகாரம், போக்குவரத்தும சக்தியும், நிதி, பொருளாதாரம், நீதியும் பொலி சும், உள்நாட்டலுவல்கள், பாதுகாப்பு என்பனவே அந்த ஏழு அமைச்சுக்களுமாகும். இந்த ஏழு அமைச்சுக்களுக்கும் சமஷ்டிக் கவுன்சிலின் ஏழு உறுப்பினர்களும் ஒவ்வொன்றுக்கு ஒருவராக பொறுப்பாக இருப்பர். இவர்களே அந்தந்த அமைச்சுக்களின் அமைச்சர்கள். உண்மையில் சமஷ்டிக்கவுன்சில் என்பது அமைச் சரவையையே குறிக்கின்றது.

சமஷ்டிக்கவுன்சிலின் தலைவர் ஒவ்வொரு வருடமும் மாற் ப்படுகிறார். நான்கு ஆண்டுகளுக்கு இவர்கள் தெரிவு செய் யப்பட்டாலும் தலைவர் ஒவ்வொரு வருடமும் மாற்றப்படுகி றார். சமஷ்டிக் கவுன்சில் தலைவருக்கு மேலதிகமான எந்த அதிகாரங்களும் இல்லை. கவுன்சில் கூட்டங்களுக்கு தலைமை தாங்குவதே இவரது பொறுப்பு. சமஷ்டிக் கவுன்சிலின் மற்றைய உறுப்பினர்கள் போன்று இவருக்கும் அதிகாரம் சமமானதே. இந்த முறையான சமஷ்டிக் கவுன்சிலானது 1959 இல் அமைக் கப்பட்டது. அதன்படி இன்றும் தொடர்ந்து செயற்படுத்தப் பட்டு வருகின்றது. சுவிஸில் பல கட்சிகள் உள்ளபோதும் பொதுவாக முக்கியமான நான்கு கட்சிகளுக்கே சமஷ்டிக் கவுன் சிலில் அங்கத்துவம் பெறும் வாய்ப்பு கிடைத்து வருகின்றது.

o

# சோமாலியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் இராசதந்திரமும் பலம் இழந்திருக்கும் அமெரிக்க சனாதிபதியும்

(சண்டே ரைம்ஸ் -20-12-1992)

மக்களின் ஆதரவையிழந்து பலம் இழந்திருக்கும் சனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவர்கள், 28,000 படைவீரர்களை சோமாலியா வுக்குள் அனுப்பிய செயல் அண்மைக்காலங்களில் மேற்கொள் ளப்பட்ட தலையீடுகளில் நன்மைபுரிவதாகக் காட்டிக்கொண்டு ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் மேற்கொள்ளப்பட்ட அப்பட்ட மான ஒரு தலையீடாகும். சோமாலியா நாட்டுமக்கள், சொல் லொணாத்துன்பங்களை அனுபவிப்பதையும், அந்த நாட்டுக்குழந் தைகள் உடுக்க உடையின்றி, எலும்பும் தோலுமாகக் காட்சி தரு வதையும், அவர்களின் ஏக்கத்துடன் கூடிய பார்வையையும் பல மில்லியன் கணக்கான மக்கள் தொலைக்காட்சி மூலம் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டபோது அக்காட்சி கவலையைத் தருவதாக விருக் கின்றது.

இருப்பினும், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிற நாட்டுப்படையணிகள், அந்நாட்டில், பட்டினியால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிக்கு முன்னேறிச் சென்றுகொண் டிருந்தபோது, நூற்றுக்கணக்கான குழந்தைகளும், வயதுவந்தவர் களும் அவர்களை வரவேற்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதை இதற்கடுத்த இரவு தொலைக்காட்சியில் காணமுடிந்தது. அந்நாட் டின் இருள் சூழ்ந்த தலைநகரான மொகதிசுவை (Mogadishu) சென்றடைவதே இப்படையணியினரின் நோக்கமாகும். நாலு மேற்குலக நாடுகளைச் சேர்ந்த 12க்கும் அதிகமான செய்தியாளர்

களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் இவர்களுடன் சென்றுகொண்டிருப்பதையும் காணமுடிந்தது. ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைக்கு ''நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கை (Operation Restore Hope) எனப்பெயரிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் இதைப்போன்ற ஒரு சில நடவடிக்கைகளுக்கே உலகளாவிய ஆதரவு கிடைத்துள்ளது. தொலைக்காட்சி, அனைத்துலக தொலைத் தொடர்பு சாதனங்கள் ஆகியன இந்த ஆதரவைப் பெற உதவின. அடுத்த சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. பில் கிலின்ரன் அவர்கள் இந்தக் காலத்தை செய்தித் தொடர்பு காலம் என்று வர்ணித்ததுடன் தொலைக்காட்சி. வானொலி மற்றும் நேரடியாகச் செய்திகளை வழங்கும் சாதனங்கள் (Fax) பேர்லின் சுவரைத் தகர்ப்பதற்கும் உதவியதெனவும் கூறியுள்ளார்.

சோமாலியாவில் மேற்கொள்ளப்பட்ட படையத் தலையீட்டுக்கு உலகளாவிய ரீதியில் மனிதாபிமானமான ஆதரவு இருந்தபோதிலும், பக்கச்சார்பில்லாமலும், பட்சபாதமில்லாமலும் அனைத்துலகத்திலும் நடைபெற்றுவரும் விடயங்களை ஆய்வுமேற்கொள்ளும் மாணவர்களுக்கு இது சர்ச்சைக்குரிய பல விடயங்களை எழுப்ப இடம் அளிப்பதால் இந்த விடயம் இத்துடன் முடிவுபெறவில்லை. முதலாவதாக சோமாலியாவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றால் என்ன?

முதலாவதாக, இந்த நடவடிக்கை ஐக்கிய நாடுகள் சபையினாலும், அமெரிக்காவினாலும் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் காப்புச்சபையின் தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் இது ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கையேயாகும். 15 உறுப்பினர்களைக் கொண்ட காப்புச்சபையில், அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் என முன்னர் அழைக்கப்பட்ட ருசியா, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் சீனா ஆகிய ஐக்கிய நாடுகளும் இரத்து அதிகாரத்தைக் கொண்டுள்ளதால் இந்த நாடுகளில் எந்தவொரு நாடாயினும் ஒரு தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தால் அதை நிறைவேற்ற முடியாது. காப்புச் சபையே உண்மையான செயலுரிமையைக் கொண்டுள்ளது. ஐக்கிய நாட்டுப் பொதுச்சபை வெறுமனே விவாதிக்கும் ஒரு அரங்கமாகவே உள்ளது.



நம்பிக்கையை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்குப் பெரும் தொகையான பணம் தேவைப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் புதிய செயலாளர் நாயகமும், எகிப்தியருமான திரு. பூற்றஸ் காலி அவர்கள் உதவி வழங்கும் நாடுகளுக்கு மீண்டும் மீண்டும் நினைவுறுத்துவதை நோக்குகையில் பாரிய பண நெருக்கடியை ஐக்கிய நாடுகள் சபை எதிர்கொள்வது தெளிவாகின்றது. தான் ஆண்டுதோறும் வழங்கவேண்டிய உதவியை பல ஆண்டுகளாகச் செலுத்தாத அமெரிக்காவே இச் சபையின் பெரிய கடனாளியாகவுள்ளது.


## அமெரிக்கக்கொடி

உலகப் போரின் பின் ஆசியாவில் மாத்திரமின்றி அகில உலகத்தினதும் காப்புக்கு அல்லது சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கிய கொரியப் போரை எதிர்கொள்ள அமெரிக்கா தனது மக்களை இழந்ததுடன், பல பில்லியன் கணக்கான பணத்தைச் செலவு செய்தவேளையில், பல செல்வந்த நாடுகள், குறிப்பாக யப்பான் போன்ற நாடுகள், அதில் தலையிடாதிருந்து அந்தப் போரின் மூலம் தாங்கள் பெறக்கூடிய நன்மைகள் யாவற்றையும் பெற்றன. அதன் காரணமாக யூகோசிலேவியாவின் விடயம் ஐரோப்பாவைச் சார்ந்தது அல்லது சார்ந்ததாக இருக்க வேண்டும் என்றும், ஐரோப்பிய நாடுகளில் நிறையப் பணமும், மனிதவளமும் இருக்கின்றது என்றும் கூறிக்கொள்ளும் அமெரிக்கா யூகோசிலேவியாவுக்கு தனது படையை அனுப்பவில்லை.

பாகிஸ்தான் படைத்தளபதி ஒருவரின் தலைமையில் 500க்கும் மேற்படாத படையணி ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை சோமாலியாவுக்கு அண்மையில் அனுப்பிவைத்தது. இந்தப் படையணியிலுள்ள அமெரிக்கத் துருப்புக்கள் யாவும் அமெரிக்கப் படைத்தளபதிகளுக்கே பதில் சொல்ல வேண்டும் என அமெரிக்கா வற்புறுத்துகின்றது. ''பாலைவனப் புயற்போர்'' என்ற படைய நடவடிக்கையின் போதும் அமெரிக்கா, இந்தவிதமாகவே நடந்துகொண்டது. பிரித்தானியாவும், மேற்குலக நேசநாடுகளும் வளைகுடாப்போரில் பங்கேற்றிருந்தபோதும், மத்திய கிழக்கின் நில நெய்யில் பெரிதும் தங்கியிருப்பவையும், தொழில்வளம் மிக்கவையும், செல்வந்த நாடுகளுமான ஜேர்மனியும், யப்பானும் இதில் பங்கேற்கவில்லை.

வளைகுடாப் போரின் போதுதான் ''புதிய உலக ஒழுங்கு என்று சனாதிபதி திரு. புஷ் அவர்கள் பேசிவந்தார். சனாதிபதி

தேர்தலில் தன்னுடன் போட்டியிட்ட திரு. கிளின்ரன் அவர்கள். அமெரிக்காவின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்குள்ளாகி யுள்ளது என்று தேர்தல் விவாதம் ஒன்றின் போது கூறியதன்பின் அதை மாற்றி 'புதியபொருளாதார உலக ஒழுங்கு'' என்ற பதத்தை உபயோகிக்க ஆரம்பித்தார்.




சோமாலியாவுக்கு அமெரிக்கப் படைகளை அனுப்பப் போவதாக ஒரு நாள் திடீரென சனாதிபதி அவர்கள் அறிந்திருந் தார். அவருடைய இராசாங்க அமைச்சரான திரு. ஜேம்ஸ் பேக் ர் அவர்களைப் பல வாரங்களாகக் காணமுடியாததனால், இவ ருடைய இந்தத் தீர்மானம் இவராலேயே வெள்ளைமாளிகையில் மேற்கொள்ளப்பட்டதென அமெரிக்கத்தொடர்பு சாதனங்கள் நம்



பின. இந்த நடவடிக்கை சட்டவரம்புக்கு உட்பட்டது என்பதில் சந்தேகமில்லை. ஒரு நேரத்தில் ஒருவரே அமெரிக்காவுக்கு சனாதி பதியாக இருப்பார் என, இது நடைபெற்ற ஒரு வாரத்திற்கு முன் திரு. பில் கிளின்ரன் அவர்கள் நாளேடுகளுக்குக் கூறியிருந் தார். சனாதிபதிக்குரிய செயலுரிமையை சனவரி 20ஆம் திகதிக் குப் பின்னரே திரு. கிளின்ரன் அவர்கள் பெற்றுக்கொள்வார். காங்கிரசில் சனநாயகக்கட்சியினர் அதிக அளவில் இருந்ததால் அதைக் கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்பை குடியரசுக்கட்சியினர் பல ஆண்டுகளாகப் பெறாதிருந்த வேளையில், இந்த வாய்ப்பை தற்பொழுது சனநாயகக்கட்சி பெற்றுள்ளதால், சனாதிபதி கிளின் ரன் அவர்கள் தனது திட்டங்களை பரந்த அளவில் செயற்படுத் தக் கூடியதாக இருக்கும்.

28,000 அமெரிக்கத் துருப்புக்களை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்த திரு. புஷ் அவர்கள் தன்னிச்சையாகவும், கண்மூடித் தனமாகவும் நடந்து கொண்டாரா என்பதைவிட, சனாதிபதி கிளின் ரன் அவர்களுக்கு ஒரு பெரிய சுமையாக இருக்கக்கூடிய வகை யில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதே தற்போ தைய கேள்வியாகும். சோமாலியாவைப் பற்றியும், அமெரிக்கத் துருப்புகள் அங்கே எதிர்கொள்ளக்கூடிய பல சிக்கல்களைப்பற்றி யும் திரு. புஷ் அவர்களுக்கு ஏதேனும் தெரியுமா? அமெரிக்கத் துருப்புக்கள் சோமாலியாவில் கொல்லப்பட நேரிடின், சனாதிபதி கிளின்ரன் அவர்களுக்குச் சோமாலியா ஒரு சுமையாக மாறுவ துடன், அவரது வெளிநாட்டுக் கொள்கைக்கு இது ஒரு சவா லாக அமையாதா?

## அவசரமான முடிவு

''வியட்நாம்'' என்ற பதத்தை நான் கூற விரும்பாவிடினும் திரு. றிச்சாட் கோகென் அவர்கள் அப்படித்தான் கூறுகின்றார். ரெக்சாஸ் (Texas) நகரத்திலுள்ளது போல் சோமாலியாவிலும் எட்டு மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள் என வாசிங்ரன் போஸ்ற் என்ற நாளேடு கூறும் அதேவேளையில், அங்கு 4.5 மில்லி யனுக்கு அதிகமான மக்கள் வாழ்வதாக நியூயோர்க் ரைம்ஸ் நாளேடு கூறுவதாக வாசிங்ரன் போஸ்ற் நாளேட்டுக்கு அண் மையில் தான் எழுதிய கட்டுரையில் இவர் குறிப்பிடுகின்றார். அமெரிக்க அரசின் குரலாக விளங்கும் இந்த இரு நாளேடுகளும் சோமாலியா நாட்டின் உண்மையான மக்கள் தொகையைத் தெரிந்து கொள்ளாவிடின், சாதாரணமான அமெரிக்க மக்கள் திரு. புஷ் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த நட

வடிக்கையை எப்படிப் புரிந்து கொள்வர்? சோமாலியாவில் 4.5
மில்லியன் மக்கள் வாழ்வதாகக் கூறும் நியூயோர்க் ரைம்ஸ்
நாளேட்டின் அதே பக்கத்திலேயே சுமார் 7 மில்லியன் மக்கள்
வாழ்வதாகக் கூறப்பட்டிருப்பது விந்தையாக இருக்கின்றது.

அங்குவாழும் மக்களின் தொகையையே அறியாத நாம்
அங்குள்ள மக்களுக்காகப் படையினரை அனுப்புவதற்குத் தீர்
மானித்துள்ளோம் எனவும், வியட்நாமிலும் இதுபோன்றே
ஆரம்பத்தில் நடந்தது எனவும் கூறும் திரு. கோகென் அவர்கள்
இதை வயதுமுதிர்ந்தவர்கள் அறிவார்கள் எனவும் கூறுகிறார்

உணர்ச்சி வேகத்தால் தூண்டப்பட்டும், நீதிக்குக் கட்டுப்படு
டும் நடப்பவர்கள் சில வேளைகளில் தவறான முடிவுகளை எடுப்
பதை நாம் கண்டிருக்கிறோம். சோமாலியாவின் விடயத்திலும்,
வியட்நாமின் விடயத்திலும் பல அடிப்படை வேறுபாடுகள் உள்ள
தால் சோமாலியா மற்றுமொரு வியட்நாமாக மாறத்தக்கவகை
யில் இந்த நடவடிக்கை அமைந்துவிடக்கூடாது. இருந்த போதி
லும் அமெரிக்க மக்களைப் பிளவுபடுத்திய வியட்நாம் சூளறு
படியைப் போன்று இது இல்லாவிடினும், குழப்பத்தை ஏற்படுத்தக்
கூடியவொன்றாகவே இருக்கின்றது. சோவியத் ஒன்றியத்தின்
வீழ்ச்சியைக் கண்டு மனநிறைவு கொண்டிருந்தவர்களுக்கு இன்று
ருசியாவில் இடம்பெறும் துன்பகரமான நிகழ்வுகள் தோற்றுவித்த
அபாயம், ஜேர்மனியில் இடம்பெறும் குழப்பங்கள், ஐரோப்பிய
சமூகநாடுகளில் இடம்பெறும் பூசல்கள், யப்பானில் பொருளாதார
வீழ்ச்சி ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அங்கு நிலவும் அரசி
யல் ஒழுங்கீனங்கள் ஆகியவை திரு. கென்னடி அவர்களின்
கொள்கையான என்ன விலைகொடுத்தேனும் எந்தவொரு சுமை
யையும் தாங்கவேண்டுமென்ற கொள்கையைத் தற்போதைய
அமெரிக்கத் தலைமைப்பீடமும் கடைப்பிடிக்கும் என எதிர்பார்க்
கப்படுகின்றது. திரு. கென்னடி அவர்கள் போன்றே திரு. கிளின்
ரன் அவர்களும் அவரைப் பின்பற்றுபவர்களும் நடந்துகொள்
வார்கள் என எண்ண இடமுண்டு.

## ஐக்கிய நாடுகள் சபை

சனநாயகத்தைப் பேணுவதாக உறுதியளித்த திரு. கிளின்
ரன் அவர்கள் தலைமையிலான அமெரிக்கா விரும்பாவிடினும்,
மூன்றாம் உலகநாடுகளும் அணிசேரா இயக்கமும் குறிப்பிட்ட
குறிக்கோள்களையும், நோக்கங்களையும் எய்துவதற்காக ஐக்கிய
நாடுகள் சபையை சீரமைக்க வேண்டும் என்ற பொதுக்கருத்தை



அமெரிக்கா ஏற்கவேண்டுமென திரு. கோகென் அவர்கள் கருது
கிறார்.

உலகத்திலே அதிக மக்களைக்கொண்ட மக்கள் சீனக்குடி
யரசை 1970 ஆம் ஆண்டிலேயே ஐக்கியநாடுகள் சபை தனது
உறுப்பு நாடாக அனுமதித்தது. தாய்வானையே மற்ற நாடுகள்
சீனா என ஏற்றுக்கொள்ளவேண்டும் என அமெரிக்கா விரும்பிய
தாலேயே இதை மற்றநாடுகள் ஆதரித்தன. திரு. கிசிங்கர் அவர்கள்
பாகிஸ்தான் ஊடாக சீனா சென்றுவந்த பின்னரே மக்கள் சீனக்
குடியரசு ஐக்கியநாடுகள் சபையிலும், காப்புச்சபையிலும் தனக்கு
உரிய இடத்தைப் பெறமுடிந்தது.

உலகவரலாற்றில் வேகமாக மாற்றங்கள் ஏற்பட்டுவரும்
காலகட்டத்தை உலகம் இப்பொழுது அடைந்துள்ளது. முக்கியமான
தீர்மானங்களை மேற்கொள்ளும் காப்புச்சபையும், ஐக்கிய நாடு
கள் சபையும் சனநாயக ரீதியில் மாற்றம் செய்யவேண்டிய கால
கட்டத்தை அடைந்துவிட்டன. யப்பானும் ஜேர்மனியும் காப்புச்
சபையில் அங்கம் வகிக்க வேண்டியது அவசியமாகும். இதை
எவரும் தடுக்கக்கூடாது. இந்த நாடுகளை உறுப்பு நாடுகளாக்கு
வதற்கு சாதகமாக அவற்றின் இராசதந்திர ரீதியிலான நடை
முறைகளையும், செல்வத்தையுமே ஆதாரமாகக் காட்டப்படுகின்றன
ஆனால் வறிய நாடுகள் முன்வைக்கும் சனநாயகரீதியிலான
வழிமுறைகளுக்கு இது ஏற்புடையதாகவில்லை. வறியநாடுகளில்
தான் சோமாலியாவில் ஏற்பட்டது போல் பல புதிய சிக்கல்கள்
ஏற்படுகின்றன.

## அமெரிக்காவின் தீர்மானம்

இந்த நடவடிக்கையை மேற்கொள்ள சனாதிபதி
அவர்களைத் தூண்டியது யார்? தற்போது திரு. புஷ் அவர்கள்
உள்ள மனநிலையில் அவரே இந்த நடவடிக்கையை மேற்கொண்
டிருப்பார் என்ற கருத்து அமெரிக்காவில் நிலவுகிறது.

இது திரு. புஷ் அவர்களின் தீர்மானம் என்பதில் சந்தேக
மில்லை. பொஸ்னியாச்சிக்கலிற் தலையிடுவதைவிட சோமாலி
யாச் சிக்கலில் தலையிட்டு அதை வெற்றிகரமாக நடத்திமுடிக்க
முடியுமென வாக்குச்சீட்டுக்களைப்பற்றிக் கவலைப்படத்தேவை
யில்லாதவரும், பெரும் புகழுடன் தனது பதவியிலிருந்து வெளி
யேறவேண்டுமென விரும்புபவரும், மதிப்பிழந்த நிலையிலுள்ள
ஒரு சனாதிபதியின் இறுதி நடவடிக்கையாக இது இருக்கலாம்

எனக்கருத இடமுண்டு. இந்த நடவடிக்கைக்கு வேறு எவரும் பொறுப்பேற்க முன்வராததை நோக்குகையில் தேர்தல் தோல்வியாலும், தனது தாயாரின் இழப்பாலும் மனச்சோர்வுற்றிருந்த சனாதிபதி அவர்களின் சொந்த முடிவாகவே இந்த நடவடிக்கை இருக்கக்கூடும் என அமெரிக்க நாளேடு ஒன்றின் ஆசிரியரான திரு. யுரெக்மாட்டின் அவர்கள் கூறுகிறார்.

திரு.புஷ் அவர்களே அரசாங்க நடவடிக்கைகளுக்கு இப்பொழுது பொறுப்பாகவுள்ளார் என திரு. கிளின்ரன் அவர்கள் கூறி இன்னும் ஆட்சிப்பொறுப்பை ஏற்காததனால் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் தூண்டுதலின் பேரில் திரு. புஷ் அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டாரா? அப்படி இருக்காது ருசியாவுக்குப்பண நெருக்கடி ஏற்பட்ட காலத்திலிருந்து அது அமெரிக்காவின் அழுத்தங்களுக்குப் பணிந்து செல்லவேண்டியிருப்பதன் காரணமாக, திரு. புஷ் அவர்களும் திரு. ஜேம்ஸ் பேக்கர் அவர்களும் தாங்கள் நினைத்தவாறு கைப்பொம்மைபோல் ஐக்கிய நாடுகள் சபையை வழிநடாத்திச் செல்வதால் ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகமான திரு. பூற்றஸ் காலி அவர்கள், தான் ஒதுக்கப்பட்ட நிலையில் உள்ளதாகவும், ஐக்கிய நாடுகள் சபை பலம் குன்றியிருப்பதாகவும் கருதுகிறார். யூகோசிலேவியாவின் சிக்கல் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் அமெரிக்காவினாலும் அதன் தோழமை நாடுகளினாலும் உருவாக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டபின் அந்தநாட்டு விடயம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை.

வெள்ளை மாளிகையால் அரசியல் முடிவுகள் எடுக்கப்பட்டபின், இவை அமெரிக்கக்காப்புப் பகுதிக்கு அனுப்பப்பட்டு அங்கேயே படைய நடவடிக்கைகளுக்கான திட்டம் தயாரிக்கப்படுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை என்று சொல்லப்படும். இப்படியான உதவியை அளிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டபின் இந்த நடவடிக்கைக்கான பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையிலான துருப்புக்களிடம் ஒப்படைக்கப்படும் என அமெரிக்கக் காப்பு மந்திரியான திரு. டிக்செனி அவர்கள் கூறியுள்ளார்.

போரைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் இராசதந்திரம் என்று கூறிக்கொண்டு படையச் சிக்கல்களுக்கு படைய நடவடிக்கையையே அமெரிக்க படையத் தலைமைப்பீடம் மேற்கொள்கின்



றது. இதற்குக் கூட்டுப்படைகளின் தலைமை மேலாளராக அப்பொழுது விளங்கிய ஜெனால் கொலின் பவல் அவர்கள் முக்கியமானவராகவிருந்தார். எதிர்பாராத அபாயத்தை எதிர்கொள்ளும் முறை என்று திரு. பவல் அவர்களால் முன்வைக்கப்பட்ட இந்த முறையின்படி ஒரு படைய நடவடிக்கையை வெற்றிகரமாக நடாத்தி முடிக்கவேண்டுமாயின், அத்தாக்குதலுக்கு உண்மையாகத் தேவைப்படும் படையினரின் எண்ணிக்கையை ஐந்து மடங்காக அதிகரித்து அத்தாக்குதலை மேற்கொள்ளவேண்டும் என்பதே இவருடைய வழிமுறையாகும்.

**அத்துடன் அமெரிக்கப் படைகள் அமெரிக்கத் தளபதிகளின் கட்டளைக்கு இணங்க நடந்து கொள்வார்களேயல்லாது ஐக்கிய நாடுகளின் சபையின் தளபதிகளின் கட்டளைகளுக்கு அ'ல என்பதே அமெரிக்க படைய தலைமைப்பீடத்தினதும் அமெரிக்க அரசாங்கத்தினதும் கருத்தாகும். இதன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் சபையின் 500 பேரைக் கொண்ட சிறிய படையணியின் தலைமையை ஏற்ற பாகிஸ்தானிய தளபதி ஓரங்கட்டப்பட்டுள்ளார்.**

மாற்றங்கள் ஏற்படும் இந்தக்கால கட்டத்தில் வாசிங்ரனில் தீர்மானங்கள் எப்படி மேற்கொள்ளப்படுகின்றன என்பதை வெளிக்கொணர்வது நன்மைபயக்கும். ஆலோசனை நிறுவனம் ஒன்றை ரெக்சசில் உள்ள டல்லஸ் நகரத்திற்கு வெளியே நடாத்துபவரும், விந்தையான மனிதனுமான திரு. பிரெட்கியூனி என்பவர் இந்த நடவடிக்கையில் சம்பந்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. துயர்துடைப்பு விடயங்களில் மிகவும் பட்டறிவும் உள்ள இவர் படைய ரீதியான அல்லது படைய ரீதியில்லாத எந்தவொரு சிக்கலையும் எதிர்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவரென்று கூறப்படுகின்றது. போரை நடத்தும் சோமாலியர்களும் அவர்களின் ஆயுதம் தாங்கிய கொள்ளைக்காரர்களும் மிகவும் தொழில்நுட்பம் மிகுந்த அமெரிக்கர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கமுடியாது என இவர் அமெரிக்கக் காப்புக் கொள்கைகளைத் திட்டமிடும் பிரிவினைச் சேர்ந்த திரு போல் வூல்வோவிற்ஸ் அவர்களுக்குக் கூறியுள்ளார். சோமாலியாவின் சிக்கலில் எப்படி இந்த தொழில்நுட்பம் வாய்ந்த அமெரிக்கப்படை நடந்து கொள்ளப்போகின்றது என்பதே முதன்மையானதாகும்.

O

# இன்றுவரை தோட்ட விவகாரங்களில் மாத்திரம் தன்னை ஈடுபடுத்திவந்த தொண்டமான் அவர்கள் இப்பொழுது அதைவிடுத்து வேறு விவகாரங்களிலும் ஈடுபடுகின்றார்.

(ஐலண்ட் - 27. 12. 1992.)

கற்பனையாகவும், உண்மைக்குப் புறம்பாகவும் உருவாக்கப்பட்டுக் குழப்பத்தை ஏற்படுத்திவரும் வரலாற்றைக் கொண்டதும், நீடித்துச்செல்வதும், கவலையைத் தருவதுமான தமிழ் மக்களின் பிரிவினைவாதம் சம்பந்தமான விவாதத்திலிருந்து, தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் விடயம் வேறுபட்ட விடயம் என்றே நாம் எப்பொழுதும் கருதி வந்துள்ளோம். இந்த விடயத்தில் நாம் எப்பொழுதும் மிகவும் தெளிவாகவே இருந்திருக்கின்றோம். காலனித்துவம் மதுசமாக விட்டுச்சென்ற இந்தச் சிக்கல் அண்மையில் தோன்றியதொன்றாகும். இந்தச் சிக்கலின் முக்கிய கருவாக இலங்கை அல்லது இந்திய குடியுரிமை விளங்கியதேயன்றி தனிநாடு அல்ல. இதை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட போராட்ட வழிமுறைகளும் தொழிற்சங்க நடவடிக்கை மூலமேயன்றி ஆயுதப் போராட்டங்கள் மூலமல்ல. இது இடம்பெற்ற இடமும் இலங்கையின் மத்திய மலைநாட்டுப்பகுதிகளேயன்றி யாழ்ப்பாணக்குடாநாடோ, வடக்கோ அல்லது கிழக்கோ அல்ல.

தனது தாய் நாடான தமிழ் நாட்டிற்கு இடைக்கிடை சென்றுவரும் திரு. தொண்டமான் அவர்களைப்பற்றிச் சிறிதும் கவலையுறாத நாம், அவர் தோட்ட விடயங்களில் மாத்திரம் ஈடுபட்டிருந்ததையிட்டு மகிழ்வுற்றோம்.



ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தொண்டமானுடன் முரண்பாடுகளை வளர்க்காமல் இணங்கி நடக்க முற்பட்டதன் மூலம் நாட்டின் ஏற்றுமதி வருவாய்க்கு இடையூறு வராது பார்த்துக்கொண்டனர். இந்த வெற்றிக்கு ஒத்துழைப்பு தந்த தொண்டமானுக்கு மந்திரிப் பதவியும் தரப்பட்டது. ஆனால் நாம் எது நடக்காது எனக் கணிப்பிட்டோமே அவை இப்போது நடை பெறத் தொடங்குவதைப் பார்க்கும் போது நாம் இவ்வளவு காலமும் பெற்ற பெறுபேறுகள் எம்மை ஏளனத்துக்குள்ளாக்குகின்றன.

2, 500 ஆண்டு பழைமை வாய்ந்த சிங்கள மரபுரிமையின் காவலர் எனத்தங்களைக் கூறிக்கொள்பவர்கள் சாதாரணமான விடயமாக இருந்த கந்தலம விடயத்தை நாட்டின் காப்புக்கு நெருக்கடியை உருவாக்கக்கூடிய விடயமாக மாற்றியிருந்தனர் சுற்றுலாத் துறை மந்திரியாகத் திரு. தொண்டமான் அவர்கள் விளங்குவதாலும், இந்த ஆண்டின் தமிழ்ப் பெருமகன் என்ற விருது சில திங்களுக்கு முன் சென்னையில் வழங்கப்பட்டு இவர் சிறப்பிக்கப்பட்டதாலும், திராவிடர்களின் நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்காகவே கந்தலமவில் உல்லாச விடுதி கட்டும் திட்டம் உருவாக்கப்பட்டதென எளிதில் ஏமாற்றப்படும் இயல்புடைய மக்களுக்கு இவர்களால் கூறப்பட்டுவந்தது. கந்தலமவை முன்னணித்தளமாக உபயோகிக்கவிருக்கும் விடுதலைப்புலிகள், தேயிலைச் செடிகளுக்குள் பதுங்கிச்சென்று கீழ்நாட்டுத்தேயிலைத் தோட்டங்களையடைந்தபின் தெற்கிலுள்ள வறிய சிங்கள உழவர்களைக் கடலுக்குள் விரட்டிவிடுவர் என இவர்களால் கூறப்பட்டுவந்தது.

இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை வரலாற்று ஆசிரியராகிய திரு. எஸ். ஏ. பேக்மன் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னதாக அதாவது 1964 ஆம் ஆண்டில், வலியுறுத்திக் கூறியுள்ளார். பொதுவாகவே இவர்கள் இந்தியத் தமிழர்கள் என இனம்காணப்பட்டதாகவும், அண்மைக்காலம் வரை இவர்களில் சிலருக்கே இலங்கையில் நிரந்தரமான பிடிப்பு இருந்ததாகவும் இவர் எழுதுகிறார். இலங்கையில் இவர்களில் சிலர் பிறந்தபோதிலும், எந்தவொரு காலத்திலும் இவர்கள் இந்தியாவுக்குச் செல்லாதிருந்த போதிலும், இலங்கையைத் தங்கள் தாயகமாக மூன்று நாலு தலைமுறையாகக் கொண்டுள்ளபோதிலும், அவர்களில் பலர் என்றோ ஒரு நாள் தங்கள் தாய் நாடான இந்தியாவுக்குச்

சென்று தங்கள் வயோதிப காலத்தில் அங்கு வசிக்கவே விரும்புகின்றனர் என அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

இது காலனித்துவ ஆட்சியாளரின் நோக்கு என இந்தியத் தமிழரின் தனித்தன்மையின் உருவாக்கம் என்ற தலைப்பின் கீழ் தான் எழுதிய கட்டுரை ஒன்றில் அமெரிக்காக் கல்விமானான பேராசிரியர் பற்றிக் பீபில்ஸ் (Prof. Patrick Peebles) அவர்கள் வர்ணித்துள்ளார்.

மங்கள முனசிங்கா தெரிவுக்குழுவுக்கு தங்கள் திட்டத்தைக் கொடுத்த ஏழு தமிழ்க் கட்சிகளினதும்இந்திய இலங்கை தமிழ் மக்களின் தனித்தன்மைகளின் கூட்டின் ஏகோபித்த குரலாக தொண்டமான் விளங்குவதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. பிரிக்கப்படாத வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு உண்மையான செயலுரிமையை வழங்கத்தக்க வகையில் செயலுரிமையைப் பரவலாக்கி அந்த இரு மாகாணங்களுக்கும் தனியான மாகாணசபையை உருவாக்குவதுடன், இந்த மாகாணங்களில் வாழும் முசுலிம் மக்களுக்கு சுயாட்சியும், சிறுபான்மையினராகவுள்ள சிங்களவருக்குக் காப்பும் வழங்கப்படவேண்டுமெனவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் வற்புறுத்துவதாக நாளேடுகளில் வெளிவந்த இதன் அறிக்கைகள் கூறுகின்றன. காணி, சட்டமும் ஒழுங்கும் நிதி ஏற்பாடுகள், நீதி நிருவாகம் ஆகியனவற்றின் செயலுரிமை பரவலாக்கப்படுவதுடன், வேறு பல விடயங்களினதும், பணிகளினதும் செயலுரிமை மாகாண சபைக்கு வழங்கப்படவேண்டும் என இந்த யோசனையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக, இந்தியத் தமிழர்களுக்காகப் பரிந்து பேசி வரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இந்தியாவிலுள்ளது போன்ற ஆட்சிமுறையை நிராகரித்துள்ளது. ''இந்தியாவிலுள்ளது முழுமை இல்லாத பாதி சமஷ்டி முறையாகும். நடுவன் அரசால் மாநில சட்டசபை கலைக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் எப்பொழுதும் உண்டு'' எனவும் இந்த அறிக்கை கூறுகின்றது.

அயோத்தியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குப் பின் இந்திய அரசியல் முறையிலான போலித்தனமான சுயாட்சிமுறையில் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் நம்பிக்கை இழந்து விட்டது.

சிங்கள மக்களின் பெரிய அரசியல்கட்சிகள் வடக்கையும், கிழக்கையும் இணைக்கக்கூடாதென வலியுறுத்திவரும் வேளை



னால், இந்தியத் தமிழர்களின் தனித்தன்மையானது இலங்கைத் தமிழ் மக்களின் தனித்தன்மையுடன் ஒன்று சேர்வதை காணக்கூடியதாக இருக்கின்றது. தென் ஆபிரிக்காவிலுள்ள போயேஸ் (Boers) என்ற இனமக்கள் தங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் பற்றியே சிந்திப்பது போல் தோட்டத்தமிழர் விடயங்கள் மாத்திரம் தான் என இருந்த திரு. தொண்டமான் அவர்கள் இப்பொழுது அந்த எண்ணத்தை விட்டு வெளியே வந்துள்ளார்.

## விழித் தெழு

அடுப்படியில்
வெந்து வெந்து
அறிவையுமா
அவித்துக் கொண்டாய்?
நீர் கூட பொங்குகிறதே
நீர் ஏன் பொங்கவில்லை?

கட்டிலுக்கும்
தொட்டிலுக்கும்
மட்டுமா நீ?
குட்டக் குனிந்தால்
குலமகள்

ஏனென்று கேட்டால்
இழிமகள்
வெட்டிச் சாய்த்திட
வேண்டாமா இதனை?
மாடாக இருந்து
மடிந்தது போதும்!
பூட்டிய விலங்கை
உடைத்து எறி!
இடியாக மாறு!
பெண்ணல்ல நாங்கள்
பெரும்புயல் என்று கூறு

- நா.மனோரஞ்சனி
முல்லைத்தீவு

# இலங்கை வாழ் மலையகத் தமிழர் தனியானதொரு தேசிய சிறுபான்மையினரா?

**கலாநிதி அம்பலவாணர் சிவராசா**
(தினகரன்-17-1-93)

இலங்கை வாழ் இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் அல்லது மலையகத் தமிழர் தனியொரு தேசிய சிறுபான்மை இனமா என்ற கேள்விக்கு விடைகாண வேண்டுமாயின் பின்வரும் இரண்டு பிரதான அம்சங்களை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

(1) மலையகத் தமிழர் சுயமாகவே ஒரு தேசிய சிறுபான்மை இனத்தினர் என்ற தகுதியுடையவர்களா?

(2) வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களை விட மலையகத் தமிழர் வேறுபட்டவர்களா?

உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற தமிழர் தனியொரு இனக் குழுவினை அல்லது தேசிய இனத்தினைச் சேர்ந்தவர்களே. மொழி, கலாசாரம், மதம், மரபுகள், இனம் என்ற பொதுவான காரணிகளே இவர்களைத் தனியொரு இனக் குழுவாக அடையாளம் காண வைக்கின்றன. ஆனால் இவ்வாறானதொரு பொதுவான அடையாளம் அவ்வினக் குழுவினுள் அமைந்த சில பிரிவினர் உப இன அடையாளங்களை உருவாக்கி வளர்ப்பதைத் தடை செய்யவில்லை. பல ஆயிரம் வருடங்கட்கு முன்னரே குடிபெயர்ந்து வந்து இலங்கையில் குடியமர்ந்ததற்கான நீண்டதொரு வரலாறு, பொதுவான மரபுகள், ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பலமான உணர்வு, குறிப்பிட்ட நிலப்பரப்புடன் கூடிய பாரம்பரிய தாயகம் என்பவை காரணமாக இலங்கைத் தமிழர் தாம் ஒரு தனியான தேசிய இனம் என உரிமை கொண்டாடுகின்றனர். அதனை மற்றவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். அதே போன்று மலையகத்

PUBLIC LIBRARY,



தமிழரும் உரிமை கொண்டாட முடியுமா? எமது கேள்வி, மலை
யகத் தமிழர் தனியான தேசிய இனமா என்பதல்ல அவர்கள்
ஒரு தனியான தேசிய சிறுபான்மையினரா என்பதே. ராஜாங்க
அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்கள் தாம் எழுதிய கட்
டுரையொன்றில் இலங்கைவாழ் இந்தியத்தமிழர்கள் இலங்கைத்
தமிழர்களிலிருந்து வேறுபடுகின்ற தமது அடையாளம் பற்றிய
உணர்வுடையவர்களாக இருக்கின்றனர் என்று குறிப்பிட்டுள்
ளார். அத்துடன் பொதுவான வரலாற்று அனுபவங்கள், வாழும்
இடம், அவர்கள் ஒன்று சேர்ந்து அனுபவித்த இன்னல்கள் என்
பன காலக்கிரமத்தில் இந்த அடையாள உணர்வினைப் பலப்
படுத்தி உறுதி கொள்ளச் செய்துள்ளன எனவும் சுட்டிக் காட்
டியுள்ளார். மலையகத் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்
கும் இடையேயுள்ள வேறுபாடுகள் பற்றி வேறு சில ஆய்வாளர்
களும் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். உதாரண
மாக சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் மலையகத் தமிழர்களின்
சமூக வழக்கங்களும் நடைமுறைகளும் அடிப்படையில் இந்து
சமயத்தைப் பின்னணியாகக் கொண்டுள்ள போதிலும் யாழ்ப்
பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை போன்ற இடங்களில்
வாழும் மற்றைய இந்துக்களிலிருந்து வேறுபடுகின்றனர். இந்த
வழக்கங்களும் பண்டிகைகளும் 150 வருடங்களுக்கு முன்பு இவர்
கள் எந்த இந்தியக் கிராமத்திலிருந்து வந்தார்களோ அந்த
அடிப்படையிலும் சாதி அடிப்படையிலும் வேறுபடுகின்றனர்
எனக் குறிப்பிட்டுள்ளார்.

1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் எஞ்சியிருந்த நாடற்ற பிரஜைகளுக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டதோடு நாட்டற்றவர் என்ற பிரச்சினையினை இலங்கை அரசாங்கம் தீர்த்து விட்டது. இதன் விளைவாக மலையகத் தமிழ் புத்திஜீவிகள் தமது முன்னைய கோரிக்கையான மலையகத் தமிழர் ஒரு தேசிய சிறுபான்மைக் குழுவினரே என்ற கோரிக்கையினை மீள முன் வைத்துள்ளனர். ஆகவே இக் கட்டுரையில் மலையகத் தமிழரின் இக் கோரிக்கை எந்த அளவிற்குப் பெறுமதி வாய்ந்தது என்பதையும் மலையகத் தமிழர் உண்மையில் வட, கீழ் மாகாணங்களில் வாழும் தமிழர்களை விட வேறுபட்டவர்களா என்பதையும் உண்மையில் மலையகத் தமிழர் ஒரு தனியான தேசிய சிறுபான்மைக் குழுவினரா என்பதையும் ஆராய்வோம்.

## தேசிய சிறுபான்மை இனம் பற்றிய எண்ணக்கரு

1830 களில் புழக்கத்துக்கு வந்த தேசியவாதம் என்ற பதம் சூழ்நிலை தேவை என்பன காரணமாக இதுவரை பல அர்த்தங்களைச் கொண்டதாக மாறி வந்துள்ளது. இருந்த போதிலும் தேசிய வாதம் என்ற பதத்துக்குப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்புகள் சில உண்டு.
அவை-

(1) நாம் ஒரே குழுவினைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வுடன் கலந்த நீண்ட கால சமூகத் தொடர்புகள்.

(2) ஒரே குழுவைச் சார்ந்தோர் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தினைத் தமது வாழ்விடமாகக் கொண்டிருப்பதோடு அதனை வெளியாரிடமிருந்து பாதுகாத்து வருதல்.

(3) அக் குழுவினர் 'தனியொரு மொழியையோ தொடர்புபட்ட பேச்சுவழக்கினையோ கையாளுதல்.

(4) கடந்த காலங்களில் பெருங் காரியங்களைச் செய்து முடித்தவர்கள் என்ற உணர்வும் எதிர்காலத்திலும் அவ்வாறு காரியங்களைச் செய்வதற்கான விருப்பும்.

(5) தேசிய வீரர்கள் பலரை உருவாக்குதல்.

(6) ஒன்றுபடுவதற்கான விருப்பம்.

அதனால்தான் காள்ரன் ஜே. கெப்ஸ் என்பவர் தேசிய இனம் ஒன்று நாட்டுப் பற்று என்பதுடன் ஒன்று கலப்பதோடு மற்றைய மனிதப் பண்புகள் எல்லாவற்றையும் விட தேசிய நாட்டுப் பற்றுக்கு முதலிடம் வழங்குவதே தேசிய வாதம் என வரைவிலக்கணப்படுத்தினார். தேசம் என்பதை ஸ்டாலின் பின்வருமாறு விளக்கினார்.

பொதுவான மொழி பிரதேசம் பொருளாதார வாழ்வு உள ரீதியான அமைவு என்பன வரலாற்று ரீதியாக பரிமாண ரீதியில் வளர்ச்சியடைந்ததாகவும் இவை ஒரு பொதுக் கலாசாரத்தினூடாக வெளிப்படுவதும் ஒரு தேசம் என்றார்.

இங்கு நாம் மலையகத் தமிழர் தேசிய சிறுபான்மையினரா என்ற கேள்விக்குப் பதில் காண முற்படுகின்றமையால் தேசிய சிறுபான்மையினர் என்றால் யார் என்பதற்கு விளக்கம் காணுதல் அவசியமாகும்.



சர்வதேச சங்கம் வழங்கியதொரு விளக்கத்தின்படி ஒன்றாக வாழ்கின்ற ஒரு குழுவினையோ அல்லது ஒழுங்கமைப்புகளையோ சிறுபான்மையினர் என அழைக்கமுடியாது. அது இனம் மதம் அல்லது மொழி போன்ற விடயங்களில் அங்கு வாழும் பெரும்பான்மையிலிருந்து வேறுபட்டதாயிருக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை அமைத்த சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கான ஒரு உபகுழு பின்வரும் வரைவிலக்கணத்தை வழங்கியுள்ளது.

உறுதியான இன, மத அல்லது மொழி மரபுகளை அல்லது இயல்புகளை அங்கு வாழும் மற்றைய மக்களிடமிருந்து வேறுபட்டுக் கொண்டிருப்பதோடு அவற்றைப் பாதுகாக்கவும் விரும்பும் ஆக்கிரமிப்பு செலுத்தாத குழுவினையே சிறுபான்மை என்ற பதம் உள்ளடக்குகிறது.

ஆர்னல்ட் எம். றோஸ் என்பவர் தேசிய சிறுபான்மையினர் யார் என்பது பற்றி பின்வருமாறு ஒரு விளக்கம் தந்துள்ளார்.

இனம், தேசியத்துவம், மதம் அல்லது மொழி என்பவை காரணமாக ஒரே சமூகத்தில் மற்றவர்களிலிருந்து வேறுபடுபவர்களாகவும் இக் குழுவினர் தாம் ஒரு வேறுபட்ட குழுவென எண்ணுதலும் மற்றவர்களும் அவர்களை ஒரு வேறுபட்ட குழு எனக் கொண்டாலும் அக்குழுவினை ஒரு தேசிய சிறுபான்மைக் குழு எனக் கொள்ளலாம்.

ஆனால் அண்மைக்காலஎண்ணக் கருவொன்று பொதுஇயல்புகளைக் கொண்ட ஒரு குழு தம்மைத் தாமே தனியான ஒரு சிறுபான்மை இனம் எனக் கொண்டால் அந்தக் குழுவினை ஒரு தேசிய சிறுபான்மை இனமாகக் கொள்ளுதல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

மேற் சொன்ன விளக்கங்களின் அடிப்படையில் மலையகத் தமிழர்களை நோக்கினால் முதலில் நாம் அவர்களது வரலாறு பற்றியும் அவர்களது வாழ்விட பிரதேசம் பற்றியும் அவர்களது பொருளாதாரம் பற்றியும் இங்கு நோக்குதல் பொருத்தமானதாகும்.

### மலையகத் தமிழர்களின் வரலாறு

1830 களில் பிரித்தானியர் ஏற்றுமதியினை நோக்கமாகக் கொண்டு பெருந் தோட்டங்களை உருவாக்கியதோடுதான் இலங்கையில் மலையகத் தமிழர்களின் வரலாறும் ஆரம்பமாகியது. பிரித்தானிய துரைமார்கள் பெருமளவு பணத்தினை கோப்பிப் பயிர்ச் செய்கையில் முதலிட்ட போதும் பெரும் இலாபம் அடைவதற்கு தொழிலாளர் பற்றாக்குறை ஒரு தடையாக இருப்பதை உணர்ந்தனர். ஆரம்பத்தில் சிங்களத் தொழிலாளர்கள் தோட்ட நிலத்தைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்ட போதினும் தோட்டங்களில் வேலை செய்வதற்கு அவர்கள் பின்னின்றதாலேயே தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை வரவழைக்க வேண்டி இருந்தது. முதன் முதலில் கோப்பீத் தோட்டத்தை ஆரம்பித்து வைத்த தோட்டத்துரையான ஜோர்ஷ் வேர்ட் என்பவரும் தேசாதிபதி எட்வர்ட் பார்ன்ஸ் என்பவருமே தோட்டங்களில் வேலை செய்வதற்கான முதற் தொகுதித் தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தனர். ஆனால் 1830களில் பெருமளவு எண்ணிக்கையானவர்கள் வர ஆரம்பித்தனர். திருநெல்வேலி, மதுரை தஞ்சாவூர் மாவட்டங்களில் இருந்தே பெருமளவு தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்தனர். இத்தொழிலாளரின் இலங்கை நோக்கிய வருகை மிகவும் துன்பகரமானதாக இருந்தது என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. தலைமன்னாரிலிருந்து மத்திய மாகாணத்திற்குக் கால் நடையாக வந்த போது எந்தவொரு தொழிலாளர் குழுவிலும் பலபேர் இறந்துள்ளனர். ஆனால் தோட்டங்களுக்கு வந்து சேர்ந்த பின்னரும் பிரயாணக்களைப்பு, காலநிலை போன்றவற்றால் மேலும் பலர் இறந்தனர் என பேற்ரம் பஸ்தியாம்பிள்ளை குறிப்பிடுகிறார். 1880 களில் இலங்கையில் இருந்த பிரித்தானிய அதிகாரி ஒருவர் இத்தொழிலாளர்களின் வருகை பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

1843 இலும் 1845 இலும் பரிதாபகரமான கூலிப்பட்டாளங்களாக இலங்கை வந்தார்கள். ஒவ்வொரு கூலிப் பட்டாளமும் ஓரிரண்டு பெண்களையும் ஐம்பது அல்லநு நூறு ஆண்களையும் கொண்டதாக இருந்தது. இவர்கள் புதியவர்களாக ஒரு புதிய நிலத்திற்கு வந்தார்கள். போதிய உடையோ உணவோஇன்றி வழியில் கிடைத்ததைச் சாப்பிட்டு பெரும் காட்டு வழிகளைக் கடந்தார்கள். சில சமயங்களில் சதுப்பு நிலங்களில் முழங்கால் அளவு தண்ணீரில் நடக்க வேண்டியிருந்தது. மிகவும் மோசமான நிலையிலிருந்த இவர்களது இருப்பிடங்கள் பற்றி தோட்ட நிர்வாகிகள் அக்கறை கொள்ளவில்லை.



**ஆரம்பத்தில் சிறுதொகையாக ஆரம்பித்த வருகை 1842 இல் 14000 ஆகவும் 1843 இல் 31000 ஆகவும் 1844 இல் 67000 ஆகவும் 1845 இல் 71000 ஆகவும் அதிகரித்தது.**

அரசாங்க சேவைகள், வர்த்தக வாய்ப்புகள் கொழும்பு நகரம் என்பன விரிவடைந்தபோது இன்னொரு குழுவினர் துறைமுகத் தொழிலாளர்களாகவும் பொது வேலைத் திணைக்களத் தொழிலாளர்களாகவும் வர்த்தக நோக்கங்களுக்காகவும் இலங்கை வந்தனர். இவர்கள் தோட்டங்களுக்கு வெளியே நகர்ப்புறங்களிலும் குறிப்பாகக் கொழும்பு நகரில் குடியேறினர். சிலர் வட்டிக்குப் பணம் கொடுப்போராகக் கிராமங்களுக்கு வந்தனர். இவ்விரு பகுதியினரையும் விட இந்தியாவிலுள்ள பெரும் வர்த்தக நிலையங்களோடு தொடர்புடைய நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்யும் சிறிய தொகையான பெரும் வர்த்தகர்களும் இலங்கைக்கு வந்தனர். ஆரம்பத்தில் கோப்பிப் பயிர்ச் செய்கை பண்ணப்பட்ட போது கோப்பி சேகரிக்கும் போதுதான் அதிக தொழிலாளர் தேவைப்பட்டனர். ஆனால் பின்னர் கோப்பிப் பயிர்ச் செய்கை கைவிடப்பட்டு தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் தொழிலாளர்களுக்கான தேவை வருடம் முழுவதும் இருந்தமையால் இந்தியத் தொழிலாளர் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கி வாழத் தொடங்கினர்.

இலங்கையில் வாழும் ஏனைய சமூகத்தவர்களோடு சமமாக நடாத்தப்படுவர் என்ற வாக்குறுதியின் பேரில் வரவழைக்கப்பட்ட இத் தொழிலாளர் இலங்கை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வந்துள்ளனர். ஏனெனில் தேயிலை ஏற்றுமதி இலங்கைப் பொருளாதாரத்துக்கு அந்நிய செலாவணியைத் தேடித் தரும் முக்கிய அம்சமாக இன்று வரையும் இருந்து வருகின்றது. தேயிலை இறப்பர் தெங்குப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைத்த வருமானத்தில் இருந்தே முக்கிய உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி போன்றவை இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆகவே இந்திய தோட்டத் தொழிலாளர்கள்தான் இலங்கையருக்கு உணவை வழங்கிவந்துள்ளார்கள் - வருகிறார்கள் என்று சொல்வதில் தவ

தில்லை. ஆனால் 1931 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த டொனமூர் அரசியல் யாப்புடன் இந்திய வம்சாவழி மக்களுக்கு அரசியல் பிரச்சினைகள் பல எழ ஆரம்பித்தன. டொனமூர் ஆணைக் குழுவினர் இலங்கையருக்கு சர்வஜன வாக்குரிமை வழங்க வேண்டுமென்று சிபாரிசு செய்தனர். ஆனால் இந்திய வம்சாவழி மக்களுக்குக் கட்டுப்பாடற்ற முறையில வாக்குரிமை வழங்குவதனை சிங்களத் தலைவர்கள் எதிர்த்தனர். இதனால் இந்நாட்டில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வாழ்ந்தவர் களுக்கே வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கட்டுப்பாட் டினை அந்த ஆணைக்குழு விதித்தது. இவவடிப்படையில் 1931இல் சுமார் 100000 பேர் வாக்குரிமை பெற்றனர். பின்னர் 1936 இல் இது 1,4 ,000 ஆக உயர்ந்தது 1939 இல் இது 2,25,000 ஆக உயர்ந்தது. ஆனால் 1940 களுக்குப் பின்பு வாக்குரிமை வழங்குவதில் கடைப்பிடிக்கப்பட்ட கடுமையான விதிகள் காரண மாக 1943 இல் வாக்களிக்க தகுதியுடைய இந்திய வம்சாவழி யினரின் தொகை 1,68,000 ஆக்குறைந்தது.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் எடுத்த நடவடிக்கையினால் இந்திய வம்சாவழியினர் மேலும் பாதிக்கப் பட்டனர். இவ்வரசாங்கம் 1948 இலும் 1949 இலும் இரண்டு குடியுரிமைச் சட்டங்களைக் கொண்டு வந்தது. 1948 இல் இலங் கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலம் என்ற மூன்றாவது சட்டத்தினைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. இச் சட்டங்களின் பயனாக இலங்கையில் அவ்வபோது வாழ்ந்த இந்திய வம்சாவழியினரில் மிகப்பெரும்பான்மையோர் தமது குடியுரிமையையும் வாக்குரிமையினையும் இழந்தனர். மேலும் இலங்கையிலிருந்த இந்திய வம்சாவழி மக்களை இந்திய அரசும் ஏற்க மறுத்தமையால் இவர்கள் நாடற்றவர் என்ற நிலைக் குள்ளாயினர். 1950 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங் களில் இந்திய இலங்கை அரசுகள் பேச்சுவார்த்தைகள் நடத்தி நாடற்றவர் பிரச்சினையினைத் தீர்க்க முற்பட்டபோதும் 1986 ஆம் ஆண்டு இலங்கை அரசு கொண்டு வந்த சட்டமே நாடற் றவர் பிரச்சினையினை முற்றாகத் தீர்த்துள்ளது.

## மலையகத் தமிழர்களின் வாழ்விடம்

மலையகத் தமிழர்கள் மாத்தளை, கண்டி, பதுளை, மொனறாகலை, இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங் களில் குவிந்து வாழ்கின்ற போதிலும் நுவரெலியா மாவட்டத்



தில் மட்டுமே பெரும் பான்மையாக வாழ்கின்றனர். தோட்டம் சாராத மலையகத் தமிழர் கெங்கல்ல ஹேவாஹெட்ட, கண்டி, கம்பளை, நாவலப்பிட்டி, பண்டாரவளை, அப்புத்தளை, றாகலை போன்ற நகரங்களில் காணப்படுகின்றனர்.

1981 ஆம் ஆண்டு சனத்தொகை புள்ளி விபரங்களின் படி இலங்கையின் மொத்த சனத்தொகையான 14,846,750 பேர்களுள் 8,25,233 பேர் அல்லது 5.6 சதவீதத்தினர் இந்தியத் தமிழர்களாயிருந்தனர். இந்த 8,25,233 பேரில் 247,131 பேர் நுவரெலியாவில் வாழ்ந்தனர். பதுளையில் 135,795 இந்தியத் தமிழரும் கண்டியில் 104840 பேரும் இருந்தனர். ஆகவே மலை யகத் தமிழர் தமக்கென ஒரு பிரதேசத்தைக் கொண்டிருக்க வில்லை எனலாம். ஏனெனில் நுவரெலியா மாவட்டத்திலும் அவர்கள் 47.3 சதவிகிதமாகவே உள்ளனர்.

இந்திய வம்சாவழி மக்களின் சமூக பொருளாதார நிலை

இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் இந்தியத் தமிழர் 5.6 சதவீதத்தினராவர். இவர்களுள் சுமார் 80 வீதத் தினர் தோட்டத் தொழிலாளராகத் தோட்டங்களில் வாழ்கின் றனர். ஒரு பகுதியினர் தோட்டங்களுக்கு வெளியே வாழ்கின் றனர். அவர்களைப் பின்வரும் பிரிவுக்குள் அடக்கலாம்.

(1) கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் வாழும் வட இந்திய சிந்திமார் உட்பட இந்திய வர்த்தகர்களும் கடைச் சொந்தக்காரர்களும் தோட்டங்களை அண்மித்து வாழும் செட் டிமார்களும் போன்றோர்.

(2) இலங்கை அரசாங்க சேவையிலும் தனியார் நிறுவனங் களிலும் தொழில் புரிவோர்.

(3) தெருத் துப்பரவு, வீட்டு உதவியாளர் போன்ற குறைந்த வேதனம் பெறும் தொழிலாளர்.

இந்தியத் தமிழர்களை அவர்கள் செய்யும் தொழில்களை அடிப்படையாகக் கொண்டு திரு. எம். வாமதேவன் பின்வருமாறு பிரித்துள்ளார்.

1. சுய தொழில் செய்வோர் 2.4 சதவிகிதம்

2. தொழில் வழங்குவோர் 1.5 சதவிகிதம்

3. ஊழியர், தொழிலாளர்கள் 84.3 சதவிகிதம்.

4. வேதனம் பெறாத குடும்ப உதவியாளர் 0.5 சதவிகிதம்.

இலங்கைத்தமிழர் சமுதாயத்தினைப் போன்று தோட்டத் தொழிலாளர்களின் சமூகப் பின்னணியிலும் சாதியமைப்பு பிரதான இடம் வகிக்கின்றது. சாதி வரிசைக் கிரமத்தின் உச்சியில் பிராமணர்கள் உள்ளனர். அவர்களுக்குக் கீழ் பிராமணர் அல்லாத சாதியினர் உள்ளனர். தோட்டங்களுக்கருகில் உள்ள கோவில்களில் பிராமணர்கள் குருமார்களாகக் கடமையாற்றுவதோடு மற்றைய சாதிக்காரார்களுடைய மத நிகழ்ச்சிகளையும் இவர்கள் ஆற்றுகிறார்கள். பிராமணர் அல்லாதோரில வெள்ளாளர், அகமுடியான் கோனான், கள்ளன் எ ற சாதிக்குழுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தட்டார், கொல்லர், தச்சர் என்போர் தமது மரபு ரீதியான தொழில்களைச் செய்கின்றனர். இவ் வரிசைக் கிரமத்தின் அடியிலுள்ளோர் ஆதி திராவிடர் ஆவர். இந்தியத் தோட்டத் தொழிலாளரின் கல்வி மட்டம் மிகவும் பின்தங்கியதாகக் காணப்படுகின்றது. 1980/81 இல் மத்திய வங்கி நடாத்திய நுகர்வோர் நிதி அளவீடுகளின் படி கல்வித் தகைமைப் பெறுபேறுகள் பின்வருமாறு அமைந்து காணப்பட்டன.

| இனங்கள் | 1980/81 ஆம் ஆண்டு கல்வித்தகைமை |
|---|---|
| கண்டிச் சிங்களவர் | 4 60 |
| கீழ்நாட்டுச் சிங்களவர் | 5.06 |
| இலங்கைத் தமிழர் | 4.80 |
| இந்தியத் தமிழர் | 2.28 |
| சோனகர் | 3.73 |
| மலே | 6.16 |
| பறங்கியர் | 7.03 |
| மற்றையோர் | 6.83 |

தலைவீத வருமானத்தினைப் பொறுத்தும் இந்தியத் தமிழர் மிகவும் குறைந்த வருமானத்தையே பெறுகின்றனர். 1973 இலங்கை மத்திய வங்கி நடத்திய நுகர்வோர் நிதி அளவீட்டின்படி பல்வேறு இனங்களினதும் 2 மாத சராசரி வருமானம் பின்வருமாறு அமைந்திருந்தது.



| இனங்கள் | ஆண்டு 1973 ரூபா |
|---|---|
| கண்டியச் சிங்களவர் | 376.00 |
| கீழ் நாட்டுச் சிங்களவர்கள் | 424 00 |
| இலங்கைத் தமிழர் | 385.00 |
| இந்தியத் தமிழர் | 180.00 |
| சோனகரும் மலேயும் | 470.00 |
| மற்றையோர் | 633.00 |

மேற்காட்டப்பட்ட புள்ளி விபரங்கள் இலங்கையில் வாழ்கின்ற வேறுபட்ட சமுதாயங்களுள் இந்தியத் தமிழர் சமுதாயமே கல்வித் தகைமையைப் பொறுத்தும் தலைவீத வருமானத்திலும் மிகவும் பின்தங்கியுள்ளனர் என்பதைக் காட்டுகின்றன தோட்டத் தொழிலாளர்களுக்கு தமது வாழ்க்கையை அல்லது தொழிலைக் கொண்டு நடத்த ஆரம்பக் கல்வி போதுமானது என்று கருதப்பட்டு வந்துள்ளது. இத் தொழிலாளர்களது பின் தங்கிய சமூக நிலை காரணமாக அவர்களுக்கு வசதியான வீடுகளுமில்லை. பிரித்தானிய தோட்டச் சொந்தக்காரர் 19 ஆம் நூற்றாண்டில் அமைத்துக் கொடுத்த (12 தர10 சுற்றளவு கொண்ட) தோட்ட லயன்களிலேயே இவர்கள் இன்னும் வாழ்ந்து வருகின்றனர். இத் தொழிலாளர்களுக்கு பிரசாவுரிமையும் வாக்களிக்கும் உரிமையும் மறுக்கப்பட்டமையால் வாழ்க்கையில் முன்னேற முடியாதவர்களாக நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். திரு பீ. பி தேவராஜ் அவர்கள் குறிப்பிட்டது போல் கல்வியறிவின்மையில் மிக உயர் விகிதம் கல்வித் தகைமைகளைப் பொறுத்து மிகவும் குறைந்த விகிதம் மிகவும் மோசமான தார வசதிகள் போசாக்கின்மை இறப்பு விகிதம் இடையறாத கஷ்டம் என்பனவே தோட்டத் தொழிலாளர்களின் தெளிவான இயல்புகளாயுள்ளன.

பல தலைமுறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் இங்கு வாழ்ந்து இந் நாட்டுக்காக உழைத்த போதிலும் அவர்கள் இன்னும் அந்நியர்கள் போல் நடத்தப்படுவது வேதனைக்குரியதாகும். இந்த மண்ணில் வாழ்ந்து இந்த மண்ணுக்காக உழைத்து இந்த மண்ணில் பிரிந்த அந்தத் தொழிலாளர்களின் பரம்பரையினருக்கு இந்த சமூகத்தில் சமமான இடமளித்து அவர்கள் வாழ்க்கையின் சகல துறைகளிலும் முன்னேற வகை செய்வது மனிதாபிமான செயல் என்பதைக் கருத்தில் கொண்டு இந்நாட்டின் தலைவர்கள் செயற்பட வேண்டியது அவசியமானதும் அவசரமானதுமாகும்.

வசதியான வீடுகள் போதுமான பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பன இவர்களின் அத்தியாவசியத் தேவைகளாகும். இந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால்தான் அவர்களைத் தேசிய வாழ்வில் இணைத்துக் கொள்ள முடியும்.

மலையகத் தமிழர் இலங்கைத் தமிழர்களிலிருந்து வேறுபட்டவர்களா?

முன்னர் குறிப்பிட்டது அதிகளவு குழந்தைகள் போல் மலையகத் தமிழர்களின் மூதாதையோர் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போது ஏறத்தாழ 1829 ம் ஆண்டில் இருந்தே இலங்கைக்கு வரத் தொடங்கினர். ஆனால் இலங்கைத் தமிழர்கள் இத் தீவில் நீண்ட காலமாகக் குடியிருந்து வருகின்றனர் என்ற வரலாற்றையுடையவர்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இத் தீவில் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் உண்டு. மகா வம்சமே விஜயன் மதுரையில் இருந்து பாண்டிய இளவரசியினைத் தனது இராணியாக்குவதற்காகக் கொண்டு வந்த போது இளவரசியுடன் பல உதவிப் பெண்கள் வந்தது மாத்திரமல்ல, 18 தொழிற் குழுக்களைச் சேர்ந்த 1000 குடும்பங்கள் குடிபெயர்ந்தனர் எனக் குறிப்பிடுகிறது. இலங்கையில் சோழர் ஆட்சியின் போது மென்மேலும் பல தமிழர்கள் இலங்கையில் குடி பெயர்ந்து வந்தனர். அத்தோடு 13 ம் நூற்றாண்டிலிருந்து 16 ஆம் நூற்றாண்டு வரை இலங்கைத் தமிழர் தமக்கென ஒரு தனி இராச்சியத்தை உருவாக்கி வைத்திருந்தனர். இது அவர்களின் தனித்துவத்தினை வளர்ப்பதற்கு உதவியது.

சாதியமைப்பினைப் பொறுத்தவரையிலும் மலையகத் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் வேறுபாடு உண்டு.

மேலும் ஆறுமுகநாவலர் தலைமை தாங்கி நடாத்திய இந்து சமய மறுமலர்ச்சியின் போது இலங்கைத் தமிழரின் தனியான அடையாளம் மேலும் வளர்ச்சியடைந்தது.

பொருளாதாரத் தரத்தினைப் பொறுத்த வரையிலும் மலையகத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் வேறுபடுகின்றனர். புவியியல் ரீதியான வாழ்விடமும் இவ்விரு குழுவினரையும் வேறுபடுத்துகின்றது. ஆனால் 1977, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் காரணமாக மலையகத் தமி



ழரில் ஒரு சிறு பகுதியினர் இப்போது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு குடிபெயர்ந்து சென்று வாழ்கின்றனர்.

(7) முடிவுரை

மலையகத் தமிழரின் பல்வேறு பண்புகளை ஆராய்ந்தால் தேசிய சிறுபான்மையினர் ஒன்றுக்கு இருக்க வேண்டிய முன் நிபந்தனைகள் சில அவர்களுக்கு இல்லை என்பது தெரிய வருகின்றது. உதாரணம் பொதுவான பிரதேசம். அதேவேளையில் மற்றைய நிபந்தனைகள் பலவற்றில் அவர்கள் தகுதி வாய்ந் தவர்களாக உள்ளனர். உதாரணம் பொதுவரலாறு, மொழி கலாசாரம், மலையகத் தமிழர் புவியியல் வாழ்விடம், பொருளாதார நிலை என்பனவற்றில் இலங்கைத் தமிழர்களிடமிருந்து வேறுபடுகின்றார்கள், ஆகவே மலையகத் தமிழர் பற்றி எந்தவொரு முடிவுக்கும் வரு முன்பு மலையகத் தமிழர்களின் உயர்ந்தோர் குழு அத்தகைய ஒரு அந்தஸ்தினை எதற்காகக் கோருகிறார்கள் என்பதைக் என்பதைக் கண்டறிய வேண்டும்.

ஒரு விடை -மலையகத் தமிழர் பொருளாதார ரீதியில் மற்றைய சமுதாயங்களைவிட பின்னடைந்துள்ளமையால் தம்மை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக அந்த அந்தஸ்தைக் கோருகிறார்கள். இலங்கைத் தமிழர் பல்வேறு அம்சங்களிலும் முன்னேறியவர்களாக இருப்பதனால் மலையகத் தமிழர் தம்மை அவர்களோடு இனங்காண விரும்பாது உள்ளனர். அவ்வாறு அவர்களோடு இனங்கண்டால் தமக்குரிய இடத்தை இழந்து விடக் கூடும் என அஞ்சுகிறார்கள். மற்றைய சமுதாயங்களோடு சமத்துவம் கோரி போராடும் மலையகத் தமிழர் தம்மை நிலை நிறுத்துவதற்காக இவ்வாறு கோரிக்கை விடுகின்றார்கள். ஆகவே மலையகத் தமிழரின் சமூக பொருளாதார நிலையும் கடந்த காலங்களில் அவர்கள் முகங் கொடுத்த அரசியல் அநீதிகளுமே அத்தகைய அந்தஸ்தினை கோரச் செய்துள்ளது.

ஆகவே மலையகத் தமிழர் ஒரு தனியான தேசிய சிறுபான்மையினரா என்ற கேள்விக்கான எமது விடை ஆம் என்பதும் இல்லை என்பதுமாகும். பாரம்பரிய கோட்பாட்டு அடிப்படையில் அவர்கள் ஒரு தேசிய சிறுபான்மையினர் அல்லர். ஆனால் அண்மைக் காலக் கோட்பாடான ஒரு குழுவான மனிதர்கள் தம்மிடையேயுள்ள பொதுவான பண்புகள் காரணமாக தம்மை ஒரு தேசிய சிறுபான்மையினர் எனக் கொண்டால்

அவர்களை நாம் ஒரு தனியான தேசிய சிறுபான்மையினர் எனக் கொள்ளுதல் வேண்டும்.

மலையகத் தமிழர் சமூக பொருளாதார ரீதியில் இலங்கையில் வாழும் மற்றைய சமுதாயத்தினரோடு ஒப்பீட்டு ரீதியில் மிகப்பின் தங்கிய நிலையில் இப்போது இருப்பதால் தமக்குரிய இடத்தினைப் பெறுவதற்காக தம்மை இலங்கைத் தமிழர்களிலிருந்து வேறு படுத்தி அடையாளம் காணுகிறார்கள். அதாவது இலங்கைத் தமிழர்களோடு தம்மையும் இணைத்து அடையாளம் கண்டால் அவர்களோடு போட்டியிட முடியாமல் மேம்படுத்திக் கொள்ள முடியாதிருக்கும் என நம்புகிறார்கள். ஆனால் இந்நிலை தற்கா லிகமானதே. மலையகத் தமிழரும் மற்றவர்களுக்குச் சம மான நிலையினை அடையும் போது இலங்கைத் தமிழர் அளவுக்கு வளர்ச்சியடைந்தால் தம்மைத் தனியாக அடையாளம் காட்ட வேண்டிய அவசி யம் இருக்காது. அப்போது அவர்கள் தம்மை இலங் கைத் தமிழரோடு சேர்த்து தமிழர் என அடையா ளம் காணுவர்.

○

# சீனா புதுமாதிரியான பெருஞ்சுவர் ஒன்றைக்கட்டி எழுப்புகின்றது

(டெயிலி நியூஸ்-05.01.1993)

சீனப் பெருஞ்சுவர் முன்னர் இருந்த பகுதியில் பசுமை
யான தாவரங்களைக் கொண்ட பெருஞ்சுவர் ஒன்றை இப்பொ
ழுது சீனா கட்டியெழுப்புகின்றது. மலைகள், மணற்தரைகள் மற்
றும் தரிசு நிலங்களுக்கு ஊடாக வளைந்து சென்ற சீனப்
பெருஞ்சுவர் இருந்த சில பகுதிகள், இப்பொழுது மரங்களாலும்,
புதர்ச்செடிகளாலும், பசும்புற்களாலும் சூழப்பட்டுள்ளது.

அகில உலகிலும் மிகவும் பெரியதான இந்தக்காப்புத்திரை
யிடும் திட்டம் இருபது ஆண்டுகளை எட்டியுள்ள இவ்வேளை
யில், புதிதாகப் பயிரிடப்பட்ட தாவரங்களில் 80% சதவிகிதமா
னவை செழித்து வளர்வதை வெளிக்கள மதிப்பீடு சுட்டிக்காட்
டுவதாக வனபரிபாலன மந்திரியான திரு. காவோ தெசான்
அவர்கள் குறிப்பிட்டுள்ளார். சீனாவின் வடமேல், மத்திய வடக்கு
மற்றும் வடகிழக்குப் பகுதிகளை ஊடறுத்துச் செல்லும் பகுதி
களில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதால், சான்பெய் [மூன்று
வடக்குகளை உள்ளடக்கிய] (San Bei) வன காப்புத்திரையிடும்
திட்டம் என இது அழைக்கப்படுகின்றது.

சீனாவுக்கு வடக்கே வசிக்கும் நாடோடி மரபினரின் படை
எடுப்பையும், அவர்கள் கொள்ளையடித்துச் சூறையாடுவதையும்
வடசீனா பல நூற்றாண்டுகாலமாகத் தடுத்து நிறுத்தியதன் சின்
னமாகச் சீனப் பெருஞ்சுவர் விளங்குகின்றது. அச்சுவர் அமைந்
திருக்கும் பகுதியிலுள்ள சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கில்
தடை ஒன்றை உருவாக்கும் பணிகள் 1978 ஆம் ஆண்டில் ஆரம்
பிக்கப்பட்டன.

அரசாங்கத்தின் இத்திட்டத்தைச் செயற்படுத்தும் ஒரு பகுதியாக தொழில் நுட்ப வல்லுனரின் வழிகாட்டலுடன் இந்தப் பிராந்தியத்திலுள்ள உழவர்களும், மேய்ப்பாளர்களும், மரங்களை நாட்டுவதற்கு உற்சாகப்படுத்தப்பட்டனர். அவர்களால் பயிர் செய்யப்பட்ட ஒவ்வொரு கெக்ரருக்கும் அவர்களுக்கு ஒரு சிறுதொகைப்பணம் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் அவர்கள் எந்தவிதமான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டபோதிலும் அது சட்டபூர்வமாக அவர்களின் சொத்தாகக் கணிக்கக் கூடியதாகவும், அவர்கள் அதைத் தங்கள் பிள்ளைகளின் பெயருக்கு மாற்றக்கூடியதாகவுமிருக்கின்றது.

சிறப்பான வாழ்க்கையை நடாத்துவதற்கு மரம் நடுகை உதவுமெனக் கண்டுகொண்ட இம்மக்கள் இதில் உற்சாகத்துடன் பங்குபற்றினர்.

நடுவேன் அரசாங்கம் இதற்காக இதுவரை 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவு செய்துள்ள வேளையில், உள்ளூர் ஆட்சிமன்றங்கள் இந்தத்தொகையில் இருமடங்கைக்கொடுத்துதவியுள்ளன. தங்கள் 500 மில்லியன் வேலை நாட்களை வேதனம் எதுவுமின்றி உள்ளூர் மக்கள் இப்பணிக்காக ஒதுக்கி உதவியுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் நாட்டப்பட்ட மரங்கள், 11 மில்லியன் கெக்ரர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கைக்குக் காப்பு வழங்குவதன் காரணமாக, விளைச்சல் 10% விகிதத்திலிருந்து 30% விகிதம்வரை அதிகரித்துள்ளதாகவும், வடமேற்குப் பகுதியில் மண் அரிப்பும் குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வனபரிபாலன அமைச்சு கூறுகின்றது.

அடுத்த அரை நூற்றாண்டுவரை தொடரப்போகும் இத்திட்டம், நிலம் பாலைவனமாவதைத் தடுப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டே வகுக்கப்பட்டதெனக் கருதப்படுகின்றது. **"மக்களின் வாழ்க்கைக்கு ஒவ்வாத பாலைவனம் முன்னேறிக்கொண்டு வரும்பொழுது மனிதன் பின்வாங்குகிறான்"** என்று சீன மக்களின் முதுமொழி கூறுவதை மெய்ப்பிக்கும் வகையில் 1950ஆம் ஆண்டிற்கும் 1978ஆம் ஆண்டிற்கும் இடையே சீனாவிலுள்ள பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலப்பரப்பில் 260,000 சதுர கிலோ மீற்றர் பாலைவனமாக மாறியுள்ளதாக உத்தியோகபூர்வமான மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.



மிகவும் விரைவில் பாலைவனமாக மாறக்கூடியதாகவிருந்த வடபிராந்தியத்திலுள்ள சான்சி (Shanci) மாகாணத்திலுள்ள யுலின் (Yulin) என்ற இடத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு அந்த இடம் இப்பொழுது சோலைவனமாக மாறியிருப்பது இந்தத் திட்டத்தினால் ஏற்பட்ட பலனேயாகும்.

யூலினிலுள்ள மக்கள் பத்து ஆண்டுகளுக்குச் சற்றுக் கூடிய காலத்திற்குள் 800,000 கெக்ரர் நிலப் பரப்பில் மரங்களையும், புதர்ச் செடிகளையும் நாட்டியதன் காரணமாக, 60,000 கெக்ரர் நிலப்பரப்பு பண்படுத்தப்பட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடியதாக மாறியுள்ளது.

பாலைவனமாக மாறும் நிலையில் இருந்த சீனாவின் தலைநகரமான பீஜிங்கில் (Beijing) இப்பொழுது பெரும் பெரும் மரங்களும், சோலைகளும், வளர்க்கப்பட்டதால் அதில் இருந்து காக்கப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் திங்களிலேயே சென்ற பத்து ஆண்டு காலமாக மரம்நாட்டும் பணியில் பல் ஆயிரக்கணக்கான மேலாளர்களும் இலட்சக்கணக்கான மக்களும் ஈடுபட்டிருக்கின்றனர். ஐந்து கணவாய்களுக்கூடாகச் சென்று நகரத்தை தாக்கும் கோபி (Gobi) பாலைவனத்திலிருந்து வீசும் காற்றையும் மணற் புயலையும், இடைவெளிகளையும் இவர்கள் தடுத்தது மாத்திரமின்றி தலைநகரத்திலிருந்து செல்லும் ஐந்து பெரும் தெருக்களையும் பசுமையாக்கியுள்ளனர்.

இதன் காரணமாகத் தலைநகரில் வீசும் காற்றிலுள்ள தூசுகள் 18% விகிதமாகவும், தூசுள்ள காற்றின் வீச்சு 43% விகிதமாகவும், மணற்புயல் வீசும் நாட்கள் 39% விகிதமாகவும் இந்தப் பத்து ஆண்டு காலப் பகுதியில் குறைக்கப்பட்டுள்ளதென உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

இதில் சில குறைபாடுகள் உண்டு. கடந்த ஆண்டுகளைப் பின்நோக்கிப் பார்த்தால், பயிர்ச் செய்கை நிலங்களுக்குக் காப்பு வழங்க நாம் மேற்கொண்ட முயற்சிபோல், சுற்றாடலையும், காலநிலையையும் பேணுவதற்கு அவ்வளவு அக்கறை காட்டவில்லை என்பது தெளிவாகின்றது என சீனாவிலுள்ள வனவியல் கல்லூரியின் பேராசிரியரான திரு. காவோ சங்வு அவர்கள் கூறுகின்றார்.

இத்திட்டத்தை விரைவில் செயற்படுத்த வேண்டுமென்பதே குறிக்கோளாகவிருந்தபடியால் நல்ல பலனைத் தரக்கூடிய பழ மரங்களையும், சிறந்த ரகமான பலகைகளைப் பெறக்கூடிய மரங்களையும் நாட்டாது விரைவாக வளரக்கூடிய நெட்டிலிங் வகை (Poplars) காற்றாடிவகை (Willows) மற்றும் காட்டு நெய்ம வகையான (Oleaster) மரங்களையே இத்திட்டத்திற்குப் பொறுப் பானவர்கள் ஆரம்பத்தில் நாட்டினர் எனவும் இவர் கூறுகின்றார்.

பணநெருக்கடியுள்ள விவசாயிகளும், மந்தை மேய்ப்பாளர் களும் அரசாங்கத்தின் இப்பாரிய திட்டத்தின் உண்மையான பங்கு தாரர்களாக இருக்கவேண்டுமாயின் அவர்களுடைய பொருளா தாரத்தை மேம்படுத்தவேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

தாவரங்களைத்தாக்கும் பூச்சிகளும் சிக்கலாகவுள்ளன. தாவ ரங்களைப் பூச்சிகள் தாக்குவதிலிருந்துதடுப்பதற்குப் பெருந்தொகை யான நெட்டிலிங் மரங்கள் வெட்டப்பட்டிருந்ததை தான்நிங்கியா விற்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளையில் கண்டதாகக் கூறும் பேராசிரியர் காவோ அவர்கள், பூச்சி கொல்லிகளை உபயோகப்படுத்துவதுடன், பூச்சிகளின் பெருக் கத்தைத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார்.

''அத்துடன் கூடுதலான பலனைக் கொடுக்கக்கூடியதும், விரைவில் வளரக்கூடியதுமான மரங்களை மாறி மாறி எல்லா இடங்களிலும் நடவேண்டும் எனவும் விதம் வி;மான மரங்கள் விதம் விதமான பூச்சிகளைக் கவர்வதால் பூச்சிகள் பரவுவதை இது கட்டுப்படுத்துவதுடன் அழிவையும் வெகுவாகக் குறைக்க உதவும்'' எனவும் கூறுகிறார்.

இதற்கு வேண்டிய நிதியும் ஒரு சிக்கலாக உள்ளது. அர சாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதி இப்பாரிய செயற்திட்டத்தைச் செயற்படுத்தப் போதாதிருந்தபோதிலும், அந்தநிதியுடன் எங்களால் ஒருவாறு இதைச் சமாளிக்க முடிந்தது என திரு. காவோ அவர் கள் கூறுகிறார்.

''உலக வங்கியிடமிருந்து சிறுஉதவியைப் பெற்றோம். ஐக்கிய நாடுகள் சபையின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்து அல்லது பல்தேசிய நிறுவனங்களிடமிருந்து ஒன்றில் நன்கொடை யாகவோ அல்லது கடனாகவோ நிதியைப் பெறமுடியுமாகில் அது எங்களுக்குப் பெரிதும் நன்மை பயக்கும் எனவும் இவர் கூறுகிறார்.

''போதியளவில் நிதி வசதி கிடைக்குமாயின் இத்திட்டத்தை மேலும் திறம்படச் செயற்படுத்த முடியும்'' எனவும் இவர் மேலும் கூறுகிறார்.

## தமிழீழ நிலப்பரப்பில் மக்கள் தொகை
## (1981 மக்கள் தொகை கணிப்பீட்டின்படி)

### யாழ். மாவட்டம்

| உதவி அரச அதிபர் பிரிவு | நிலப் பரப்பு (ச.கி.மீ) | தமிழர் கள் | முசுலிம் கள் | சிங்க ளவர் | மொ. |
|---|---|---|---|---|---|
| நெடுந்தீவு | 47·5 | 5506 | 05 | 07 | 5608 |
| தென்தீவகம் | 94·6 | 38279 | 158 | 34 | 38411 |
| வடதீவகம் | 62·7 | 37714 | 14 | 270 | 37583 |
| யாழ்ப்பாணம் | 20·8 | 106307 | 10158 | 1455 | 78128 |
| நல்லூர் | 26·0 | 40389 | 43 | 125 | 81472 |
| தென்மேற்கு வலிகாமம் | 48·0 | 56669 | 63 | 102 | 56657 |
| வலிகாமம் மேற்கு | 47·3 | 47610 | 25 | 67 | 47620 |
| வலிகாமம் தெற்கு | 31·2 | 54342 | 94 | 1289 | 54762 |
| வலிகாமம் வடக்கு | 58·5 | 71237 | 140 | 818 | 72448 |
| வலிகாமம் கிழக்கு | 101·1 | 73196 | 61 | 202 | 73143 |
| தென்மராட்சி | 217·1 | 67691 | 682 | 163 | 71543 |
| தென்மேற்கு வடமராட்சி | 63·7 | 62181 | 64 | 74 | 62484 |
| வடமராட்சி வடக்கு | 50·2 | 58585 | 202 | 130 | 45256 |
| வடமராட்சி கிழக்கு | 114·9 | — | — | — | 13673 |
| மொத்தம் | 983·6 | 719706 | 11709 | 4736 | 738788 |

ஏனையோர் 2637

### கிளிநொச்சி மாவட்டம்

| உதவி அரச அதிபர் பிரிவு | நிலப் பரப்பு (ச.கி.மீ.) | தமிழர் கள் | முசுலிம் கள் | சிங்கள வர்கள் | மொ. |
|---|---|---|---|---|---|
| கரைச்சி | 410·96 | 66243 | 754 | 640 | 67710 |
| பூநகரி | 448·75 | 13408 | 468 | 53 | 13930 |
| பச்சிலைப்பள்ளி | 376·07 | 9846 | 80 | 49 | 9991 |
| மொத்தம் | 1236·41 | 89187 | 1567 | 741 | 91631 |

ஏனையோர் 136

## மன்னார் மாவட்டம்

| உதவி அரச அதிபர் பிரிவு | நிலப் பரப்பு (ச.கி.மீ.) | தமிழர் கள் | முசுலிம் கள் | சிங்கள வர்கள் | மொ. |
|---|---|---|---|---|---|
| மன்னார் | 263·1 | 28927 | 12656 | 5749 | 48781 |
| மாந்தை மேற்கு | 1008·6 | 18636 | 4907 | 262 | 23835 |
| நானாட்டான் | 256·1 | 17483 | 1548 | 725 | 19784 |
| முசலி | 474·2 | 3278 | 8606 | 1947 | 13835 |
| மொத்தம் | 2002·0 | 68324 | 27717 | 8683 | 106235 |

ஏனையோர் 1511

## வவுனியா மாவட்டம்

| உதவி அரச அதிபர் பிரிவு | நிலப் பரப்பு (ச.கி.மீ) | தமிழர் கள் | சிங்கள வர்கள் | முசுலிம் கள் | மொ |
|---|---|---|---|---|---|
| வவுனியா வடக்கு | 769·60 | 11345 | 242 | 54 | 11663 |
| வவுனியா தெற்கு (தமிழ்ப் பிரிவு) | 609·70 | 43569 | 2039 | 2829 | 48502 |
| வவுனியா தெற்கு (சிங்களப் பிரிவு) | 188·50 | 729 | 13144 | 39 | 14036 |
| வெங்கலச் செட்டிகுளம் | 399·10 | 17250 | 369 | 3583 | 21227 |
| மொத்தம் | 1966·10 | 72893 | 15794 | 6505 | 95428 |

ஏனையோர் 236

## முல்லைத்தீவு மாவட்டம்

| உதவி அரச அதிபர் பிரிவு | நிலப் பரப்பு (ச.கி.மீ) | தமிழர் கள் | முசுலிம் கள் | சிங்கள வர்கள் | மொ. |
|---|---|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு | 977 6 | 28015 | 227 | 472 | 28715 |
| கரைத்துறைப்பற்று | 719·0 | 28857 | 3526 | 3349 | 35847 |
| துணுக்காய் | 326·3 | 7214 | 13 | 69 | 7297 |
| மாந்தை கிழக்கு | 494·0 | 5584 | 11 | 58 | 5653 |
| மொத்தம் | 2516·9 | 69670 | 3777 | 3948 | 77502 |

ஏனையோர் 117



## திருக்கோணமலை மாவட்டம்

| உதவி அரச அதிபர் பிரிவுகள் | தமிழர் கள் | முசுலிம கள் | சிங்கள வர்கள் | மொ. | நிலப் பரப்பு (ச.கி.மீ.( |
|---|---|---|---|---|---|
| நகரமும் கரைப்பகுதியும் | 42566 | 8804 | 21168 | 72756 | 148·0 |
| மூதூர் | 19888 | 19153 | 960 | 40040 | 179·4 |
| சேருவெல | 7278 | 12.2 | 11665 | 20187 | 377·8 |
| கந்தளாய் | 2011 | 4323 | 31206 | 37600 | 397·3 |
| கிண்ணியா | 2255 | 28664 | 146 | 31072 | 146·9 |
| தம்பலகமம் | 6298 | 7992 | 6553 | 20854 | 244·4 |
| மொறவெவா | 3350 | 815 | 5101 | 9271 | 322·4 |
| கோமரங்கடவெல | 28 | 9 | 7058 | 7096 | 285·0 |
| குச்சவெளி | 9846 | 5401 | 2484 | 17914 | 313·3 |
| மொத்தம் | 93510 | 74403 | 86341 | 256790 | 2414·5 |

ஏனையோர் 2536

இதில் பதவி சிறிபுர (217 7 ச.கி.மீ ) சேர்க்கப்பட்டால் திருக்கோணமலையின் நிலப்பரப்பு 2632·2 ச.கி.மீ. ஆகும். மக்கள் தொகை 274,702 ஆகும்.

## மட்டக்களப்பு மாவட்டம்

| உதவி அரச அதிபர் பிரிவு | நிலப் பரப்பு (ச.கி மீ.) | தமிழர் கள் | முசுலிம் கள் | சிங்கள வர்கள் | மொ |
|---|---|---|---|---|---|
| மண்முனை வடக்கு | 70.966 | 56649 | 30131 | 2599 | 91524 |
| மண்முனை மேற்கு | 277.906 | 18146 | 399 | 218 | 18763 |
| மண்முனை தெற்கு ஏறாவூர் பற்று | 45 066 | 38658 | 47 | 119 | 358873 |
| ஏறாவூர் பற்று | 588.187 | 40429 | 20423 | 3810 | 64766 |
| கோறளைப்பற்று | 771.817 | 32447 | 27211 | 1496 | 61585 |
| கோறளைப்பற்று வடக்கு | 419.319 | 11519 | 1011 | 1346 | 13892 |
| போறைதீவுப்பற்று | 170 939 | 29208 | 56 | 994 | 30260 |
| மண்முனை தென்மேற்கு | 120.435 | 14133 | 39 | 64 | 14236 |
| மொத்தம் | 2464.635 | 238216 | 79317 | 10646 | 330899 |

ஏனையோர் 2816

## அம்பாறை மாவட்டம்

| உதவி அரச அதிபர் பிரிவு | தமிழர்கள் | முசுலிம்கள் | சிங்களவர்கள் | மொ. | நிலப் பரப்பு (ச.கி.மீ.) |
|---|---|---|---|---|---|
| வேவகம்பற்று வடக்கு | 1966 | 216 | 80156 | 82646 | 673.1 |
| வேவகம்பற்று தெற்கு | 459 | 78 | 26905 | 27479 | 384.0 |
| லகுகல | 471 | 112 | 6493 | 7035 | 953.6 |
| பொத்துவில் | 5134 | 13475 | 1171 | 19831 | 269.0 |
| திருக்கோயில் | 15119 | 74 | 161 | 15362 | 165.2 |
| அக்கரைப்பற்று | 13455 | 22898 | 697 | 37189 | 150.2 |
| அட்டாளைச்சேனை | 1033 | 20039 | 1874 | 23055 | 64.5 |
| நிந்தாவூர் | 7964 | 20592 | 103 | 28305 | 47.1 |
| கரவாகுப்பற்று | 18391 | 45832 | 763 | 65791 | 27.7 |
| சம்மாந்துறை | 15109 | 37943 | 1828 | 55014 | 256.7 |
| மகாஓயா | 66 | 11 | 12914 | 13018 | 697.8 |
| படியத்தலாவை | 103 | 61 | 13333 | 13501 | 850.3 |
| மொத்தம் | 79725 | 161481 | 146371 | 388786 | 4539.2 |

ஏனையோர் 1209

## தமிழீழத்தில் நெறிரீதியாக மக்கள் தொகை (1981 கணிப்பீட்டின்படி)

| | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| இந்துக்கள் | 627401 | 80544 | 28500 | 66424 | 60666 | 81684 | 219343 | 74328 |
| றோமன் கத்தோலிக்கர் | 86417 | 8521 | 44003 | 6183 | 11597 | 14169 | 19113 | 5516 |
| மற்றைய கிறித்தவர்கள் | 8558 | 573 | 995 | 704 | 440 | 1194 | 3612 | 2149 |
| முசுலிம்கள் | 12841 | 1316 | 30079 | 6764 | 3816 | 75761 | 79662 | 161754 |
| பௌத்தர்கள் | 3455 | 632 | 3224 | 15807 | 988 | 83143 | 8864 | 144778 |
| மற்றையோர் | 116 | 45 | 139 | 22 | 05 | 839 | 305 | 261 |

## இலங்கைத்தீவில் நெறிரீதியாக மக்கள் தொகை (1981 கணிப்பீடு)

| | |
|---|---|
| பௌத்தர்கள் | 10292600 |
| இந்துக்கள் | 2295900 |
| முசுலிம்கள் | 1134600 |
| கிறித்தவர்கள் | 1117900 |
| மற்றையோர் | 15200 |

## இலங்கைத்தீவில் மக்கள் தொகை

(1981 இன் மக்கள் தொகை கணிப்பீட்டின்படி)

| | மாவட்டம் | சனத் தொகை | பரப்பு (ச.கி.மீ.) | சனத்தொகையின் அடர்த்தி |
|---|---|---|---|---|
| 1. | கொழும்பு | 1,698,322 | 652.4 | 2,603 |
| 2. | கம்பஹா | 1,389,490 | 1,398.8 | 993 |
| 3. | களுத்துறை | 827,189 | 1,606.6 | 515 |
| 4. | கண்டி | 1,126,296 | 2,157.5 | 522 |
| 5. | மாத்தளை | 357 441 | 1,988.6 | 189 |
| 6. | நுவரெலியா | 522,219 | 1,437.2 | 363 |
| 7. | காலி | 814,579 | 1,673.9 | 487 |
| 8. | மாத்தறை | 644,231 | 1,246.5 | 517 |
| 9. | அம்பாந்தோட்டை | 424,102 | 2.593 4 | 163 |
| ★ 10. | யாழ்ப்பாணம் | 831,112 | 2.072.3 | 401 |
| 11. | மன்னார் | 106 940 | 2.002.1 | 53 |
| 12. | வவுனியா | 95,904 | 2 645.2 | 36 |
| 13. | முல்லைத்தீவு | 77,512 | 1,966 1 | 39 |
| 14. | மட்டக்களப்பு | 330,899 | 2,464 6 | 134 |
| 15. | அம்பாறை | 388 786 | 4,539 2 | 86 |
| 16. | திருக்கோணமலை | 255 790 | 2.618 2 | 98 |
| 17. | குருநாகலை | 1,212,755 | 4,772 8 | 254 |
| 18. | புத்தளம் | 493,344 | 2,976.9 | 166 |
| 19. | அநுராதபுரம் | 587,822 | 1,129 2 | 82 |
| 20. | பொலன்னறுவை | 262,753 | 3,403 8 | 77 |
| 21. | பதுளை | 642,893 | 2,818 2 | 228 |
| 22. | மொனறாகலை | 279,743 | 5,585.9 | 50 |
| 23. | இரத்தினபுரி | 796,468 | 3,238 8 | 245 |
| 24. | கேகாலை | 628,411 | 1,662.8 | 410 |

★ தற்போதைய யாழ்ப்பாணம், கிளிநொச்சியையும் சேர்த்த விபரமே யாழ்ப்பாணம் என தரப்பட்டுள்ளது.

# சோமாலியா எவ்வாறு சீர்குலைந்தது

(ரைம்ஸ். 14. 12. 1992)

(குழுக்களுக்குள் ஏற்பட்ட சண்டையும் ஆயுதப் பெருக்கமும், நாட்டில் ஆட்சியற்ற நிலையை உருவாக்கியது)

ஆபிரிக்காவின் மேற்பரப்பிலுள்ள வறண்ட பரந்ததோர் நிலப்பரப்பாக விளங்கும் சோமாலியாவுக்குள் உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் பல நூற்றாண்டுகளாக நாடோடிகள் போய்ப் போய் வந்துள்ளனர். இந்நாட்டுப் பழங்குடி மக்கள் போன்றிருந்தவர்களும், அவர்கள் பேசிய மொழியைப் பேசியவர்களும், அவர்கள் கடைப்பிடித்த நெறியைக் கடைப்பிடித்தவர்களுமாகிய இவர்கள், ஏனைய ஆபிரிக்க நாடுகளைச் சீர்குலைக்கும் இனப்பூசல்கள் எதுவுமின்றி ஒற்றுமையாக வாழக்கூடிய வாய்ப்பிருந்தது ஆனால் அந்த நாட்டிலுள்ள குறைந்த அளவிலான இயற்கை வளங்களும், அங்கு ஏற்பட்ட உள்நாட்டுப்பூசல்களும் அந்த நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தமுடியாது செய்தன. அத்துடன் அங்குள்ள பல குழுக்கள் தங்களுக்குள்ளே தொடர்ச்சியாக நடாத்திவந்த மோதல்கள் காரணமாக அந்த நாட்டில் நிலையான ஆட்சியில்லாத நிலையும் உருவாகியது.

நாட்டுமக்கள் அனைவரையும் இணைக்கக்கூடிய ஆற்றலாகவும் நாட்டின் தந்தையாகவும் விளங்கியவரான திரு. சமாலி அவர்களின் வழித்தோன்றல்களாகச் சோமாலியர்கள் விளங்கிய போதிலும், தங்கள் மூதாதையர்களின் பூர்வீக வரலாற்றைச் சொல்வதில் இவர்கள் இப்பொழுதும் பெருமைப்பட்ட போதிலும், அங்கு பகையுணர்வு தோன்றியது எதிர்பாராதவொன்றாக இருக்கின்றது. இவர் காலத்தில் உருவாகிய மரபு ரீதியான சமுதாய அமைப்பு பல குழுக்களைத் தோற்றுவித்தது. இந்த குழுக்கள் பகையுணர்வை வளர்த்தன. பகையான ஒவ்வொரு குழுக்

களும் மற்றக் குழுக்களின் மேய்ச்சல் நிலங்களுக்கும் கிணறுகளுக்கும் உரிமை கோர ஆரம்பித்த காலத்திலிருந்தே பிரிவினை தோன்ற ஆரம்பித்தது.

சோமாலியாவின் மூன்றிலொரு வடபகுதியைப் பிரித்தானியாவும், அதன் தென்பகுதியை இத்தாலியும் தமதாக்கிக் கொண்ட 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அங்கு காலனித்துவ ஆட்சி ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டபோது நாடோடிகள் தாங்கள் கென்யா மற்றும் எதியோப்பியா ஆகிய நாடுகளின் பிரசைகளாக்கப்பட்டதை அறிந்து திகைப்புற்றனர். சோமாலியர்களின் கையிலிருந்த அரசாங்கம் இல்லாதொழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மேற்தலக நடுவன் அரசுகளின் கீழான ஆட்சியைப் புகுத்திய ஐரோப்பியர்கள் பாடசாலைகள், நீதிமன்றங்கள், காவல்துறை போன்றவற்றை ஏற்படுத்தினார்கள். காலனித்துவ ஆட்சியாளருக்கு எதிராகச் சோமாலிய மக்கள் அனைவரும் ஒன்றுபட இது அவர்களுக்கு வாய்ப்பை அளித்தது. நாட்டிலுள்ள குழுக்கள் யாவும் ஒன்றுபடவேண்டும் என்றும், நாட்டின் நிலப்பரப்பு முன்னர் இருந்ததுபோல் மீண்டும் இணைக்கப்படவேண்டுமென்றும் வலியுறுத்திவந்த சோமாலிய தேசிய இளைஞர் மன்றம் வலுப்பெற்றது.

இரண்டாம் உலகப்போரில் இத்தாலி வீழ்ச்சியுற்றமை சுதந்திரம் பெறமுடியுமென்ற சோமாலியர்களின் நம்பிக்கையை இழக்கச் செய்தது. போருக்கு முன் ஐரோப்பிய நாடுகள் ஆக்கிரமித்ததை ஈடுசெய்யும் முகமாக சோமாலியாவின் ஒரு பகுதி எத்தியோப்பியாவுக்கு பிரித்தானிய படைய ஆட்சியின் கீழ் கையளிக்கப்பட்டது. சோமாலியா தன்னிறைவடையும் வரை இத்தாலியை அதன் காபந்து அரசாக இருக்க ஐக்கிய நாடுகள் சபை 1950-ல் அனுமதித்தது.

1960-ல் நாடு மீண்டும் இணைக்கப்பட்டு விடுதலை அடைந்ததும், பெரும்பாலான ஆட்சி செயலுரிமையை இளைஞர் மன்றம் கைப்பற்றிய போதிலும், முக்கிய பதவிகள் குழுக்களின் அடிப்படையில் வழங்கப்பட்டன. பட்டறிவற்ற மேல்நாட்டு முறையான ஆட்சியை நடாத்துவதும், மரபுரீதியான வழிமுறைகளிலிருந்து விலகிச் செல்வதும், தலைவர்களுக்குக் கடினமாக இருந்தது. வளமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய வாய்ப்புச் சிறிதாகக் காணப்பட்டது. இயற்கை வளங்கள் குறைவாகவும், விளைநிலங்கள் பயனற்றவையாகவும் காணப்பட்டன. ஆட்சியாளர்களுடைய ஊழல், லஞ்சம், உறவினருக்



குச் சலுகை காட்டல் போன்ற சமூகவிரோதச் செயல்களைக் கண்ட மக்கள், தங்கள் நலன்களில் அரசாங்கம் அக்கறையில்லாதிருக்கின்றதென்று கருதி அதற்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தனர். கென்யா, எதியோப்பியா ஆகிய நாடுகளின் ஆட்சிக்குள் தங்கள் நெருங்கிய உறவினர்கள் தங்களை விட்டுப் பிரிந்திருப்பது மக்களுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியது.

மக்களுக்கிடையே நிலவிய இப்படியான அதிருப்திகள் 1969 ல் நிலைமையை மிகவும் மோசமாக்கிய இக்கால கட்டத்தில் இந்த நாட்டு சனாதிபதி கொல்லப்பட்டதும், மேஜர் ஜெனரல் முகமட் சியாட் பாரி (Major General Mohammed Siad Barre) அவர்கள் தனி மனித ஆட்சி ஒன்றை ஏற்படுத்தி அறிவியல் சோசலிசம் என்னும் தத்துவத்தை முன்வைத்து ஆட்சி நடத்தினார். இவர் அங்கு பேச்சு, எழுத்து முறையையும், பெண்கட்கு வாக்குரிமையையும் ஏற்படுத்தினார்.

எத்தியோப்பியாவிலும் கென்யாவிலுமுள்ள சோமாலிப் பிரதேசங்களை மீண்டும் சோமாலியாவுடன் இணைத்துப் பெரியதோர் சோமாலியாவை ஏற்படுத்த வேண்டுமென்பதையே இவர் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். தனது எண்ணம் நிறைவேற சோவியத் ஒன்றியத்தின் உதவியை நாடிய இவர், ஏடன் முனையிலுள்ள கடற்படைத் தளத்தையும், வானூர்தித் தளத்தையும், மொஸ்கோவிற்குக் கொடுத்து, பிரதி உபகாரமாகக் கனரக ஆயுதங்களைப் பெற்று அவற்றை எத்தியோப்பியாவில் அமெரிக்க அரசியல் உதவியுடன் ஆளும் ஆட்சியாளருக்கு எதிராகப் பிரிந்து செல்லப் போராடும் சோமாலியக் கரந்தடி வீரர்களுக்கு வழங்கினார். ஆனால் திரு. மென்சிஸ்து கெபில மரியம் (Mengistu Haile Mariam) அவர்கள் அரசு எத்தியோப்பிய அமெரிக்க சார்பு ஆட்சியாளர்களை அகற்றி சோசலிச ஆட்சியை 1974 ஆம் ஆண்டு ஏற்படுத்தியதும் சோமாலியாவுக்கு உதவுவதை மொஸ்கோ கைவிட்டது. 1978 ம் ஆண்டு எத்தியோப்பியாவிலுள்ள சோமாலியக் கரந்தடிப்படையினர் விரட்டி அடிக்கப்பட்டனர். அவர்கள் பெரும் இழப்புக்களைச் சந்தித்தனர்.

நாட்டில் பல ஆண்டுகளாக நிலவிய வறட்சியும், உறுதியற்ற பொருளாதாரமும், மில்லியன் கணக்கான ஏதிலிகளும் பெரும்பளுவாகவிருந்து நாட்டைச் சீர்குலைக்கக் கூடியனவாக விருந்ததால், அதிலிருந்து மீள்வதற்கு திரு. சியாத் பாரி அவர்கள் அமெரிக்காவின் உதவியை நாடினார். அரேபிய நிலநெய்

வயல்களுக்கண்மையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளம் அமைக்க ஆவல் கொண்டிருந்த அமெரிக்க, சோவியத் ஒன்றியத்திற்கு சோமாலியாவால் வழங்கப்பட்டிருந்த படைய வசதிகளை தனக்காக்கிக் கொள்வதற்கான ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டது. அடுத்த 10 ஆண்டுகளில் சோமாலியாவை ஆயுதபாணியாக்க நூற்றுக்கணக்கான மில்லியன்டொலர்களை அமெரிக்கா வழங்கியது:

திரு. சியாத் பாரி தனக்கு எதிரான குழுக்களையும் அரசியல் வாதிகளையும் கொலை செய்வித்ததன் காரணமாக இவருக்கு எதிர்ப்புத் தோன்றியது. இவருடைய ஆட்சி ஆட்டம் காண ஆரம்பித்தது. 1990-ம் ஆண்டு அமெரிக்கா இந்த நாட்டுக்கு உதவியை நிறுத்தியவேளையில், திரு. சியாத் பாரி அவர்கள் 80 வயதை அடைந்த ஒரு நோயாளியாகவும், தனது குழுவில் மாத்திரம் தங்கியிருக்க வேண்டியவராகவும் இருந்தார். ஆட்சியைக் கைப்பற்றவும், இவரைஆட்சியிலிருந்து அகற்றவும் சூழ்ச்சி செய்துகொண்டிருந்த இவருக்கு எதிரான மூன்று குழுக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டன. இதன் காரணமாக மூன்று ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டுப் போரில் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டதுடன் நாட்டின் பொருளாதாரமும் சீர்குலைந்து ஆயிரக்கணக்கானோர் ஏதிலிகளாக அயல் நாடுகளுக்குத் தப்பிச் சென்றதுடன், திரு. சியாத் பாரி அவர்களும் 1991 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தலைநகரான மொகடிசுவை விட்டுத் தப்பிச் சென்றார்.

கடந்த காலங்களில் சண்டையிட்டது போல், மூன்று குழுக்களும் ஒன்றோடொன்று சண்டையிட ஆரம்பித்தன. ஏறத்தாழ இரண்டு ஆண்டுகட்குப் பின் குழப்பங்களும் பிரிவினைகளும் அதிகரித்தனவேயன்றிக் குறையவில்லை. ஒரே குழுவைச் சார்ந்த போதும் வேறு உபகுழுவைச் சார்ந்தவர்களும், சண்டையைப் பெரிதும் விரும்புவோருமான திரு. முகமது பாரா அலடிட் General Mohamed Farah Ald'd) அவர்களாலும், திரு அலி மாதி மொகமட் (Ali Mahdi Mohammed) அவர்களாலும் தங்கள் ஆதரவாளர்களைத் தங்கள் பிடிக்குள் வைத்திருக்க முடியவில்லை. இருவரும் மக்களை பட்டினிபோடுவதை ஆயுதமாக பயன்படுத்த பின்நிற்பதில்லை. துப்பாக்கியால் சாவதைவிட பயங்கரமானதும், மனிதனால் உருவாக்கப்பட்டதுமான பட்டினிச்சாவும் பாரிய அளவிலான ஆயுதங்களுமே இப்பொழுது சோமாலியாவில் எஞ்சியிருப்பவையாகும்.

91296

## உயிர்ப்புடன் எழுந்தோம்

உயிர்ப்புடன் எழுந்தோம் உணர்வுடன் விழித்தோம்
உலகில் புதிய சரித்திரம் படைத்தோம்
பெண் அடிமை தத்துவம் உடைத்தோம்.

அடுப்புக்குள் அடங்கியே புகைந்தவர்
முன்னர் அழுதிடக் கூடவே பயந்தவர்
இன்று நெருப்பென நிமிர்ந்திட துணிந்திட்டோம்
பகை நீறெனப் போய்விழ எழுந்திட்டோம்.

ஊமையாய் உள்ளத்துள் தூங்கினோம்
உண்மை வாழ்விற்காய் நாளும் நாம் ஏங்கினோம்
ஆண் தேவைக்குப் பயன்பட்டுப் பலியானோம்
இன்று ஆயுதம் ஏந்திட்ட புலியானோம்.

வீட்டிற்குள் மட்டுமே வாழ்ந்திடும்
விதி மாற்றிட எழுந்தவர் நாங்களே
எம் நாட்டினை மீட்டிடும் போருடன்
பெரும் உணர்வுடன் இணைந்தவர் நாங்களே.

வீறுடன் வேங்கையாய் தாவுவோம்
இனி விடுதலைத் தீயினுள் ஆடுவோம்
தமிழ் தேசத்தை மீட்டிட ஓடுவோம்
உயிர் போகிலும் உயிர்ப்புடன் பாடுவோம்.

- காயத்திரி